இனிய

தமிழ் இலக்கணம்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்
இயற்றியது

அன்பு நிலையம்
இராமச்சந்திரபுரம் :: திருச்சி ஜில்லா

முதற்பதிப்பு: ஜூன், 1943

விலை ரூ. 3/4

பதிப்புரை

இனிய தமிழ் இலக்கணத்தை எந்தாய் மலரடியில் வைத்து வணங்குகிறோம். இந் நூல் நீண்ட ஆராய்ச்சியின் பயனாக வெளிவருகிறது. இது, தமிழுக்குப் புதிய ஆக்க மளிப்பதாகும்.

இலக்கணம் படிக்க நம்மவர் படும் பாட்டைச் சொல்ல வேண்டிய தில்லை. மற்ற நாகரிக மொழிகளைப் போலவே தமிழும் இலக்கண வரம்புடையது; தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங்கலம், தண்டியலங்காரம் போன்ற அரிய இலக்கணச் செல்வமுடையது. ஆனால், எந்தச் சாபத்தாலோ நம்மவர் இலக்கணத்தைச் சரியாக ஆராய்வ தில்லை. 'இலக்கணமே வேண்டா' என்று மனம் போனபடியே பேசி எழுதும் கட்சியும் இங்கே உண்டு.

இந் நூலாசிரியர், **யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள்** மாணவருக்கு நன்னூல் பாடம் சொன்ன காலத்தில், புதிய முறையைக் கையாண்டார். அப்போதே, "**எளிதாக இலக்கணம் கற்கும் முறை**" என்ற ஒரு நூல் எழுதி வைத்திருந்தார். பிற்காலம் அடிகளைச் சிலர், இலக்கணம் ஒன்று எழுதித்தர வேண்டினர். முன்னர் எழுதிய பிரதி தேடியும் கிடைக்க வில்லை; எனினும், அப்போது தொகுத்த சில சூத்திரங்களே கிடைத்தன. அவற்றைக்கொண்டு, அடிகள் தமிழை இனிமையாகப் **பேச—எழுத—படிக்க** ஓர் இலக்கணம் எழுத மேற்கொண்டார்; அதற்காக இந்தி, வங்கம், தெலுங்கு, வடமொழி, ஆரியம், ஆங்கிலம், ஃப்ரெஞ்சு, கிரீக்கு, இலத்தீன்முதலிய மொழி

களில் வழங்கும் இலக்கணங்களை யெல்லாம் பார்த்துப் புதிய முறை யொன்றைக் கண்டார். அஃதாவது: இலக்கியத்தை முதன்மையாக வைத்தே இலக்கணம் புகட்டுவது. நூல் வெறும் சூத்திரங்களாக இல்லாமல், எளிய இனிய நடையில், கதைகளும் பெரியார் வரலாறுகளுமாக அமைந்து, அவற்றை யொட்டி இலக்கணப் பயிற்சி யளித்தலே நலம் எனக் கண்டார் ஆசிரியர். அதன் பயனே இந் நூல். இந் நூல் இலக்கணவிதிகளை, மாணவர்கள் தாமாகவே அறிந்து கொள்ளும்படியாக எளிய உதாரணங்களால் விளக்கும்; அவ் விதிகள் நல்ல கதைகளாலும், வரலாறுகளாலும், உயர்ந்த கருத்துக்களாலும் மனத்திற் பதியும்படி செய்யும். மாணவர் கதை கேட்பதுபோல இலக்கணமும் கற்கலாம்.

உதாரணம், இலக்கண விளக்கம், இலக்கணத்திற்கு இலக்கியமான கதை, வரலாறு, முடிவில் பாடத்தின் சுருக்கமான சூத்திரங்கள்—இந்த ஒழுங்கிலேயே இந் நூல் முழுதும் அமைந்துள்ளது. சூத்திரங்கள், நெஞ்சில் குத்திக்கொண்டு பாடம் செய்வதற்கல்ல. 'இந்தப் பாடத்தில் இன்னது கற்றோம்' என்று சுருக்க விளக்கமாக நினைவில் வைத்துக்கொள்வதே அவற்றின் பயனாகும்.

ஆசிரியர், முதலில் மாணவருக்குக் கதையைச் சொல்லுக; பிறகு ஒரு தரம் படித்துக் காட்டுக; பிறகு மாணவரைக் கதை சொல்லச் சொல்லுக; அதன் பிறகு, கதையைப்பற்றி உரையாடுக; உரையாடும்போதே கதையில் வரும் இலக்கண நுட்பங்களை எழுதி விளக்குக; உரையாட்டிலேயே இலக்கணவிதிகளைப் புகட்டிய பிறகு, இலக்கணப் பகுதியைப்

படித்து, மாணவரையும் படிக்கச் சொல்லுக; ஒவ்வொரு விதிக்கும் பாடத்தில் உள்ள உதாரணங்களையும் காட்டி, மாணவர் தாமே உணரச் செய்க; இவ்வாறு பாடம் முழுதும் நடத்திய பிறகு, இறுதியில் உள்ள சூத்திரத்தைப் பலகையில் (Black Board) பெரிதாய் எழுதுக! அதைக்கொண்டே மீண்டும் பாடத்தில் வந்த நுட்பங்களைக் கேள்வி கேட்டு வரவழைத்து, முடிவில் இலக்கியக் கதைக்கும், இலக்கணத்திற்கும் தொடர்பு கூட்டிப் பாடத்தை முடிக்கலாம். இப்படிப் பதினைந்து பாடங்கள் நடத்தினால், மாணவருக்கு இலக்கணத்துடன் தமிழ் இலக்கியத்திலும் சுவையேற்படும்; பிறகு மளமளவென்று பாடம் நடக்கும்.

இந் நூல் பழைய இலக்கணங்களில் உள்ள நயங்களுடன், காலத்திற்கேற்ற பல புதுமைகளையுங் கொண்டு விளங்குகிறது. 'தமிழ்மொழி உலகமொழியாக வேண்டும்' என்ற ஆர்வத்தால் எழுதப் பெற்ற இந் நூலைத் தமிழர் ஏற்றுப் போற்றுவார்களாக!

இந் நூலில் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், தொடரிலக்கணம் ஆகிய மூன்றும் நிறைவாயுள்ளன. பொருள், யாப்பு, அணி இலக்கணங்கள் "கவிதைக் கலை" என்னும் தனி நூலாக உரிய காலத்தில் வெளிவரும்.

இந் நூலுக்குதவிய புலவர்மணிகளெல்லோருக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

அடிகளின் இலக்கியங்கள் அனைத்திற்கும் இந் நூலையே இலக்கணமாகக் கொள்ளலாம். இனி வருங்

பதிப்புரை

கால்த்தில் நமது தமிழ் பரந்து விரிந்தோங்க இந்த 'இனிய தமிழ் இலக்கணம்' வழி காட்டுமென்று நம்புகிறோம். இறைவன் செயல் முன்னின் றருளுக!

இராமச்சந்திரபுரம் }
15—6—1943 }

அன்பு நிலயத்தார்.

௫௭—௧—௫00

நன்றியுரை

இவ்வினிய தமிழ் இலக்கணம் வெற்றிபெற அரிய துணை செய்த புலவர்மணிகளான, வித்துவான் திரு. காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை B. A., நான்முகம் வழங்கிய அண்ணுமலை சர்வகலா சாலைத் தமிழாராய்ச்சித்துறை விரிவுரையாளர் வித்துவான் திரு. ஜி. சுப்பிரமணிய பிள்ளை M.A., B.L., ஆங்கில முன்னுரை யளித்த திருவாங்கூர் சர்வகலாசாலைத் தமிழ்த் துறைத் தலைவர் வித்துவான் திரு. சி. பன்னிருகைப்பெருமாள் முதலியார், M.A., B.L., அன்புடன் ஆசிமொழி நல்கிய கவிமணி, புத்தேரி திரு. சி. தேசிகவிநாயகம் பிள்ளை, சிறப்புப்பாயிரம் அளித்த புதுக்கோட்டை அரசர்கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் கவிராஜ பண்டித நா. கனகராஜையர் B.O.L., இந்நூலை முதலில் அச்சிட அரிய முயற்சி செய்த புதுவை பாரதசக்தி நிலயம் திரு. பாலு ஆகியோர் அனைவருக்கும் எங்கள் அன்புள்ள நன்றி உரியதாகுக!

அன்பு நிலயத்தார்.

FOREWORD

BY

Sri C. Pannirukaiperumal Mudaliar Avl., M.A., B.L.
Head of the Department of Tamil,
University of Travancore.

IT is with very great pleasure that I write a FOREWORD to 'இனிய தமிழ் இலக்கணம்' ('**The Sweet Tamil Grammar**') written very ably and interestingly by **Yogi Sri Shuddananda Bharatiar.**

The author is very well known as a great saint, Tamil scholar, and poet. He has written innumerable books in Tamil and he is frequently contributing articles and poems to the Tamil and English journals.

Now, he has given us a Tamil Grammar entitled 'இனிய தமிழ் இலக்கணம்'. The Grammar is written in a very interesting manner, which is sweet and really well-modelled.

Nowadays, Tamil students mostly have no liking for studying the grammar of their mother-tongue, and have also an aversion to it. But Sri Shuddanandaji has made the study of Tamil Grammar interesting. The people of Tamilnad are really very much indebted to him for creating such an interest among the students for the study of Tamil Grammar.

I understand that our talented author was teaching "**Nannool**" *(நன்னூல்)* to Tamil students in his younger days. Then he found a new method for

teaching grammar in an interesting manner. The experience he gained thereby during those days has enabled him to write this **Sweet** and New **Tamil Grammar.** Further for writing this grammar, he has studied the grammatical works of different languages - English, French, Sanskrit, Hindi, Bengali and Telugu etc., and made use of the knowledge which he thus gained.

Sri Shuddhanandaji's method of writing this grammar, as I have said already, is new: As is seen in other Tamil Grammars, Swamiji does not give rules and examples alone. He gives beautiful literary passages first. On the basis of these Tamil passages, Grammar is taught to students. This is certainly a novel and creative method. Thus, students, who had an aversion for learning Tamil Grammar, now desire to learn it. For creating such a revolutionary change in the minds of the Tamil students with regard to the learning of Grammar, people of Tamilnad are eternally indebted to the learned author.

I hope that this *(Sweet Tamil Grammar)* will certainly be welcomed by the school authorities of the Tamil country.

I pray to the Almighty God that Sri Shuddhanandaji may be blessed with long life and physical strength to write many more such useful works in Tamil.

Trivandrum,
19-5-1943.

C. P. M.

நூன்முகம்

[வித்துவான் ஜி. சுப்பிரமணிய பிள்ளை, M.A., B.L.]

தமிழ் ஆராய்ச்சித்துறை விரிவுரையாளர்,

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

உலகியல் மொழிகளுள் தமிழ்மொழி மிகப் பழமையானது. அது நாள்தோறும் பெருகி வளர்ந்துகொண்டே யிருக்கிறது. அதன் வளர்ச்சிக் கேற்ப, அதன் இலக்கணமும் தகுந்தவாறு மாறிக்கொண்டு வரும். பழைய இலக்கண நூல்கள் பல இருப்பினும், அவற்றைத் தக்க ஆசிரியரை யடுத்துக் கற்றுக் கொள்வதின்றி, ஒருவர் தாமே படித்து விளக்க முறுதல் இயலாது. தமிழை விரும்பிக் கற்கும் ஒவ்வொருவருக்கும் அதன் இலக்கணம் ஒரு முட்டுக்கட்டை யாகவே யிருந்து வருகிறது. இக் காரணத்தால் இலக்கணத்தைப் பலர் உதறி யெறிந்து, இலக்கியத்திற் புகுந்து, திக்கு முக்காடுகின்றனர். இலக்கணம் கற்காமல் இலக்கியம் கற்போமென்பது, புணையின்றி வெள்ளம் கடத்தலை யொக்கும். அதனை எளிய முறையில் இனிது கற்பதற்கு ஒரு நூல் நெடு நாளாய் வேண்டப்பட்டு வந்தது. அக்குறையைத் தவிர்ப்பதற்காகவே இந்த "**இனிய தமிழ் இலக்கணம்**" எழுந்துள்ளது.

இதனை யாக்கித் தந்த யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்களை அறியாதார் இல்லை. அவர்கள் பதவி பட்டங்களை விழையாது, தமிழுக்குப் பாட்டாலும் உரையாலும் அருந்தொண்டியற்றி வரும் கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டாளர்; பணிசெய்து கிடப்பதையே தம் கடனைக் கொண்ட அருட்பெரியார். அவர்கள் இதுவரை எழுதிவெளியிட்டுள்ள நூல்களோ, ஒரு பெரிய வாசகசாலையை நிறைப்பனவாகும்; எழுதி அச்சேறாதவையோ பலவுள! இன்னும் எழுதவிருக்கும் நூல்களும் அளப்பில. அவர்கள் பலமொழிகளிலும் வல்லுநரா யிருப்பதோடு, இடையறா உழைப்பும், அறிவின் திட்பமும் மனத்தின் ஓட்டமும் வாய்ந்த தவயோகச் செல்வரானவர்கள்.

ஃப்ரெஞ்சு மொழிக்கு எழுதப்பட்டுள்ள எளிய இலக்கணம்போல் நம் தமிழ்மொழிக்கும் ஓர் இலக்கணம் வேண்டுமென்று அடிகள் நெடு நாளாய் எண்ணியதுண்டு. அவ்வெண்ணமே இப்பொழுது நிறைவேறி இந் நூலுருவில் வெளிவருகிறது. இது பண்டிதரும் பாமரரும் பற்றிப் படிக்கும் பண்புடையது; மாணவ மாணவிகளுக்கு இது சமயசஞ்சீவி போன்றது. அடிகள் வேடிக்கையும் விளையாட்டுமாய் இளம் பாலர்களுக்குத் தமிழ் இலக்கணத்தையும், தமிழ்மொழிச் சிறப்பையும், நாட்டுப் பற்றையும், சரித்திரக் கதைகளையும் இனிது புகட்டி

விளங்கப் போதிக்கும் முறை, யாவராலும் விரும்பிப் பாராட்டத் தக்கது. அறிவைப் புகட்டுவதற்கு உதாரணங்களே சிறந்த கருவி யென்பது தெற்றனப் புலனாகும். இந் நூல் கற்பவருக்குக் களிப்பை உண்டுபண்ணி, அவர்கள் கவனத்தை ஒருமைப்படுத்தி, இலக்கண உண்மைகளைத் தித்திக்கத் தித்திக்கத் திரட்டிக் கொடுப்பதாகும். பெரியோரும் விழைந்து ஏற்றுக்கொள்ளத் தக்கவாறு, இஃது அமைந்துள்ளது. இத்தகைய அரிய தமிழ்த் தொண்டாற்றி வரும் அடிகளுக்கு நம் தமிழர்களின் நன்றி என்றுமாகுக!

அண்ணாமலை நகர்
5—5—1943

ஜி. சு.

ஆசிமொழி

புத்தேரிக் கவிமணி

திரு. சி. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்

பாடியளித்தது

வேம்பு வேம்பென வெறுக்கு மிலக்கணப்
பாட மதனைப் பள்ளிச் சிறுவர்
கரும்பு கரும்பென விரும்பிடு மாறு
சுத்த மெய்ஞ்ஞானி சுத்தா னந்த
பாரதி அன்பொடு பகருமிவ் வினிய
தமிழி லக்கணமித் தமிழகத் தெங்கும்
நிலவ நிதமும் நிமலன்
மலரடி போற்றி வணங்குதும் யாமே.

சிறப்புப் பாயிரம்

புதுக்கோட்டை மகாராஜா கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர்

கவிராஜ பண்டித

ஸ்ரீ நா. கனகராஜையர் அவர்கள் பி.ஓ.எல்.

பாடியளித்தது

உலகம் புகழ வுயர்வுற வுயர்ந்த
தமிழெனும் அமுதத் தனிமொழி வளம்பட
இலக்கியங் கண்டவாங் கிலக்கணம் இயம்பி,
விரிபெருங் கடலினும் விரிவுற வமைத்து
முதனூல் இதுவென முனிகுலம் பராவ
அகத்தியர் வகுத்த மகத்துவ நூலும்,
அவர்பால் தமிழ்ப்பயில் அரும்பே றடைந்த
பன்னிரு புலவரின் பன்னிய நூல்களும்,
அவருளே தலைமைபூண் அறிவர்தொல் காப்பியர்
தொகைவகை விரியெலாம் துணிந்துநன் கியற்றிய
தொல்காப் பியமெனுந் தொல்பெரு நூலும்,
பின்னைநாள் வரும்பல பெரும்புல மக்கள்
அந்நூல் அமைதியை அதற்கமை உரைகளைச்
செவ்விதின் ஆய்ந்து தெளிவுற வருளிய
நன்னூல் அகப்பொருள் சின்னூல் புறப்பொருள்
யாப்பருங் கலமே இனிதமை பாட்டியல்
விரிவிலா தமைந்த வீர சோழியமே
இலக்கண விளக்கமே இலக்கணக் கொத்தே
பிரயோக விவேகமே பிறங்கும் அதனுரை
தொன்னூல் விளக்கமே கொடுந்தமி ழிலக்கணம்
முத்து வீரியமே முதலிய நூல்களும்
அவற்ற துரைகளும் அமைவுற விளக்கிய
செழுந்தமிழ் இலக்கணம் திறம்படப் பயிலுபு
பெருங்கடல் மறைந்த அரும்பொருட் பேழையை

முயன்றனன் துருவி யியன்றவா றெடுத்துப்
பலர்க்கும் பயன்பட நிலத்திடை நல்கும்
வள்ளலைப் போன்று வளர்வுறு காலப்
போக்கினை யறிந்து புதுமைகள் புகவே
எளிய கனிந்த இனியநன் னடையில்
அயல்நாட் டிருப்பவர் அவரவர் மொழிகளுக்(கு)
எளிய நுண் ணெறிகளின் இலக்கணம் அமைத்த
வகைதெளிந் தவ்வண்ணம் வண்டமிழ் மொழிக்கும்
இலக்கணம் இனிமை இலக்கண மமைய
இயற்றவே நீண்ட முயற்சிமேற் கொண்டு,
கலைபயில் சிறுவர் கருத்தினை யீர்க்கும்
திறம்பல நலமுறச் செவ்விதின் அமைத்தே,
இடையிடை யுரைநடை யின்சுவை விரவப்
பொருந்தித் தனது புலமையின் வளமெலாம்
தமிழ்மகள் பணிக்கே தரும்பெருந் தகையால்
இனிய தமிழின் இலக்கணம் எனுநூல்
ஆக்கினன்; உலகுக் களித்தனன், தவமே
தனமெனக் கொண்ட தனிப்பெரும் புலவன்;
பன்மொழி பயின்ற நன்மொழிப் புலவன்
உரைநடை நூல்பல உரைத்தநற் புலவன்
செய்யுள் நூல்பல செய்பெரும் புலவன்
கார்மழை போலக் கவிமழை பொழிவான்;
நாடக நூல்பல நவின்ற புலவன்
பாரத தேவி படைத்தநற் பேறென
வருமொரு பெருமைக் கரும யோகி
ஞான நெறிதெளி ஞான யோகி
அமைதியே பொருந்திய அகமுடை யோகி
சுத்தா னந்த பாரதி தூய
நித்யா னந்த நிலையமர்ந் தவனே!

பொருளடக்கம்

இனிய தமிழ் இலக்கணம்

இனிய தமிழ் இலக்கணம்

காப்பு

1. இனிய தமிழை எளிதாய் விளக்கும்
இலக்கணந் தருவாய், இறைவா போற்றி!

க. அரிய நூல்கள்

கண்மணிகாள், இதோ நூலகம்! இதில் அரிய தமிழ்நூல்கள் உள்ளன. இதோ திருக்குறள்! இது நமது வேதம். இதோ கம்பராமாயணம்! கம்பர் கவியரசர். தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருப்புகழ், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், தாயுமானவர் பாடல், அருட்பா......எல்லாவற்றையும் பாருங்கள்! தமிழில் இப்படி எத்தனையோ அரிய நூல்கள் உள்ளன; அவற்றை யெல்லாம் நாம் படிக்கவேண்டும்.

நாம் தமிழர். நமது நாடு தமிழகம். நமது மொழி தமிழ். முற்காலத் தமிழ்நாடு இந்து சமுத்திரத்தில், பெரியதொரு கண்டமாக விரிந்திருந்தது; அதற்குக் குமரிக்கண்டம் என்று பெயர். அதில் பஃறுளியாறு ஓடியது. அதன் கரையிலே, ஆதிபாண்டியன்

ஆண்ட மதுரை இருந்தது. அதில் முதல் தமிழ்ச் சங்கம் வளர்ந்தது. ஒரு காலத்தில், குமரிக்கண்டத்தைக் கடல் விழுங்கிவிட்டது. அத்துடன் எத்தனையோ தமிழ்நூல்களும் மறைந்தன. இப்போதுள்ள ஆஸ்திரேலியா, ஜாவா, சுமத்ரா, ஆஃப்ரிக்காவிலுள்ள மடகாஸ்கர் எல்லாம் குமரிக்கண்டத்தின் மிச்சமே. பாண்டியர் இரண்டாந் தலைநகராகக் கபாடபுரம் என்பதை அமைத்து, அதில் இரண்டாஞ் சங்கம் வளர்த்தனர். அதையும் கடல் உண்டது. இரண்டு சங்க நூல்களுள்ளும் நமக்கு உருப்படியாகக் கிடைத்திருப்பது தொல்காப்பியம். இப்போது வையைக் கரையில் உள்ள மதுரை மூன்றாவதாக ஏற்பட்டது. இதில் மூன்றாந் தமிழ்ச் சங்கம் விளங்கியது. அதில், அரிய புலவர்கள் தமிழ் வளர்த்தார்கள். அவர்கள் எழுதிய நூல்கள் சில நமக்குக் கிடைத்துள்ளன : பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு முதலியன. இக்காலத்திலும் எத்தனையோ அரிய வசன நூல்களும் பாடல்களும் உண்டாயிருக்கின்றன.

அவற்றையெல்லாம் நீங்கள் படிக்கவேண்டும். அதற்குத் தமிழ் நன்றாகக் கற்கவேண்டும்.

> 2. அறிவுங் கலையும், அருளும் பெருகத்
> தமிழர் யாவருந் தாய்மொழி கற்போம்.

உ. தமிழர் பொறுப்பு

உலகில் சுமார் 900 பாஷைகள் உள்ளன. அவற்றுள் இலக்கண இலக்கியங்களுடன் வழங்கும் பாஷைகள் மிகச் சிலவேயாம். அறிஞர் ஆரியம், துரானியம், சேமியம் என்று பாஷைகளை மூன்று குடும்ப

மாகப் பிரித்திருக்கின்றனர். கிரீக்கு, இலத்தீன், இத்தாலியம், ஃப்ரெஞ்சு, ஜெர்மன், ஆங்கிலம், ரஷ்யம் முதலிய ஐரோப்பிய மொழிகளும், பார்ஸி, ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி, வங்கம், மராத்தி, குஜராத்தி முதலிய ஆசிய-இந்திய மொழிகளும் ஆரியக் குடும்பத்தைச் சேர்ந்தவை. அரபி, யூதம், சீரியம், எதியோபியம், கார்தஜினம் ஆகியவை சேமியக் குடும்பத்தன. சீனம், ஜப்பானியம், மலாய், பர்மியம், திராவிடம் ஆகியவை துரானியக் குடும்பம்; திராவிடமே அதிற் சிறந்தது. திராவிடத்தில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம், குடகு முதலிய பண்பட்ட பாஷைகள் தோன்றின. துதம், கோதம், கோண்டு கூ, இராஜ்மஹால், பிராஹுயீ ஆகிய பண்படாத மொழிகள் காடுமலைவாசிகளிடம் வழங்கும் திராவிட பாஷைகளாம். எல்லா மொழிகளையும் வடிகட்டிப் பார்த்தால், இன்று பழம் பெருமையுடனும், புதிய உறுதியுடனும் விளங்கும் மொழிகள், தமிழ், வங்கம், ஹிந்துஸ்தானி, ஆங்கிலம், ஃப்ரெஞ்சு, ஜெர்மன், ரஷ்யம், இத்தாலியம், இஸ்பானியம், பார்ஸி, சீனம், ஜப்பானியம் ஆகியவையே என்றறியலாம்.

உலகம் சொல்லால் நடக்கிறது. அழுத்தந் திருத்தமான சொல் மாந்தரைக் கவருகிறது; காரியத்தை ஊக்குகிறது. ஒவ்வொரு நாட்டாரும் தமக்குரிய சொல்லைக் காத்து வளர்க்கின்றனர்; பாஷையை ஒட்டியே, தமது நாட்டையும் சமுதாயத்தையும் அழைக்கின்றனர். ஆங்கிலம் பேசுவோர் தம்மை ஆங்கிலர் என்றும், தமது தாயகத்தை இங்கிலாந்து

என்றும் அழைக்கின்றனர். ஃப்ரெஞ்ச், ஜெர்மன் பேசுவோர், தம் நாடுகளை ஃப்ரான்ஸ், ஜெர்மனி என்கின்றனர். வங்கமொழி பேசுவோர், தம்மை வங்காளிகள், தமது நாட்டை வங்காளம் என அழைக்கின்றனர். தமிழ் பேசும் நாம், நமது நாட்டைத் தமிழகம், தமிழ்நாடு, நமது சமுதாயத்தைத் தமிழினம் அல்லது தமிழர் குழு என்போம்.

இன்று, சுமார் இரண்டரைக்கோடி தமிழர் இருக்கின்றனர். இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சேலம், கோயம்புத்தூர், நீலகிரி, வடவார்க்காடு, தென்னார்க்காடு, சித்தூர், செங்கற்பட்டு, சென்னை, பாலக்காடு, நாஞ்சில்நாடு, பங்களூர், இலங்கை, யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் தமிழர் ஏராளம்; தமிழ் தாராளம். பர்மா, மலயா, தாய்லாந்து, ஃபிஜி, தென்னாஃப்ரிக்கா முதலிய இடங்களில், தமிழர் குடியேறியிருக்கிறார்கள். அங்கெல்லாம் தமிழ் வழங்குகிறது. வட இந்தியாவிலும் தமிழர் வசிக்கின்றனர்.

முற்காலம் சேரசோழ பாண்டியர் தமிழை வளர்த்தனர்; வடவரை ஏறியும், கடலைக் கடந்தும் தமிழ்க்கொடி நாட்டினர். பர்மா, மலயா, ஜாவா, மணிலா முதலிய இடங்களிலெல்லாம் தமிழ்க்கொடி பறந்தது. தமிழர், கப்பல் வாணிகத்தை ஆண்டனர். தமிழர் பெருமையை தமிழுணர்ச்சி, தமிழ்க்கனல், பைந்தமிழ்ச்சோலை ஆகிய மூன்று நூல்களிலும் காண்க!

3\. தமிழ்ப்பா லுண்ட தமிழர் அனைவரும்,
தாயின் பெருமை தழைக்க உழைப்போம்

௩. இன்றைய தமிழ்

எத்தனையோ மொழிகள் காலச் சுழலில் மறைந்துவிட்டன. தமிழ் ஐயாயிரம் ஆண்டிற்கு முன்பே இலக்கண இலக்கியங்களுடன் வளர்ந்தது. இன்றும் அஃது இளமையோ டிருக்கிறது; இந்தக் காலத்திற்கு ஏற்றபடி வளர்ச்சி பெறுகிறது. எந்த மொழியும் காலத்தால் மாறுதல் அடையும். உதாரணமாக: சாஸர் காலத்தில் பேசிய ஆங்கிலம் வேறு; பெர்னார்ட் ஷா காலத்து ஆங்கிலம் வேறு. ஆதி ஸம்ஸ்க்ருதம், பிராக்ருதமாகி, பாலியாகி, மாகதி, மஹாராஷ்ட்ரம், அபப்ரம்சம், ஸௌரஸேனம் முதலிய பாஷைகளாகி, பிற்காலம் ஹிந்தியாகி விளங்குகிறது. அதிலும் எத்தனையோ மாறுதல் உண்டு. துளசிதாஸ் எழுதிய ஹிந்தி வேறு; இன்று வழங்கும் ஹிந்தி வேறு. தமிழ் அன்றுபோல் இன்றும் உருவாயிருக்கிறது. என்றாலும், நடையில் மாறுதல் அதிகம். தொல்காப்பியர் தமிழ்நடை வேறு; தற்காலத் தமிழ் நடை வேறு. இன்றைய தமிழ், ஜில்லாவுக்கொருவிதமாகச் சிதைந்து கிடக்கிறது. இப்போதுதான் உரை நடை உருவாகி வருகிறது. இக்காலம் மனித அறிவு எல்லையற்ற விரிவடைந்துள்ளது. பழைய வில் இன்று ஆகாச குண்டிற்குப் பதிற்சொல்ல முடியாது. எண் சுவடியைக் கொண்டு இக்காலக் கணித சாகரத்தை நீந்த முடியாது. "அக்காலம் அப்படியிருந்தோம்; இக்காலத்திற்குத் தக்கபடி இன்னும் மேலாக முன்னேறி உலகை வெல்வோம்" என்ற வீறுடன் நாம் அயராமல் உழைக்கவேண்டும். உலக மொழிகளில் தமிழுக்குரிய இடம் இன்னும் கிடைக்கவில்லை.

ஆங்கிலம், வங்கம், ஹிந்திபோலவே, தமிழையும் எல்லாரும் விரும்பிக் கற்கும்படி நாம் செய்ய வேண்டும். காலத்திற்கேற்றபடி தமிழும் விரிவடைய வேண்டும். புதுமையைப் புதிய வுணர்ச்சியுடன் கையாளவேண்டும். ஆங்கிலேயர் ஆங்கிலம் பேசுவது போலத் தமிழர் கொச்சையில்லாமல், கட்டுக்கோப்புடன், அழுத்தந்திருத்தமாகத் தமிழ் பேசவேண்டும். தமிழென்றால் இனிமை, இன்பம், செம்மை, நீஞ் சுவை எனப் பொருளாம்; பொருளுக்கேற்றபடி பேசவேண்டும், எழுதவேண்டும், பாடவேண்டும். பேச்சும் எழுத்தும் ஒன்றாகவேண்டும். கரடுமுரடு கறபுறுக்கள் இல்லாமல், அன்னியர் கேட்டாலும் வாயூறும்படி கற்கண்டுபோலப் பேச வேண்டும்.

அதற்கு இலக்கணம் கற்கவேண்டும். ஆங்கிலம், ஃப்ரெஞ்ச், ஜெர்மன், இலத்தீன், ஆரியம், வங்கம், ஹிந்தி முதலிய மொழிகளில் திருத்தமான இலக்கணங்கள் உள்ளன. தமிழில் தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இரண்டும் உள்ளன. இவற்றையெல்லாம் ஆராய்ந்து, இக்காலத்திற்கும், பிற்கால வளர்ச்சிக்கும் ஏற்ற **இனிய தமிழ் இலக்கணம்** செய்வோம். தமிழை இனிமையாகப் பேச எழுத வழி காட்டுவதே இனிய தமிழ் இலக்கணம்.

4. காலத்திற் கேற்ற கனிதமிழ் காண்போம்.

௪. இலக்கணம் எதற்கு?

கண்மணிகாள், இதோ ஒரு மாம்பழம்! தங்க நிறம், கொழுத்த கதுப்பு, நல்ல மணம், இனிய சுவை —இவை இதன் இலக்கணம். இந்தக் கனி போலவே ஒவ்வொரு பாஷைக்கும் இலக்கணம் உண்டு. செம்மையான சொல், தெளிவான பேச்சு, இனிமையான பொருட்சுவை, திருத்தமான உச்சரிப்பு ஆகிய இவை இலக்கணம் படிப்பதால் வரும். பறவைகள் தமக்கு இயல்பான பாட்டைத் தெளிவாகப் பாடுகின்றன. ஆங்கிலேயர், வங்கர், ஹிந்தியர் முதலானோர் தமது மொழியைத் திருத்தமாகப் பேசுகிறார்கள். ஒலிப்பெட்டி (Radio)யில் கேளுங்கள்! தமிழையும் அப்படி நாம் இனிமையாகவும், திருத்தமாகவும், அழுத்தமாகவும் பேசவேண்டும். தமிழ் என்றாலே இனிமைதான். யாழும், குழலும் இனிமையே; ஆனால், பழகினவனே அவற்றை வாசிக்கமுடியும். அதுபோல, இனிய தமிழையும் கற்றறிந்தவனே திருத்தமாகப் பேசமுடியும். ஆதலால் எல்லாரும் இனிய தமிழ் இலக்கணம் படிக்கவேண்டும்.

5. திருந்தப் பேசவுந் திருத்தமாய் எழுதவும்
அனைவரும் இலக்கணம் அறிவது நன்றே.

I. எழுத்திலக்கணம்

ரு. ஒலியும் எழுத்தும்
(Sounds and Letters)

கோவிலில் அன்பர் பாடுவர். நாயனம், மேள தாளம் இசையலை வீசும். தொலையிலிருந்து கேட்டால் எல்லாம் 'ஓம்' என்ற ஒரே முழக்கமாயிருக்கும். சந்தையில் எத்தனையோ குரல்கள் பேரம் பேசும். தொலையிலிருந்து கேட்டால், 'ஓ' என்ற கூச்சலே மிஞ்சும். குளத்தில் கல் எறிந்தால், நீர்ச்சுழி சுழன்று சுழன்று குளம் முழுதும் வட்டமிடுகிறது. அது போலவே, சத்தமும் ஆகாயத்திற் சுழன்று வந்து, காதில் பாய்கிறது. தில்லிப் பேச்சும், சென்னைப் பாட்டும் ஆகாய அணுக்களில் நீந்தியே நமது வீட்டு ஒலிப்பெட்டியில் கேட்கின்றன. எல்லாப் பாட்டிற்கும் 'ஓம்' என்ற சுருதி அடிப்படையா யிருக்கிறது. ஒரு பாடகன் முதலில் அ - ஆ - ஆ... என்று கண்டசுத்தி செய்தே, ஓ - ம் - ம் - ம் என்று பாட்டைத் தொடங்குகிறான். ஒரு குழந்தை முதலில் அ அ என்று வாயெடுத்து, 'அம்ம்ம் மா' என்று பேசுகிறது.

ஆதலால், எல்லா ஒலிகளுக்கும் மூலம் அ. அக ரம்; "அகர முதல எழுத்தெல்லாம்." அ, பிறகு உ,

பிறகு ம்-இயல்பாக உண்டாகும். மூன்றும் சேர்ந்ததே ஓம். யானை பிளிறும்போது, "அஉம், ஓம்" என்று தெளிவாகக் கேட்கும். ஒரு குழலோன் ஓம் என்று மூச்சைப் பெய்து, எழு துளைகளை அழுத்தியே பலவகைப் பண்களை வாசிக்கிறான், நாம் பேசுவதும் அப்படித்தான்.

நெஞ்சிலிருந்து மூச்சு வருகிறது. அது மார்பு, தொண்டை, உச்சி, நாக்கு, அண்ணம், பல், உதடு ஆகியவற்றில் தாக்கிப் பல ஒலிகளை உண்டாக்குகிறது. அந்த ஒலித்திரளே எழுத்து. மனிதன்சாடைகளால் பேசினான்; பிறகு சத்தத்தால்; பிறகு ஒலிகளுக்கு உருவம் தந்தான்; சித்திரங்கள் மூலம் எண்ணத்தை வெளியிட்டான். நீண்டகாலத்திற்குப் பிறகே எழுத்துக்கள் உண்டாயின. எழுத்தின் வடிவம் இரண்டு: வாயால் பேசுவதும், செவியில் ஒலிப்பதும். ஒலி வடிவம் கண்காண எழுதுவது; வரி வடிவம் எழுத்து சொல்லானது; சொல்லின் கூட்டம் தொடர்; தொடரின் கூட்டம் பேச்சு, இலக்கியம், கவிதை, கலை ஆனது.

ஆங்கிலம், தேவநாகரி, பார்ஸி, சீனம், ஜப்பானியம், வங்காளம், குஜராத்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ்—இவை முறையாக எழுதப்படுகின்றன. இவற்றுள், சீனமும் ஜப்பானியமும் சொல்லுக்கொரு எழுத்துடையன. பார்ஸி எழுத்துக்கள் சிக்கனமானவை; ஆனால் கூட்டெழுத்து; படிப்பது சிறிது கடினம். தேவநாகரி முதலிய எல்லா இந்திய லிபிகளும் கூட்டெழுத்துள்ளவை. ஆங்கிலம் தமிழ் இரண்டுமே கூட்டெழுத்தில்லாதவை. ஆங்கி

லம் 26 எழுத்துக்களில் உலகை வளைத்துத் தன்னுள் அடக்குகிறது. ஆனால், உயிர்மெய் இல்லாததால், அதில் ஒலிப்பதைவிட அதிக எழுத்துக்கள் சேர்க்க வேண்டியிருக்கிறது; உச்சரிப்பு கடினம்: 'லைட்' என்பதற்கு (Light) ஐந்து எழுத்துக்கள் வேண்டும். தாட் (Thought) என்ற இரண்டெழுத்துமொழிக்கு ஏழெழுத்துக்கள் வேண்டும். வங்காளி லக்ஷ்மி என்றெழுதி லொக்கி என்று சொல்வான். தமிழை எழுது கிறபடியே படிக்கலாம்; படிக்கிறபடியே எழுதலாம்; கூட்டெழுத்தில்லை. முப்பதெழுத்தில் உலக மொழிகளை யெல்லாம் எழுத வகையுண்டு. உலக எழுத்துக்களில் செட்டானதும், சிக்கலில்லாததும், ஹா, ஹூ என்று மூச்சை வீணாக்காததும் தமிழே! தமிழ் இலக்கணமும் மிகத் தெளிவானது. எழுத்து, சொல், தொடர், அகப்பொருள், புறப்பொருள், கவிதை, அணி ஆகியவற்றை இலக்கணம் விளக்கும்.

> 6. எழுத்தும், சொல்லும், தொடரும், பொருளும்
> கவியும், அணியும், நவிலும் இலக்கணம்.

---

௩. முதலெழுத்து
(Primary letters)

எழுத்துக்கள் இரண்டு வகைப்படும் :
முதல் எழுத்து, சார்பு எழுத்து.

புல்லாங்குழல் தானே பாடுமா? பாடாது. பாடகன் மூச்சைப் பெய்து துளைகளை அழுத்தினாலே அஃது இசைக்கும். ஒரு பிணத்திற்குக் கைகால் எல்லாம் உண்டு; அது நடக்குமா? பேசுமா? மாட்டாது;

ஏன்? உயிர் இல்லை. உயிரும் உடலும் சேர்ந்ததே வாழ்வு. அதுபோலவே, எழுத்திற்கும் உயிர் உண்டு; உடம்புண்டு. உயிரை ஆவி, உயிரெழுத்து என்பர்; உடம்பை ஒற்று, புள்ளி, உறுப்பு, மெய், மெய்யெழுத்து என்பர்.

உயிர் (Vowels) பன்னிரண்டு: அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ. மெய்யெழுத்து (Consonants) பதினெட்டு: அதற்குப் புள்ளியுண்டு: க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன். உயிரும், மெய்யும் மூலவொலிகள்; இவை மற்ற எழுத்துக்களுக்குக் காரணமானவை, முதன்மையானவை. இவற்றை "முதலெழுத்து" என்பர். இவற்றைச் சார்ந்து வருவன சார்பெழுத்துக்கள். அவற்றின் விரிவு பின்னேவரும்.

7. அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ,
ஐ, ஒ, ஓ, ஔ உயிர்பன் னிரண்டாம்.

8. க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள
ற ன பதி னெட்டும் மெய்யெழுத் தாகும்.

9. உயிரும் மெய்யும் முதலெழுத் தென்பர்.

எ. குறில், நெடில்
(Short and Long Vowels)

பாட்டுக் கச்சேரி

தோட்டத்திற்குச் செல்வோம். ஆ! எவ்வளவு இனிமையான பாட்டுக்கச்சேரி! வண்டுகள் 'ஓ ஓம்' என்று சுருதி கூட்டுகின்றன. குயில்கள் 'உ ஊ, கு-கூ' என்று பாடுகின்றன. கிளிகள் 'கி கீ, கி கீ'

என்று கீர்த்தனம் செய்கின்றன. பருந்துகள் 'இர்ர்ர்' என்று சங்கதி போடுகின்றன. மைனாக்கள் 'எவ, எவ' என்று பின்பாட்டுப் பாடுகின்றன. 'ஓஓஓஓ, கொகொகோ' என்று கோழிகள் பாண்டு வாசிக்கின்றன. "கர்கார் ஞொர்" என்று காக்கைகள் மோர்சிங் அடிக்கின்றன. 'சிட் சீட் சட சட' என்று சிட்டுக்குருவிகள் மத்தளங் கொட்டுகின்றன. "உட் ஊட், டுக் டூக்" என்று மரங்கொத்திகள் தாளம் போடுகின்றன. "கிரீச்கிரிகிரிகிரி" என்று அணிற் பிள்ளைகள் மெச்சுகின்றன. மயில்கள் "தை தா" என்று கூத்தாடுகின்றன. பாட்டுக் கச்சேரி எப்படி? செலவில்லாத இயற்கைக் கச்சேரி!

இதில் நமக்கு இலக்கணம் ஒன்று விளங்கும்: குயில் அ என்று கூவிப் பிறகு—கூ என்று கூவுகிறது. குறுகிய ஓசை முன்னே, நெட்டோசை பின்னே கேட்கிறது. 'அ ஆ! என்ன சுவையான பாட்டு'......என்கிறோம். அ-ஓசை குறுகிய எழுத்து; ஆ-ஓசை நீண்ட எழுத்து. குறுகிய ஓசை - எழுத்து குற்றெழுத்து (Short vowel). நீண்ட ஓசை எழுத்து நெட்டெழுத்து (Long vowel). குற்றெழுத்து ஐந்து: அ, இ, உ, எ, ஒ. இவை குறில் ஆகும். நெட்டெழுத்து எழு: ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ. இவை நெடில் ஆகும். குறிலை ஒரு சுண்டில், அ, இ என்று சொல்லலாம். நெடிலை இரண்டு சுண்டில் சொல்லலாம்.

10. அ, இ, உ, எ, ஒ ஐந்தும் குறில்.
11. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ நெடில்.

அ. சுட்டெழுத்து
(Demonstrative Letters)

இதோ, ஆள்காட்டி விரல்! இதற்குச் சுட்டு விரல்என்று பெயர். என்? இஃது 'இதோ, அதோ' என்று பொருள்களைச் சுட்டிக் காட்டுகிறது. அதோ கந்தன், இதோ கண்ணன், உவன் வேலன் என் பனவற்றில், முதலில் அ, இ, உ மூன்று எழுத்துக்கள் உள்ளன. இவை சுட்டெழுத்துக்களாம். இவை ஒரு பொருளைச் சுட்டிக் காட்டும்: அவன் தொலைவில் இருப்பவன். இவன் கிட்ட இருப்பவன். உவன் பின் னால் இருப்பவன்.

சுட்டில் இரண்டுவகையுண்டு. ஒன்று சொல்லின் உள்ளே சேர்ந்திருக்கும். அவன் என்பதை அ+அன் என்று பிரித்தாற் பொருள் இல்லை. சொல்லின் அகத் தில், அல்லது உள்ளே இருந்தே இப்படிச் சுட்டுவது அகச்சுட்டு. அவன், இவள், உவன், அவை, அது—இவை அகச் சுட்டாம்.

மற்றொருவகைச் சுட்டு, பிரித்தால் பொருள் தரும். அப்பையன் என்பதை அ+பையன் என்று பிரிக்கலாம். அ = அந்த. பையன் என்பதற்குப் புறத்தே இருந்து அ சுட்டுகிறது; இதற்குப் புறச்சுட்டு என்று பெயர். அம்மாடு, இம்மனிதன், இவ்வீடு, அத்தலைவன்-இவை என்ன சுட்டு? என்?

12. அகப்புறச் சுட்டாம் அ, இ, உ.

அடியில் வரும் தொடர்களில், அகச்சுட்டை யும், புறச்சுட்டையும் கண்டு சொல்லுக; புறச்சுட் டைப் பிரித்து விளக்குக:

கையெழுத்து

காந்தித் தாத்தாவைத் தெரியாதவர் இவ்வுலகில் இல்லை. அப்பெரியார் சொல்லுகிறார் :

" அக்காலத்தில்,நான் கையெழுத்தைக் கவனிக்க வில்லை. அஃது இப்போது கோழி கிண்டியது போலி ருக்கிறது. இராஜேந்திரப் பிரசாதர் எழுத்து மணி மணியா யிருக்கிறது. அவரைப்போல் நான் எழுத முடியாது. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ? "

---

௬. வினா எழுத்துக்கள்
(Interrogatives)

இனியது எது ?

ஔவையார் பல நீதிகளைச் சொன்னவர். வேலன் அவரைச் சில கேள்விகள் கேட்டான். ஔவையார் தகுந்த விடை சொன்னார் :

வேலன் : அம்மையே இனியது எது ?

ஔவை : இனிது இனிது ஏகாந்தம் இனிது.

வேலன் : அதைவிட இனியதுண்டா ?

ஔவை : அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்.

வேலன் : அதைவிட இனியது உண்டோ ?

ஔவை : அதனினும் இனியது அறிவுள்ளோரைக் கனவிலும் நனவிலும் காண்பதுதானே.

எது, ஏது, உண்டோ, அன்றோ, ஏன், எப்படி, இவனோ, அவனோ என்பன கேள்வி கேட்கின்றன.

கேள்வி என்பதையே வினா என்பர். வினாவைக் குறிக்கும் எழுத்துக்கள் வினா எழுத்துக்களாகும். **எ, யா, ஆ, ஓ, ஏ** இந்த ஐந்தும் வினா எழுத்துக்கள். இவற்றிற் சில சொல்லுக்கு முதலில் வரும்; சில முடிவில் வரும்:

எவன் - **எ** யார் - **யா**	சொல்லின் முதலில் வந்தன.
அவனா - **ஆ** இவனோ - **ஓ**	சொல்லின் ஈற்றில் வந்தன.

எது? மெய்தானே?

ஏ சொல்முதலிலும் ஈற்றிலும் வந்தன.

சுட்டைப் போல வினாவும் இரண்டு வகையாகும்: **அகவினா, புறவினா.**

சொல்லுக்கு அகத்திலிருந்து, வினாவுவது **அக வினா**... அகவினாவைப் பிரிக்கமுடியாது. உதாரணம்: எவன்? யாவன்? எது? சொல்லுக்குப் புறத்திலிருந்து வினாவுவது **புறவினா**; அதைப் பிரிக்கலாம். உதாரணம்: எம்மனிதன் எ + மனிதன்; அதுதானே? அதுதான் + ஏ...

சொல்லுக்கு முதலில் எ, **யா** அகவினாவாக வரும்: எது? யாது? யாவன்?

சொல்லின் ஈற்றில் ஆ, ஓ, ஏ புறவினா ஆகும்: சிவனா = சிவன் + ஆ? சீதையோ = சீதை + ஓ? அதுதானே = அதுதான் + ஏ? எ சொல்முதலில் இரண்டு வினாவாகவும் வரும்: எவன், எவை—அகவினா; எம் மனிதன், எவ்வீடு—புறவினா.

13. எ, யா முதலிலும், ஆ, ஓ, முடிவிலும், ஏ இரண்டிடமும் வினாவைக் குறிக்கும்.
14. அகவினா புறவினா எனவினா இரண்டாம்.

அரிது எது?

அடியில் வரும் சொல்லாடலில், அகவினா புறவினா எதெது என்பதைக் குறிக்கவும்:

வேலன் ஔவையாரை மீண்டும் கேட்கிறான்:

வேலன்: தாயே எப்பிறப்பு அரியது?

ஔவை: அரிது, அரிது மானிடர் ஆதல் அரிது.

வேலன்: அதுதானா அரிது? அதைவிட அரியதுண்டோ? ஆயின் எது?

ஔவை: ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது.

வேலன்: தாயே எச்செயல் அரிது?

ஔவை: தானமும் தவமும் தாம் செயல் அரிது.

கഠ. மெய்யெழுத்து இனம்

மெய்யெழுத்து பதினெட்டும் உங்களுக்குத் தெரியும். மெய்யெழுத்தை மூன்று இனமாகப் பிரிக்கலாம்:

1. **வல்லினம்** (Hard Consonants, Surds) ஆறு: க், ச், ட், த், ப், ற். இந்த எழுத்துக்களை உச்சரிக்கும்போது, மூச்சு எங்கிருந்து வருகிறது? மார்பிலிருந்து உரமாக, வலுவாக வருகிறது. அதனால் இவற்றை வலி, வல்லினம், வன்கணம் என்பர்.

2. **மெல்லினம்** (Soft consonants, Nasals) ஆறு: ங், ஞ், ண், ந், ம், ன். இவை மூக்கினால் ஒலிக்கும் மெல்லிய எழுத்துக்கள். இவற்றை மெலி, மெல்லினம், மென்கணம் என்பர்.

3. இடையினம் (Medial Consonants, liquids) ஆறு: ய், ர், ல், வ், ழ், ள். இவை மூக்கிற்கும் மார்பிற்கும் இடையே, மிடற்றில் இருந்து வரும். இவற்றை இடை, இடையினம், இடைக்கணம் என்பர். (மிடறு = கழுத்து).

15. மார்பொலி வல்லினம்: க, ச, ட, த, ப,ற, ஆம்.
16. மூக்கொலி மெல்லினம்: ங, ஞ, ண, ந, ம, ன ஆம்.
17. மிடறொலி இடையினம்: ய, ர, ல, வ, ழ, ள ஆம்.

வீரச் சிறுவன்

இக் கதையில் வல்லின மெல்லின இடையின எழுத்துக்களைக் கவனிக்கவும்:

மதுரையைச் சிற்றரசர் சிலர் முற்றுகை போட்டனர். அமைச்சர் நெடுஞ்செழியனிடம் ஓடி, "அரசே, முரசுகொட்டி, வாள் வீசிப் பகைவர் ஊரை வளைத்துக்கொண்டார்களே" என்று முறையிட்டார்கள். "இதோ!" என்று உருவிய வாளுடன் எழுந்தான் வீரச்செழியன். "பூ, இந்தச் சிறுவனோ எம்மை வெல்பவன்!" என்று பகைவர் நகைத்தனர். வீரச் சிறுவனுக்கு ஆத்திரம் துடித்தது. "நகைக்கின்றீர்களா! இதோ உங்களை வீழ்த்திச் சிறையிடுகிறேன்; இன்றேல் நான் பாண்டியனல்லேன்! என்னைக் கவிகள் பாடவேண்டா!" என்று துரத்தினான் பகைவரை. செழியன் வெட்டுக்குவெட்டு கொடுத்து, தலையாலங்கானத்தில் பகைவர் எல்லாரையும் வென்று, வெற்றிவீரனாகத் தலைநிமிர்ந்து நின்றான்.

"கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா! விதை சிறுத்தால் மரம் சிறுக்குமா! வயது சிறுத்தாலும்,

வலிமை சிறுக்குமா!" என்று வீரர் வியந்தனர். மாங்குடி மருதனார் என்னும் புலவர், செழியனைப் புகழ்ந்து பாடினார்......வீரன் என வாழ்!

கக. சார்பெழுத்து
(Secondary letters)

உயிரெழுத்துடன் கூடியே மெய்யெழுத்து ஒலிக்கும். உயிரும் மெய்யும் சேர்ந்தது **உயிர்மெய் யெழுத்து** : (க்+அ = க). உயிர்மெய்களைச்சார்ந்த வேறு சில எழுத்துக்கள் உண்டு. அவற்றுள் ஃ ஒன்று; அதை அஃகேனம், அஃகான் என்பர். அஃது **ஆய்த எழுத்து**. சில எழுத்துக்களின் ஒலி அளவில் நீளும்; சில ஒலி குறுகும். அளவு நீண்ட உயிரெழுத்து **உயிரள பெடை**. அளவு நீண்ட மெய் ஒற்றளபெடை. இ, உ, ஐ, ஔ, ம, ஃ — இந்த ஆறும் ஒலி குறுகி வரும். இவை யெல்லாம் சார்பெழுத்தாம். சார்பெழுத்துக் கள் மொத்தம் 369; விபரம் அடியிற் காண்க:

வகை		எழுத்துக்கள்
உயிர்மெய்	...	216
முற்றாய்தம்	...	8
உயிரளபெடை	...	21
ஒற்றளபெடை	...	42
குற்றியல் உகரம்	...	36
குற்றியலிகரம்	...	37
ஐகாரக் குறுக்கம்	...	3
ஔகாரக் குறுக்கம்	...	1

மகரக் குறுக்கம்	...	3
ஆய்தக் குறுக்கம்	...	2
ஆ. கO வகைக்கும்	...	369

18. உயிர்மெய், ஆய்தம், உயிர்ஒற் றளபெடை
குற்றியல் இ, உ, குறுகிய ஐஔ
மஃகுடன் பத்தும் சார்பெழுத் தென்க.
19. முந்நூற் றறுபத் தொன்பது சார்பே.

இப் பெயர்களைக் கண்டு மயங்காதீர்கள்! பின் வரும் பாடங்களில் இவை தெளிவாகும். தமிழின் எழுத்திலக்கண நுட்பத்தை இவற்றால் அறியலாம்.

பசி ஒன்றே

“ஐயம் இட்டுண்” (பிச்சை போட்டுச் சாப்பிடு) என்பது ஔவையார் வாக்கு. அழகுமணி அப்படியே செய்துவந்தான். ஒரு நாள் அவன் உண்ண உட்கார்ந்தான். வாயிலில் “அம்மா, பசி” என்று பிச்சைக்காரன் வந்தான். அழகு இலைச்சோற்றை அள்ளிச் சென்றான். அங்கே, ஒரு நாய் வாலையாட்டி ஆவலாகப் பார்த்தது. கொண்டுவந்ததில் பாதி நாய்க்கும், பாதி பிச்சைக்காரனுக்குமாகப் போட்டான் அழகு. “என்ன ஐயா! நான் மனிதன்; எனக்குப் பசி தவிக்கையில், நாய்க்குச் சோறு போடுகிறாய்!” என்றான் பிச்சைக்காரன். “அப்பனே, நமக்கொரு பசி, நாய்க்கொரு பசியா? நீ கேட்டு வாங்குவாய். நாய் வாலை ஆட்டித்தான் வாங்கும்; அன்று ஒரு பிடி போட்டேன்; நன்றியுடன் என் வீட்டைக் காக்கிறது நாய்” என்றான் அழகு. பிச்சைக்காரன் “மெய்தான்; உமது

சோற்றுக்கொரு நன்றி; சொல்லுக்கொரு நன்றி" என்று சொன்னான்.

இக்கதையில் இரண்டு தொடர்களைத் தேர்ந்து, அவற்றிலுள்ள உயிர், மெய், உயிர்மெய் எழுத்துக்களை எழுதுக!

கஉ. உயிர்மெய்

சோறும் குழம்பும் சேர்ந்தாலே சாப்பாடு சுவைக்கும். பாவும் ஊடும் சேர்ந்தாலே ஆடையாகும். உடம்புடன் உயிர் சேர்ந்தாலே வாழ்க்கை நடக்கும். அதுபோல், உயிரும் மெய்யும் கூடினாலே பேச்சொலிக்கும்; இன்றேல், படம் என்பது ப்ட்ம் என்றிருக்கும்; படிக்க முடியாது. உயிர் எழுத்துக்களும், மெய்யெழுத்துக்களும் கூடிய **உயிர்மெய் யெழுத்துக்கள்** பலவித உச்சரிப்பிற்கு வேண்டும். அவை மெய் முன்னும் உயிர் பின்னுமாக ஒலிக்கும். கஉ உயிருடன் கஅ மெய் கூடி, உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு ஆகும். மெய்யெழுத்து அ வுடன் கூடும் போது (க்+அ=க) புள்ளியிராது: அவ்வளவுதான்.* மற்ற உயிர்களுடன் கூடும்போது, மெய்வடிவம் மாறும். ஒவ்வோர் உயிருக்கும் குறியுண்டு. அது மெய்யுடன் ஐக்கியமாகும். உயிர்க்குறிகளையும், அவை புணரும் வகையையும் தெளிவாகக் காண்க:

உயிர்	உயிர்க்குறி புள்ளி நீக்கம்	கூட்டு	குறி எண்
அ		த்+அ=த	"
ஆ	ா ( )	பா, ணா, று	2
இ	ി ி	கி, ளி, டி	4

---

* ர் என்பது அ வுடன் கூடும்போது புள்ளி நீங்குவதுடன் மேழ கால் சாய்ந்து நீளும்: (ர்+அ=ர)

ஈ	ீ	சீ, னீ	1
உ	ு, ு, ு, ு	கு, ரு, பு, சு, நு, ஜு	4
ஊ	ூ, ூ, ூ, ூ	கூ, சூ, பூ, ணூ, ஜூ	4
எ	ெ	தெ	1
ஏ	ே	தே	1
ஐ	ை, ை	தை, ணை, லை	2
ஒ	ொ, ொ	கொ, ணொ	2
ஓ	ோ, ோ	கோ, ணோ	2
ஔ	ௌ	கௌ, சௌ	2

216 உயிர்மெய் யெழுத்துக்களையும் தெளிவாக எழுதுகிறேன். பார்த்து எழுதுங்கள் :—

க்	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த்	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற்	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

உயிரெழுத்தில், குறில், நெடில் இருப்பதுபோல, உயிர்மெய்யிலும் **உயிர்மெய்க்குறில், உயிர்மெய்ந்நெடில்**

உண்டு. குற்றெழுத்துடன் சேரும் மெய் உயிர் மெய்க்குறில், நெட்டெழுத்துடன் சேரும் மெய் உயிர்மெய்ந்நெடில் எனப்படும்.

க, கி, கு, கெ, கொ — இவை உயிர்மெய்க்குறில் கள் **(Short Vowel-consonants).** கா, கீ, கூ, கே, கை, கோ, கௌ — இவை உயிர்மெய்ந் நெடில்கள் **(Long Vowel-consonants).** குறில் ஐந்துடன், இப்படியே பதினெட்டு மெய்யும் கூடினால், உயிர்மெய்க்குறில் $5 \times 18 = 90$ ஆகும். நெடில் ஏழுடன் பதினெட்டு மெய் கூடினால், உயிர்மெய்ந் நெடில் $7 \times 18 = 126$ ஆகும்.

ஆறு வல்லெழுத்துடன் உயிர் பன்னிரண்டும் சேர்ந்து **உயிர்மெய் வல்லெழுத்து** 72; அவ்வாறே **உயிர் மெய் மெல்லெழுத்து** 72; **உயிர்மெய் இடையெழுத்து** 72 ஆதல் அறிக!

எழுத்துக்களைச் சொல்லும் வகை :—

குற்றெழுத்துக்களையும், மெய் யெழுத்துக்களை யும் " கரம் " என்பதைச் சேர்த்து, **அகரம், இகரம், ககரம், மகரம்** என்பர்.

நெட்டெழுத்துக்களைக் " **காரம்** " சேர்த்துச் சொல்வர் : ஆகாரம், ஈகாரம். ஐ, ஔ இரண்டையும் ஐகாரம், ஐகான், ஔகாரம், ஔகான் என்பர். ஆய்த எழுத்தை அஃகான் என்பர்.

20. பன்னிரண் டுயிருடன் பதினெண் மெய்யுற
உயிர்மெய் யிருநூற் றுப்பதி னாறும்.

21. மெய் முன், உயிர் பின் ஒலிக்கும் உயிர்மெய்.

22. அகரமெய் தவிர மற்ற மெய்கள்,
உயிர்க்குறி சேர உருவில் மாறும்.

23. எழுத்துடன் ககரம் காரம் கானுமாம்.

நிற வேற்றுமை

அடியில் வரும் சிறுகதையில் உயிர், உயிர்மெய், உயிர்மெய்ந்நெடில், உயிர்மெய்க்குறில், வலி, மெலி இடை உயிர்மெய்கள் கொண்ட சொற்களை எழுதுக:

சானகி பூனை வளர்த்தாள்; அது இரண்டு குட்டி போட்டது; ஒன்று வெள்ளை, மற்றொன்று கறுப்பு. சானகி தாயார், "கறுப்புக்குட்டி நமக்கு வேண்டா; குறவனிடம் கொடுத்துவிடுவோம். வெள்ளையே அழகு" என்றாள். "நான் மாட்டேனம்மா; நிறம் இரண்டானால் உயிர் இரண்டா? குட்டிகளின் ஆடல், சத்தம் இரண்டாமா?" என்று சானகி தடுத்தாள். இச்சமயம் 'ஞாவ் ஞாவ்' என்று தாய்ப்பூனை வந்தது; இரண்டு குட்டிகளையும் கௌவிச் சென்று, கொல்லைக் கொட்டத்தில் வைத்து விளையாடியது. "ஞொர் ஞொர்" என்று குட்டிகள் தாயுடன் கொஞ்சின, பால் குடித்தன, குதித்தன. "பாரம்மா, தாய்க்கு வெள்ளை கறுப்பில்லை. இரண்டும் சமானமாக விளையாடுகின்றன. தாய் இரண்டையும் அன்புடன் கொஞ்சுகிறது. உனக்கொரு கறுப்புப்பிள்ளை பிறந்தால், குறவனிடம் கொடுப்பாயா? இயற்கையில் எல்லா நிறமும் அழகே. மனிதர் கண்ணிலே தான் நிறவேற்றுமை இருக்கிறது" என்றாள் சானகி. "மெய்தானம்மா; நீ அறிவாளி. கறுப்புப் பசு கறுப்புப் பால் கறக்குமா? மேகம் கருமையானால் மழையும் கறுப்பாகுமா?" என்றாள் தாய்.

கநு. ஆய்தம்

ஆய்தம், முப்புள்ளி, தனிநிலே எனப்படும். அது F, Z, ஃக போன்ற மூச்சொலிகளேக் குறிக்கப் பயனுகும் என்பதைப் பின் அறிவோம். அது தமிழில் சொல்லின் முதலில் வராது; முடிவில் வராது; இடையிலேதான் வரும். அதுவும் ஒரு குறிலுக்குப் பின் வல்லின உயிர்மெய்க்குமுன் வரும். உதாரணம் : எஃகு, அஃது, பஃது, பஃறுளி.

உயிர்முதற் சொற்களின்முன் அது இது என்பன அஃது இஃது என்றுவரும்: அஃதாவது; இஃதென்ன ? அதுமரம் ; இதுதாண்.

ஐந்தெழுத்தனர்

இக்கதையில் வரும் ஆய்த எழுத்தைக் கவனிக்கவும் :— புலவர் ஐந்தெழுத்தனர் (பஞ்சாட்சரர்), தொல்காப்பிய ஆராய்ச்சியில் மூழ்கி யிருந்தார். அப்போது உள்ளே மனேவி 'குஃ பஃ' என்று அரிசி தீட்டும் சத்தம் கேட்டது.ஓடினர் புலவர் : " அடி அஃறிணே ! ஒன்பஃது தடவை சொன்னேமே, ஆய்தம் குறிலுக்குப் பின், வல்லின உயிர்மெய்க்கு முன் வரும் என்று. மீண்டும் குஃ பஃ என்று அஃக உரைத்ததேன் ? குஃகு, பஃகு, இஃது, பஃது என்று சொல் !" என்ருர்.

" அஃது அமைவே ; உலக்கைக்கு இலக்கணம் தெரியுமா ? " என்ருள் மனேவி.

24. குறில், மெல்லினமெய்க்கு இடை, ஃ வருமே.

கச. உயிர் அளபெடை

இப்போது சொல்லப்போவது பாட்டுக்கே. அளவுகடந்தொலித்தல் அளபெடை; ஓசை குறைந்தால் நிறைவாக்கவும் அது பயனாகும். அளபு எடுத்தல் = அளபெடை (அளபு + எடை Prolongation). உயிர் எழுத்து அளவு நீண்டொலித்தால் **உயிர் அளபெடை** (**Vowel prolongation**), ஒற்றெழுத்து அளபெடுத்தால், ஒற்றளபெடை (**Consonant prolongation**) என்பர். உயிரளபெடை சொல்லுக்கு முதல் இடை கடையில் வரும். ஒற்றளபெடை முதலில் வராது.

	உயிர் அளபெடை	ஒற்றளபெடை
சொல்லுக்கு		
முதல்	வாஅழ்க	,,
இடை	உருஅர்க்கு	இலங்ங்கு
கடை	கழாஅ	விடங்ங் + கலந்த

நெட்டெழுத்து ஏழும் அளபெடுக்கும். அவற்றிற்கு இனமான குற்றெழுத்தையே அளபுக்கு அறிகுறியாகப் போடுவர். உயிர்மெய்யானாலும் சரி, அதில் உள்ள உயிருக்குச் சரியான *இனவெழுத்தே அளவுக்குறியாகும். "ஓஒதல் நன்று." இதில், ஓ வின் இனமான ஒ அளவுக்குறியானது. வாஅழிய தூயர்; வாவிலுள்ள ஆவுக்கு, அ இனம் அளவுக்குறியானது. "இடையன் வெட்டு அருஅ வெட்டு." இதில் அளபெடை எது? எந்த எழுத்து எப்படி அளபெடுத்தது?

உயிரளபெடைக்கு மூன்று † மாத்திரை. எப்படி? ஆடூஉ என்பதில் டூஉ அளபெடை. ஊ நெடில்

---

* இனவெழுத்துக்கள் பாடம் கஅ.
† மாத்திரை பாடம் உ௦.

இரண்டு மாத்திரை, உ ஒரு மாத்திரை. இரண்டும் சேர்ந்து 3 மாத்திரைகள். ஆனால், இராகம் இழுக்கும்போது "தரனனனஅஅஅ" என்று அளவு மிக நீண்டுபோகும். "செரூஅஅய் வாழிய நெஞ்சு" என்பதில் ரூ அ அ சேர்ந்து 4 மாத்திரை யானது.

உயிரளபெடைக்குக் கணக்குண்டு. நெட்டெழுத்து ஏழும் சொல்லுக்கு முதலில், இடையில், கடையில் அளபெடுக்கும்; $7 \times 3 = 21$. ஔ சொல்லுக்கு நடுவிலும் கடையிலும் வராது; 21ல் இரண்டு போனால் 19. அளபெடையில் இன்னும் இரண்டு வகையுண்டு: செய்யுளில் ஓசையினிமைக்காக வருவது: இன்இசைஅளபெடை—"எடுப்பதூஉம் எல்லாம் மழை". அளபெடுக்கும் சொற்கள் பொருளில் வேறுபடுவதுண்டு. அவற்றைச் சொல் இசை அளபெடை என்பர்: உரன் நசைஇ, வரல் நசைஇ என்னும்போது, நசை விருப்பம் என்பது, நசைஇ விரும்பி எனப்பொருள் கொடுக்கிறது. இன்னிசை, சொல்லிசை அளபெடைகளைச் சேர்த்தால், அளபெடைக் கணக்கு 21 சரியாகும்.

25. அளவு நீளல் அளபெடை யாகும்.
ஓசை நிரப்ப வுதவும் அளபெடை.
26. உயிரின் அதிகம் உயிரள பெடையாம்;
27. ஒற்றின் அதிகம் ஒற்றள பெடையாம்.
28. இனக்குறி லுடனே நெடில் அள பெடுக்கும்.

கரு. ஒற்றளபெடை

ஒற்றெழுத்துக்களில் பதினொன்றே அளபெடுக்கும் — ங, ஞ, ண, ந, ம, ன, வ, ய, ல, ள, ஃ. மெய்யுடன் ஆய்தமும் மாத்திரையில் ஒன்றாதலால், இங்கே சேர்க்

கப்பெற்றது. இன்னின்ன இடத்திலேதான் இந்த எழுத்துக்கள் அளபெடுக்கும் என்றுண்டு. சொல்லுக்கு இடையிலும் கடையிலுமே ஒற்று அளபெடுக்கும். அதிலும் இரண்டு வகையுண்டு : (1) ஒரு குறிலை அடுத்து, குறிலுக்குக் கீழ் வருவது, **குறில்கீழ் அளபெடை** யாகும். எங்ங்கு என்பதில் ங் ஒரு குறிலின் கீழ், அடுத்து வந்தது. (2) இரண்டு குறில்களுக்குக் குறில் இணை என்பர். குறில் இணைக் கீழ்வரும் அளபெடை **குறிலிணைக்கீழ் அளபெடை**யாகும் : இலங்ங்கு. ஆய்தம் சொல் நடுவிலேதான் அளபெடுக்கும் : அஃஃகி, விலஃஃகி. அந்தந்த மெய்யெழுத்தை அடுத்துப் போடுவதே அளபாகும்.

இப்போது கணக்குப் பார்ப்போம் : ங ஞ ண ந, ம ன வ ய ல ள பத்தும் நான்குவகையாக அளபெடுக்கும் : 1. குறிற்கீழ். 2. குறில்இணைக்கீழ். 3. சொல் நடுவில் 4. முடிவில் ; வகைக்குப் பத்து வீதம் நாற்பதாகிறது. ஆய்தம் இரண்டு குறிலுக்குப் பிறகும் ஒரு குறிலுக்குப் பிறகும் இடையிலே அளபெடுக்கும். அதன் கணக்கு 2. 40+2 = ஒற்றளபெடை 42.

29. ங, ஞ, ண, ந, ம, ன, வ, ய, ல, ள ஆய்தம்
தத்தம் முடனே அளபு நீளும்.

சேரன் வீரம்

இக் கதையில் வரும் அளபெடைகளை வகைப்படுத்தி யெழுதுக :

சேரன் செங்குட்டுவன் பத்தினிக்கல் கொண்டு வர இமயமலைக்குப் புறப்பட்டான். "வா அழிய நீஇடு!" என எல்லாத் தமிழரும் அவனைப் போற்றிப் புகழ்ந்தனர். சேரன் கங்கைக் கரைக்கு வந்தான்.

அங்கே கனகவிஜயர் என்னும் வடமன்னர், தமிழரை இகழ்ந்தனர்; எளமூ மன்னர் துணைகொண்டு சேரனை எதிர்த்தனர். சேரனுக்கு மீசை துடித்தது. கொட்டினான் முரசம்...வெட்டினான் பகைவரை... கனகவிஜயர் கலங்கி, வலியிழந்து, காவி யணிந்து பணிந்து உயிர் தப்பி ஓடினர். சேரன் வெற்றியுடன் பத்தினிக்கல் கொண்டு, கனகவிஜயரையும் சிறைப் பிடித்துத் தமிழகத்திற்கு வந்தான்.

கசூ. குற்றியல் உகரமும், இகரமும்

இ, உ ஆகிய இரண்டு உயிரெழுத்துக்களுக்கும் ஒவ்வொரு மாத்திரை உண்டு. படி, செலவு என்பதில் இ,வு ஒரு மாத்திரை முற்றும் ஒலிப்பதால், இவை முற்றிகரம், முற்றுகரம் ஆகும். வீடியாது, ஆறு என் பவற்றில் உள்ள இ, உ அரை மாத்திரையே ஒலிப்ப தால் குற்றிகரமும், குற்றுகரமும் ஆகும். சில இடங் களில் இவை மிகவும் குறுகலாக அரை மாத்திரை யளவே ஒலிக்கும். அவ்வாறு ஒலிக்கும் இகரம் குற்றியல் இகரமாகும்; உகரம் குற்றியல் உகரமாகும். "குற்றியல்" என்றால் அளவு குறுகி, சுருங்கி ஒலிக் கும் இயல்புடையது என்பதாம். உகரக்குறுக்கம் இகரக்குறுக்கம் என்றும் சொல்லலாம். இவை இன்ன இன்ன இடத்தில்தான் ஒலி சுருங்கும் என் றுண்டு.

குற்றியல் உகரம் — இது வடமொழியில் ரிஷி என் பதிலுள்ள ரி போல் இ, உ இரண்டற்கும் நடுத்தர மாக ஒலிப்பது:

(1) குற்றியலுகரம் சொல்லின் கடைசியிலே வரும்.

(2) இரண்டெழுத்துக்குக் குறையாது. பெரும்பாலும் மூன்றெழுத்து மொழியில் வரும். இரண்டெழுத்தானால், முதல் எழுத்து நெடிலாயிருக்கும் (நாடு, நாகு).

(3) கு, சு, டு, து, பு, று ஆகிய ஆறு வல்லின உகரங்களால் முடியும். (சுக்கு, காசு, கட்டு, பத்து, குப்பு, பற்று).

(4) மேற்படி ஆறு வல்லின உகரங்களுக்கும் முன்னே என்ன எழுத்து இருக்கிறதென்று பார்க்க வேண்டும். தச்சு என்பதில் கடைசி எழுத்துக்கு முன்னே ச் ஆகிய வல்லினம் உள்ளது; அது வல்லினக் குற்றியலுகரமாகும். எஃகு என்பது ஆய்தக் குற்றியலுகரம், ஃ ஆய்தம் ஆதலால். இப்படி ஆறு வகையான குற்றியலுகரம் உண்டு:

	கு. உ. பெயர்		எத்தனை	உதாரணம்
1	நெடில்	குற்றியலுகரம்	7	நாடு, ஆறு
2	ஆய்தக்	,,	1	எஃகு, அஃது
3	உயிர்க்	,,	11	வரகு, பலாசு
4	வல்லினக்	,,	6	கொக்கு, பட்டு
5	மெல்லினக்	,,	6	அரங்கு, பஞ்சு
6	இடையினக்	,,	5	மார்பு, பெய்து
			36	

உயிர்க்குற்றியலுகரம் இரண்டு எழுத்துக் களுக்கு மேற்பட்டிருக்கும்; நெடில் குற்றியலுகரம் இரண்டே எழுத்து உள்ளது.

வல்லின, மெல்லின, இடையின, ஆய்தக் குற்றிய லுகரங்களில் ஈற்றுக்கு அயலெழுத்து புள்ளியுள்ளதா யிருக்கும்.

வரகு என்பது உயிர்க்குற்றியலுகரம்; ஏன்? நடு வெழுத்து ர்+அ, அகரத்துடன் சேர்ந்த ரகரமெய்; ஈருகிய கு என்பதற்கு அயலெழுத்து அ என்னும் உயிரெழுத்து; ஆதலின் உயிர்க்குற்றியலுகரம். வாகு என்றிருந்தால்? அது நெடில்குற்றியலுகர மாகும்.

மேற்சொன்ன ஆறுவகையான குற்றியலுகரங் களும் குசுடுதுபுறு ஆகிய ஆறு எழுத்துக்களுடன் முடிவதால் $6 \times 6 = 36$ குற்றியலுகரங்கள் உண்டு. நெடில் 7+ஔநீங்கி உயிர் 11+ஆய்தம் 1+ வல்லி னம் 6+ மெல்லினம் 6+ வகரம் நீங்கிய இடையினம் 5=36 என்பாரும் உண்டு. குற்றியலுகரம் இல்லாத உகர முடிபுகளெல்லாம் முற்றியலுகரமாம். நடு, பெறு, கதவு, உகு, கொடு, துன்னு,—இவை ஏன் முற்றிய லுகரம்? உ ஓசை முற்றுக உள்ளது; தனிக் குறி லைச் சார்ந்தும், மெல்லினம் இடையினம் கலந்தும் வருகிறது.

30. **அரை மாத்திரையாய் அருகும் இ, உ**
குற்றியல் இகரமும் உகரமும் ஆகும்.

31. **குற்றிய லுகரம் குசுடுது புறுவென**
முடியும்; ஈற்றயல் எழுத்தின்படியே
வல்லின, மெல்லின, நெடில், உயிர், ஆய்த
இடையினக் குற்றிய லுகரம் ஆறே.

குற்றியலிகரத்தை அறிவது எளிது. 1. குற்றிய லுகரத்துக்குப் பின்வரும் மொழிமுதலில் யகரம் இருந்தால், அதற்கு முன்னுள்ள குசுடுதுபுறுக்கள் இகரமாக மாறும். வரகு+யாது=வரகியாது (கு, கியாகி, உகரம் இகரமாக மாறியதைக் காண்க). 2. மியா என்ற அசைச் சொல்லில் உள்ள இகரம் குற் றியலிகரமாம். Man என்னும் ஆங்கில மொழியில் வரும் a போல மியாவை உச்சரிக்க வேண்டும். கேண்மியா என்றால் கேண்மினே, கேளும் என்பன போலத்தான். பாட்டில் ஓசை நிரப்ப இப்படிச் சில வார்த்தைகள் உண்டு. குற்றியலுகரம் 36-ம் யாவுடன் சேர்ந்து ஆவதில் 36, மியா என்னும் அசைச் சொல்லி லுள்ள இகரம் சேர்ந்து குற்றியலிகரம் 37 ஆகும்.

32. வருமொழி யமுன் திரிந்த இகரமும்,
மியாவின் இகரமும் குற்றிய லிகரமாம்.

கஎ. குறுக்கங்கள்

இம்மாதிரியே ஐ, ஔ, ம், ஃ ஆகிய நான்கு எழுத் துக்களும் குறுகி ஒலிப்பதுண்டு. இரண்டு மாத்திரை யான ஐ, ஔ குறுகி ஒரு மாத்திரையாகும். அரைமாத் திரையான ஃ, ம் குறுகிக் கால்மாத்திரையாகும். ஐ, ஔ அளபெடுக்கும்போதும், தனியாகத் தன்னைக் குறிக்குமிடத்துங் குறுகா; மற்ற இடங்களில் குறுகும்.

1. ஐகாரக் குறுக்கம்: ஐப்பசி, இடையன், குவளை— (ஐ முதல், இடை, கடையில் குறுகியது.)

2. **ஔகாரக் குறுக்கம் :** ஔவை—(முதலிலேதான் ஔ குறுகும்.)

3. **மகரக் குறுக்கம் :** மருண்ம், போன்ம், தரும் வள்ளல் (ண, ன, வ முன் ம் குறுகியது.)

மருள்+ம்=மருண்ம்; ளகரம் திரிந்து ண வானது.

போல்ல்+ம்=போன்ம்; லகரம் திரிந்து ன வானது.

தரும்+வள்ளல்=மகரத்திற்கு அப்புறம் வருமொழி முதலில் வ உள்ளது.

இப்படிப்பட்ட ண, ன, வ முன்னேதான் மகரம் குறுகும்.

4. **ஆய்தக் குறுக்கம் :**

அல்+திணை=அஃறிணை முள்+தீது=முஃடீது	ஈற்றிலுள்ள லளவுடன், த புணர்ந்தால் குறுகிய ஆய்தம் உண்டாகும்.

33. *ஐஔ அரையாய், ஃம காலாய்*
மாத்திரை குறுகிக் குறுக்க மாகும்.

புறங்காட்டாதே !

குறுகி ஒலிக்கும் இ, உ, ஐ, ஔ, ம, ஃ அனைத்தும் இக் கதையில் வரும்; அந்தந்தக் குறுக்கங்களைக் கண்டுபிடித்து வரிசைப்படி எழுதுக :

'நாடு, போர்' என்றால் தமிழ்வீரர் 'நான்முன் நீமுன்' என்று வாளும் தோளும் உயர்த்தி வருவர். போர்ப்பறை கேட்டதும்; அவர் மார்பு வீரத்தால் விம்மும். போர்த்திறல் இல்லாதவனை அலி, அஃறிணை. கடையன் என அவர் மதிப்பர். ஒரு காலம் மதுரை

யில் போர் முரசு கேட்டது. வீரரெல்லாரும் கூரிய எஃகு சுழற்றி இளங்கன்று போலத் துள்ளிப் பந்து போலத் தாவிப் பகைவரை வெட்டித் தள்ளிக் கொண்டிருந்தனர். அப் போரில் பத்தினியொருத்தியின் கணவன், மார்பில் அம்புபட்டு வீரவிண்ணடைந்தான். அவன் மனைவி என்ன செய்தாள்? "நாட்டிற்காக என் கணவன் இறந்தான்" என்று பெருமை கொண்டாள். அம்மட்டோ? தனது அரும்வயதுள்ள ஒரே மகனை அழைத்துத் தலை வாரி முடித்து, சோறூட்டி, தந்தையின் வாளைக்கொடுத்து, "செல்வா, செல்; போர்புரி; புறங்காட்டாதே! வெற்றியுடன் திரும்பி வா!" என்று இரணகளத்திற்கு அனுப்பினாள். இத்தாயை நினைத்தாலே அச்சம் மருண்ம் (மருளும்). பத்துப் பேருக்கு ஒருவன் பதிற் சொல்லுவான்—தமிழன் வீரன்.

கஅ. இன எழுத்துக்கள்
(Relative letters)

ஒற்றுமை

கண்மணிகாள், நாம் அனைவரும் இந்தியர். இந்தியர் எல்லாரும் ஒரே இனம். இந்தியா நமது நாடு; அதில் நாம் உயர்வு தாழ்வில்லாமல், சாதிசமய வேறுபாடில்லாமல், ஒற்றுமையாக வாழவேண்டும். தீண்டாமை, பாராமை, உடனுண்ணாமை, சாதிச்செருக்கு—இவையெல்லாம் அடியோடு ஒழியவேண்டும். பிரிந்து வாழ்வது பேதமையாகும். தனி விறகை முறித்து விடலாம். கட்டா யிருக்கும் விறகுகளை முறிக்க முடியாது. சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை

மனிதருக்கு இனம் இருப்பதுபோல், எழுத்துக்களுக்கும் இனம் (Relation) உண்டு. பிறப்பிடம் அளவு, பொருள், வடிவு, உச்சரிப்புகளில் ஒத்தவை இன எழுத்துக்களாம். அ எங்கிருந்து பிறக்கிறதோ அங்கிருந்தே ஆ பிறக்கிறது. இரண்டும் ஓரினம். ஊ, என்பதை நீட்டினால் உ போல் ஒலிக்கிறது; இரண்டும் இனம். ஐ, இ போல் ஒலிக்கிறது; இரண்டும் இனம். இப்படியே நெட்டெழுத்திற்குக் குற்றெழுத்து இனமாகும்—அண்ணனுக்குத் தம்பி இனமாவதுபோல். வல்லினத்திற்கு மெல்லினம் இனமாகும். திங்கள், பஞ்சு, வண்டு, பந்து, அம்பு, கன்று என்பவற்றில் க ச ட த ப றவும், ங ஞ ண ந ம னவும் இணைகின்றன. இடையினம் ஆறும் ஒரே இனமாகும்.

இப்போது இன எழுத்துக்களை வரிசையாக எழுதுகிறேன் பாருங்கள் :

1. அஆ. இஈ. உஊ. எஏ. ஐஇ. ஒஓ ஔஉ. ஐ, ஔ இரண்டும் புணரொலிகள் (Diphthongs).

2. கங, சஞ, டண, தந, பம, றன.

3. ய, ர, ல, வ, ழ, ள—ஒரே இனம்.

4. மப, நத, னற, ணட, ஙக, ஞச — இவை சொற்களில் இனமாக இணைந்தே வரும்—அம்பு முந்து, நன்றி, பண்டு, பங்கு, நஞ்சு. ந, ன, ண இன. வல்லினமான தறடவுக்குப் பின்வரும். ந தந் நகரம், ன றன்னகரம், ண டண்ணகரம் எனப்படும்.

> **34.** பிறப்பிடம், உரு, பொருள், அளவுக ளானே
> ஒத்தவை, இனமென ஓதப் படுமே.
>
> **35.** அஆ, இஈ, உஊ, ஒஓ, ஐஇ, ஔஉ இனமாம்.
>
> **36.** வலிக்கு மெலியினம் ; இடையினம் ஓரினம்.
>
> (வலி = வல்லினம். மெலி = இடையினம்)

கக. போலியெழுத்து

"ஐத்தான், அஞ்சு ரூபா தா!" என்று சிலர் பேசுகின்றனர். அத்தான் ஐத்தான் ஆகிறது. அ வுக்குப் பதில் ஐ வருகிறது; என்றாலும் பொருள் ஒன்றே. இவ்வாறு ஒரு சொல்லில் பொருள் மாறாமல் எழுத்து மாறிவருவது போலி; இயல்பான சொல்லைப் போலவே அது பொருள் தரும். ஐந்து என்பதில் ஐ அ, ந் ஞ், து சு ஆகி அஞ்சு ஆனது. போலி எழுத்து மூன்றிடங்களிலும் வரும்:

1. சொல்லுக்கு முதலில் வருவது **முதற்போலி**: ஆனை (யானை); நாயிறு (ஞாயிறு); அவ்வை (ஔவை).

2. சொல்லுக்கு இடையே வருவது **இடைப் போலி**: பிச்சன் (பித்தன்); வைச்ச (வைத்த); நீஞ்சு (நீந்து).

3. சொல் இறுதியில் வருவது **இறுதிப் போலி**: பக்கல் (பக்கம்); மனன் (மனம்); முகன் (முகம்).

> **37.** போல வருவது போலி யாகும்;
> முதல்இடை இறுதி யெனமுப் போலியாம்.

மூன்றிடங்களிலும் வரும் போலி எழுத்துக்களை உதாரணங்களுடன் காண்க.

முதற்போலி

சொல்	போலி	விதி
ஞாயிறு	நாயிறு	ய முன் ஞ-ந ஆனது
பையல்	பயல்	,, ஐ-அ ,,
வைத்தியன்	வயித்தியன்	,, ஐ-அஇ ,,
வையம்	வய்யம்	,, ஐ-அ ,,
மஞ்சு	மைஞ்சு	ஞ ,, அ-ஐ ,,
பசல்	பைசல்	ச ,, அ-ஐ ,,

யாறு, யாடு, ஞயம், ஞாயம், அய்யம், கவ்வை — இவற்றில் போலி எழுத்துக்கள் எவை?

38. யமுன் ஞந, ஐஅ, ஐஇ
ஞமுன் அஐ, சமுன் அஐ
மொழியின் முதலிற் போலி யாகும்.

இடைப்போலி

நேசம்	நேயம்		ச	ய	ஆனது
கசம்	கயம்		,,	,,	,,
பித்தன்	பிச்சன்		த	ச	,,
வைத்தான்	வைச்சான்		,,	,,	,,
ஐந்து	ஐஞ்சு		ந்த	ஞ்ச	,,
ஐந்நூறு	ஐஞ்ஞூறு	ஐ பின்	ந	ஞ	,,
சேய்நலூர்	சேய்ஞலூர்	ய ,,	ந	ஞ	,,
இலஞ்சி	இலேஞ்சி	ஞ முன்	அ	ஐ	,,
பழமை	பழைமை		அ	ஐ	,,
இளமை	இளைமை		அ	ஐ	,,
அரசு	அரைசு	ச முன்	அ	ஐ	,,
அரயர்	அரையர்	ய ,,	அ	ஐ	,,
குயவன்	குசவன்		ய	ச	,,

39. தச, சய, வக, யச
ந்த, ஞ்ச மொழியி னிடையே
ஐ பின் நஞ, ய பின் நஞ,
ச ஞ ய முன் அஐ போலி யேற்கும்.

இச் சூத்திர வரிசையில் உதாரணங்களை எழுதுக!

இறுதிப்போலி

அஃறிணைப் பெயரின் இறுதியில்

ல	ர	ஆகும் —	பந்தல்	பந்தர்
ல	ள	,,	மதில்	மதிள்
உ	அர்	,,	வண்டு	வண்டர்

ம் ன் ,, முகம் முகன்
உ அம் ,, குன்று குன்றம்

40. அஃறிணை யிறுதியில் ல்ர், ல்ள், உஅர், உஅம், ம்ன் போலியாம்.

கைத்தறி

குஞ்சன் ஆவணி நாயிறில் பந்தர் போட்டுத் தறி வைச்சான்; ஐஞ்ஞூறு ரூபாய் கடம் வாங்கித் தொழில் நடத்தினன். அவன் மனைவியும், சிறு பையல்களும் கூட இருந்து பாவு வைத்தனர், திருவடம் சுழற்றினர், கண்டு சுத்திக்கொடுத்தனர். குஞ்சன் தினம் அஞ்சாறு முழம் நெய்தான். "இப்படி நெய்சுதான் பஞ்சந்தீர்த்து ஊர் மானத்தைக் காக்கப் போறையாக்கும்?" என்று சிலர் கேலி செய்தனர். "வீட்டுக்கொரு ராட்டை; வீதிக்கொரு தறி ஓடினல் சோறு துணிக்குப் பஞ்சமில்லை" என்றான் குஞ்சன்.

இதில் வரும் போலிச் சொற்களைத் திருத்தமாக எழுதுக!

உ௦. மாத்திரை (அளவு)

(Quantity)

டக்! டக்!

இசையரங்கு நடக்கிறது. குயிலம்மை. "மனமே இதென்ன மாஅயம்" என்று பல்லவி பாடுகிறாள்—சங்கராபரணம், ஆதிதாளம். சபை காதுகுளிரக் கேட்கிறது. கணக்காயர் தோலாமொழியனார் கையை நொடித்துக் கணக்கெண்ணுகிறார்; "ம உயிர்மெய்க்

குறில்; டக், ஒரு மாத்திரை. மா நெடில்; டக் டக், இரண்டு மாத்திரை; மாஅ அளவு நீண்டது மூன்று மாத்திரை; டக் டக் டக்." பின்னால் இருந்தநண்பர், "சும்மா சுண்டாதேயும், தாளம் கெட்டுப் போகிறது." என்று புலவர் கையை நிறுத்தினர். "நாம் மாத்திரை பார்க்கிறோம்" என்றார் புலவர். "புலவரே, உமது இலக்கண மாத்திரை வேறு, பாட்டு மாத்திரை வேறு, மருந்து மாத்திரை வேறு......" என்றார் நண்பர்.

41. நொடிப்பும் இமைப்பும் மாத்திரைக்கு அளவாம்

என்றார் புலவர். "அப்படியானால் கையை நொடித்துக் கச்சேரியைக் கெடுக்காதேயும்! கண்ணை இமைத்துக்கொண்டிரும்!" என்றார் நண்பர். "எங்கிருந்தாலும் இலக்கணம் மறவேம்" என்று புலவர் மாத்திரை எண்ணிக் கண்ணைச் சிமிட்டிக்கொண்டிருந்தார்.

ஒரு எழுத்தை உச்சரிக்கக் கால அளவு உண்டு. அதை இக்காலத்தோர் மாத்திரை என்பர். தொல்காப்பியர் "அளவு" என்றே வழங்குகிறார். கையை ஒரு சுண்டு சுண்டினால், ஒரு மாத்திரையாகும்: சுண்ட நினைப்பது கால், விரலைச் சேர்ப்பது அரை, முறுக்குவது முக்கால், விடுப்பது ஒன்று.

42. நினைப்பது கால், விரல் சேர்ப்பதே அரை,
முறுக்குதல் முக்கால், நொடித்தல் ஒன்றே.

இதேமாதிரி, இமையை ஒருதரம் சிமிட்டினால், ஒரு மாத்திரையாகும். ஒவ்வொரு வகை எழுத்திற்கும் மாத்திரை எவ்வளவு என்று குறிக்கிறேன்:

எழுத்து	மாத்திரை
உயிரளபெடை	3
நெடில்	2
குறில்	1
மெய்யெழுத்து ஆய்தம் குற்றியல் இகரம் குற்றியல் உகரம்	$\frac{1}{2}$
மகரக்குறுக்கம் ஆய்தக் குறுக்கம்	$\frac{1}{4}$

43. உயிரள பெடையே மூன்று மாத்திரை ;
நெடில் இரண்டு, குறில் ஒன்று ; ஆய்தம்,
குற்றியல் இ, உ, மெய் அரையாகும் ;
ஆய்த மகரக் குறுக்கம் காலே.

அளவுக்கு அடங்காத ஒலிகள் பல உண்டு :

1. "ஸா, ஸா அஅஅஅ, பாஅஅஅ" என்று பாடகர் இராகம் நீட்டுவார்.
2. "ஐயோஒஒ போனாயாஅஅஅஅ" என்று செத்த வீட்டில் அழுவர்.
3. "தயிரோஒஒஒ தயிர்" என்று தயிர்க்காரன் பண்டமாற்றில் கூவுகிறான்.
4. "அடேஎஎ சுப்பையாஅஅஅ!" என்று நண்பன் தொலைவிலிருந்து கூப்பிடுகிறான்.
5. "எஎஎ தருவேனேஒஒஒ" என்று ஒரு குழந்தை குரல் நீட்டுகிறது.
6. "அம்மாஅஅஅ" என்று ஒரு பெண் அலறுகிறாள்.

7. "அடடடடா...ரரரா ளளளளா" என்று தூக்கத்தில் ஒருவன் உளறுகிறான்.

இவற்றிற்கெல்லாம் அளவு பார்த்துக் கட்டாது. இவை அளவு கடந்து ஒலிப்பனவாம்.

**44. இசை, விளி, புலம்பல் பண்டமாற் றிவற்றில்
அளவைக் கடந்தே எழுத்துநீண் டொலிக்கும்.**

உக. மொழிமுதல் எழுத்துக்கள்

தமிழ் எழுத்துக்களை ஒவ்வொன்றாகச் சொல்லுக! ஒவ்வோர் எழுத்தையும் முதலில் வைத்து ஒரு வார்த்தை சொல்லவேண்டும். உயிரெழுத்தை வைத்து வார்த்தை சொல்லலாம்; மெய்யெழுத்து முதலில் வராது; உயிர்மெய் யெழுத்திலும் க, ச, த, ந, ப, ம, வ, ய, ங, ஞ ஆகிய பத்தெழுத்துக்கள்தான் முதலில் வரும். ஆனால், இந்தக் காலம் திசைமொழிகளை டங்கா, லங்கணம், ராமன், ழாந்தார்க் என எழுதுகின்றனர்.

**45. உயிரெழுத்துக்களும், க ச த ந ப ம வ ய
ஙஞவும் மொழிமுதல்.**

46. திசைமொழிக் கேற்பப் பிறவும் வருமே......

மேலே சொன்ன 10 உயிர்மெய் யெழுத்திலும், க ச த ந ப ம ஆகிய ஆறுமே எல்லா உயிருடனும் வரும். உ, ஊ, ஒ, ஓ இவற்றுடன் வ சேர்ந்து முதலில் வராது; ஏன்? அவற்றிற்கு உயிரெழுத்தே போதும்; ஓசை ஒன்றுதான். ஓடு என்பதை வோடு என்று யாரும் எழுதமாட்டார்கள்.

1. அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ — இந்த எட்டு உயிரெழுத்துக்களுடன் கூடித்தான் வகரம் முதலில் வரும்.

2. அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ — இவற்றுடனே தான் யகரம் முதலில் வரும்.

3. அ, ஆ, எ, ஒ என்ற நான்கெழுத்துக்களுடன் ஞகரம் முதலில் வரும். மிஞிறு ஞிமிறு என்று வழங்குவதால் இகரமும் சேரும் என்பர்.

4. அ, இ, உ என்ற சுட்டெழுத்துக்களுக்குப் பின்னால் (அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம்), எ, யா என்னும் வினா எழுத்துக்களுக்குப் பின்னால் (எங்ஙனம், யாங்ஙனம்), அகரத்துடன் கூடி ஙகரம் வரும்.

> 47. அனைத்துயி ருடனும் கசதநபம வரும்,
> 48. அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ
> சேர்ந்து வகரம் மொழிமுதல் வருமே.
> 49. அ ஆ உ ஊ ஒ ஔவுடனே
> சேர்ந்து யகரம் மொழிமுதல் வருமே.
> 50. ஞகரம் அ, ஆ, எ, ஒவுடன் வரும்.
> 51. எ, யா, அ, இ, உ பின் ங வரும்.

மொழிமுதல் எழுத்துக்களை உதாரணத்துடன் குறிக்கிறேன் :

உயிர்	அ	ஆ	இ	ஈ	உ	ஊ
	அன்னை	ஆண்	இறை	ஈகை	உண்	ஊர்
க	கடவுள்	காது	கிளி	கீற்று	குடை	கூறு
ச	சரி	சாமி	சிரி	சீர்	சுடு	சூடு
த	தமிழ்	தாய்	திசை	தீனி	துளி	தூணி
ந	நலம்	நாடு	நினை	நீடு	நுனி	நூல்
ப	பரிதி	பார்	பிடி	பீடு	புள்	பூனை
ம	மனை	மாலை	மின்	மீது	முள்	மூடு
வ	வளை	வாள்	விடு	வீடு	,,	,,
ய	யவனர்	யானை	யுகம்	யூகம்	,,	,,
ஞ	ஞமலி	ஞாலம்	ஞிமிறு	,,	,,	,,
ங	அங்ஙனம்	யாங்ஙனம்	இங்ஙனம்	,,	உங்ஙனம்	,,

	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
உயிர்	என்	ஏன்?	ஐந்து	ஒடி	ஓடு	ஔவை
க	கெடு	கேள்	கையன்	கொடி	கோடு	கௌவு
ச	செடி	சேர்	சைவம்	சொல்	சோறு	சௌரியம்
த	தெரு	தேர்	தையல்	தொடு	தோடு	தௌவை
ந	நெஞ்சு	நேரம்	நைதல்	நொடி	நோவு	நௌவி
ப	பெண்	பேசு	பையன்	பொறு	போர்	பௌவம்
ம	மெலி	மேடு	மையல்	மொழி	மோனை	மௌனம்
வ	வெளி	வேல்	வைரம்	,,	,,	வௌவால்
ய	,,	,,	,,	,,	யோகம்	யௌவனம்
ஞ	ஞெகிழி	,,	,,	ஞொள்கல்	,,	,,
ங	(எங்)ஙனம்	,,	,,	,,	,,	,,

சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துக்களைக் கணக்குப் பார்க்கலாம் :

உயிர்		12
கசதநபம	× 12 உயிர்	72
வ	× 8 ,,	8
ய	× 6 ,,	6
ஞ	× 4 ,,	4
ங	× 1 ,,	1
ஆகூ முதலில் வரும் எழுத்துக்கள்		103

பிற மொழிகளைத் தமிழில் எழுதும்போது ஃபகீர், ஃஜார், ரேடியோ, ழாந்தார்க், டங்கா, ரப்பர், ஞேயம் எனச் சில எழுத்துக்கள் முதலில் வரும்.

வீரக்கன்னிகை

அடியில் வரும் கதையில் முதல் எழுத்துக்களைக் கவனியுங்கள் :

ழாந்தார்க் ஃப்ரெஞ்சு தேசத்தின் வீரத்திரு. ஃப்ரான்ஸ் ஆங்கிலேயருக்கு அடிமையாகப்

போகிறது. ஆங்கிலேயர் முன்னேறுகின்றனர். அரசன் பயங்காளி; இவன் பேடிபோல உறங்குகிருன். 'இனி நாடு பிழைக்காது' என்று பலர் மனந் தளர்ந்தனர். அப்போது ஓர் ஏழைப்பெண் வீராவேசத்துடன் அரசன் முன்வந்து "கொடு சேனை! யான் போர் புரிந்து பகைவரை ஓட்டுகிறேன்" என்ருள். மன்னன் தயங்கினன், மயங்கினன். அந்தக் கன்னிகை "வீரமற்றவன் சாரமற்றவன். தா படை!" என்று பெற்றுச் சென்று, ஓர்லியன் போரில் ஆங்கிலேயரை முறியடித்துச் சுதந்தரக் கொடி நாட்டினள். உலகமெல்லாம் இன்று ழூந்தார்க்கைச் 'சுதந்தரக் கன்னி' என்று வணங்குகிறது.

உஉ. ஈற்றெழுத்துக்கள்

ஒரு மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்களைக் கவனிப்போம்: பன்னிரண்டு உயிர் எழுத்துக்கள் + ஞணநமன யரலவழள ஆகிய பதினொரு மெய்யெழுத்துக்கள் + குற்றியல் உகரம் ஆக இருபத்து நான்கு எழுத்துக்கள் தமிழ்மொழியீற்றில் வரும்.

> 52. பன்னிரண்டுயிரும், ஞணநமன யரலவழளவும்,
> குற்றிய லுகரமும் ஈற்றெழுத் தாமே.

தமிழில் ஒரே எழுத்தைக்கொண்ட சொற்கள் பலவாம். அவற்றிற்கு அந்த எழுத்தே முதல், இறுதி எல்லாம். உயிரெழுத்துக்களில் எகரம் மெய்யுடன் கூடி ஈற்றில் வராது. ஒகரம் நகரத்துடன் கூடி ஈருகும். ஔகாரம் க வ இரண்டுடன் கூடி ஈற்றில் வரும். அளபெடையில் அ இ உ எ ஒ ஆகிய குற்றெழுத்துக்கள் சிறப்பாக ஈற்றில் வரும். உயிர்மெய் எழுத்துக்

களில் உயிர் ஈற்றில் ஒலிக்கும். மேற்சொன்ன எழுத்துக்களை ஈற்றில் வைத்து மொழிகள் புனைவோம் :

12 உயிர்கள் : அ (அந்த), ஆ, இ (இந்த), ஈ, உ (உந்த), ஊ (ஊன்), எ (எந்த), ஏ, ஐ (அழகு), ஒ (ஒத்தல்) ஓ, (மதகு), ஔ (பற்றுதல்).

11 மெய்யெழுத்துக்கள் : உரிஞ் (உராய்தல்) கண், பொருந் (பொருந்தல்), நலம், தேன், வாய், ஊர், கால், தெவ் (பகை), புகழ், நாள்.

குற்றியலுகரம் : நாடு ; ஒகரம் : நொ ; ஔகாரம் : கௌ, வெள ; அளபெடை : பலாஅ, தீஇ, பூஉ, சேஎ, கைஇ, கோஒ ; உயிர்மெய் : கா = க் + ஆ. போ = ப் + ஓ.

வீர வள்ளியம்மை

அடியில்வரும் கதையில், ஈற்றெழுத்துக்களைக் கவனியுங்கள் :—

காந்தியடிகள் முதன்முதல் தென் ஆஃப்ரிக்காவில், ஆசியக் கூலிகளின் துயர் தீர்க்கவே சத்தியாக்கிரகப் போர் தொடங்கினார்கள். அப்போரில் நம் தமிழ்மக்களே அடிகளுக்கு வலக்கைபோல் உதவினர். அவர்களுள் நாகப்பன், வள்ளியம்மை என்னும் இருவீரர் பொறுமையுடன் அடிகளுக்கு அருந்துணை செய்தனர். வள்ளியம்மை அடிகளுடன் பன்முறை சிறைபுகுந்தாள் ; புன்னகையுடன் கொடிய இடர்களைத் தாங்கினாள். சிறைத் துயரால் அவள் உடல் நலம் குலைந்தது. தியாகத் தீயில் அவள் உடல் வாடி மெலிந்தது. வள்ளியம்மை சத்தியாக்கிரகப் போரிலேயே உயிர் நீத்தாள். அப்போது, ''கூலிராசா

வுடன், (காந்தியடிகள்) என்னைப்போன்ற எளிய வருக்காகப் போர்புரிந்தேன். என் பிறவி ஈடேறி விட்டது" என்று அவள் புன்னகை புரிந்தாள். காந்தியடிகள் வள்ளியம்மையைப்பற்றி அடிக்கடி சொல்லுவார்கள். தமிழ்நாட்டிற்கு வந்தபோது ஒரு தடவை அடிகள் அந்த வீரத் தமிழணங்கின் உறவினரைக் கண்டு மகிழ்ந்தார்கள். வீரவள்ளியம்மை தமிழ்நாட்டின் தியாகப்பெண்.

உரு. இடையில் வரும் எழுத்துக்கள்

சொல்லுக்கு இடையில் உயிரும், மெய்யும் ஏராளமாக மயங்கி வரும். (மயங்கல் = கூடுதல்) அதற்கு அளவில்லை.

53. எழுத்து மயக்கம் இருவகை யாகும் :
தன்னுடன் தானே மயங்கல் உடனிலை ;
வேறெழுத்துடனே மயங்கல் வேற்று நிலை.

க, ச, த, ப ஆகிய நான்கு எழுத்துக்களும் தம் முன் தாமே மயங்கும் உடனிலை.

மூக்கு, மூச்சு, முத்து, மூப்பு.

ர, ழ இரண்டும் பிற எழுத்துக்களுடனே மயங்கும் வேற்றுநிலை : வாழ்க, சார்பு.

ங, ஞ, ட, ண, ந, ம, ய, ல, வ, ள, ற, ன ஆகிய மற்றைப் பன்னிரு மெய்களும் உடனிலையும் வேற்றுநிலையும் ஆகும் :—

கட்டு ; கண்டு ; மஞ்சை ; மஞ்சள் ; வெள்ளம்.

54. க, ச, த, ப உடனிலை ; ர ழ வேற்றுநிலை ;
மற்றவை இரண்டு நிலையும் மயங்கும்.
உயிர்மெய்க் கூட்டம் உலப்பில வாகும்.

கடலைக்கும் வெல்லத்திற்கும் பிடிக்கும்; உப்புக்கும் மாங்காய்க்கும் பிடிக்கும்; அதுபோலச் சில எழுத்துக்களுக்குப் பிடித்தமான எழுத்துக்கள் உண்டு; அவை சொல்லில் கூடிக் குழையும். முதன்மையானவற்றை இங்கே குறிக்கிறேன்:—

1. ங முன் க மயங்கும்: சங்கு தங்கம்.
2. வ முன் ய ,, : தெவ்யாது.
3. ஞ முன் ச, ய ,, : பஞ்சு, [உரிஞ்யாது.
4. ந முன் த, ய ,, : பந்து, [பொருந்யாது.
5. ட, ற முன் க,ச,ப ,, : வெட்கம், மேற்கு, [காட்சி, பயிற்சி, நட்பு, கற்பு.
6. ண, ன முன் ட, ற + கசஞபமய மயங்கும்: கண்டு, என்று, கன்று, வெண்சோறு, பண்பு, நன்செய், புன்கு, இன்பம், நன்மை, பொன் யாது, மன்வலிது.
7. ம முன் பயவ மயங்கும்: கம்பன், கலம்யாது, நலம்வலிது.
8. ய ர ழ முன் கசதஙபமவயஙஞ மயங்கும்: பொய்கை, எய்து, செய்நர், சேர்க, மார்பு, சீர்மை, சூழ்கு, வாழ்வு, கீழ்மை.
9. ல ள முன், க ச ப வ ய மயங்கும்: நல்கு, சால்பு, செல்வம், கல்யாணி, நீள்சிலை, கேள்வி, வெள் யானை.

10. ய ர ழ முன், க ச த ப ங ஞ, ந, ம இரட்டித்து மயங்கும்: காய்க்க, பாய்ச்சு, தேய்த்தல், மொய்ம்பு, வாய்ப்பு, உணர்ச்சி, வாழ்க்கை, சூழ்ச்சி.

11. பாட்டில் ல ள மெய் திரிந்த ன, ண முன் வரும் மகரம் குறுகி மயங்கும்: போன்ம், மருண்ம்.

55. ங முன் க வும், வ முன் ய வும், ஞ முன் ச ய வும்
ந முன் தய வும், ட ற முன் க ச ப வும்,
ண ன முன் ட ற வுடன், க ச ஞ ப ம ய வும்,
ம முன் ப ய வும், ய ர ழ முன் மொழிமுதல்
எழுத்தும், ல ள முன் க ச ப வ ய வும், ய ர ழ முன்
க ச த ப ஞ ங ந ம இரண்டொற் றாகவும்
சொல்லிடை மயங்கும் இன்னும் பலவே.

வள்ளல் பாரி

இதில் வந்து மயங்கும் இடைவரு மெழுத்துக் களைக் கவனிக்கவும்:—

தமிழர் ஈகையிற் சிறந்தவர்; சாதிமத வேறுபா டில்லாமல், முகம்பார்த்துக் கொடுப்பவர். "இட்டார் பெரியார்" என்பது தமிழர் கொள்கை. தமிழகத்தில் வள்ளல்கள் பலர் இருந்தனர். அவருள் பாரி ஒரு வன். பாரி பறம்பு நாட்டரசன்; அது பறம்பு மலை சூழ்ந்த சிறிய நாடு; செழிப்பு மிக்கது. பாரி வீரன், அறிஞன், உள்ளதை அள்ளித்தரும் வள்ளல். கபிலர் அவன் புகழைப் பாடியிருக்கிறார். ஒரு நாள் பாரி தேரிலேறி, நாட்டைச் சுற்றிப் பார்த்தான்; பாலும் தேனும், மலரும் கனியும் பொழியும் இயல் வளத் தைக் கண்டு மகிழ்ந்தான்; குடிகள் நலத்தை அன் புடன் வினவினான்; வறியவர் செழிக்க வழங்கினான். திரும்பும்போது, ஒரு பொட்டலில் ஒரு முல்லைக்

கொடி மண்ணில் புரண்டு கிடக்கக்கண்டான். படர் கொம்பில்லாமல் அது வருந்தியது. பாரி தனது தேரை அதனருகே நிறுத்தினான்; அதன்மேல் கொடிகளை எடுத்துப் படர விட்டான். "முல்லையம்மா, இனி மகிழ்வுடன் செழித்து மலர்!" என்று சொல்லிக் காலால் நடந்தே தனது நகரடைந்தான். செடி கொடிகளுக்கும் சீவகாருண்யங் காட்டிய பாரியை என்னென்போம்! பாரி ஈகைக்கு மாரி!

சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்ளருவி வீழுஞ் சாரல்
பறம்பிற் கோமான் பாரி.

உச. ஆரிய, ஆங்கில எழுத்துக்கள்

குறைந்த எழுத்துக்களில் நிறைந்த பொருளை விளக்குவதே உயர்ந்த மொழியாம். எழுத்துச் சிக்கல் நலமன்று. ஆங்கிலம், ஜெர்மன், ஃப்ரெஞ்ச், ரஷ்ய மொழிகள் 26 எழுத்துக்களில் உலகை அளக்கின்றன; புதிய புதிய கருத்துக்களை அள்ளி யளிக்கின்றன. இம்மொழிகளே இப்போதுலகை யாளுகின்றன. ஆசிய, ஆஃப்ரிக்க, அரபிய பாஷைகளையும் ஆங்கில எழுத்துக்களிலேயே கற்க, ஏராளமான நூல்கள் உள்ளன. ஆங்கிலம் தெரிந்தால் போதும்; உலகெல்லாம் சுற்றலாம். எல்லா விவகாரங்களையும் எங்கும் நடத்தலாம். தமிழை ஆங்கிலத்தின் மூலம் கற்கவும் நூல்கள் உள்ளன. அதுபோல் தமிழின் மூலம் உலகமொழிகளை யெல்லாம் கற்க வேண்டும். இது முடியும். ஐரோப்பியர் மொழிக்கு அடுத்தபடியாக் எழுத்துச் செட்டுள்ளது தமிழே. மற்ற இந்திய

மொழிகளெல்லாம் சிக்கலான கூட்டெழுத்துக்களைக் கொண்டன. அவை தமிழுக்குக் கூறும் ஒரு பெரிய குறை, க ச ட த ப க்களில் உரத்த ஒலிகளுக்கு எழுத்தில்லை என்பதே. அதை வெகு எளிதில் நிறைவாக்கி விடலாம் : புள்ளியும் கோடுந்தான் செலவு. அந்த முறையிலேயே பகவத்கீதை முழுதும் கீதாயோகமாக வெளிவந்திருப்பது, காண்க! தமிழுணர்ச்சியிலும் விரிவாகக் காணலாம்.

கசடதபக்களில், மூல எழுத்துக்கள் தமிழில் உள்ளன. மற்றவையும் சொல்லமைப்பால் அறியலாம்; எனினும் புதிய எழுத்துக்கள் இல்லாமல், இரண்டாம் எழுத்திற்கு இரண்டு புள்ளி (··), மூன்றும் எழுத்திற்கு ஒரு புள்ளி (·), நான்காம் கன எழுத்திற்கு அடியில் ஒரு சிறிய கோடு (–) போட்டால் தீர்ந்தது. இவ்வாறு சுமார் 16 எழுத்துக்களுக்கே அடையாளம் போடவேண்டி யிருக்கும். அவற்றை அடியிற் குறிக்கிறேன் கவனிக்கவும் :—

க क, க̤ ख, க̣ ग, க̱ घ

ऋ = ரு̣ அனுஸ்வரம் अं = அம்

விஸர்க்கம் अः = அ:

ज्ञ = ஜ்ஞ, க்ஞ ஞ

க	क	க̤	ख	க̣	ग	க̱	घ
ச	च	ச̤	छ	ஜ	ज	ஜ̱	झ
ட	ट	ட̤	ठ	ட̣	ड	ட̱	ढ
த	त	த̤	थ	த̣	द	த̱	ध
ப	प	ப̤	फ	ப̣	ब	ப̱	भ

இது கையெழுத்திற்கு வெகு எளிது; எழுதும் போதே கீழே புள்ளியும் கோடும் போடவேண்டியதுதான். வடமொழிக்கு இவ்வளவு போதும்.

இனி, ஆங்கிலம் உருது இரண்டிலும் **F, Z, C** ஆகிய புதிய ஒலிகள் உள்ளன. இவை இந்திய மொழிக்கே புதியன. தமிழுக்கு ஆய்தம் உள்ளது. அதைக்கொண்டு இந்த மூச்சொலிகளைக் குறிக்கலாம்.

ஃப் = **F**—ஃபாதர் (**Father**)
ஃஜ் = **Z**—ஃஜீரோ (**Zero**)
ஃக = —ஃகலம்

56. **புள்ளியும் கோடும் பொருத்திக் கீழே**
உரத்த க ச ட த ப ஒலிகளை நிரப்புக!
57. **ப, ஜ முன் ஆய்தம் F Z ஆகும்.**
க முன் ஆய்தம் உருதுகொள் ஃககரமாம்.

கீதை

இத் தொடர்களில் வரும் கனவொலிகளைக் கவனிக்கவும் :—

குருக்ஷேத்திரத்தில், பாரதப்போர் நடந்தது. தர்மபுத்திரர் அதர்மபுத்திரரான துரியோதனாதிகளை எதிர்த்துப் போராடினார்கள். அர்ஜுனன் தேரைக் கிருஷ்ண பகவான் ஓட்டினார். பீஷ்மருடன் போர் நடக்கப்போகிறது. அச்சமயம் அர்ஜுனன், தன்னுடன் யுத்தம் புரிய நிற்கும் குருமார்களையும், பந்துக்களையும் பார்த்து, பாச இரக்கம் மேலிட்டு, வில்லைக் கீழேபோட்டு, "கிருஷ்ணா! நான் போர் புரிய மாட்டேன்" என்று சோர்ந்தான். கிருஷ்ணபகவான்

தனது விசுவரூபத்தைக் காட்டி, "வீரா எழுந்திரு; எடு வில்! ஸ்வதர்மத்தைப் பரிபாலி; எனது நிமித்தமாகப் புரி போர்! புலனை எனக்கு நிவேதி; செய் கருமம்! நிஷ்காமிய கர்மமே புத்தி யோகம்" என்று உபதேசித்தார். அர்ஜுனன் தைரியங்கொண்டு சாந்தமடைந்து, வில்லை நாணேற்றிப் போர் புரிந்து ஜயசீலனானன். கடவுள் வணக்கமாய்க் கருமம் செய்தலே, கண்ணன் சொன்ன கீதா ஸாரம்.

உரு. உச்சரிப்பு

(Pronunciation)

கண்மணிகாள், இப்போது தமிழ் எழுத்துக்களைப்பற்றி நன்ருக அறிந்தீர்கள். எழுத்துக்களையும் சொற்களையும் நன்ருக உச்சரிக்க வேண்டும் மூச்சே பேச்சு. தாராளமாக மூச்சு வாங்கி, உறுப்புக்களில் சரியானபடி செலுத்தி, அழுத்தந் திருத்தமாகத் தமிழ் பேச வேண்டும். ஒரு பெட்டி வீணையில், காற்றுப் புகுகிறது; சுருதி போட்டதும், அதுவே 'ஓம் ஓம்' என்று நீளக் கேட்கிறது. மெட்டுகளை அழுத்தியதும், அக் காற்றே பண்ணிசைக்கிறது. அது போலவே, நாம் உயிர்க்கும் காற்று நெஞ்சு, குரல்வளை, வாய், மூக்கு, மண்டை ஆகியவற்றில் தாக்கி, உதடு, நாக்கு, பல், அண்ணம் இவற்ருல் எழுத்துக்களை உச்சரிக்கிறது. இவ்வுறுப்புக்களை நன்ருகக் காற்று வாங்கிக் கணீரென் ருெலிக்கப் பழக வேண்டும்.

58. மார்பிலும், கழுத்திலும், மூக்கிலும், சிரத்திலும்,
தாக்கிய மூச்சு நா, பல், உதடு, அணம் *
வருட ஒலிக்கும் எழுத்து வரிசையே...

* அணம் (அண்ணம்) = மேல்வாய்.

எங்கெந்த எழுத்து, எங்கெங்கே உண்டாகிற தென்று சொல்லுகிறேன். அந்தந்த உறுப்புகளைக் கண்ணாடியில் பார்த்து, எழுத்துக்களை உச்சரியுங்கள் :

1. உயிர் 12, இடையினமெய்கள் — கழுத்தில்
2. வல்லினமெய்கள் — மார்பில்
3. மெல்லினமெய்கள் — மூக்கில்
4. அ ஆ — அங்காந்து
5. ஃ — அங்காந்து, தலையில்
6. இ, ஈ, எ, ஏ, ஐ — அங்காந்து, அடிநா விளிம்பு மேல்வாய்ப் பல்லில் பொருந்தி
7. உ, ஊ, ஒ, ஔ — உதடு குவிந்து
8. க, ங — அடிநா மேல்வாய் கூடி
9. ச, ஞ — நடுநா மேல்வாய் அடியைச் சார்ந்து
10. ட, ண — நுனிநா மேல்வாயை வருடி
11. த, ந — நுனிநா மேல்வாய்ப் பல்லடி வருடி
12. ப, ம — மேல் உதடும், கீழ் உதடும் பொருந்தி
13. ய — அடிநா மேல்வாயைப் பொருந்தி
14. ர, ழ — மேல்வாயை நாநுனி வருடி
15. ல, ள — மேல்வாய்ப் பல்லடியை நாவிளிம்பு தடித்துத் தடவி
16. வ — மேல்வாய்ப்பல்லைக் கீழ் உதடு பொருந்தி
17. ற, ன — மேல்வாயை நுனிநா நன்முக்ப் பொருந்தி

குறிப்பு : சார்பெழுத்துக்கள், தத்தம் முதலெழுத்துக்களை ஒத்திசைக்கும். ர, ற, லளழ, ணன இவற்றின் உச்சரிப்பு வேறுபாடுகளைக் காண்க :

ர, ற வேறுபாடு		ல, ள, ழ, ண, ன வேறுபாடு	
அரம்	அராவும் கருவி	அலை	கடல்அலை, அலைதல்
அறம்	தருமம்	அளை	தயிர், குகை, புற்று
அரி	விஷ்ணு	அழை	கூப்பிடு
அறி	தெரிந்துகொள்	அலகு	பறவை மூக்கு
இரத்தல்	பிச்சைகேட்டல்	அழகு	திரு, சௌந்தரியம்
இறத்தல்	சாதல்	அளகு	சேவல்
கருப்பு	பஞ்சம்	ஆலம்	நஞ்சு
கறுப்பு	கருமை நிறம்	ஆழம்	தாழ்வு
குரங்கு	மந்தி	ஆளன்	எசமான், தலைவன்
குறங்கு	தொடை	கலை	சாத்திரம்
கரி	யானை,அடுப்புக்கரி	களை	எழில்,வயலின்களை
கறி	காய்கறி	கழை	மூங்கில், கரும்பு
கரை	ஓரம் கரைத்தல்	காலை	விடியற்காலை
கறை	குற்றம், அழுக்கு	காளை	மாடு
குரை	ஒலி	கலகம்	சண்டை
குறை	குறைவு	கழகம்	சங்கம்
கூரிய	கூர்மையான	களங்கம்	மாசு
கூறிய	சொன்ன	வாலைப் பார்	
கூரை	வீட்டுக்கூரை	வாளைமீன்	
கூறை	ஆடை	வாழைப்பழம்	
பரவை	கடல்	மண்	பூமி, தரை
பறவை	பட்சி	மன்	அரசன்
பரி	குதிரை	கணி	கணிதசாத்திரி
பறி	பிடுங்கு	கனி	பழம்
பாரை	கடப்பாரை	காணம்	குதிரையின் தீனி
பாறை	மலைப்பாறை	கானம்	காடு, பாட்டு

ர, ற வேறுபாடு		ல ள, ழ, ண, ன வேறுபாடு	
பொரி	நெற்பொரி	கண்ணன்	கிருஷ்ணன்
பொறி	இயந்திரம், ஐம்பொறி	கன்னன்	கர்ணன்
		மணம்	வாசனை, திருமணம்
பொரு	சண்டை செய்	மனம்	மனது
பொறு	பொறுத்திரு	பணி	பணிதல், பாம்பு
மரம்	விருட்சம்	பனி	குளிர்
மறம்	பாபம்		
மரை	தாமரை		
மறை	வேதம், ஒளித்தல்		

இப்போது, தமிழ் எழுத்துக்களை அவை பிறக்கும் உறுப்பொழுங்கில் வகுத்துக் காட்டுகிறேன் :

க, ங, அ, ஆ, ஃ - மிடற்றெழுத்துக்கள் **(Gutturals)**

ச, ஐ, ஞ, ய, இ, ஈ, எ, ஏ - அண்ண எழுத்துக்கள் **(Palatals)**

ட, ண, ர, ஷ - நா எழுத்துக்கள் **(Linguals)**

த, ந, ல, ஸ - பல்லெழுத்துக்கள் **(Dentals)**

ப, ம, வு, ஒ, ஊ, ஓ - உதட்டெழுத்துக்கள் **(Labials)**

59. றர, லள, ழ, னநண
தெளிவாய்ச் சொல்லிச் செயலுடன் கூடி,
பாவனைக் கேற்ற பண்பைக் காட்டி,
உணர்ச்சிக் கேற்ற உருக்கங் காட்டி
தெய்வத் தமிழைத் திருத்தமாய் மொழிக !

௨௯. நிறுத்தக் குறிகள்
(Punctuations)

படிக்கும்போது, குரலை எங்கே எவ்வளவு நிறுத்தி, எப்படி நிதானமாய்ப் படிக்கவேண்டும் என்பதைச் சில நிறுத்தக் குறிகளால் அறியலாம்.

. **Full stop** = முற்றுப்புள்ளி; ஒரு தொடர் முடிவு; 4 மாத்திரை நிறுத்துக!

: **Colon** = முக்காற்புள்ளி; தொடரின் தொடர்பைக் குறிக்கும்; 3 மாத்திரை நிறுத்துக!

; **Semicolon** = அரைப்புள்ளி; ஒரு தொடரின் பகுதியைக் காட்டும்; 2 மாத்திரை நிறுத்துக!

, **Comma** = காற்புள்ளி; சொற்களுக்கிடையே வரும்; கால் மாத்திரை நிறுத்துக!

? **Interrogation** = வினாக்குறி; கேள்வியைக் காட்டும்; 4 மாத்திரை நிறுத்துக!

! **Exclamation** = வியப்பு; ஏவல்: ஆச்சரியக்குறி, ஏவற்குறி; 4 மாத்திரை நிறுத்துக!

.... **Suspension** = இடையீடு; சொல், தொடர்களுக்கிடையே பாவனையில் இடைமுறிவைக் காட்டும்.

— **Hyphen** = இடைக்கோடு; இரண்டு மொழிகளைக் கூட்டும்.

"...." **Double Quotation** = இரு கோட்பு; மேற்கோள் அல்லது ஒருவர் பேச்சைக் குறிக்கும்.

'....' **Single quotation** = ஒருகோட்பு ; மூன்றும் மனிதன் இப்படிப் பேசினான் என்பதைக் காட்டும்.

( ) **Brackets** = நகக்குறி; தொடர்களுக்கிடையே தனிப்பொருளை விளக்கும்.

60. **புள்ளியில் உள்ளம் புகுத்திப் படிக்கவும்.**

உஎ. முரசு கேட்டதும்..........!

பாடம் 15, 16-ல் நாம் அறிந்ததெல்லாம் இந்தக் கதையில் வரும். இதை உருக்கமாக, **புள்ளிகளைக்** கவனித்துப் படிக்கவேண்டும் :

மார்க்கோ போலோ பாண்டி நாட்டைச் சுற்றிப் பார்த்து, இவ்வாறு எழுதினான் : "பாண்டிநாடு கல்வி சிறந்தது ; தொழில் பெருத்தது ; செல்வஞ் செழித்தது ; வளந் தழைத்தது ; நீதி சிறந்தது ; வீரஞ் செறிந்தது ; கப்பல் வாணிகத்தில் புகழ்பெற்றது."

ஒரு காலத்தில், சோழமன்னன் பாண்டிய நாட்டைப் படையெடுத்து வென்றான். பாண்டிவீரர் விடுதலைப் போர் தொடங்கினர். **விடுதலை**—அதுவே வாழ்வின் மூச்சன்றோ ? "அந்தப் பராந்தகன் (கி. பி. 906-946) கொண்ட பாண்டிநாட்டை, இந்த ஆதித்ய கரிகாலன் ஆளவிடேன். எழுங்கள் ! போர் தொடுங்கள் !! உயர்த்துங்கள் மீனக்கொடியை !!!" என்று வீறிட்டெழுந்தான் **வீரபாண்டியன்**. திசையதிர முரசு கொட்டுகிறது ; தடதட என்று குதிரைகள் தாவுகின்றன; படபடவென்று காலாட்படை நடக்கிறது;

'விர் விர்' என்று கணைகள் பறக்கின்றன; 'சட சட' என்று ஈட்டிகள் பொருகின்றன! வீரக் காளைகள், காலை முதல் மாலை வரையில், வாளுக்கு விருந்து வைக்கின்றனர். நாட்டிற்காக, வீர இளைஞர் புன்னகையுடன் உயிர்கொடுக்கின்றனர்.

ஒரு நள்ளிரவில் ஒரு வீரன், மனைவியுடன் இருந்தான். போர்முரசு கேட்டது. "காதலா, போர்ப் பறை கேட்ட பிறகும், வீரர் பள்ளி யறையில் நிற்பரோ?" என்றாள் காதலி. "உன் இன்பத்தை எப்படித் துறப்பேன்? இன்று மாலைதான் போர்க் களத்திலிருந்து வந்தேன்; அதற்குள் பிரிவதெப்படி? ஓர் இரவாவது நன்றாகத் துயின்று செல்கிறேன்" என்றான் கணவன். "ஐய, எனது சேலையை அணிந்து வீட்டிலிருந்து தூங்கும்; இதோ நான் ஆணுடை தரித்து வாள் பிடித்துப் போர்முனை செல்கிறேன்!" என்று கிளம்பினாள் வீரத்தமிழ்மகள். கணவனுக்கு வெட்கம்! "காதலி, அறிவு வந்தது; இதோ போகிறேன்" என்று ஓடினான் வீரன்.

II. சொல் இலக்கணம்
(Etymology)

உ அ. சொல்
(Word)

எழுத்திலிருந்து சொல் பிறக்கும் :

சொல் ஓரெழுத்து முதல், ஒன்பது, பத்து எழுத்துக்கள் கொண்டு அமையலாம். ஓரே எழுத்துள்ள சொல் ஓரெழுத்துச் சொல்: ஆ, ஈ, நா, நீ, தா. ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துடைய சொற்கள் பல எழுத்துச் சொற்களாம். தமிழில் சுமார் 50 ஓரெழுத்துச் சொற்கள் உண்டு; பல எழுத்துச் சொற்கள் பதினாயிரக் கணக்கி லிருக்கின்றன. தமிழ்ச் சொற்கள் திட்ப நுட்பமானவை; சுருக்க விளக்கமானவை; மூச்சுச் செட்டுடன் இனிமையாகப் பேசத் தக்கவை.

மழை, நிலம், வேளாண்மை, அரசியல், மருத்துவம், உடன்படிக்கை, கரிசலாங்கண்ணி, சக்கிமுக்கிக் கல், பொய்யாமொழிப் புலவர்—இவற்றில் வரிசையாக இரண்டுமுதல் பத்தெழுத்துக்கள் உள்ளன. பெரும்பாலான தமிழ்ச் சொற்கள் 2, 3, 4, 5, 6 எழுத்துக்களில் முடியும். தற்காலத்திற்கேற்றபடி புனையும் கலைச்சொற்களும் (Technical words), கூட்டுச் சொற்களும் (Compound words) 7, 8, 9, 10 எழுத்துக்களாகும்: புடங்கெலும்பு, எண்ணெய்முழுக்கு,

காதுக்குருத்து, இருதயத் துடிப்பு, வண்டிப் - படிச் செலவு.

61. பொருள்படச் சொல்வது சொல்லாகும்மே.
62. ஒன்று முதல்பத் தெழுத்து வரையில்
செந்தமிழ்ச் சொற்கள் திட்பமா யமையும்.
63. மூச்சுச் செட்டுடன் பேச்சுக் கினிய
பொருட்செறி வுடையன பூந்தமிழ்ச் சொற்கள்.

உகூ. ஓரெழுத்துச் சொற்கள்

1. யா, (யாது), ஞா (கட்டு)

2. ஆ, ஈ, ஊ, (ஊண்), ஏ (அம்பு), ஐ (அழகு), ஓ, (வினா).

3. கா (சோலை), கு (பூமி), கூ (கூவு), கை, கோ (அரசன்), கௌ (தீங்கு)

4. சா, சீ, சூ, சே (எருது), சை, சோ (மதில்)

5. தா, தீ, தூ (தூவு), தே, (தெய்வம்), தை, தோ

6. நா, நீ, நே (நேசம்), நை (நைதல்), நொ, நோ

7. பா, பீ, பூ, பே, பை, போ

8. மா, மீ, மூ (மூதுமை), மே (அன்பு), மை, மோ (முகர்)

9. வா, வி (விழி), வீ (பூ) வே (வேதல்), வை, வௌ (கவர்)

இவை ஐம்பதும் தெளிவான ஓரெழுத்து மொழிகள்.

இவற்றைத் தவிர கெ, கே, கீ, செ, ஜே, ஜோ, ஹா, ஹூ, ஷ், ஷூ, டு, டீ, டே, டை, நூ (தள்ளு), பு, பெ, ம், ரே முதலியவை அனுகரண ஓசையிலும் பேச்சுவழக்கிலும் வருகின்றன.

64. யானா வுடனே, உயிர் பன்னிரண்டும்,
கசதன பமவவில் ஆறு றுடனே
ஓரெழுத்துச் சொல் லும்பதாகுமே.
65. இரண்டுமுதல் பத்தெழுத்து வரையில்
பல எழுத்துச் சொல் பல்லாயிரமாம்.

டுடுடுடுடு

காளமேகம் நகைச்சுவைக் கவி; அவன் திருமலை ராயன்பட்டினம் சென்றான். அவ்வூர் அரசன் அறுபத்து நான்கு புலவர்களை ஆதரித்தான். அவருள் சமஸ்தான வித்துவான் மதுரகவி. "நாமே கவி" என்று அவன் மண்டைக் கருவம் கொண்டிருந்தான். "கவி (குரங்கு) யானால் வாலெங்கே?" என்று காளமேகம் கேலி செய்தான். "ஹா எம்மைக் குரங்கென்றாயா? வா, வா, பாவில் நீ நா அடங்கச் செய்கிறேன்" என்றான் மதுரகவி. "பார்க்கிறேன் ஒரு கை" என்றான் காளமேகம். மதுரகவி அரசனைத் தூண்டினான். அரசன் "அரிகண்டம் பாடுவாயா?" என்று கேட்டான். "பு! இதென்ன பிரமாதம்! நான் எமகண்டம் பாடுவேன்" என்று மார் தட்டினான் காளமேகம். "ஹொ! ஹோ, வா! சா, சா!" என்று புலவர்கள் எமகண்டம் போட்டு, ஆளுக்கொரு சிலேடை கொடுத்துப் பாடச் சொன்னார்கள். காளமேகம் "ஜோ!" என்று பாமாரி பொழிந்தான். ஒரு பாட்டுமட்டும் கேளுங்கள்:

ஓ, கா, மா, வீ, தோ டுடனெக்க டுடுடுடுடு
நாகார் குடந்தை நகர்க்கிறைவர் — வாகாய்
எடுப்பர், நடமிடுவர், ஏறுவர், அன்பர்க்குக்
கொடுப்பர், அணிவர் குழை.

[இது சிவன் புகழ். ஓ+டு: ஓடு எடுப்பர். கா+டு: தில்லைக்காட்டில் நடமிடுவர்; மா+டு: மாட்டில் ஏறுவர்; வீ+டு: வீடு கொடுப்பர்; தோ+டு: தோடு அணிவர்.]

---

௩௦. சொல் வகை

சொற்கள் எட்டு வகையாகும்:—

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், கலைச்சொல், தனிச்சொல், தொடர்சொல், பொதுச்சொல், வடசொல்.

**66. இயல், திரி, திசை, கலை, தனி, தொடர், பொதுச்சொல்
வட சொல்லுடனே சொல்எண் வகையாம்.**

1. **இயற்சொல் (Simple word)** எளிய தமிழ்ச் சொல்லாகும்:—மரம், மலர், பழம், வந்தான், போனான், அழகு, அன்பு.

67. எளிய தமிழ்ச்சொல் இயற்சொல் லாகும்.

2. **திரிசொல் (Literary word)** படித்தவர்களுக்கே விளங்கும்:—ஓங்கல் (மலை), ஏகினான் (சென்றான்). திரிசொல்லில் (1) ஒரே பொருளைக் குறிக்கும் பல சொற்களுண்டு:—இளை, எழில், நவ்வி, நாகு, மஞ்சு, மழவு, முருகு என்பன இளமையைக் குறிக்கும் பல சொற்கள். (2) ஒரே சொல் பல பொருளைத் தரும். இசையென்னும் ஒரே சொல் பாட்டு, புகழ், இனிமை, இலக்கணம், ஒலி, பண்பு, பொன், சொல் எனப் பொருளாகும்.

**68. பலசொல் ஒரு பொருள், ஒரு சொல் பலபொருள்
குறிக்கும் அருஞ்சொல் திரிசொல் லாகும்.**

இயல், திரி—இரண்டு சொற்களும் செந்தமிழ்ச் சொற்களே.

3. திசைச்சொற்கள் பல திசைகளிலிருந்து தமிழில் வந்து கலந்த பிறமொழிச் சொற்களே (**Loan words**): பேஷ், சபாஷ், ஜல்தி, அமீனா, காங்கிரஸ், ஷர்ட் முதலியன.

69. வந்து கலந்த பிறமொழி திசைச்சொல்.

திசைச்சொல்லை விரிவாகப் பின்னே ஆராய்வோம்.

4. கலைச்சொல் (**Technical terms**):—கலைகள் பல; பழைய ஆத்மிகக் கலை நமது நாட்டில் ஏராளம். அதற்குரிய சொற்களை மேனாட்டார் நம்மிடமிருந்து அப்படியே எடுத்தாளுகிறார்கள்.—ஆத்மா, கர்மா, மஹாத்மா, பிரமா, அவதாரம் முதலியன உதாரணம். மேனாட்டில் ஆராய்ச்சிக்குரிய இயற்கலைகள் எல்லையற்று விரிந்து பரந்துள்ளன. ஒவ்வொன்றற்கும் பெரிய பெரிய சாத்திரங்கள் உள்ளன. அததற்குரிய சிறப்புச் சொற்கள் அளவற்றன. பொருள்பொதிந்த சிறப்பான கலைச் சொற்களை அந்தந்த மொழிகளிலிருந்து அப்படியே எடுத்தாளலாம். அதனால் தமிழும் விரிவடையும்.—ஸயன்ஸ், ரேடியோ, எலக்ட்ரன், மைக், கிராமபோன், மோட்டார் முதலியன உதாரணங்கள்.

எளிதான தமிழ்ச்சொல் இருந்தால் அதையே கொள்ளவேண்டும். உதாரணமாக: **Latent heat** (மறை கனல்), **Wedge** (ஆப்பு), **Work shop** (பட்டறை),

Transverse Vibration (குறுக்கதிர்ச்சி), **Talkie** (பேசும் படம்) முதலியன.

70. உள்ளியற்கலையும், உலகியற்கலையும்
வளர்க்கும் சொற்கள் கலைச்சொல்லாமே.

5. **தனிச்சொல்:** பிரிக்க முடியாமல் தனித்து ஒரே மொழியாயிருப்பது: மரம், மாடு, மீன், மகன்.

71. பகுப்பறத் தனித்தது தனிச்சொல் லாகும்.

6. **தொடர்சொல்:** இரண்டுமுதல் பல சொற்கள் தொடர்ந்து வருவது.

உதாரணம்: நெல் வயல், அரச மரம், அறிந்து நடந்தால் ஆபத்தில்லை. தொலைநோக்காடி (**Telescope**) நுண் உருப்பெருக்கி (**Microscope**).

72. சொற்கள் தொடரத் தொடர்சொல் லாகும்.

7. **பொதுச்சொல்:** தனிச்சொல்லைப் போலிருந்து, தொடர் சொல்லாகப் பொருள் தருவது: பலகை என்பது பீடம்; பல+கை=அநேக கைகள் என்றும் பொருள் தரும். வேங்கை என்பது புலி; வேம்+கை= வேகின்ற கை என்றும் பொருளாகும்.

73. தனியும் தொடரும் தருவது பொதுச்சொல்.

8. **வடசொல்:** தமிழ் தென்சொல்; ஆரியம் வட சொல். இரண்டிற்கும் நீண்ட தொடர்புண்டு; இரண்டும் நமது நாட்டு மொழிகளுக்கே தந்தை தாய் போன்றன. தமிழிற் கலந்த ஆரியச் சொற் கள் வடசொற்களாகும்: தியாகம், தீரம், வேதம், போகம், ஆனந்தம்.

74. தமிழிற் கலந்த ஆரியம் வடசொல்;
வழங்கிவந்த சொல் வழங்கலினிதே.

75. செவிக்கினிதாகத் திசைமொழி வழங்குக!

76. தீஞ்சுவைத் தமிழை ஆய்ந்துகாப்பாற்றுக!

பணத்தட்டு

இராமநாதபுரம் சேதுபதி கல்விமான், வள்ளல்; அவர் மாம்பழக் கவிராயருக்கும், வேம்பத்தூர் பிச்சுவையருக்கும் ஏராளமான பரிசுகள் அளித்தார். இருவரும் அரிய கவிகள்; சிலேடைப் புலிகள்.

ஒருதரம் அரசர் மாம்பழக் கவிராயருக்குத் தங்கத் தட்டில் ஐஞ்ஞூறு ரூபாய் வைத்துக் கொடுத்தார். கவிராயர் பணத்தை அங்கீகரித்து, "பணத்தட்டு (பணம்வைத்த தட்டு—பணமுடை) யாருக்கு, புலவருக்கா, புரவலருக்கா?" என்று நுட்பமாக கேட்டார். "சபாஷ்! நல்ல சமத்காரம்! பணத்தட்டு புலவருக்கே" என்று தட்டையும் கவிராயருக்கு மகிழ்வுடன் அளித்தார் வள்ளல்.

இக்கதையில் உள்ள சொல் வகைகளை எழுதுக!

௩க. திசைமொழி விளக்கம்

ஆங்கிலம், ஃப்ரெஞ்சு, வங்காளம், ஹிந்தி முதலியமொழிகள், பல மொழிக்கலப்பால் வளர்ச்சி பெறுகின்றன. தமிழிலும் பலதிசை மொழிகள் ஏராளமாகக் கலந்துள்ளன. அவை தமிழர் வாழ்வுடன் கலந்துபோனபிறகு விடுதல் கடினம். மற்ற மொழிகளை நோக்கத் தமிழ் கலப்பில்லாமல் பேசக் கூடியதே. இன்றும் தனித் தமிழில் பேசலாம். ஆனால், கால முன்னேற்றத்திற் கேற்றபடியே திசைச்சொற்கள் வந்து வழங்குவதை நாம் தடுக்கமுடியவில்லை. ஒரு காலம் நாடெங்கும் தமிழே வழங்கியதுண்டு.

ஆரியர் வந்தனர்; ஆரியம் வடமொழியானது; ஆரியர் தெற்கே புகுந்தனர்; தென்மொழியில் ஆரியம் கலந்தது; ஆரிய திராவிட நாகரிகங்களும் பேச்சும் கலந்தன. பல ஆரிய நூல்கள் தமிழ்உடை தாங்கின. முன்னோர்கள் ஆரியத்தை மதித்துப் போற்றினர்; அதைத் திசைமொழியாகவே அவர்கள் கொள்ளவில்லை; அறிவு வளர்ச்சிக்கு ஆரியம் கற்றனர். கொச்சைத் தமிழான கொடுந் தமிழ்ச் சொற்களையே ஆன்றோர் 'திசைமொழி' என்றனர். முற்காலம் 12 கொடுந் தமிழ் நாடுகள் இருந்தன. அவற்றில் வழங்கிய கொச்சைச் சொற்கள் தமிழிற் கலந்தன. உதாரணம் காட்டுகிறேன்:—

நாடு	தமிழ்	திசைமொழி
குட்ட	தாய்	தள்ளை
குட	தந்தை	அச்சன்
கற்கா	வஞ்சகர்	கையர்
வேணாடு	தோட்டம்	கிழார்
பூழி	சிறுகுட்டை	பாழி
பன்றி	வயல்	செய்
அருவா	கிணறு	கேணி
அருவாவடதலை	புளி	எகின்
சீத	தோழன்	எலுவன்
	தோழி	இகுளை
மலையமான்	நீர்	வெள்ளம்
புனல்	தாய்	ஆய்

தமிழர் உலகெங்கும் வாணிபம் செய்தனர்; பல நாட்டார் தமிழருடன் வாணிபம் செய்தனர். ஆதலால் தமிழ் பலவேறு மொழிகளிற் கலந்தது;

தமிழில் பிறமொழிகள் கலந்தன. சிங்களம், சோனகம், யவனம், ஜாவா, சீனம், துளுவம், குடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், வடுகு, கலிங்கம், வங்கம், அங்கம், கடாரம், கெளடம், கோசலம் முதலிய பல நாட்டு மொழிகள் தமிழிற் கலந்தன. உதாரணங்கள் :—கொக்கு=மாமரம் (துளு); சிக்கு=அகப்படு (கன்னடம்) ; எச்சரிக்கை = கவனம் (தெலுங்கு.) இக்காலமும் ஜில்லாவுக் கொருவிதமாகவே சில சொற்கள் திரிந்து வழங்குகின்றன : நூக்கு=தள்ளு ; தெளிவு=பதநீர் (வடார்க்காடு) ; மாட்டுப் பெண்=மருமகள் ; கெட்டுப்போனது= காணமற் போனது (தஞ்சை) ; இடுதல்=எறிதல் ; சோடு=பெரிது (கோவை) ; அஞ்சல்=தபால் (தென்னார்க்காடு) ; கோட்டாப்பண்ணல் = நகையாடல் (சென்னை).

நமது நாடு பல படையெடுப்புகளுக்குள்ளானது, 14-ஆம் நூற்றாண்டு வரையில், தமிழ்நாட்டில் சுதந்தரக் கொடி பறந்தது. பிறகு தெலுங்கர் புகுந்தனர் ; தமிழ்க் கலையுடன் தெலுங்கு பின்னிக்கொண்டது. தமிழிசை தெலுங்கு மயமானது. பிறகு மராட்டியர் புகுந்தனர். தமிழ்க் கலையில், ஹரிகதா காலக்ஷேபத்தில் ஏராளமான மராட்டிய கீதங்கள் புகுந்தன ; கன்னடப் பாடல்களும் புகுந்தன. இஸ்லாமியர் தமிழகத்தின் மீது படையெடுத்தனர் ; நவாபு அரசு இங்கே ஏற்பட்டது ; நமது அரசியல் உருதுமயமானது. அரபி, பார்ஸி, உருதுச்சொற்கள் ஏராளமாகத் தமிழில் கலந்து நிலைத்துவிட்டன. அதன் பிறகு போர்த்துகீஸியர், டச்சுக்காரர், ஃப்ரெஞ்சுக்காரர்

இங்கே குடியேறினர்; அவர்கள் மொழிகள் பல தமிழிற் கலந்தன; முடிவில் ஆங்கிலேயர் வந்து கொடி போட்டனர். ஆங்கிலம் பிழைப்பு மொழியானது; கேட்க வேண்டுமா? தமிழில் ஏராளமாக ஆங்கிலச் சொற்கள் கலந்து நீங்கிலம் என்று பற்றிக்கொண்டன. இப்போது கலந்துபோன சொற்களை நீக்குவது எளிதன்று; ஆதலால் உள்ளபடி வைத்தே தமிழை வளர்க்கவேண்டி யிருக்கிறது. ஆனால், இன்றும் தனித்தமிழ் எழுத முடியும். தமிழ் பிற மொழிகளுக்குத் தோற்கவில்லை; பல மொழிகளை உரமாகக்கொண்டு வளர்கிறது. தமிழிற் கலந்த திசைமொழிகள் சிலவற்றை இங்கே குறிப்பாம்:

தமிழிற் கலந்த பார்ஸி அரபி உருதுச் சொற்கள்:— அமுல், அமீனா, அசல், நகல், அர்ஜி, அவுல்தார், ஆஜர், உஷார், தேகோ, ஜோர், தமாஷ், வாஹ்வா, கச்சேரி, கஜானா, வக்கீல், கிஸ்தி, கேலி, கைதி, கொத்தவால், கோஷா, ஸாமான், ஜமேதார், டபேதார், சுபேதார், நிஜார், தொப்பி, தஸ்தாவேஜு, தாக்கல், தாக்கீது, தகசீல், தாலூக்கா, ஜில்லா, மிட்டாய், லட்டு, ரத்து, ரஜா, ராஜிநாமா, லேவாதேவி, வார்சு, ஜப்தி, ஜவாப், ஜால்ரா, ஜாலக், ஜிகினா, ஜிமிக்கி, ஜெண்டா, ஷர்பத், ஷரத்து, ஷோக்கு, ஹுக்கா, ஹோதா முதலியன.

தமிழிற் கலந்த ஆங்கிலச் சொற்கள்:—

ரேடியோ, ரெயில், மோட்டார், ஏரோப்ளேன், ட்ராம், கிராமஃபோன், ஹார்மோனியம், வயலின், பிடில், மெமோ, மீட்டிங், பார்லிமெண்ட், கோர்ட்டு, ப்யூன், புரோஸஸ் ஸெர்வர், கோட், ஷர்ட், டை,

டைம், காலர், ஹாட், பூட்ஸ், ஸோடா, லெமனேட், ஸீன், பெஞ்ச், ஸ்டூல், ஈஸிச்சேர், கலெக்டர், ஜட்ஜ், மாஜிஸ்ட்ரேட், ரெவின்யூ, ஆர்குமெண்ட், கவர்னர், வைஸ்ராய், அஸெம்ப்ளி, கௌன்ஸில், ஸ்டேஷன், கான்ஸ்டேபிள், போலீஸ் இன்ஸ்பெக்டர், சர்ச்சு, பாதிரி, மிஷனரி, மெஷின், ஹைஸ்கூல், காலேஜ், ஸெனேட், ஸயன்ஸ், சினிமா, டிராமா முதலியன.

பலிதானம்

இக் கதையில் வரும் திசைமொழிகளுக்குச் சரியான தமிழ் எழுதுக :—

திருநெல்வேலிப் பாளையக்காரர் நெடுநாளாகவே கிஸ்தி செலுத்தவில்லை; வாயிதாப் போட்டுப்போட்டு முடிவில் வாயில் மண்ணைப் போட்டனர். நவாப் முஹம்மதலி, நாயிகானையும் கும்பினிப் படைகளையும் அனுப்பினான். சேனை ஸ்ரீவில்லிப்புத்தூரை வளைத்து அட்டகாசம் செய்தது; "ஷூட், ஷூட், மாரோ, பகடோ!" என்று ஏகச்சத்தம்! முரசும் பாண்டும் வெறி முழக்கின. குண்டுகள் பறந்தன. தமிழர் பதிலுக்குப் பதில் கொடுத்தனர். எதிரிகள் ஆண்டாள் கோயிலைத் தாக்கினர். இதோ, உள்ளே நுழைகிறார்கள்! அச்சமயம் கோயிற் கோபுரத்திலிருந்து, "எம்பெருமான் கோயிலில் நீங்கள் நுழையக் கூடாது; மீறினால், இதோ நான் பிராணத்யாகம் செய்வேன்; பழி உங்களைச் சேரும்" என்று பரம பக்தரான ஆழ்வார் ஐயங்கார் முறையிட்டார். சேனை தயங்கியது. "அரே சலோ!", "அட்வான்ஸ், மார்ச்!" என்றனர் எதிரிகள். அன்னியப் படை வாசலைத் தாண்டுகிறது. "எம்பெருமானே என்து

தேசத்தைக் காப்பாற்று, தர்மத்தைக் காப்பாற்று! ஹரிஹரி!'' என்று ஐயங்கார் கீழே குதித்தார்; மண்டை சுக்கு நூறுனது. ''ஹஹா! ஹாரிபிள்!'' என்று பகைவர் பயந்து நடுங்கித் திரும்பிச் சென்றனர். ஆழ்வாரின் தியாகபலி ஆலயத்தைக் காத்தது.

---

௩௨. தமிழில் வடமொழி

தமிழில் வடமொழி இரண்டு வகையாகக் கலக்கிறது. (1) உச்சரிப்புக் கெடாமல் மூலத்தில் உள்ளபடியே கலந்த வடமொழி **தத்ஸமம்** (தற்சமம்); தத்+சமம்=அதற்குச் சமானமானது; ஆரியத்திற்கும் தமிழுக்கும் பொதுவான எழுத்துக்களால் ஆனது: கமலம், காரணம், ஆரணம், குங்குமம். (2) தமிழ் நடைக்கேற்றபடி மூல உச்சரிப்பு திரிந்து வழங்குவது **தத்பவம்** (தற்பவம்); தத்+பவம்=அதனின்று பிறந்தது: இராச்சியம் (ராஜ்யம்); விசேடம், பங்கயம், பக்குவம்.

> 77. **இயல்பாய் வழங்கும் வடமொழி தற்சமம்,**
> **தமிழுக் கேற்பத் திரிந்தது தற்பவம்.**

இயன்றவரை தமிழ்ச் சொற்களையே பேச்சிலும் எழுத்திலும் வழங்கவேண்டும். அதனால், (1) தமிழ் ஆக்கம் பெறும்; (2) தமிழ்ச் சொற்கள் மறையாமல் வழங்கிவரும்; (3) பிற மொழிகள் தமிழை உருக்குலைக்க இடமிராது; (4) தமிழ் மரபு செழிக்கும். தமிழில் சுருக்க விளக்கமான இனிய சொற்கள் உள்ளன; தற்காலக் கலைச் சொற்களை எளிய இனிய தமிழில் விளக்கலாம். (எம் கலை நூல்களைக் காண்க!). இங்கே தமிழின் திட்ப நுட்பமான செம்மையைக்

காட்டச் சில ஆரியச் சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்களைத் தருகிறேன். (இப்படி ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்கள் உள்ளன ; அவற்றைக் காக்க வேண்டும்).

ஆரியம்	தமிழ்
ஈஸ்வரன்	இறைவன், கடவுள், ஆண்டவன்
ஹ்ருதயம்	உள்ளம்
அன்னவஸ்திரம்	ஊணுடை, சோறு துணி
அங்கவஸ்திரம்	மேலாடை
ஆஸ்சர்யம்	வியப்பு
ஆரம்பம்	தொடக்கம்
ஆக்ஷேபம்	தடை, மறுப்பு
சங்கீதம்	இன்னிசை
இஷ்டம்	விருப்பம்
மித்திரன்	நண்பன்
கோஷ்டி	குழு, கூட்டம்
சிம்ஹாஸனம்	அரியணை
ஸன்மார்க்கம்	மெய்வழி
சச்சிதானந்தம்	மெய்யறிவின்பம்
அந்தரங்கம்	மறைமுகம், உள்
அப்பியாசம்	பயிற்சி
அபிவிருத்தி	செழிப்பு
அபூர்வம்	அருமை
அர்த்தம்	பொருள்
அவசரம்	விரைவு
அவசியம்	தேவை
பௌருஷம்	ஆண்மை
அநாவசியம்	வேண்டா, தேவையில்லை
அவயவம்	உறுப்பு
அற்புதம்	புதுமை

ஆரியம்	தமிழ்
அன்னியம்	அயல்
அனுபவி	நுகர்
அனுஷ்டானம்	கடன்முறை
அஸ்திபாரம்	அடிப்படை
ஆக்கினை	ஆணை
ஆசாரம்	ஒழுக்கம்
ஆசீர்வாதம்	வாழ்த்து
ஆதியந்தம்	முதலிறுதி
ஆமோதனம்	ஒப்பல்
ஸந்தோஷம்	மகிழ்வு
நமஸ்காரம்	வணக்கம்
உத்யோகம்	அலுவல்
உபகாரம்	உதவி, துணை
உபவாசம்	பட்டினி
உஷ்ணம்	வெப்பம்
கங்கணம்	காப்பு
கர்வம்	செருக்கு
சஹஜம்	இயல்பு, வழக்கம்
சகோதரன்	உடன்பிறந்தான்
ஜேஷ்டன்	அண்ணன், மூத்தோன
கனிஷ்டன்	தம்பி, இளையோன்
கல்யாணம்	திருமணம்
சத்துரு	பகைவன்
சந்ததி	மரபு
சந்திரன்	திங்கள்
சூரியன்	கதிரவன்
சந்யாஸி	துறவி
நிஷ்காம்யகர்மம்	அவாவறுவினை
சம்பாஷணை	உரையாடல்
சமாச்சாரம்	செய்தி

ஆரியம்	தமிழ்
பூரணம்	நிறைவு
பூரணச்சந்திரன்	நிறைமதி
சீக்கிரம்	சுருக்க
சுதந்தரம்	உரிமை
ஸ்வராஜ்யம்	தன்னாட்சி
சுவர்க்கம்	மேனிலை
சுவாசம்	மூச்சு
சேஷ்டை	குறும்பு
சொப்பனம்	கனா
ஞாபகம்	நினைப்பு
தருமம்	அறம்
துரோகம்	இரண்டகம்
நஷ்டம்	இழப்பு, வீண்
நிஜம்	மெய்
பக்தன்	அன்பன்
பஞ்சேந்திரியம்	ஐம்புலன்
பதிவிரதை	கற்பினள்
பரம்பரை	தலைமுறை
பிரகாசம்	ஒளி
பிரசங்கம்	சொற்பொழிவு
பிரத்யக்ஷம்	கண்கூடு
பிரயோஜனம்	பயன்
பிராணன்	உயிர்
புண்யம்	நல்வினை
பாபம்	தீவினை
புஷ்பம்	பூ
யதார்த்தம்	உண்மை
யாகம்	வேள்வி
யோக்யதை	தகுதி
விஸ்தீரணம்	பரப்பு

ஆரியம்	தமிழ்
ஜன்மம்	பிறவி
ஜீர்ணோத்தாரணம்	பழுதுபார்க்கை
ஸ்நானம்	முழுக்கு, குளிப்பு
ஸ்தானம்	இடம்
க்ஷேமம்	நலம்
ஸ்ரீ	திரு

தொல்காப்பியரும் நன்னூலாரும் தமிழில் வரும் வடசொல்லுக்குச் சில விதிகள் செய்திருக்கிறார்கள். அவ்விதிகளையே இங்கே குறிக்கிறேன் :—

	வட எழுத்து	தமிழில் மாறுதல்	உதாரணம்
1	ரு	இரு	ருஷி, இருடி.
	வ்ரு	விரு	வ்ருத்தம் விருத்தம்.
	ந்ரு	நிரு	ந்ருத்தம், நிருத்தம்.
2	ஜ	ச	ஜயம், சயம்.
3	ஜ	ய	பங்கஜம், பங்கயம்.
4	ஸ	ச, ய	ஸந்தோஷம், சந்தோடம் ; நேசம், நேயம்.
5	ஷ	ச, ட	ஷண்முகம், சண்முகம், (முதல்); விஷம், விடம். (இடை)
6	ஸ	ச	ஸபா (சபை), வாஸ, வாசம்.
7	ஹ	அ, க	ஹரி, அரி ; பஹம், பகம்.
8	க்ஷ	க்க, க, ட்ச	பக்ஷம், பக்கம் ; க்ஷணம், கணம் ; க்ஷமா, கமை ; பக்ஷி, பட்சி.

9	சொல்லிறு தியில்	ஆ ஐ	மாலா, மாலை; கலா, கலை.
10	ஈ	இ	நாரீ, நாரி.
	முதலில் வரும்		
11	ர	அ, இ	ரங்கம், அரங்கம்; ராமன், இராமன்; ரவி, இரவி.
	ல	இ, உ	லாபம், இலாபம்; லக்ஷணம், இலக்கணம்; லோகம், உலோகம்.
	ய	இ, உ	யமன், இயமன்; யுத்தம், உயுத்தம்.
12	இடையில் யரல முன்	இ	காவ்யம், காவியம்; வக்ரம், வக்கிரம்; சுக்லம், சுக்கிலம்.
	ம, வ ,,	உ	பத்மம், பதுமம். பக்வம், பக்குவம்.
	ந	அ	ரத்நம், அரதநம்.
	ர் பின்	உ	அர்த்தம், அருத்தம்; அர்ச்சனை, அருச்சனை.

இதைத் தவிர, சக்கரம் (சக்ரம்), சத்தி (சக்தி), உற்சவம் (உத்ஸவம்), சிநேகம் (ஸ்நேஹம்), விட்டுணு, விண்டு (விஷ்ணு) என்றும் வரும்.

தீர்க்கசுவாகா!

"வேதம், சாஸ்திரம், இதிகாசம், புராணம், அறுபத்துநான்கு கலைகள்—எல்லாம் ஆரியத்திலே

தான் உள்ளன; தமிழில் ஒன்றுமே இல்லை; அது தாழ்ந்த மொழி" என்று குயக்கொண்டான் பட்டி மண்டபத்தில் சரமாரியாகப் பொழிந்தான். தமிழுக்கே வாழ்ந்த நக்கீரருக்கு இது பொறுக்கவில்லை. அவர் புலவர், கவிஞர், அஞ்சா நெஞ்சங்கொண்டவர்; தமிழுக்குச் சிறுமை வந்தால் பொறுக்கமாட்டார். அவர்:

"முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி—அரணிலா
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கொண்டான்
ஆனந்தஞ் சேர்கசுவா கா"

என்று பாடினார். குயக்கொண்டான் தலை சுழன்று வீழ்ந்தான். சபை முழுதும் "செந்தமிழ் வாழ்க!" என்று கர்ச்சித்தது. சிலர் வீழ்ந்த கொண்டானை மீண்டும் எழுப்பவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். நக்கீரர்,

"ஆரியம் நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணையால்,
செந்தமிழே தீர்க்கசுவா கா"

என்று பாடினார். குயக்கொண்டான் எழுந்தான்; மனம் மாறினான்; தமிழைப் பெருமை செய்யவே வாழ்ந்தான்.

---

௩௩. பகுபதம் பகாப்பதம்

சொல், பதம் இரண்டும் ஒரே பொருளுடையன. பதம் இரண்டு: 1. பகாப்பதம், (Root word);

2. பகுபதம், (Divisible word). பகுக்க முடியாமல் ஒரே வடிவாய் இருப்பது பகாப்பதம். கண், பெண், வீடு, மாடு—இவை பகாப்பதம், பிரிக்கமுடியாதன. பகுக்க முடிந்தது பகுபதம்; கண்ணன் என்பதை கண்+அன் என்று பகுக்கலாம், பொருளுண்டு. அதே மாதிரி வந்தான், போனான், நடந்தான், எழுந் தான் முதலியவை பகுபதங்கள். பகாப்பதங்களி லிருந்தே பகுபதம் உண்டாகிறது. பகாப்பதம் ஏழு எழுத்திற்கு அதிகமிராது; பகுபதம் ஒன்பது, அதிக மானால் பத்தெழுத்திற்குமேற் போகாது.

கண், காது, மூக்கு, உடம்பு, இறும்பூது (ஆச் சரியம்) குங்கிலியம்—இவை பகாப்பதங்கள். கூனி, கூனன், அறிஞன், கறுப்பன், அம்பலவன், அரங்கத் தான்—இவை பகுபதங்கள்.

78. பகுக்க முடிந்தது பகுபத மாகும்.
79. பகுப்பற் றிருப்பது பகாப்பத மாகும்.

அடியில் வரும் கதையில் உள்ள பகுபதங்களை யும், பகாப்பதங்களையும் வரிசையாக எழுதுக:

பத்தினி கண்ணகி

வேசையின் ஆசை வெளுத்தது. கோவலன் பத்தினி கண்ணகியிடம் வந்தான்; "கண்ணே பொரு ளெல்லாம் பொய்மயக்கில் போக்கினேன்; இனி மதுரைக்குச் சென்று, வாணிகம் செய்து பிழைக்க விரும்புகிறேன்" என்றான். "கண்ணாளா, தங்கள் விருப்பத்திற்கு இரண்டில்லை; இதோ, நானும் வருகி றேன்" என்றாள் அன்புக் கண்ணகி. இருவரும் காடு மலையெல்லாம் சுற்றி, மதுரை சேர்ந்தனர். கண்ணகி

தனது பொற்சிலம்பொன்றைத் தந்து விற்றுவரச் சொன்னாள். கோவலன் அதை மதுரையில் விலை கூறித் திரிந்தான். பாண்டிமாதேவியின் சிலம்பைத் திருடிய திருட்டுக் கொல்லனொருவன், அது கோவலன் கையிலிருந்த சிலம்பே என்று மன்னனிடம் புளுகிக் குற்றமற்ற பத்தினிகணவன் உயிருக்கு உலைவைத் தான். காவலன் கொலைஞர் கோவலனைக் கொன்றனர். அறிந்தாள் கண்ணகி; விரைந்தாள் கொலைக் களம். கோவலன் உடலை அணைத்துக் கண்ணீர் வடித் தாள்; பிறகு, வீராவேசமாகப் பாண்டியன்முன் சென்று தனது நீதியை முறையிட்டாள்; அரசியின் சிலம்பினுள் முத்தும், தனது சிலம்பினுள் மாணிக்க மும் இருப்பதை உடைத்துக் காட்டினாள். பாண்டி யன் தன் பிழை யுணர்ந்தான்; "யானோ அரசன்! யானே கள்வன்!" என்று அரியணையினின்று உருண்டு வீழ்ந்து, உயிர்விட்டான். கண்ணகிக் கற்பனல் மதுரையை எரித்தது. சேரன் செங்குட்டு வன் கண்ணகிக்குச் சிலை நாட்டி வழிபட்டான்.

---

௩௪. பகுபத வுறுப்புக்கள்

பகுபதத்திற்கு ஆறு உறுப்புக்கள் உண்டு:—

1. **பகுதி** (Root),—முதல் நிலை, சொல்லுக்கு முத லில் வரும்; பகாப்பதமாகவே யிருக்கும். வினைப் பகாப்பதமானால் ஏவலைக் காட்டும்; பெயர், வினை, இடை, உரி நான்கிலும் வரும்: **பொன்+அன்=** பொன்னன்; பொன் பகுதி. செய்தான் என்பதில் **செய்** பகுதி.

2. **விகுதி (Termination)** இறுதிநிலை; சொல் முடிவில் வரும்; திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் காட்டும்.

பொன்னன் என்பதில் அன், செய்தான் என்பதில் ஆன் விகுதி.

3. **இடைநிலை (Middle particle)** பகுதிக்கும் விகுதிக்கும் இடையே நிற்கும்; இரண்டையும் இணைக்கும். வினைப்பகுபத இடைநிலை காலம் காட்டும்.

உண் + ட் + ஆன் = உண்டான். ட் இடைநிலை.

4. **சாரியை (Euphonic particle)** இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே வரும்; இனிய ஓசை தரும். பகுபதவுறுப்புக்களைச் சார்ந்தே வருவதால், இது **சாரியை** எனப்பெற்றது. அகரம் என்பதில், கரம், நெஞ்சம் என்பதில் அம் சாரியைகளாம்.

படி + த் + த் + **அன்** + அன் = படித்தனன். **அன்** சாரியை.

5. **சந்தி (Combination)** பகுதியும் அடுத்த உறுப்பும் புணரும் புணர்ச்சி.

6. **விகாரம் (Change)** சந்தி எழுத்தின் மாறுதலைக் குறிக்கும்.

நட + **த் (ந்)** + த் + ஆன் = நடந்தான்.

முதல் **த்** நட என்பதையும் இரண்டாம் த்தையும் சேர்க்கும் சந்தி. த் சேர்க்கும்போது **ந்** ஆக மாறுவது விகாரம். சந்தியிலக்கணம் தனியே வரும்.

80. பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை
சந்தி, விகாரம் பகுபத வுறுப்பாம்.

ஆதிரை

ஆதிரை கற்பரசி; அவள் கணவன் சாதுவன். ஒரு வேசை மயக்கால் பொருளிழந்தான்; பிறகு வணிகர் சிலருடன் பொருள்தேடக் கப்பலேறிச் சென்ருன்; நடுக்கடலில் கடும்புயல் வீசிக் கப்பல் கவிழ்ந்தது; பலர் மூழ்கினர்; சிலர் பாய் மரத்தைப் பற்றி நீந்திக் கரை சேர்ந்தனர். அவர்கள் ஆதிரைகணவன் இறந்ததாகச் சொன்னுர்கள். ஆதிரை பதறினள், கதறினள்: தீக் குளிக்கப் புகுந்தாள். அப்போது, "உன் கணவன் உயிரோடிருக்கிருன்; வருவான்" என்ருேர் அசரீரி கேட்டது.

ஆம்; சாதுவன் ஒரு பாய்மரத்துண்டைப் பற்றிக் கொண்டு நாகர்மலை சேர்ந்தான். அவன் கதையைக் கேட்ட நாகர்தலைவன் மனமிரங்கி, ஊனும், கள்ளும் உண்டு அழகான ஒரு பெண்ணைக் கூடிக் களித்துத் தன்னுடன் இருக்கும்படி சாதுவனை வற்புறுத்தினன். "ஐய, மதிமயக்கும் கள்ளையும், கொலைப்பழி தரும் ஊனையும் தீண்டேன்; பெண் வலையில் வீழ்ந்தே இக்கதியானேன்; பிறமாதரைத் தொடேன். அறவழி தவிர்த்து மறவழி நில்லேன்" என்று சாதுவன் நீதி சொன்னன். அவனுரை கேட்ட நாகர்கோனும் அறவழி திரும்பி, சாதுவனுக்கு அகிலும் துகிலும் சந்தனமும் கொடுத்து அனுப்பினன். சாதுவன் அங்குவந்த வணிகனெருவன் கப்பலில் ஏறி, ஊர் திரும்பி, பத்தினியுடன் கூடி இனிது வாழ்ந்தான்.

௯௫. நால்வகைச் சொற்கள்
(Parts of Speech)

சொற்கள் நான்கு வகுப்புடையன :—

பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்.

1. சிவன், கண்ணன், உலகம், மனிதன், உயிர், மரம் எனப் பெயர்களைக் குறிப்பது **பெயர்ச்சொல்** **(Noun).**

2. வா, போ, இரு, செய், பாடுகிறான், ஆடுவான் எனச் செயல்களைக் குறிப்பது வினைச்சொல் **(Verb).** செயல்=வினை, தொழில்.

3. நானும், நீயும் நாட்டிற்கு உழைப்போம். நான்+உம் என்றும் நீ+உம் என்றும் இரண்டு சொற்களுக்கும் இடையே உம் வருகிறது ; அஃது இடைச்சொல் **(Particle)** ; இடைச்சொல் தனித்து வராது ; பெயர் அல்லது வினையுடன் ஒட்டிக்கொண்டிருக்கும்.

4. சால உண்டான் ; சால என்பது உண்டான் என்பதற்குரிய குணத்தைக் காட்டுகிறது. இது பெயருக்கும் வினைக்கும் உரிய குணங்களை விளக்குவதால் **உரிச்சொல்** **(Attribute)** எனப்படும். பெயரின் குணத்தை விளக்குவது **பெயர் உரிச்சொல்** **(Adjective)** : உறுபுகழ். ஒரு வினையின் குணத்தை விளக்குவது வினை உரிச்சொல் **(Adverb)** : சாலப்பேசினான். உரிச்சொல் பெயர் அல்லது வினைச்சொல்

னுக்கு உரிய பண்பை, குணத்தை, தன்மையை, தகைமையை விளக்கும்.

81. பெயர், வினை, இடை, உரி சொல்வகுப் பாமே.
82. பெயரைக் குறிப்பது பெயர்ச் சொல் லாகும்.
83. வினையைக் குறிப்பது வினைச்சொல் லாகும்.
84. பெயர்வினை யிடையில் இடைச்சொல் வருமே.
85. சொற்குணம் விளக்கும் பெயர், வினை உரிச்சொல்.

பகுபதம் பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் என இரண்டு வகையாகும். பெயர்ப்பகுபதம் ஒன்றின் பெயரைக் குறிக்கும்; வேற்றுமை உருபேற்கும்: அறிஞன், (அறி + ஞ் + அன்).

வினைப்பகுபதம் தொழிலைக் குறிக்கும்: படித்தான், நடப்பான்.

பகாப்பதம் பெயர் வினை இடை உரி ஆகிய நான்கு சொற்களிலும் வரும்:—

மண், கல், மரம்—பெயர்ப்பகாப்பதம். நட, வா, நில் — வினைப்பகாப்பதம். மற்று, தான் — இடைப் பகாப்பதம்; சால, நனி—உரிப்பகாப்பதம்.

86. பகுபதம் பெயர்வினை என இரு பகுப்பாம்;
87. பகாப்பதம் பெயர் வினை இடை உரி நான்குமாம்.

கம்பன்

கம்பன் கவியரசன்; கலையின் நிலயம். அவனுடைய வண்ணான் ஸ்ரீராமன் நேர்த்தியாகத் துணி வெளுத்துக் கொடுத்தான். கம்பனுக்கு அவன்மேல் பெருமகிழ்ச்சி பொங்கியது. வண்ணானையும் சலவைத் துணியையும் பார்த்தான் கவிஞன். உடனே, ஒரு கவி மலர் பூத்தது:—

சிரம்பார்த்தான் ஈசன்; அயன் தேவிதனைப் பார்த்தான்;
கரம்பார்த்தான் செங்கமலக் கண்ணன்—உரஞ்சேர்
மலைவெளுத்த திண்புயத்து வன்றான்சீ ராமன்
கலைவெளுத்த நேர்த்திதனைக் கண்டு.

[சிவன் சிரத்தில் வெண்பிறை; பிரமன்தேவி வாணி, திருமால் கையில் சங்கு — இவை எல்லாம் ஆடைபோல வெண்மை.]

---

௩௯. பெயர் வகை

இயற்கையில் பெயர் கிடையாது; வடிவே யுண்டு; சிவன், இராமன், ஜான், அப்துல்லா எனப் பெயர்கள் வைப்பது மனிதன். உலகில் எத்தனையோ பொருட்குவைகள் உள்ளன. சில **அசைவன**; சில **அசையாதன.** ஆள் முதல் அணுப்பூச்சி வரையில், அறுகம்புல் முதல் அரசமரம் வரையில், மண்முதல் மலைவரையில் எண்ணுக்கடங்காத பொருள்கள் உள்ளன. மனிதன் அறிந்தது அணுவளவு; அறியாதது உலகளவு. மனிதரிடையே எத்தனையோ வகுப்புகள் உள; ஒவ்வொன்றற்கும் உரிய மொழி யுண்டு; அவரவர் மொழியில் அவரவர் பொருள்களுக்குப் பெயர் தந்து குறிப்பிடுகின்றனர். தண்ணீரை நீர், நீள்ளு, பாணி, வாடர், லோ என்று அவரவர் மொழியில் சொல்லுவர். தண்ணீர் பெயரன்று; அஃது ஒரு பொருள்; அதைக் குறிக்கும் குறியீட்டுச் சொல்லே பெயர்.

88. அவரவர் மொழியில் அகிலப் பொருள்களை
எளிதாய் அறிவதற் கிட்டதே பெயராம்.

பெயர்வகைகளை ஆராய்வோம் :—

1. காரணமில்லாமல் வழங்கிவரும் பெயர்கள் **இடுகுறிப் பெயர்கள்** : மரம், கடல், மலை.

2. காரணத்தை ஒட்டி இடப்பட்ட பெயர்கள் **காரணப் பெயர்கள்** : முக்காலி (மூன்று காலுடையது), கதிரவன் (கதிர்களையுடைய சூரியன்).

3. இந்த இரண்டிலும், சில பெயர்கள் பொது வானவை : மரம் என்னும் இடுகுறிப் பெயர், எல்லா மரங்களுக்கும் பொது; அஃது **இடுகுறிப்பொது.** மலை, பூ, இலை—இவையும் இடுகுறிப்பொதுப் பெயர்களே.

4. "மாமரம்" என்ற சொல், ஒரு குறிப்பிட்ட மரத்திற்குச் சிறப்பாக வழங்குவது; அஃது **இடுகுறிச் சிறப்புப் பெயர்.** பலாமரம், முல்லைப் பூ, வெற்றிலை என்பவையும் அவ்வாறே.

5. பறவை என்பது பட்சி ஜாதியைக் குறிக்கும் **காரணப் பொதுப் பெயர்.** அணி, ஒளி என்பவையும் அவ்வாறே.

6. அக்குப் பறவை என்பது "அக்கா" என்று கூவும் பறவைக்குச் சிறப்பான பெயர்; இது **காரணச் சிறப்புப் பெயர்.** ஊர்க்குருவி, வளை, காலணி, நாற்காலி—இவையும் காரணச் சிறப்புப் பெயர்களே.

7. சில பெயர்கள் தொன்றுதொட்டு வழங்குவன; அவற்றை **மரபுப் பெயர்** என்பர் : மரம், பனை.

8. காலத்திற்கேற்றபடி புலவரால் ஆக்கப்பெற்ற பெயர்கள் **ஆக்கப்பெயர்களாம்.** கலைச் சொற்கள்

ஆக்கப் பெயர்கள். பறவைக்கப்பல், ஒலிப்படம், வானொலி முதலியன உதாரணங்கள்.

பெயர்ச் சொற்கள் ஆறு வகுப்பாக வழங்குகின்றன :

1. பொருளைக் குறிக்கும் பெயர் பொருட்பெயர் :— மனிதன், மாடு, கல், மண்.

2. இடத்தின் பெயர் இடப்பெயர்:— புதுச்சேரி, மதுரை, இந்தியா, ஆசியா.

3. காலங் குறிக்கும் பெயர் காலப்பெயர் :— புதன் கிழமை, சித்திரை மாதம், எவிளம்பி வருஷம், காலை, இளவேனிற் பருவம்.

4. குணத்தைக் குறிப்பது குணப்பெயர் :— வாய்மை, தூய்மை, நன்மை, மேன்மை, அன்பு.

5. உறுப்பைக் குறிப்பது சினைப்பெயர் :— கை, கால், முகம், கண், மூக்கு, தலை.

6. தொழிலைக் குறிப்பது தொழிற்பெயர் :— உண்ணல், உறங்கல், விழித்தல், படித்தல், நடத்தல்.

இவற்றுளும் எத்தனையோ உட் பிரிவுகள் உள :-

சுட்டுப்பெயர் (அவன், இவன்), வினைப்பெயர் (எவன்), கிளைப்பெயர் (தாய், தந்தை, அண்ணன்), சாதிப்பெயர் (செட்டி, அந்தணன், வேளாளர்), அளவுப்பெயர் (சாண், பத்துமுழம்). இன்னும் சில வகைப் பெயர்களுமுள.

89. மரமெனும் பொதுச்சொல் இடுகுறிப் பொதுவாம்.
மாமரம் எனுஞ்சொல் இடுகுறிச் சிறப்பாம்.
பறவை என்பது காரணப் பொதுப்பெயர்.

காகம் என்பது காரணச் சிறப்பாம்.
வழிவழி வருபெயர் மரபுப் பெயராம்.
ஆக்கப் பட்டதே ஆக்கப் பெயராம்.

90. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழிலுடன்,
சுட்டு, வினா, கிளை, சாதி, அளவு
குறிக்கும் பெயர்வகை கொள்கையிற் பலவே.

ஹென்றி ஃபோர்டு

இரும்பு, கரி, எண்ணெய், மின்சாரம்—இவற்றைக் கொண்டு வெண்ணாட்டார் செய்யும் அற்புதங்கள் பல; அவற்றுள் மோட்டார் தொழில் ஒன்று; அதிலும் ஹென்றி ஃபோர்டின் மோட்டார் தொழில் உலகில் ஒரு புரட்சியை உண்டுபண்ணி விட்டது. இன்று மோட்டார் அரசனாக விளங்கும் ஹென்றி ஃபோர்டு பரம ஏழையாகப் பிறந்தவன்; அவன் படிப்பு மட்டம்; ஆனால் ஊக்கம் அதிகம்: சிறு வயதிலேயே அவன் அணைகட்டி, யந்திரம் நடத்தி, கடிகாரங்களைப் பிரித்து, சேர்த்து விளையாடினான். பதின்மூன்று வயதில், ஃபோர்டின் தாயார் இறந்தாள்; பையனைக் கவனிப்பாரில்லை; அவன் டெட்ராய்ட்டுக்கு (Detroit) நடந்து சென்று வேலை தேடினான். ஒரு கப்பல்சாலையில் பகல் முழுதும் கூலிவேலை செய்து பிழைத்தான்; இரவில் கடிகாரம் செப்பனிட்டு அறை வாடகை தந்தான். பிறகு ரெயில் தொழிற்சாலையில் புகுந்தான்; யந்திரவேலையில் அவன் பலே கைகாரனாயிருந்தான். பிறர் ஒரு நாளில் செய்வதை, அவன் ஒரு மணியில் செய்து முடித்தான். யந்திரப் புலவர்களுடன் பழகிப் புதிய புதிய அறிவும் திறமையும் பெற்றான். புதிய புதிய கடிகாரங்கள், வண்டிகள், கருவிகள்—இவற்றை

முயன்று செய்தான். அக்காலம் டெட்ராய்ட்டிலே தான் எடிசன் என்னும் மின்சாரப் புலவரும் விளங்கினார். அவர் ஃபோர்டின் திறமையைக் கண்டு தம் மின்சாலையில் எஞ்சினீயர் வேலை தந்தார். எடிசன் உறவால் அவனது யந்திரப் புலமை வளர்ந்தது. மெல்ல மெல்ல மோட்டார்கள் செய்யத் தொடங்கினன் ஃபோர்டு. நாற்பதாம் ஆண்டில் அவன் சொந்த மோட்டார்கள் செய்யத் தொழிற்சாலை வைத்தான். எத்தனையோ பொறாமைப் போட்டிகள் அவன் முயற்சியைத் தடுத்தன. அவன் மனந் தளராமல் எடுத்த காரியத்தை முடித்தான். அவன் தானே முதல் வண்டி செய்து, தானே விற்றான்; பிறகு வாரத்தில் 35 வண்டிகள் செய்தான். இப்போது கணக்கற்ற வண்டிகள் ஃபோர்டு கம்பெனியில் உற்பத்தியாகின்றன. ஆயிரக் கணக்கான வேலையாட்கள் அவன் தயவில் உழைப்பும் பிழைப்பும் பெற்றுச் செழிக்கின்றனர்.

இதிலுள்ள பெயர்வகைகளை முறையாக எழுதுக!

---

௬௭. திணை

(Class)

பெயர் உறுப்புக்கள் ஐந்தாம் :— 1. திணை (Class), 2. பால் (Gender), 3. எண் (Number), 4. இடம் (Person), 5. வேற்றுமை (Case).

**91. திணை, பால், எண், இடம், வேற்றுமை யென்னப்
பெயர்உறுப் பைந்தெனப் பேசுவர் புலவர்.**

திணை என்பது குலம், சாதி, அகப்புறவொழுக்கம்; சொல்லிலக்கணத்தில் திணை குலத்தைக் குறிக்கும். திணை இரண்டாகும் :—

1. ஐந்து நிலத்திலும், அகப்புற வொழுக்கத்திலும், பகுத்தறிவிலும் சிறந்த மக்களும், தேவரும், நரகரும் **உயர்திணை** (Rationals) :— ஆண், பெண், குழந்தை, புலவன், சிவன், முருகன்.

2. பகுத்தறிவற்ற பசு பட்சிகளும், சடப் பொருள்களும் **அஃறிணை** (Irrationals). அல் + திணை = அஃறிணை. உயர்திணை அல்லாதவை பகுத்தறிவில் தாழ்ந்தவை ஆகும் — ஆடு, மாடு, கோழி, குயில், மரம், கல்.

மனிதன் உயர்திணை; என்றாலும் அவனுடைய கை, கால், கண், காது, நாக்கு ஆகிய உறுப்புக்கள் அஃறிணையே. மனிதரிலும் பகுத்தறிவில்லாத மைந்தரை 'மாக்கள்' என்றும் "அடா அஃறிணை" என்றும் குறிப்பிடுகிறோம். "இந்தக் கட்டைக்கு என்ன வேண்டும்?" என்று உடம்பை அஃறிணையாகக் குறிப்பதுண்டு. உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவான சில பெயர்கள் உள. இவை **திணைப்பொது** எனப்படும். சூரியன் எழுந்தான், எழுந்தது; சந்திரன் உதித்தான், உதித்தது; சுவாமி அருளினான், அருளியது என இரண்டு திணையிலும் இவை வழங்கும்.

3. உலக இலக்கியங்களில் அஃறிணைப் பெயர்கள் சில உயர்திணையாக வழங்குவதுண்டு: ஆறு, மலை, நதி, குணங்கள் முதலியன. இவற்றை **ஆளாக்கம்** (Personification) என்க. உதாரணங்கள் :

காவேரி பொங்கி வருகிருள் ; இமாலயன் (பர்வத ராஜன்) வளர்கிருன். பாரதமாதா நமது தாய். ஒழுக்கத்திற்குத் தந்தை உண்மை. ரோஜாம்பாளுக்கு நீர் வார்க்கவேண்டும். கோலக்ஷ்மி (பசுத்திரு). அன்பே, நீயே இன்பம்......

> 92. உயர்திணை, அஃறிணை எனத்திணை இரண்டாம்.
> மக்களும் தேவரும் அறிவால் உயர்வே ;
> மற்றவை யிழிவே ; புலவர் புனைவில்
> அஃறிணை உயரும் ; திணைப்பொது சிலவாம்.

4. இவ்வாறு சொல்வதால், தெய்வ சிருஷ்டிக்கு உயர்வு தாழ்வு கற்பித்ததாகாது ; ஜீவசைதன்யம் (உயிர் அறிவு) எங்கும் நிறைந்துள்ளது. அது மண்ணிலும் கல்லிலும் உறங்குகிறது ; புல்லிலும் மரத்திலும் ஸ்பரிசமாகிய ஓரறிவு பெற்று விளங்குகிறது. ஒரு செடி வெயிலில் வாடுகிறது ; தண்ணீர் விட்டதும் செழித்துச் சிரிக்கிறது. செடிகளுக்கும் இன்ப துன்ப உணர்ச்சியுண்டு. சிப்பி, சங்கு, கடற்பஞ்சு முதலியன ஸ்பரிசம், சுவை ஆகிய இரண்டறிவு பெற்ற ஈரறிவுயிர்கள். சிதல் எறும்பு முதலிய பூச்சிகள் ஸ்பரிசம், சுவை, மணம் ஆகிய மூன்றறிவுள்ளவை ; தும்பி வண்டு முதலியன ஸ்பரிசம் சுவை மணத்துடன் கண்ணால் உருவத்தைக் காணும் நாலறிவுயிர்கள். பறவைகளும் விலங்குகளும் ஸ்பரிசம், சுவை, மணம், வடிவம் ஆகியவற்றுடன் சத்தமும் சேர்ந்த ஐந்தறி வுயிர்கள்.

மனிதர் ஐந்தறிவுடன் மனமாகிய ஆரும் அறிவு படைத்தவர்கள். தேவர் மனங் கடந்த அருளறிவாளர். மனத்தில் புத்தி சித்தம் நான் என்னும்

அகங்காரம் ஆகிய மூன்றும் அடங்கும். இவ்வாறு ஆறறிவும் உள்ள உயிர்ப்பொருள்கள் சேதனம், சித்து எனப்படும்; அவை யில்லாதவை அசேதனம், சடம் எனப்படும். மக்களும் தேவரும் பகுத்தறியும் புத்தியால், தன்னறிவால் (Self-knowledge) உயர்ந்தவர்; உலகை அறிவால் ஆளத்தக்கவர்; உடல், உயிர், உலகு, இறைவன் உண்மை அறிந்து, உடம்பாலாகிய பயனைப் பெறத்தக்கவர். மற்றைப்படி புல் முதல் விலங்கு வரையில் உள்ள உயிர்களும், கல்மண் முதலிய சடப் பொருள்களும் அறிவு மலர்ச்சியில் தாழ்ந்தவை.

93. உயிர் அறிவு, எங்கும் ஒருமயமாகும்;
கல்லில் உறங்கிப் புல்லில் தளிர்க்கும்.
மரமும் புல்லும் பரிச முணரும்;
அத்துடன் சங்கும் சிப்பியும் சுவையை;
அவற்றுடன் எறும்பும் சிதலும் மணத்தை;
அவற்றுடன் வண்டும் தும்பியும் உருவை;
அவற்றுடன் பறவையும் விலங்கும் ஒலியை;
மானிடர் மனத்துடன் ஆறறி வாளர்;
தேவர் அறிவு திருவருள் அறிவாம்.
அறிவின் விளக்கம் அனேகம் படிகளாம்.

௩அ. பால்

பால் (Gender) என்றால் பகுப்பு, இலிங்கபேதம். இது தமிழில் மிகவும் தெளிவாக, இயல்பாக அமைந்துள்ளது. வடமொழி, ஹிந்தி, உருது, ஃப்ரெஞ்சு முதலியவற்றில், பால் வேறுபாடுகள் அறிவது கடினம்; நீண்ட பழக்கம் வேண்டும். சடப்பொருள்களுக்கெல்லாம் இணைபார்த்துத் தொடரில் அமைக்க

வேண்டும். மனைவி என்னும் பொருளுள்ள தாரம் ஆண், பார்யா பெண், களத்திரம் அலி; ஹிந்தியில் கண் என்னும் பொருள் உள்ள நேத்ரம் ஆண், ஆங்க் பெண்.

தமிழில் இந்தச் சிக்கல் இல்லை; பால் வேற்றுமை அறிவது எளிது. தமிழில் ஐந்து பால்கள் உள.

1. **ஆண்பால் (Masculine gender)** ஆணினத்தைக் குறிப்பது: அவன், சிவன், விஷ்ணு, கிறிஸ்து, அப்துல்லா.

2. **பெண்பால் (Feminine gender)** பெண்ணினத்தைக் குறிக்கும்: தமிழ்மகள், அவள், உமை, திருமகள், மேரி, கலிமா.

3. **பலர்பால் (Common gender)** ஆண் பெண் பலரைக் குறிப்பது: தமிழர், அவர்கள், பெரியார், நல்லார்.

ஆண், பெண், பலர்பால்கள் உயர்திணையாகும்.

4. **ஒன்றன்பால் (Neuter singular)** அஃறிணையில் ஒரு பொருளைக் குறிப்பது; **ஒருமைப்பால்**: அது, மாடு, மரம், புல், மலை.

5. **பலவின்பால் (Neuter plural)**, அஃறிணையில் பலவற்றைக் குறிப்பது; **பன்மைப்பால்**: அவை, மாடுகள், மரங்கள்.

94. **பாலெனப் படுவது இலிங்கப் பகுப்பாம்;**
ஆணினப் பெயர்கள் ஆண்பா லாகும்;
பெண்ணினப் பெயர்கள் பெண்பா லாகும்;
ஆண் பெண் பலரைப் பலர்பால் குறிக்கும்.

இந்த முப்பாலும் உயர்திணை யாமே.
அஃறிணை ஒருமையை ஒன்றன் பாலும்
பன்மையைப் பலவின் பாலும் குறிக்கும்.
அவன், அவள், அவர், அது, அவையெனும் இந்த
ஐந்து பாலும் படர்க்கை யிடமாம்.

ஐந்து பால்களும் படர்க்கை யிடத்திற்கே உரியன; தன்மையும் முன்னிலையும் எண் காட்டும்.

---

௩௧. பால் விகுதிகள்

ஆண்பால் விகுதிகள் ஐந்து:—அன், ஆன், மன், மான், ன். (உ-ம்) தமிழன், பொருளான், வடமன், கோமான், பிறன்.

பெண்பால் விகுதிகள் நான்கு:—அள், ஆள், ள், இ. (உ-ம்) பெரியள், இளையாள், பிறள், பொன்னி.

பலர்பால் விகுதிகள் ஐந்து: அர், ஆர், இர், மார், கள் (உ-ம்) பலர், மைந்தர், பட்டினத்தார், பெண்டிர், குருமார், மக்கள்.

ஆண்பால் பெண்பால் பெயர்களாகும்போது விகுதிகள் அடையும் மாற்றத்தைக் குறிக்கிறேன்.

	ஆண்		பெண்
1. அன்	அரசன்	இ	அரசி
	ஒருத்தன்		ஒருத்தி
	தலைவன்		தலைவி
	தோழன்		தோழி
	பேரன்		பேர்த்தி
	மாமன்		மாமி
	பாட்டன்		பாட்டி

2.	அன்	இடையன்	சி	இடைச்சி
		வாணியன்		வாணிச்சி
3.	அன்	இவன்	அள்	இவள்
		நல்லவன்		நல்லவள்
4.	அன்	குறவன்	தி	குறத்தி
		மறவன்		மறத்தி
5.	ஆன்	தட்டான்	தி	தட்டாத்தி
		பார்ப்பான்		பார்ப்பாத்தி
		வண்ணான்		வண்ணாத்தி
6.	வான்	குணவான்	வதி	குணவதி
		தனவான்		தனவதி

இரு பால்களுக்கும் பொது

7.	சாலி	அவன் / அவள்	குணசாலி / பாக்கியசாலி
8.	இ	அவன் / அவள்	நோயாளி / குற்றவாளி, பாவி.

9. அண்ணன் அக்காள், தம்பி தங்கை, தந்தை தாய், அப்பன் அம்மை எனச் சில சொற்கள் வேறு பட்டும் வரும்.

10. பசு காளை, பெட்டை சேவல் என்று விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் இலிங்கபேதம் உண்டு. எனினும், தமிழ் இலக்கணத்தில் இவை ஆண்பால் பெண்பால் விகுதி யில்லாமலே குறிக்கப் படும்: பசு வந்தது; காளை வந்தது.

11. ஒன்றன்பால் பெரும்பாலும் உ, ம், இ, ஐ, அர், ள் என முடியும்: அது, நல்லது, கரு, மரம்,

கிரி, வாரி, காளை, மாலை, சுடர், இடர், பொருள், இருள்.

12. பலவின்பால் விகுதிகள் வை, கள் ஆகும்: அவை, பசுக்கள், மாலைகள்.

95. ஆண்பால் அன்ஆன், மன், மான், ன்ஆம்;
பெண்பால் அள்ஆள், இ, ள் ஈறுடைத்தாம்.
பலர்பால் அர், ஆர், இர், கள், மார் ஆம்.
ஒன்றன் ஈறு உ, ம், ஐ, இ, ள், அர்.
பலவின் ஈறு வை, கள் ஆகும்.
வேற்றி றுடைய சொற்களும் சிலவே.

இந்த விதிகளுக்கு மாறான ஈறுகளுடைய சொற்கள் சில உள:

1. ஆண்பால்: நம்பி, ஆடூஉ, விடலை, கோ, வேள், குரிசில், தோன்றல், வில்லி, மீளி, வழுதி, கிள்ளி, சென்னி, செட்டி, சக்கிரி, ஏந்தல், செம்மல், சேய், தம்பி, ஏனாதி, வள்ளல், அண்ணல் முதலியன.

2. பெண்பால்: தோழி, செவிலி, மகடூஉ, நங்கை, பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண், இகுளை, மாது, பெண்டு முதலியன.

---

௪௦. பாற்பெயர் விரிவு

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழிலால் பெயர்கள் பிறக்குமென முன்பறிந்தோம். இவற்றுடன், இடைச் சொல்லாலும் பிறக்கும். இவற்றுள் உள்ள பாகுபாடுகள் பல; ஆண்பாலுக்கு மட்டும் பாகுபாடுகள் குறிக்கிறேன்; அதனுடன்

ள், இ, ர் சேர்த்துப் பெண்பாலும் பலர்பாலும் ஆக்கிக் கொள்ளுங்கள் !

I. பொருளால் வரும் பெயர்கள் :—

1. கிளை : தமன், நுமன், நம்மவன்.
2. எண் : ஒருவன், இருவர், ஐவர்.
3. குழு : சங்கத்தான், சமாஜத்தான்.

II. இடத்தால் வருவன :—

1. ஐந்திணை : குறவன், மறவன், ஆயன், மன்னன், துறைவன்.
2. தேசம் : இந்தியன், ஐரோப்பியன், சீனன்.
3. ஊர் : சென்னையான், மதுரையான்.
4. வான் : வானவன், விண்ணவன்.

III. காலத்தால் வருவன :—

1. ஆண்டு : பத்தாண்டினன், பிரபவன், ஸ்ரீமுகன்.
2. பருவம் : வேனிலான், காரான்.
3. மாதம் : சித்திரையான், தையான், மாசியான்.
4. நட்சத்திரம் : உத்தரத்தான், ஆதிரையான்.

IV. சினையால் வருவன :—செங்கண்ணன்.

V. குணத்தால் வருவன :—

1. அளவு : பெரியன், சிறியன்.
2. அறிவு : அறிஞன், புலவன், நாவலன், கவிஞன்.
3. ஒப்பு : பொன்னனைப்பான், புலிபோன்றான்.

4. வடிவு ; கூனன், குறளன்.
5. நிறம் : கரியன், வெள்ளையன், தீவண்ணன்.
6. கதி : மனிதன், தேவன், நரகன்.
7. சாதி : அந்தணன், அரசன், வேளாளன்.
8. மதம் ; சைவன், கிறிஸ்தவன், இஸ்லாமியன்.
9. குடி : சேக்கிழான், காடவன்.
10. சிறப்பு : ஆசிரியன், படைத்தலைவன்.
11. பண்பு : நல்லவன், பொல்லாதவன்,

VI. தொழிலால் வருவன: ஓதுவான், ஈவான், தட்டான்.
அஃறிணைப் பெயர்களும் இம்மாதிரிப் பிறக்கும்.

	ஒன்றன்பால்	பலவின்பால்
வினா	எது ?	எவை ?
சுட்டு	அது	அவை
பொருள்	குழையது	குழையவை
இடம்	அகத்தது	அகத்தவை
காலம்	தையது	தையவை
சினை	கோட்டது	கோட்டவை
குணம்	கரியது	கரியவை
தொழில்	ஆடலது	ஆடலவை

அஃது, இஃது, பிறிது, பிற, மற்றையது, மற்றைய, உள்ளது, உள்ளவை, அவ், இவ், உவ், யானைகள், குதிரைகள் போன்ற சொற்களையும் சேர்த்துக் கொள்க.

96. ஊர், நாடுலகு, வான் இடைப்பெயராம் ;
ஆண்டு, நாள், மாதம், பருவம் காலமாம்.
உறுப்பால் வருவது சினைப்பெய ராகும்.
அறிவு, ஒப்பு, அளவு, உரு, நிறம், கதி, தன்மை
சாதி, மதங், குடிச், சிறப்புடன் குணமாம்.

செய் தொழிலாலே தொழிற் பெயராமே.
சுட்டால் வினவால் மற்றும் சிலவாம்.
பலவகைப் பகுப்புடன் பெயர்பல வருமே.

கலையுறவு

இக் கதையில் வரும் இரு திணை ஐம்பால் பெயர்களை இலக்கமிட்டெழுதுக :

சங்கரி செல்வன் மகள்; தன் இசையாசிரியனை சிதம்பரத்தைக் காதலித்தாள். இதை யறிந்த தந்தை, சிதம்பரத்தைச் சினந்து விரட்டி யடித்தார். சங்கரி கவலைக் கண்ணீரில் மூழ்கினாள்; வேறு எவர் கையையும் பிடிக்க மறுத்தாள். சங்கரி ஓர் இசைக் கழகத்திற் சேர்ந்து பயின்றாள். கழகத்தில் ஒருநாள் இசைப்போட்டி நடத்த ஏற்பாடு செய்தனர். அச்சமயம் "இசைமணி" என்ற பெயர் நாடெங்கும் பரவி யிருந்தது. போட்டியைத் தீர்மானிக்க அவரையே கழகம் அழைத்தது. வித்வானுக்குத் தடபுடலாக வரவேற்பு நடந்தது; சங்கரி தகப்பனும் அதிற் கலந்து கொண்டார். ஆளும், குரலும், திருவும், செல்வமும் செழித்த வித்வானுக்கு, இச் செல்வர் அதிக மரியாதை செய்தார். போட்டி தொடங்கியது. மாணவிகள் வீணையுடன் பாடினர். சங்கரியின் கடைக்கண் இசைமணியை மௌனமாகக் கேள்விகள் கேட்டது. மணியும் அவள் திருவையும், குரலையும், கலையையும் போற்றி மகிழ்ந்தான். அவளுக்கே முதல் வெகுமதி கிடைத்தது. தகப்பனார் வித்வானை விருந்துக் கழைத்தார். சங்கரி உள்ளத்தில் இன்பம் துடித்தது. விருந்துடன் பேச்சு நடந்தது. "எங்கேயோ பார்த்த நினைப்பு," என்று

செல்வர் பேச்செடுத்தார்...... "நீளச் சொல்வானேன்? நானே சிதம்பரம்" என்னுமுன், "ஆ நாதா!" என்று சங்கரி அவன் காலைத் தழுவிக் கண்ணீர் விட்டாள். தகப்பனார் இருவரையும் ஆசீர்வதித்து, இல்லறம் நடத்தச் சொன்னார். கலையும் காதலும் கலந்து களித்தன.

சுக. எண்

(Number)

எண் என்பது இத்தனை என்ற பொருள்களின் எண்ணிக்கை. தமிழில் ஒருமை, பன்மை என்ற இரண்டு எண்களே உண்டு. (வடமொழியில் இவ்விரண்டுடன் இருமை என்றதும் உண்டு.)

ஒன்றாக, தனியாக இருப்பது **ஒருமை (Singular)**: ஒருவன், மணி, வீடு.

ஒன்றுக்கு மேற்பட்டதெல்லாம் **பன்மை (Plural)**: பலர், மணிகள், வீடுகள்.

97. ஒருமை பன்மை எனஎண் இருவகை ;
ஒன்று யிருப்பது ஒருமை யாகும் ;
ஒன்றின் மிக்க தெல்லாம் பன்மை.

ஆண், பெண், ஒன்றன் பால்கள் ஒருமை: ஒருவன், ஒருத்தி, ஒன்று.

பலர், பலவின் பால்கள் பன்மை.

1. **அர், ஆர், கள், ர், மார், வை**—இவை பன்மை விகுதிகளாம்:— அரசன், அரசர்; குரு, குருமார், குரு

மார்கள் ; மகன், மக்கள் ; கிளை, கிளைகள் ; வேர், வேர்கள் ; அவன், அவர் ; அது, அவை.

2. மார் என்னும் பலர்பால் ஈறுடன் “கள்” விகுதியும் சேர்வதுண்டு:— செட்டி, செட்டிமார், செட்டிமார்கள் ; தம்பி, தம்பிமார், தம்பிமார்கள் ; துரை, துரைமார், துரைமார்கள் ; பாங்கி, பாங்கி மார், பாங்கிமார்கள் ; மந்திரி, மந்திரிமார், மந்திரி மார்கள்.

3. அன், அள் ஈற்று ஒருமை விகுதிகள் ர்+கள் என முடியும் : அவன், அவள், அவர்கள் ; எவன், எவள், எவர்கள்.

4. அன், அள் ஈற்றுச் சிறப்பு ஒருமை அர் என்று முடியும் : அவன், அவள், அவர் ; இவன், இவள், இவர்.

5. மரியாதையைக் குறிக்க ஆர் ஒருமையில் வரும் : ஔவையார், தாயார், தந்தையார், மாமனார்.

6. முற்காலத் தமிழர் பெயருக்குப் பின் ஆர் என்ற விகுதியைச் சேர்த்தனர் :— முருகனார், சேந்தனார், சாத்தனார், பாரதியார், நாயன்மார், கோட்புலியார், பிசிராந்தையார், நந்தனார். அருள் பெற்ற பெரியார்களை முன்னோர், தேவர், அடிகள், நாயனார், ஆழ்வார் என்றழைத்தனர் : திருத்தக்க தேவர், சுந்தரமூர்த்தி நாயனார், நம்மாழ்வார், கூரத்தாழ்வார், இளங்கோ அடிகள், அடிகளார் (அடிகள்=இறைவன் மலரடிகளில் உள்ளத்தை வைத்தவர்).

பாலுக்குரிய விதிகள் எண்ணுக்கும்; இரண்டும் சேர்ந்துள்ளன; ஆதலால், இனி விரிவு வேண்டா.

98. எண்ணும் பாலும் இசைந்து நடக்கும்;
அர், ஆர், கள், ர், மார், வை பன்மை
ஈரும்; அர், ஆர் ஒருமைச் சிறப்பாம்.

அஃறிணைப் பொதுப்பெயர்கள் சில; இவை ஒன்றன்பாலுக்கும் பலவின் பாலுக்கும் பொது; பால்பகா அஃறிணை; ஒருமை பன்மை இரண்டிலும் வழங்கும். ஆனால், கூட்டப் பெயர்களுக்கே பன்மை தகும்: (ஒரு) பறவை வந்தது; பறவை (க்கூட்டம்) வந்தன. (ஒரு) தாமரை பூத்தது; தாமரை (க்காடு) பூத்தன. மரம் வளர்ந்தது; மரம் (க்கூட்டம்) வளர்ந்தன.

திணைப்பொதுப்பெயர்கள்:

இரு திணைக்கும் பொதுவான பெயர்களை முன்பே குறிப்பிட்டோம்:

மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இடும் பெயர்கள்: மகள் லக்ஷ்மி, பசு லக்ஷ்மி; கோதை (நாச்சியார்), கோதை (மாலை) புதியது. என் தந்தை இவர், கன்றின் தந்தை இது; என் தாய் இவள், இது தாய்ப் பறவை...முதலியன.

௪௨. இடம் (Person)

தாகூர்

தாகூர் கவியரசர். அவரை ஒருவர், "நீர் யாரிடம் கவி கற்றீர்?" என்று கேட்டார். அவர், "நான் கவி கற்கவில்லை; காலைக்கதிர், தாமரையை மலர்த்துவதுபோல் என் இதயத்தையும் மலர்த்தியது. அதி[redacted] கவித் தேன் பொங்கியது" என்றார்.

இந்தத் தொடர்களில் மூன்று பேர்களைக் குறிக்கலாம்:

நீர்...எப்படி என்று கேட்பவர் ஒருவர். நான்... இப்படி என்று சொல்பவர் ஒருவர். அவர்...அப்படிச் சொன்னார் என்பவர் ஒருவர். நீ, நான், அவன்— இவை மூன்று இடங்களைக் குறிக்கும். (இடம் = ஸ்தானம், நிலை எனப் பொருளாம்):

1. தன்மை (First person) பேசுவோன் இடம், 2. முன்னிலை (Second person) கேட்டு முன்னிற்பவன் இடம், 3. படர்க்கை (Third person) இருவர் பேசும் செய்தி படரும் மூன்றாமவன் இடம். இவற்றில் ஒருமை பன்மை உண்டு. அடியில் வரும் அட்டவணையிற் காண்க:

	தன்மை	முன்னிலை	படர்க்கை
ஒருமை	நான், யான்	நீ	அவன், அவள், அது
பன்மை	நாம், யாம்	நீர், நீவிர், நீயிர்	அவர், அவர்கள்
	நாங்கள், யாங்கள்	நீங்கள், எல்லீர்	அவை

மூன்றிடங்களுக்கும் பொதுவானவை: தான், தாம், எல்லாரும், எல்லாம்.

நான், நீ, அவன்—தான்; நாம், நீவிர், அவர், அவர்கள், தாம், எல்லாம்.

தான், யான், நான், ஒருமை.

தாம், யாம், நாம், எல்லாரும், எல்லீர், நீர், நீவிர் பன்மை.

ஒருவன் ஒருத்தி என்பவை ஒன்று என்பதிலிருந்து உண்டானது. அவற்றுக்குப் பலர்பாலில்லை.

ஒருவர் என்பது, உயர்திணை ஆண் பெண் பால்களுக்குப் பொதுவாகும்; வினை பன்மையாகும்:

ஆண்களில் ஒருவர் அறிவாளர்.
பெண்களில் ஒருவர் அன்புச் செல்வர்.

99. தன்மை, முன்னிலை, படர்க்கை மூன்றிடமாம்;
நான் யான் நாங்கள்; நீ நீர் நீங்கள்;
அவன் அவள் அவர்-கள்; அது அவை-கள் என
ஒருமையும் பன்மையும் உணர வருமே.
தான், தாம், எல்லாம்-இடப்பொது வாமே.

உதட்டன்பும், உண்மையன்பும்

இக்கதையைப் படித்து லீயர் மன்னன் (**King Lear**) சொல்வது போலவே சொல்லுக:

ஆங்கில மன்னன் லீயருக்கு வயதாகி விட்டது. தன் மூன்று பெண்களுக்கும் அரசைப் பகிர்ந்து கொடுத்து, முதுமையை அமைதியாகக் கழிக்க அவன் விரும்பினான்; அவர்கள் அன்பைச் சோதிக்க நினைத்து, "அருமைப் புதல்விகாள், என்னை நீங்கள் நேசிக்கிறீர்களா? எவ்வாறு?" என்று வினவினான்.

மூத்த பெண், கானரில்: அப்பா, நான் உன்னை உயிருக்கும் மேலாக நேசிக்கிறேன்.

லீயர்: சபாஷ்! என் அரசில் மூன்றிலொரு பங்கு உனக்குத் தந்தேன்.

இரண்டாம் பெண், ரீகன்: அப்பா, அக்காளைவிட அதிகமாக உன்னை நேசிக்கிறேன். உன் அன்பே என் இன்பம்.

லீயர்: மகிழ்ந்தேன்; இதோ என் அரசில் உனக்கொரு பங்கு!

மூன்றும் பெண், கார்டீலியா: தந்தையே, நான் உதட்டில் தேனும், உள்ளே வஞ்சமும் வைத்துப் பேசேன்

என் கணவனே எனக்கு உயிர்; உன்னை நான் மகள் போல நேசிக்கிறேன்; உனக்கு, மகளின் கடமையைச் செய்வேன்.

லீயர்: துரோகி, நீயா என் மகள்? கிடையாது உனக்கு அரசு! உன் பங்கை மற்றிருவருக்கும் தந்து விடுகிறேன்.

கார்டீலியா: அப்பா, உன் விருப்பப்படி செய்! என் அன்பை விரைவில் அறிவாய்!

கார்டீலியா, தன் கணவனை ஃப்ரெஞ்சரசனிடம் சென்றாள். லீயர் தன் அரசைப்பெற்ற இரண்டு பெண்களிடமும், மாதமுறையாக வாழ நினைத்தான். அரசைக் கைப்பற்றியதும், இரண்டு மக்கள் மனமும் மாறிப்போயின! கிழத் தந்தையை இருவரும் அவமதித்தனர், அடக்கினர், புண்படுத்தினர். இவள் "போ அவளிடம்!" என்றாள். அவள் "போ இவளிடம்!" என்று விரட்டி யடித்தாள். பாவம், பழுத்த கிழம்! ஆதரவில்லை; தன் விதியை நொந்தான். தலை சுழன்றது; சித்தம் பிசகியது. தன் மக்களின் நன்றிகெட்ட கொடுமையை வெறுத்தான்; தன் பரிவாரங்களையெல்லாம் துறந்தான்; மழையிலும் புயலிலும் அலைந்தான். மனிதர் மனக்கொடுமையைவிட இயற்கையின் புயற்கொடுமை அதிகமில்லை! மாறுவேடம் பூண்ட கெண்ட் (Kent) பிரபு நன்றியுடன் டோவரில் அரசனுக்குப் புகல்கொடுத்து, கார்டீலியாவிடம் சென்று செய்தி சொன்னான். கார்டீலியா பறந்து வந்தாள்; "அப்பா, இப்படியானாயே!" என்று இரங்கினாள்; தந்தைக்குரிய உபசாரங்களைச் செய்தாள்; வைத்தியம் பார்த்தாள், குணமானது. "என்

மகளே, பொய்யர் உதட்டன்பை நம்பி உரிமை யிழந்தேன் ; உன் உள்ளன்பே அன்பு!" என்றான் லீயர்.

துரோகிகள் உருப்படுவதில்லை. கானரில், ரீகன், இருவரும் செல்வச் செருக்கால் தந்தையை வெறுத்தனர் ; கணவரிடமும் அவர்களுக்குப் பற்றில்லை ; கிளாஸ்தர் பிரபுவையே கள்ளமாகக் காதலித்தனர். காமப் போட்டியில் பொறாமைத் தீ பற்றியது. ஒருவரை ஒருவர் நஞ்சு வைத்துக் கொன்றனர். "நானே இனி அரசன் !" என்று கிளாஸ்தர் பிரபு கிளம்பினான். எதிரியை வீழ்த்தி, கார்டீலியா தந்தைக்கு முடிசூட்ட விரும்பினாள். லீயருக்கு அரசும், செல்வமும் புளித்தன; மூத்த மகளின் கணவனை ஆல்பனி பிரபுவுக்கு அரசைத் தந்தான்; கார்டீலியா அன்பில் இறுதி நாளைக் கழித்தாள்.

சங. வேற்றுமை (Case)

விவேகானந்தர்

விவேகானந்தர் சிகாகோ (Chicago) சர்வ மத சங்கத்தில் வேதாந்த முழக்கம் செய்தார் ; அவர் தமது வாக்கினால் சபையின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டார். அவரை அமெரிக்கர் புகழ்ந்து போற்றினர். அவரால் பாரதமாதா பெருமை பெற்றாள்; அவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு நடந்தது ; வேதாந்த விளக்கத்தில் அவரின் மிக்கார் இல்லை ; அவர் வாக்கினின்று வந்ததை யெல்லாம் குட்வின் என்பவர் சுருக்கெழுத்தில் குறித்தார். அக்குறிப்புகளே விவேகானந்தரது நூல்களாக விளங்குகின்றன. அவருடைய சொற்பொழிவுகளில், இலண்டனில் செய்த ஞானயோகப் பொழிவு

மிகச் சிறந்தது. அதைக் கேட்ட ஐரோப்பியர் பலர் அவரிடத்தில் உள்ளன்பு கொண்டனர். சகோதரி நிவேதிதை அவருடனே இந்தியாவிற்கு வந்து, பொதுஜன சேவை செய்தாள். "எழுந்திரு பாரதநாடே, சிம்ஹம் போல் எழுந்து, செய் வீரகர்ஜனை! இந்தியர்காள், விழித்தெழுங்கள்! எல்லாரும் எம் சகோதரர் என்று கூறுங்கள்! தலை நிமிருங்கள்!

உடலினை உறுதி செய்வீர்!
உருக்கெனத் தசை வளர்ப்பீர்;
கடமையைக் காப்பீர்; கஞ்சிக்
கலையமும் அறிவும் ஏந்தி
மடமையும் பசியுந் தீர்ப்பீர்;
மாண்புற உழைப்பீர்; நாளும்
திடமனங் கொண்டு வீர
தீரராய் வாழ்வீர் மாதோ!"

என்று விவேகானந்தர் இடிமுழக்கம் செய்தார். விவேகானந்த, நீ வாழ்க! உன்சொல் பலித்தது!

இந்த வாக்கியங்களைக் கவனமாகப் படிக்கவும். 'அவர்' என்ற ஒரு சொல், 'அவரை, அவரால், அவருக்கு, அவரின், அவருடைய, அவரிடத்தில்' என்று வேறுபட்டுப் புதிய பொருளைத் தருகிறது. இத்திரிபே வேற்றுமை எனப்படுவது. வேற்றுமை என்றால் பெயரின் பொருளை வேறுபடுத்துவது. அப்படி வேறுபடுத்தும் எழுத்து அல்லது எழுத்துக்களை உருபு என்பர். வேற்றுமைகள் எட்டு. உருபுடன் உதாரணம் காட்டுகிறேன்:

வேற்றுமை CASE	உருபு	உதாரணம்
முதல் — Nominative	உருபில்லை	பூ (மணக்கிறது)
இரண்டாம் — Objective or accusative	ஐ	பூவை (முகர்)
மூன்றாம் — Instrumental	ஆல், ஒடு, ஓடு, உடன், கொண்டு	பூவால், பூவொடு, பூவோடு, பூவுடன், பூக் கொண்டு (பூசை செய்)
நான்காம் — Dative	கு, ஆக	பூவுக்கு, பூவுக்காக (வனம் சென்றேன்)
ஐந்தாம் — Ablative	இன், இல், நின்று, இருந்து	பூவின், பூவில் (அரசு), பூவினின்று, பூவிலிருந்து (வருவது வாசனை)
ஆறாம் — Possessive	அது, இன், உடைய	பூவினது, பூவின் (மணம்), பூவினுடைய (நிறம்)
ஏழாம் — Locative	இல், இடத்தில், கண்	பூவில், பூவிடத்தில், பூவின்கண் (வண்டு மொய்க்கும்)
எட்டாம் (விளி) — Vocative	ஆ, ஆய், ஏ, ஓ	பூவே! பூவாய்! ஐயா, ஐயவோ!

100. உருபைக் கூட்டிப் பெயரின் பொருளை
வேறு படுப்பது வேற்றுமை யாமே.
உள்ள பெயரே முதல்வேற் றுமையாம்.
ஐயுரு பேற்கும் இரண்டாம் வேற்றுமை.
ஆல், ஆன், ஒடு, ஓடு மூன்றாம் வேற்றுமை.
கு வுருபேற்கும் நான்காம் வேற்றுமை.
இன், இல், இருந்து ஐந்தாம் வேற்றுமை.
அது, இன், உடைய ஆறும் வேற்றுமை.
இல், இடத்தில், கண் ஏழாம் வேற்றுமை.
ஆ, ஓ, ஏ யிவை விளிவேற் றுமையே.

சச. தொடர்
(Sentence)

"வள்ளலார் அருட்பாவைப் பாடினார்." இஃது ஒரு தொடர். சொற்கள் தொடர்ந்து பொருள்பட நிற்பது தொடர், சொற்றொடர் அல்லது வாக்கியம் (Sentence) எனப்படும். தொடர் இரண்டு வகையாகும் :

1. முற்றாத் தொடர்—பொருள் முடியாமல் இருப்பது : "வள்ளலார் வடலூரில்..........." பொருள் முடியவில்லை. இது முற்றாத் தொடர்.

2. முற்றுத் தொடர்—முற்ற முடிந்த தொடர் : "வள்ளலார் வடலூரில், சத்திய ஞான சபை நாட்டினார்" இது முற்ற முடிந்தது.

101. சொல்லின் தொடர்ச்சி தொடராய் வருமே.
பொருள் முற்றியதே முற்றுத் தொடராம்.
பொருள் முற்றாததே முற்றாத் தொடராம்.

முற்றுத் தொடருக்கு மூன்று உறுப்புக்கள் உண்டு : 1. எழுவாய் (Subject). 2. பயனிலை

(Predicate). 3. செயப்படுபொருள் (Object). முதல் இரண்டு அவசியம். எழுவாய் முதலில், பயனிலை ஈற்றில், செயப்படுபொருள் இடையில் அமையும். முதலில் பயனிலை வருவதும் உண்டு.

வள்ளலார் அருட்சோதியைக் கண்டார். இது முற்றுத் தொடர். இதில் வள்ளலார் எழுவாய்; கண்டார் பயனிலை; அருட்சோதியை செயப்படு பொருள்.

கட்டினார் அருட்கொடி; இதில் பயனிலை முதலில் வந்தது. இதில் எழுவாய் (அவர், வள்ளலார்) மறைந்திருக்கிறது, தொக்கி நிற்கிறது — **தோன்றா எழுவாய்.**

"சாதி மத வேறுபாடுகளை விடுங்கள்; எல்லாரும் சன்மார்க்க நெறியில் சேர்ந்து வாழுங்கள்!" இந்த வாக்கியங்களில் நீங்கள் என்னும் எழுவாய் மறைவா யிருக்கிறது.

எழுவாய் எப்பொழுதும் பெயர்ச்சொல், முதல் வேற்றுமை. அது வினையைச் செய்பவனாகிய கருத்தாவைக் குறிக்கும். பயனிலை செயலைக் குறிக்கும். இன்னதைச் செய்தான் என்று செயப்படுபொருள் குறிக்கும்.

எழுவாய்=தொடர் எழும், தொடங்கும் முதல் நிலை. பயன்நிலை=அதன் பயனைக் குறிக்கும் நிலை. அதனால் என்ன செய்யப்படுகிறதோ அது செ(ய்)யப் படு(ம்)பொருள். "வள்ளலார் ஆன்ம நேயத்தை உபதேசித்தார்." இத் தொடரில் எழுவாய் பயனிலை செயப்படுபொருள் மூன்றும் உள்ளன. எப்படி

அறிவது? உபதேசித்தார்; **யார்** உபதேசித்தார்? வள்ளலார் (எழுவாய்). வள்ளலார் **என்ன செய்தார்?** உபதேசித்தார் (பயனிலை). **எதை** உபதேசித்தார்? ஆன்ம நேயத்தை (செயப்படுபொருள்). **யார்?** **என்ன** செய்தார்? **எதைச்** செய்தார்? **என்ற** கேள்விகளால் எழுவாய் பயனிலை செயப்படுபொருள் ஆகியவற்றை அறிக.

102. **எழுவாய் பயனிலை செயப்படு பொருளென**
முற்றுத் தொடர்கள் மூன்றுறுப் பெய்தும்.
வினைமுதல் எழுவாய், வினையே பயனிலை,
வினைப்பயன் செயப்படு பொருளா கும்மே.

திருவள்ளுவர்

அடியில் வரும் தொடர்களில் கோடிட்ட இடத்தை நிறைவாக்குக! கோடிட்ட இடத்தில் வருவது எழுவாயா, பயனிலையா, செயப்படு பொருளா என்பதைக் குறிக்கவேண்டும்.

திருவள்ளுவர் — — அருளினர். திருக்குறள் வாழும் வகையைப் — — . வள்ளுவர் மதுரைப் பாண்டியனுக்கு அமைச்சராக —— . பாண்டியன் விருப்பப்படியே அவர் கடைச் சங்கத்தில் — — அரங் கேற்றினர். பாண்டியன் இறந்த பிறகே மயிலாப் பூருக்கு — — . வள்ளுவர் மயிலாப்பூரில் ஒரு குரு குலம் — — . அரிய அன்பர் அங்கே — — . அவ ருள் ஏலேலசிங்கனே முதன்மை — — . தம் மாண வருக்கு — — பயிற்றினர். தாமே வாழ்ந்து — — .

1. அறத்தால் வருவதே இன்பம்.
2. அந்தணர் என்போர் அறவோர்.
3. செயற்கரிய செய்வார் பெரியர்.

4. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்.
5. தன்னெஞ் சறிவது பொய்யற்க.
6. எல்லார்க்கும் நன்ரும் பணிதல்.
7. சொல்லுக சொல்லிற் பயனுடைய.
8. யாகாவாராயினும் நாகாக்க.
9. மறவற்க மாசற்ரூர் கேண்மை.
10. அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை.

இவை —— அருளிய மணிமொழிகளாம்.

---

௪௫. வேற்றுமைப் பொருள்

வேற்றுமை உருபுகளை மட்டும் முன்பு அறிந்தோம். அந்த உருபுகளுக்குப் பல பொருள்கள் உள. அவற்றின் நுட்பங்களை இனி ஆராய்வோம்:

I. **முதல் வேற்றுமை** எழுவாய் வேற்றுமை, பெயர் வேற்றுமை, செய்பவன், வினை முதல், கருத்தா எனப்படும். இதற்குத் தனியாக உருபு கிடையாது; ஆனவன், ஆகின்றவன், ஆவான், என்றவன், என்பவன், என்னும், என்கின்றவன் போன்ற சொல் உருபுகள் உண்டு. சொல்லுருபுகள் ஐம்பாலிலும் வரும். சொல்லுருபு=வேற்றுமைக்குப் பதிலாக வழங்கும் சொல்.

சோழனானவன் புலிக்கொடி நாட்டினன். இராஜராஜன் என்றவன் கடல்கடந்து பர்மா மலயா என்னும் நாடுகளில் தமிழ்க்கொடி நாட்டினன். ஆக்களானவை சண்டேசர் குழல்கேட்டு நின்றன.

முதல் வேற்றுமை ஒரு வினை, பெயர், அல்லது வினாவால் முடியும்:

தமிழர் எழுந்தனர் — வினை முடிபு.
தமிழர் வீரர் — பெயர் முடிபு.
அச்சம் ஏது ? — வினா முடிபு.

கருத்தாக்கள் இருவகை : காரியத்தைத் தானே இயற்றுவோன் இயற்றுங் கருத்தா ; தான் தலைமை வகித்துப் பிறரை ஏவிச் செய்பவன் ஏவும் கருத்தா.

இரவிவர்மா அழகிய படங்கள் வரைந்தார். (இயற்றும் கருத்தா). இராஜராஜன் தஞ்சாவூர்க் கோயிலைக் கட்டினான் (ஏவும் கருத்தா).

103. வினை, பெயர், வினாவால் முடிமுதல் வேற்றுமை
எழுவாய் கருத்தா வினைமுதல் என்க,
ஆனவன் என்பவன் ஆகிய சொல்லுரு
ஏற்கும் ; வேறே உருபிதற் கிலையே.

104. தானே செய்வோன் இயற்றுங் கருத்தா ;
ஏவி முடிப்போன் ஏவுங் கருத்தா.

II. இரண்டாம் வேற்றுமை செயப்படுபொருளைக் குறிக்கும். "எதை, என்னத்தைச் செய்தான் ?" என்ற கேள்விக்கு இது விடையளிக்கும். இவ் வேற்றுமை ஆறு வகையான பொருளைக் குறிக்கும் :

பொருள்	உதாரணம்
1. ஆக்கல் :	இளங்கோ சிலப்பதிகாரத்தை ஆக்கினார்.
2. நீக்கல் :	இளங்கோ அரசைத் துறந்தார்.
3. அழித்தல் :	இளங்கோ ஆசையை அழித்தார்.
4. ஒத்தல் :	இளங்கோ பைரனைப் போன்ற மகாகவி.

5. அடைதல்: சிலப்பதிகாரம் புகழை அடைந்தது.

6. உடைமை: தமிழன்னை சிலம்பை உடையவள்.

105. ஐயுருக் கொண்டதே இரண்டாம் வேற்றுமை
ஆக்கல், நீக்கல், அழித்தல், ஒத்தல்
அடைதல், உடைமை பொருள்அது பெறுமே.

III. மூன்றும் வேற்றுமை கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி என மூன்று பொருளுடையது.

(i) காரிய சாதனம் கருவி. அது முதற் கருவி, துணைக்கருவி என இரண்டு வகைப்படும்: காரியமாகி அதனுடன் பிரியாதிருப்பது முதற்கருவி; காரியமாகுமட்டுமே துணை செய்வது துணைக்கருவி. ஆல், ஆன் கருவியுருபு; கொண்டு சொல்லுருபு.

மரத்தால் மேஜை செய்தான்—முதற்கருவி.

உளியால் மேஜை செய்தான்—துணைக்கருவி.

மண் கொண்டு செய்த குடம். தண்டசக்கரங் கொண்டு குடம் செய்யப்பட்டது.

பொன்னான் ஆன மகுடம். அரத்தால் அராவிய நகை.

இவற்றுள் முதற்காரணம் எது? துணைக்காரணம் எது?

(ii) கருத்தா=இயற்றும் கருத்தா, ஏவும் கருத்தா என இருவகை; இதற்கும் கருவியின் உருபே.

கம்பனால் இராமாயணம் பாடப்பெற்றது—இயற்றும் கருத்தா.

சடையப்பவள்ளலால் இராமாயணம் முடிந்தது—ஏவும் கருத்தா.

(iii) இங்கே மற்றொரு நுட்பம் கவனிக்க வேண்டும். வினைகளில் இரண்டுண்டு :

1. செய்வினை (Active voice)—கருத்தாவே எழுவாயாக வருவது: தச்சன் வீடு கட்டினான்.

2. செயப்பாட்டு வினை (Passive voice): செயப்படு பொருளே எழுவாயாக வருவது: தச்சனால் வீடு கட்டப்பெற்றது.

இராஜமையர் 'கமலாம்பாள்' எழுதினார்.
'கமலாம்பாள்' இராஜமையரால் எழுதப்பெற்றது.
வ. வே. சு. ஐயர் குருகுலம் அமைத்தார்.
குருகுலம் வ. வே. சு. ஐயரால் அமைக்கப்பெற்றது.
பாரதியார் 'பாஞ்சாலி சபதம்' பாடினார்.
'பாஞ்சாலி சபதம்' பாரதியாரால் பாடப்பெற்றது.

இவற்றில் செய்வினை செயப்பாட்டுவினைகள் எவை ?

முதல் வேற்றுமையில் வரும் கருத்தா தன்னுடன் ஒத்த செய்வினைப் பயனிலையில் முடியும். கருத்தா முதல் வேற்றுமையானால், செயப்படு பொருள் இரண்டாம் வேற்றுமையாம்: சிதம்பரம் பிள்ளை கப்பலை நடத்தினார்.

மூன்றாம் வேற்றுமைக் கருத்தா, செயப்படு பொருளுடன் ஒத்த செயப்பாட்டு வினையைப் பயனிலையாகக் கொண்டது: சிதம்பரம் பிள்ளையால் கப்பல் நடத்தப்பெற்றது.

(iv) உடன் + நிகழ்ச்சி = உடனிகழ்ச்சி = உடன் வருவது, கூடத் தொடர்வது. ஒடு, ஓடு இதன் உருபுகள்; உடன் சொல்லுருபு.

வ. வே. சு. ஐயருடன் நான் பாலபாரதி நடத்தினேன். அவரோடு கம்பனைப் படித்தேன். ஐயரோடு பழகுவதே இன்பம்.

> **106.** மூன்றும் வேற்றுமைப் பொருளைக் கூறின்,
> கருவி, கருத்தா, உடனி கழ்ச்சியாம்.
>
> **107.** முதல் வேற்றுமையின் கருத்தா செய்வினைப்
> பயனிலை கொண்டு முடிவ தாமே ;
> மூன்றும் வேற்றுமைக் கருத்தா முறையிற்
> செயப்பாட்டு வினையால் முடிவு பெறுமே.

IV. நான்காம் வேற்றுமை உருபு கு ; சொல் உருபு ஆக, பொருட்டு, நிமித்தம் : ஐயர் நாட்டுக்காக வாழ்ந்தார் ; தமிழர் பொருட்டு உழைத்தார். மகளின் நிமித்தம் உயிர் கொடுத்து, பாபநாசம் அருவியில் வீழ்ந்து மறைந்தார்.

நான்காம் வேற்றுமைப் பொருள் எட்டு :—

1. கொடை—பாரதியார் தமிழருக்கு வீரக் கவிதை தந்தார்.

2. பகை—அமைதிக்குப் பகை கவலை ; ஆண்மைக்குப் பகை அடிமைத்தனம்.

3. நட்பு—புகழுக்கு நண்பன் தியாகம் ; புலவருக்கு நண்பன் புத்தகம்.

4. தகுதி (உரிமை) — பெண்ணுக்குத் தகுதி கற்பு ; ஆணுக்குத் தகுதி வீரம்.

5. அதுவாதல் — (முதல் காரணத்திற்குக் காரியப்பொருள்) ; வள்ளுவர் தறிக்கு ஏலேலசிங்கன் நூல் கொடுத்தான். யூத மன்னர் வாளுக்கு இந்தியாவே இரும்பு கொடுத்தது. யவனர் மாலைக்குத்

தமிழர் முத்தளித்தனர். ஷாஜஹான் மயிலணைக்கு (Peacock Throne) இந்தியர் பொன்னளித்தனர்.

6. முறை — கம்பனுக்கு மகன் அம்பிகாபதி. மனிதரெல்லாரும் எனக்கு உடன்பிறந்தார்.

7. பொருட்டு — நண்பனுக்கு (நண்பன் பொருட்டு) நண்பன் உயிர் கொடுப்பான். யார் மேலோர் — பணத்தின் பொருட்டு வாழ்வோரா? பரோபகாரத்திற்கே வாழ்வோரா?

8. எல்லை — தமிழ்நாட்டிற்கு வடக்கே வேங்கடமலை; தெற்கே குமரிமுனை.

108. **கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல்,**
முறை, பொருட்டு, எல்லை ஆகிய எட்டும்
நான்காம் வேற்றுமைப் பொருளா கும்மே.

V. **ஐந்தாம் வேற்றுமையின்** சொல்லுருபு நின்று, இருந்து என்பன.

நீக்கம், ஒப்பு, எல்லை, ஏது — இவை ஐந்தாம் வேற்றுமைப் பொருள்களாம்.

மலையின் (நின்றும்) வீழ் அருவி மரத்தின் வீழ் கனி	நீக்கப் பொருள்
வாளினும் கொடியது வஞ்சம் கொலையிற் கொடியது கோள் இரவினும் கரியது பொய்ம் மனம்	ஒப்புப் பொருள்
தமிழகத்தின் மேற்கு அரபிக்கடல் தமிழகத்தின் கிழக்கு வங்காளக்கடல் இந்தியாவின் வடக்கு இமாலயம்	எல்லைப் பொருள்
கவிதையிற் பெரியவன் கம்பன். வீரத்திற் பெரியவன் கரிகாலன். கருணையிற் சிறந்தது கடவுள்.	ஏதுப் பொருள்

109. நின்றுஇருந்து என்னும் ஐந்தாம் வேற்றுமை நீக்கம், ஒப்பு, எல்லை, ஏதுப் பொருளாம்.

VI. ஆறும் வேற்றுமை உடைய என்னும் சொல்லுருபைக் கொண்டது; உறவுப்பொருளுடையது; உறவு, கிழமை, சம்பந்தம் மூன்றும் ஒன்றே. உறவு இரண்டு வகை:

1. பிரியா உறவு (தற்கிழமை); பொருளுடன் நீங்காது, பிரியாது ஒட்டுறவாயிருப்பது:

வானின் நீலம்; கதிரின் ஒளி; இலையின் பசுமை; மானின் விழி; தேனின் இனிப்பு: அது என்னும் உருபு மறைந்துளது.

2. பிரியும் உறவு (பிறிதின்கிழமை); பொருளினின்று வேறுபட்ட சம்பந்தம் உடையது:

இராமன் பாதுகை; கண்ணன் சக்கரம்; விஜயன் வில்.

இந்த இரண்டு உறவுகளும் பலவகையாக வரும்.

1. காரின் கருமை அழகு. (குணம்)
2. மழையினது வரவு மகிழ்வு (தொழில்) } பண்புறவு

3. அறிவாளனது கண் கூரியது — உறுப்புறவு.

4. அன்பர் குழுவை நாடு — ஒன்றன்கூட்ட வுறவு.

5. பலவகைப் பறவைகளின் கூட்டம் பாடக் கேள் — பலவின்ஈட்டவுறவு.

6. நெல்லினது பொரி, (நெற்பொரி); நெல்லே திரிந்து பொரியானது; திரிபின் ஆக்க வுறவு-இவையெல்லாம் தற்கிழமை, பிரியா வுறவு.

இடம் பொருள் காலம் மூன்றும் பிரியும் உறவு.

7. கம்பனது சமாதி நாட்டரசங்கோட்டையில் உள்ளது — இடவுறவு.

8. கண்ணனது பசு ; மன்னனது மகுடம் — பொருளுறவு.

9. கம்பனது திருநாள் பங்குனி அத்த நாள் — காலவுறவு.

இக்காலத்தில், எனது, உனது, கண்ணனது, இன்னொருவனுடையது, நெல்லினது என்ற வழக்குகள் அருகி வருகின்றன. சுருக்கமாகக் கண்ணன் குழல், இன்னொருவன் சொத்து, நெல்லின் உமி என்றே வழங்குகின்றன. என்னுடைய உயிர் என்பதை என்னுயிர் என்றே சுருக்கமாகச் சொல்லுகிறோம். இரவினுடைய மௌனம் என்பதை, இரவின் மௌனம் என்றே வழங்குகிறோம்.

110. உறவும் உடைமையும் ஆறும் வேற்றுமை.
ஒட்டிய வுறவே பிரியா வுறவாம்.
ஒட்டா வுறவே பிரியும் உறவாம்.
பண்பும் உறுப்பும், ஒன்றன் கூட்டமும்,
பலவின் சட்டமும், திரிபின் ஆக்கமும்
பிரியா வுறவாம் ; பொருள்இடம் காலம்
பிரியும் வுறவாம் ; இன்உரு புடனே
உள்ள பெயருமிவ் வேற்றுமைக் குரியன.

VII. ஏழாம் வேற்றுமை இடப்பொருளாகும். இதனை இடவேற்றுமை என்பர். இதற்கு இல், இடத்தில், கண் என மூன்று முதன்மையான உருபுகள் உண்டு. இக்காலத்தில் இல், இடம் என்ற இரண்டுமே பெரும்பாலும் வழங்குகின்றன. தோட்டத்தில் (தோட்டத்தின் கண்) உலாவினேன். அவனிடம் (அவ்விடத்தில்) சொல்.

இடப்பொருளைக் குறிக்கப் பல சொல்லுருபுகள் உண்டு :

1. கண் — நல்லார்கண் செல் !
2. கால் — ஊர்க்கால் உயர்ந்த மரம்.
3. கடை — ஈயாக்கடை இழிவு.
4. இடை — குளத்திடை அன்னம்.
5. தலை — வலைத்தலை மீன்போல் மனம்.
6. வாய் — கடல்வாய்ப் படகு, கவலை வாழ்க்கை.
7. திசை — ஊர்த்திசை செல்க !
8. வயின் — எனக்கு அவர்வயின் அன்பு மிகுதி.
9. முன் — பெரியார்முன் பணி !
10. சார் — காட்டுச்சார் ஓடும் மானே !
11. வலம் — சிவன் கைவலத்திற் சூலம் நின்றது.
12. இடம் — வயலிடம் உழைத்துண் !
13. மேல் — கைமேல் நெல்லிபோல் கண்டேன்.
14. கீழ் — அறத்தின் குடைக்கீழ் அனைவரும் வாழ்க !
15. புடை — கடற்புடை நின்ற மரக்கலம்.
16. முதல் — அயன்முதல் வந்த வியன்புவி.
17. பின் — தீயர்பின் செல்லேல் !
18. பாடு — அவர்பாடு அடை !
19. அளை — கல்லளைச் சுனை நீர்.
20. தேம் (தேசம்) — பகைவர் தேளத்துப் பண்டம்.
21. உழை — உன்னுழை வந்த விருந்தை உபசரி !
22. வழி — செல்வழி செல்க !
23. உழி — பேசுழி பேசு !
24. உளி — காவுளி கனியுண் !
25. உள் — உளத்துள் இருப்பது கடவுள்.
26. அகம் — முனிவரகத்தில் முரண்பாடில்லை.
27. புறம் — இப்புறம் வாங்கல், அப்புறம் பிடுங்கல்.

28. இல் — மனத்திலிருப்பது வாயில் வரும்.
29. பக்கம் — முன்பக்கம் பின்பக்கம் பார்த்துப்பேசு!
30. ஓரம் — ஆற்றோரம் அரசு.
31. மாடு — எவன்மாட்டும் செல்வம் நில்லாது.
32. பாங்கர் — துறையின் பாங்கர் கலங்கரை விளக்கம்.
33. கிட்ட — என்கிட்டச் சேட்டை செய்யாதே.
34. முகம் — கொடுப்போர் முகத்தை இரப்போர் நோக்குவர்.
35. பால் — எவர்பாலும் அன்பாயிரு!
36. அண்டை — உன்னண்டை இருப்பதை ஒளிக்காதே!

ஏழாம் வேற்றுமை பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய ஆறு வகையிலும் வரும். ஒவ்வொன்றிலும் பிரியா வுறவு, பிரியும் உறவு ஆகிய இரண்டும் உண்டு.

	பிரியா உறவு	பிரியும் உறவு
பொருள் :	மலையிடம் குகை.	கூட்டில் கிளி.
இடம் :	தெருவோரம் வீடு.	வீட்டில் வளரும் நாய்.
காலம் :	ஆண்டின்கண் ஆறு பருவங்கள்.	மாசியில் மாம்பூ.
சினை :	கையில் விரல்.	கையில் மோதிரம்.
குணம் :	அறிவின்கண் தெளிவு.	இளமையிற் செல்வம்.
தொழில் :	ஆடலில் அபிநயம்.	ஆடலில் பாடல்.

111. ஏழாம் வேற்றுமை இடப்பொரு ளாகும்.
பெயர்வகுப் பாறும், உறவுகள் இரண்டும்,
உருபு முப்பத் தாறும் கொளுமே.

VIII. எட்டாம் வேற்றுமை விளிவேற்றுமை. விளித்தல் = அழைத்தல்; படர்க்கையோனை (மூன்றும் மனிதனைத்) தன்பால் அழைத்தல். இக்காலம் விளி வேற்றுமை இவ்வாறு வழங்குகிறது :

ஏ சுப்பையா! அடே பையா! ஓய், உம்மைத்தான், இங்கே வாரும்! ஹரி, இப்படிக் கொஞ்சம் தயவு செய்யவேண்டும்! பெருமாள், இப்படி எழுந்தருளவேண்டும்! அட கந்தா, சந்தைக்குப் போ! அடே ராமா! ஆ, உன்னை எத்தனை தரம் கூப்பிடுவது! ஹலோ ஜாக்ஸன், சௌக்கியமா? சுவாமிகளே, சாத்திரியாரே, தம்பீ, அப்பா!

ஆரியம், ஹிந்தி முதலிய மொழிகளில் விளிவேற்றுமை மிக எளிது: பெயருடன் ஹே, ரே, அரே சேர்க்க வேண்டியதுதான். ஆங்கிலத்தில் அதுகூடத் தேவையில்லை. குரலுயர்த்தினாலே போதும்: "ஜார்ஜ், கம்!" தமிழில் விளிவேற்றுமைக்குப் பல விதிகள் உள்ளன. மற்ற மொழிகளிற்போலத் தமிழிலும் விளியை எளிதாக்க வேண்டும். ஆ, ஏ, ஓ, டே என்று முன்னே கூட்டியும், சொல்லுக்குப் பின்னால் தேவைக்கேற்றபடி ஆ, ஈ, ஏ, ஓ சேர்த்தும், உள்ள பெயரையே குரலெடுத்து இசைத்தும், கூவொலி அழுத்தியும் எளிதாக அழைக்கலாம்—

ஏ மணி; ஓ கந்தா; அடே சிவம், இராமா, மீனாக்ஷி, அம்மையே, அம்மவோ.

112. பெயர் முன் ஆ, ஏ, ஓ, டே சேர்த்தும்,
பின்னே ஆ, ஈ, ஏ, ஓ சேர்த்தும்,
கூவி யழைக்கும் குரலி னாலுமே
விளிவேற் றுமையை எளிதாக் குவமே.

நன்னூல் தொல்காப்பியம் இரண்டிலும் உள்ள விளி விதிகளின் சாரத்தையும் இங்கே உதாரணங்கள் மூலம் சொல்லுகிறேன். உதாரணங்களைக் கவனித்தாலே போதும் :

விளி மூன்று வகையாம். 1. அண்மை விளி (கிட்ட இருப்பவனை அழைத்தல்) : நண்ப ! 2. சேய்மை விளி (தூர இருப்பவனை அழைத்தல்) : ஏ முருகாஅ ! 3. புலம்பல் : கஷ்டமே, துயரே, அம்மாவோ!

விளி ஏலாப்பெயர்கள் : தன்மை, முன்னிலை, நுமன், நுமர் என்னும் கிளைப்பெயர், வினைப்பெயர், சுட்டுப் பெயர், தான், தாம், தாங்கள் என்னும் படர்க்கைப் பெயர்கள்.

விளி கொள்ளும் பெயர்கள்

உயர்திணைப் பெயர்கள் : இ, உ, ஊ, ஐ, ஓ, ன், ள், ர், ல், ய் ஈறுடையன : தம்பி, வேந்து, ஆடூ, விடலை, கோ, ஐயன், வேள், வணிகர், தோன்றல், சேய்.

அஃறிணைப் பெயர்கள் : அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஓ, ண், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள், டு ஈற்றின : மக, புறா, கிளி, தீ, முசு, பூ, சே, நாரை, சோ, மண், காரம், அலவன், நாய், கதர், குயில், தேவ், ஊழ், புள், வண்டு.

பொதுப் பெயர்கள் : இ, உ, ஊ, ஐ, அன், ள், ல், ய், ண், ஆ ஈற்றின : நாத்தி, கூற்று, அழிதூ (பேடு), தந்தை, சாத்தன், கடவுள், தூங்கல் (பிள்ளை), தாய், ஆண், பிதா.

அழைப்புப் பலவகையாக வரும் :— 1. இயல்பு : ஏ நம்பி! 2. ஈறு குன்றல் : அரச, நண்ப! 3. ஈறு

மிகுதல்: மகனே. 4. ஈற்றயல் திரிதல்: மக்கள், மக்காள், புலவர், புலவீர். 5. ஈறு குன்றி அயல் திரிதல்: அப்பன், அப்பா. 6. ஈறுகுன்றி அயல் திரிந்து மிகல்: அண்ணன், அண்ணாவோ. 7. அளபெடுத்தல் வேஎள்.

சில மாறுதல்கள்:

1. உயர்திணைப் பெயர்களின் ஈற்று ல விளிக்கும் வகை: 1. அளபெடுத்தல்: மாஅல் 2. நீட்சி: மடவ(ர) ரால்!

2. ய ஈற்றுப் பெயர்கள் அளபெடுத்து விளிக்கும்: சேஎய்!

3. இருதிணை ஈற்று ஐ, ஆய் ஆகும்—நங்கை, நங்காய்; நாரை, நாராய்.

4. பொதுப் பெயரின் ஈற்று ஐ, ஆ, ஆய், எ ஆகும்: அம்மை அம்மா அம்மே; பிள்ளை, பிள்ளாய்.

5. ஈற்று ன விளிக்கும் வகை:—சேக்கிழாஅன்; அன்பன், அன்ப; நம்பன், நம்பான்; கம்பன், கம்பா; ஐயன் ஐயா; ஐய, ஐயே; ஐயாவே, ஐயவோ, ஐயகோ; கோயிலான், கோயிலாய்; வாயிலாய், வாயிலாயே; கூத்தன், கூத்தா; அலவன், அலவ, அலவா!

6. ஈற்று ள விளிக்கும் வகை:—வேஎள்; எல்லாள், எல்லா; மக்கள், மக்காள்; அடிகள், அடிகாள், அடிகேள், அடிகளே; சாத்திரிகள், சாத்திரிகளே; இளையாள், இளையாய்.

7. ஈற்று ர் விளிக்கும் வகை:—சிறார், சிறுஅர்; தெவ்வர், தெவ்வீர்; நாய்கர் நாய்கீர்; வென்றார், வென்றீர்; கணியார், கணியீரே; நம்பியார், நம்பியீரே; எமர் எமரீரே, நமர், நமரங்காள்.

113. *ஈறியல் பாகியும், குன்றியும், மிகுந்தும்,*
அளபெடுத்தும், அயல் திரிந்தும்
ஐ, ய, ர, ல, ள, வ அழைக்குமென்பர்.

சில சொற்களில், வேற்றுமை உருபுகள் மயங்கியும் இல்லாமலுமே வரும்; பொருளைக் கொண்டு இன்ன வேற்றுமை என்றறிய வேண்டும்: அவன் வேலை செய்தான். வேலை(யை) இரண்டாம் வேற்றுமை. இதன் விரிவு தொகைநிலைப் பாடத்தில் வரும்.

உங்களுக்கு மணிமேகலையின் கதை சொல்வேன்; அதில் வேற்றுமை உருபும் பொருளும் எப்படி வருகின்றன என்று கவனியுங்கள்! குறித்த பெயர்களின் வேற்றுமை, உருபு, பொருள், பால், எண், திணை இவற்றை எழுதுங்கள் :—

மணிமேகலை

சீத்தலைச் சாத்தனார் பெரும் கவிஞர். அவர் இயற்றிய மணிமேகலை ஓர் அற்புதமான கலைக்கோயில்.

மணிமேகலை மாதவி மகள். கோவலன் கொலையுண்ட பிறகு, மாதவி விலை வாழ்வையும், கலை வாழ்வையும் வெறுத்துத் துறவு பூண்டாள். தாயின் வைராக்கியம் மகளுக்கும் வந்தது. மணிமேகலை ஆடல் பாடல் அனைத்திலும் மேன்மை பெற்றிருந்தாள்; ஆனால் அவள் கலையினும் கற்பையே உயர்வாக மதித்தாள்; பொருளினும் அருளையே போற்றினாள்.

காவிரிப்பூம்பட்டினத்தில், இந்திரவிழா அமளியாக நடந்தது. மாதவி—மேகலை நடனம் காண ஊரார் எல்லாரும் ஆவலாயிருந்தனர். "இனி அந்த விலை—கலை வாழ்வு எனக்கில்லை; என் மகளுக்கும் இல்லை; உலகியல்பை அறிந்தேன்; பற்றின் வருவதே துன்பம், துறவின் வருவதே இன்பம்" என்றாள் மாதவி. அறவண

வடிகளின் உபதேசம் கேட்பது; இறைவனுக்கு மலர் மாலை தொடுப்பது—இரண்டே அவர்கள் வேலை. ஒரு நாள் மணிமேகலை மாலை தொடுத்துக் கொண்டே கண்ணகி கற்பையும், உலகின் வஞ்சகத்தையும் நினைத்துக் கண்ணீர் விட்டாள். கண்ணீர் பூமாலையை நனைத்தது. 'அந்த மாலை வழிபாட்டிற்கு உதவாது' என்றாள் மாதவி. மணிமேகலை தன் தோழி சுதமதியுடன் புது மலர் கொய்ய உபவனத்திற்குச் சென்றாள்.

மணிமேகலையின் அழகு உதயகுமாரனை வசீகரித்தது; உதயகுமாரன் சோழமன்னனின் மகன்; சோழநாட்டு இளவரசன்; வீரக் காளை! மேகலையிடம் அடங்கா மையல் கொண்டு அவளை எப்படியாவது கவர்ந்து செல்லவே அவன் உபவனத்திற்கு வந்தான். மணிமேகலை அவன் மன மறிவாள்; சட்டென்று ஒரு பளிங்கறையுள் மறைந்துகொண்டாள். சுதமதி "இளவரசே, இந்த அற்ப உடலின்பத்திற்கு அடிமையாவது அறிவன்று; மண்ணுடல் மண்ணாகும். செய்வினை உயிரைத் தொடரும். மணிமேகலை தவவொழுக்க முடையவள். அவளைத் தீண்டினால் சாபம் வரும்" என்று புத்தி சொன்னாள். "அவள் பாட்டி சித்ராபதி; அவளைக்கொண்டு காரியத்தைச் சாதிப்பேன்" என்று செல்வக் காமுகன் சென்றான்.

மேகலையும், சுதமதியும் அரசவீதிவழியாக நடக்க அஞ்சி, சக்கரவாளக் கோட்டம் என்னும் மயானத்தின் வழியே திரும்பினர். இருட்டு; வழி தெரியவில்லை; இரவை அங்கேயே கழிக்க இருவரும் முடிவு செய்தனர்; பின், கண்ணயர்ந்தனர். அப்போது மணிமேகலா தெய்வம் வந்து மணிமேகலையை, மணிபல்லவத்திற்குத் தூக்கிச் சென்றது. அங்கே மணிமேகலை புத்தபீடிகையைக் கண்டு பணிந்தாள்; முற்பிறவியை அறிந்தாள். முற்பிறவியில் அவள் அசோக நகரத்து

இளவரசனை இராகுலன் மனைவி இலக்குமியாயிருந்தவள்; இளவரசன் இறந்ததும் உடன்கட்டை யேறினாள். அந்த இராகுலனே இப்போது உதயகுமாரனாக வந்தான். மேகலை புத்தபீடத்தை வணங்கித் துதித்தாள். மணிமேகலைத் தெய்வம் அவளுக்கு விரும்பிய உரு வெடுக்கவும், விண்ணிற் செல்லவும், பசி தீரவும் மந்திரம் உபதேசித்து, வானில் மறைந்தது. அச்சமயம் புத்த பீடத்தைக் காக்கும் தீபதிலகை, மணிமேகலையின் புனித வாழ்வையும் புத்த பக்தியையும் போற்றி, அக்ஷயபாத்திரத்தைப் பற்றிச் சொன்னாள். அன்று வைசாக சுத்த பூர்ணமி; ஒரு பொய்கையில் அக்ஷயபாத்திரம் தோன்றி, மணிமேகலை கைக்கு வந்தது. அவள்,

மாரனை வென்ற வீர நின்னடி!

பிறர்க்கறம் முயலும் பெரியோய் நின்னடி!

என்று புத்த தேவனைத் துதித்தாள். தீபதிலகை "அன்பம்மா, பசிப்பிணி கொடிது; உணவைத் தருவோர் உயிரைத் தந்தவராவார். ஆதலால், இந்த அக்ஷயபாத்திரத்தைக் கொண்டு, நீ அன்னதானம் செய்து வா!" என்றாள். மணிமேகலை பெண் துறவியாக ஊர் வந்து, அவ்வாறே செய்தாள்; முதற் பிச்சை, பத்தினி ஆதிரையிடம் வாங்கினாள். அக்ஷயபாத்திரம் நிறைந்தது; ஆயிரக்கணக்கான ஏழைகள் பசியாறினர். காயசண்டிகை யென்னும் கந்தர்வப் பெண், பன்னீராண்டுகள் தீராப்பசியால் வருந்தினாள். மணிமேகலை அக்ஷயபாத்திரத்திலிருந்து ஒரு பிடி அன்னமிட்டதும், அவள் பசி தீர்ந்தது. அவள் கணவன் அவளைத் தேடி வந்தான்.

உதயகுமாரன் ஆசை அளவுக்கு மிஞ்சியது; மீண்டும் மணிமேகலையைக் கெஞ்சியது. மணிமேகலை, "ஐய! இந்த யாக்கை பிறத்தலும் மூத்தலும் பிணி

யால் இறத்தலும் உடைய இடும்பைக்கலன். இதன் பற்றைத் துறந்து, நான் நல்லறம் புரிகிறேன். நீ ஆசையடக்கி அறவழிச்செல்!'' என்று உபதேசித்தாள். ஆசைக்கு அறவுரை ஏறுமா? இளவரசன் மணிமேகலையின் துறவறத்தை இல்லறமாக்க முயன்றான். மணிமேகலை காயசண்டிகைபோல் உருக்கொண்டு, இரவில் சம்பாபதி கோயிலில் ஒளிந்தாள். அதையறிந்த இளவரசன், அங்கும் சென்று மன்றாடினான். அச்சமயம் காயசண்டிகையின் கணவன் வந்தான்; பார்த்தான் இளவரசனை; ''என் மனைவியினிடமா, ஹா!'' என்று ஆத்திரம் கொண்டு வாளால் குத்தினான். இளவரசன் இறந்தான். காமம் கொலையில் முடிந்தது. பழி மணிமேகலை தலையில் விழுந்தது. மணிமேகலையை அரசன் சிறையிட்டான்; அவள் துறவைக் கெடுத்துக் கெட்ட பெயர் வைக்க அரசி சூழ்ச்சி செய்தாள்; பலிக்கவில்லை. மணிமேகலையின் தூய்மையும் வாய்மையும் கண்ட அரசன், அவளை விடுதலை செய்தான். மணிமேகலை வஞ்சி நகரில் கண்ணகி கோயிலை வணங்கி, காஞ்சியில் தன் தாயுடன் பௌத்த பிக்ஷுணி சங்கத்தில் சேர்ந்து தவத்திறம் பூண்டு பேரின்பம் பெற்றாள். காவிரிப்பூம் பட்டினத்தைக் கடல் உண்டு ''அறமே வெல்லும்; அதர்மம் வீழும்!'' என்று கர்ச்சித்தது.

---

௪௬. வேறுபாடு

வேற்றுமை யேற்கும் சில பெயர்கள் மயங்கும், வேறுபடும்; அவற்றை அறிவோம்:

1. தன்மை, முன்னிலை, தான் தாம் தாங்கள் என்னும் படர்க்கைப் பெயர்கள்—இவை வேற்றுமையில் மாறும். அட்டவணையிற் காண்க! இவற்றிற்கு விளிவேற்றுமை யில்லை.

மூன்றிடப் பெயர்கள்
Personal Pronouns

வேற்றுமை	நான், யான்	நாம்	யாம்	நீ		நீர்		தான்	தாம்
2	என்னை	நம்மை	எம்மை	நின்னை	உன்னை	உம்மை	நும்மை	தன்னை	தம்மை
3	என்னால்	நம்மால்	எம்மால்	நின்னால்	உன்னால்	உம்மால்	நும்மால்	தன்னால்	தம்மால்
4	எனக்கு	நமக்கு	எமக்கு	நினக்கு	உனக்கு	உமக்கு	நுமக்ரு	தனக்கு	தமக்கு
5	என்னின்	நம்மின்	எம்மின்	நின்னின்	உன்னின்	உம்மின்	நும்மின்	தன்னின்	தம்மின்
6	எனது என்னுடைய	நமது நம்முடைய	எமது எம்முடைய	நினது நின்னுடைய	உனது உன்னுடைய	உமது உம்முடைய	நுமது நும்முடைய	தனது தன்னுடைய	தமது தம்முடைய
7	என்னிடம்	நம்மிடம்	எம்மிடம்	நின்னிடம்	உன்னிடம்	உம்மிடம்	நும்மிடம்	தன்னிடம்	தம்மிடம்

இவற்றில் கவனிக்கவேண்டிய மாறுதல்களாவன :—

1. யான்-என் ; யாம்-எம் ; நாம்-நம் ; நீ-நின், உன் ; நீர்-நும் ; உம்-நீங்கள், உங்கள் ; தான்-தன் ; தாம்-தம்.

> 114. நான் யான் என், யாம் எம், நாம் நம்,
> நீ நின் உன் ; நீர் நீங்கள் உங்கள்
> தான் தன், தாம் தம் எனவே மாறி
> வேற்றுமை யேற்கு மூவிடப் பெயரே.

2. எல்லைப்பொருளில் வரும் இன் (5. வே) ; அது (6. வே) பெயர்ச்சொல்லால் முடியும்.

இந்தியாவின் (வினும்) வடக்கு திபேத்து ; எனது ஊர் சிதம்பரம்.

3. 4, 7-ஆம் வேற்றுமை யுருபுகள் வினையுடன் வரும் பெயரால் முடியும்.

நாட்டிற்கு உயிர் கொடுத்த வீரன் ; சிப்பியில் பிறந்த முத்து.

4. மற்ற வேற்றுமைகள் வினைச் சொல்லால் முடியும் :

வசந்தம் பூத்தது ; பூக்களைக் கொய்தேன் ; தென்றலால் மகிழ்ந்தேன் ; மலைக்குச் சென்றேன், மலையினின்று இறங்கினேன்; அருவியில் ஆடினேன்; புட்காள், பாடுமின் !

5. நாடு, ஆறு : இவை கு, று வில் முடியும் நெடில் குற்றியலுகரங்கள் ; சரடு, வயிறு : இவை டு, றுவில் முடியும் உயிர்க்குற்றியலுகரங்கள் ; இவை வேற்றுமையில் இரட்டிக்கும் :—

நாடு = நாட்டை, நாட்டால், நாட்டுக்கு.
ஆறு = ஆற்றால், ஆற்றுக்கு, ஆற்றில்.
சரடு = சரட்டை, சரட்டால்.
வயிறு = வயிற்றுக்கு, வயிற்றால்.

ஆனால், எண்ணைக் குறிக்கும் ஆறு இரட்டாது: ரூபா ஆறுக்கு வாங்கி வா!

சோறு, காடு, பாடு, தவிடு, கயிறு, பயறு, நூறு —இவற்றை வேற்றுமைப் படுத்துக!

சஎ. வேற்றுமைச் சாரியை

சொற்களையும் சொல்லுருபுகளையும் சார்ந்து வருவது சாரியை: புளி + அம் + பழம் = புளியம்பழம் —அம் சாரியை. சாதாரணமாக வழங்கும் சாரியைகளை நன்னூலில் உள்ளபடி உதாரணத்துடன் குறிக்கிறேன்.

அன்-நடந்தனன்; ஆன்-இருபான்; அம்-புளியம் பழம்; ஆம்-மண்ஆங் கட்டி; இன்-வலம்புரியன் கால்; அல்-தொடையல்; ஏ-ஒன்றேகால்; ஐ-ஒற்றை; அ-நடந்தது; ஆ-இல்லாப் பொருள்; உ-இறைவனுக்கு; கு-செய்குவாய்; அற்று-சிலவற்றை; இற்று-பதிற்றுப் பத்து; அத்து-மரத்திலே; ன்-கோன்; தன்-அவன்றனை; தம்-எல்லார்தம்மையும்; தாம்-இவர்தாம்.

115. அன், ஆன், அம், ஆம், என், அல், ஏ, ஐ,
அ, ஆ, உ, கு, அற்று, இற்று, அத்து, ன்,
தன், தம், தாம் இவை பொதுச் சாரியையாம்.

வேற்றுமைச் சாரியைகளைக் கவனிப்போம்:—

1. மேற்குறித்த இடப் பெயர்கள், நான்காம் வேற்றுமையில் அகரச்சாரியை பெறும் : என் + அ + கு = எனக்கு ; உம் + அ + கு = உமக்கு.

2. எழுவாய், விளிவேற்றுமைகள் தவிர மற்ற வேற்றுமைகள், அ, இன், அன், அத்து, அற்று என்ற சாரியைகளில் ஒன்றைப் பெறும்.

உன் + அ + கு = உனக்கு ; மை + இன் + ஐ = மையினை ; எது + அன் + ஆல் = எதனால் ; மனம் + அத்து + ஆல் = மனத்தால் ; அவ் + அற்று + இல் = அவற்றில்.

3. மகர ஈற்றுப் பெயர்கள் உருபு ஏற்கும் போது, மகரம் கெட்டு, அத்துச்சாரியை பெற்றதும், அதன் முதலிலுள்ள அ கெடும்.

களம் + அத்து + ஐ = களத்தை.
குளம் + அத்து + ஐ = குளத்தை.

மனத்தில், இனத்தில், தினத்தில், முகத்தில்— இவற்றைப் பிரித்து அத்துச்சாரியை காட்டுக !

4. எல்லாம் என்பது ம் கெட்டு, அற்றுச்சாரியையுடன், உருபுக்குப்பின் உம் என்னும் இடைச்சொல்லும் பெறும்.

எல்லாம் + அற்று + ஐ + உம் = எல்லாவற்றையும்.

5. சில, பல, நல்ல, தீய, அரிய, பெரிய, சிறிய என ஈற்றில் அகரங்கொண்ட பலவின்பால் பெயர்கள் அற்றுச்சாரியை பெறும் :—

சில + அற்று + ஐ = சிலவற்றை ; பல + அற்று + ஐ = பலவற்றை ; பெரிய + அற்று + ஆல் = பெரியவற்றால் ; இவ்வாறே பிறவும்.

6. யா — யாவை, பலவின்பால் படர்க்கை; இஃதும் அற்றுச்சாரியைப் பெறும்: யா + அற்று + ஐ = யாவற்றை, யாவற்றால், யாவற்றிற்கும்.

7. அது, இது, எது (சுட்டுப்பெயர்), யாது (வினா)—இவை அன், இன் சாரியை பெறும்: அதனை, இதனை, எதனால், இதற்கு, எதற்கு, யாதனின், அதனுடைய, இதன்கண், எதனிடம்.

அடியில் வரும் பாடத்தில் இடப்பெயர், சாரியை, வேற்றுமைமயக்கம் முதலியவற்றைக் கவனிக்கவும்:

ஜீவகன்

சிந்தாமணி ஒரு பெருங்காப்பியம். அதன் கவிச்சுவையும் பொருட்சுவையும், புலவர் மனத்திற்கு அரிய விருந்தாகும். அதைச் செய்தவர் திருத்தக்கதேவர். அதில் அடங்கிய கதையின் சுருக்கத்தை உங்களுக்குச் சில பாடங்களாகச் சொல்லுகிறேன் :—

இராஜமாபுரத்தில், சச்சந்தன் என்னும் அரசன் ஆண்டான். அவன் மனைவி விஜயை. அவள் இன்பத்திலேயே சொக்கிப்போய், சச்சந்தன் தனது மன்னறத்தை மறந்தான்; ஆட்சியை மந்திரி கட்டியங்காரனிடம் கொடுத்து, தான் அந்தப்புரச் சுகத்தில் ஆழ்ந்தான். கட்டியங்காரன் பெரிய மோசக்காரன்; படைகளை யெல்லாம் தன்வசப்படுத்திப் புரட்சி செய்து, போர் தொடுத்தான். அப்போது விஜயை சூல்கொண்டிருந்தாள்; அவளை ஒரு* மயிற்பொறியில் ஏற்றி, வேறிடம் பறந்து செல்லவிடுத்து, சச்சந்தன் மந்திரியுடன் போர் புரிந்தே இறந்தான்.

விஜயை ஏறிய பொறி, மயானத்தில் வீழ்ந்தது. ஆங்கு, கணவன் இறந்த செய்தி கேட்டு அவள் உயிர்

துடித்துச் சோர்ந்தாள். அப்போது அவளுக்கு ஆண் குழந்தை பிறந்தது. அதைக் காப்பாற்ற வழி யில்லை : உள்ளும் புறமும் இருள்! நெஞ்சம் பதறியது. அச்சமயம், ஒரு தேவதை வந்து ஆறுதல் கூறி, சச்சந்தன் பெயருள்ள ஒரு மோதிரத்தைக் குழந்தை விரலிற் போட்டு, "அம்மா கவலை வேண்டா! நீ மறைந்திரு! உன் குழந்தையை இப்போது செல்வ னொருவன் வந்து எடுத்துச் செல்வான்" என்று தைரி யம் சொன்னது. விஜயை அப்படியே மறைந்திருந் தாள்.

கந்துக்கடன் என்னும் தனவணிகன் குழந்தை அன்று இறந்தது; அதைப் புதைக்க வந்த செட்டி, மயானத்தில் அழகான குழந்தை யொன்றைக் கண்டு, பாசத்துடன் எடுத்துச் சென்று, "நம் குழந்தை பிழைத்தது" என்று மனைவியிடம் தந்தான். அக் குழந்தைக்கு ஜீவகன் எனப் பெயரிட்டு, இருவரும் செல்வமாக வளர்த்தனர்.

௪அ. பண்புப் பெயர்
(Abstract Noun)

செம்மை சிறப்பு; சிறுமை இழிவு; உண்மை வெல்லும்; நன்மை மகிழும். இந்தச் சிறு தொடர் களில் செம்மை, சிறுமை, உண்மை, நன்மை என் பவை பண்புப் பெயர்கள் : ஒரு குணத்தை, பண்பைக் குறிப்பன. இப் பண்புப் பெயர்கள் விகுதிபெரு தவை; செம் + மை என்று பிரித்தால் பொருள் இல்லை. ஆதலால் இவை பகாநிலைப்பதங்கள்.

116. நன்மை தீமை, செம்மை வெம்மை,
உண்மை பொய்மை, பெருமை சிறுமை,
புதுமை பழமை, மென்மை திண்மை,
இளமை முதுமை, அழகு, அன்பு, சுவை
இன்னன இருகுணம் இயம்பும் பண்பே.

பண்புப்பெயர் விகுதிகளாவன :

117. உ, கு, றி, று, அம், பம், நர், சி, பு,
ஐ, மை பண்புப் பெயர்விகுதிகளாம்.

உ, மழவு ; கு, நன்கு ; றி, நன்றி ; று, நன்று ; அம், நலம் ; பம், திட்பம் ; நர், நன்னர் ; சி, மாட்சி ; பு, பண்பு ; ஐ, தொல்லை ; மை, நன்மை.

அன்பு, அழகு, சுவை மூன்றிலும் விகுதியில்லை.

பண்புப் பெயர்கள் சில விகாரங்களை அடையும் :—

1. ஈறு அழிதல் : நல்லவன்—நன்மையில் மை ஈறு மறைந்தது.

2. இடை உ, இ ஆதல் : கரியன்—கருமையில் இடையுள்ள உ, இ ஆனது.

3. முதலில் உள்ள குறில் நெடிலாவது (ஆதி நீளல்) : பாசி—பசுமையில் மை கெட்டு ப நீண்டு பா ஆனது.

4. முதல் அ, ஐ ஆதல் : (பசுமை + தார் =)பைந்தார். இதில் மை, சு கெட்டன. ப, பை ஆனது. த வுக்கு இனமான ந் வந்தது.

5. தன்ஒற்று இரட்டல் : வெற்றிலை (வெறுமை + இலை) வெறுமையில் மை கெட்டு றகரமெய் இரட்டித்தது.

6. முன் நின்ற மெய்திரிதல்: செய்யன்—செம்மையில் மை கெட்டும், ய்ய ஆனது.

7. இனம் மிகல்: பைந்தார் என்பதில் த-வின் இனம் ந்-மிகுந்தது.

8. உகரம் கெடுதல்: கார்—கருமையில் உ கெட்டது.

9. இ கெடுதல்: இன்சொல்—இனிமையில் இயும் மையும் கெட்டன.

10. இடையுள்ள அ, ஐ ஆதல்: பழமை—பழைமை.

11. இடை ஒற்றுக்கெடல்: தூமலர்—தூய்மையில் இடை ஒற்றுக் கெட்டது.

12. பெரும் வளம்—பெருமை என்பதின் இறுதி ஐ கெட்டது.

எல்லா விகாரங்களிலும் ஈறுபோய், மாறுதலைக் காண்க. செம்மையன், வெண்மையன் என்று பண்பு இயல்பாய் நிற்றலும் உண்டு.

118. ஈறழிந்தும், இடை உ இ ஆகியும்.
முதற்குறில் நீண்டும், முதல் அ, ஐ ஆகியும்.
மெய்இரட் டித்தும், முன்மெய் திரிந்தும்,
இனம் மிகுந்தும், உ, இ, கெட்டும்,
இடை அ, ஐ ஆகியும், இடை ஒற் றழிந்தும்,
இறுதி கெட்டும் பண்பு விகாரமாம்.

அச்சணந்தி

இக்கதையில் வரும் பண்புப் பெயர்களையும் அவற்றின் விகாரங்களையும் குறிக்கவும்:—

ஜீவகனுக்கு, அச்சணந்தி என்னும் பெரிய தவசி கல்வியும், போர்ப் பயிற்சியும் தந்தான். ஜீவகன்

அழகும், பொலிவும், அறிவும், திருவும், வீரமும், தீரமுங் கொண்ட இளங்காளையானான். அப்போது அச்சணந்தி, "அன்ப, நீயே இராஜமாபுரத்திற்கு உரிய அரசன்; உன் தகப்பனைக் கொன்று, இந்தக் கொடிய கட்டியங்காரன் நாட்டைக் கைப்பற்றினான்" என்று உண்மையைச் சொன்னான். "ஹா, அப்படியா! இதோ புறப்படுகிறேன்; அந்த வெய்யனை வீழ்த்தி, நாட்டை மீட்டுச் செம்மையாக ஆளுகிறேன்" என்று எழுந்தான் ஜீவகன்.

"ஜீவக, இது காலமன்று; பொறு ஓராண்டு! பொறுமை நன்மையாம். இப்போது மறைந்திரு!" என்று மாணவனை ஆசீர்வதித்து, அமைதி சொல்லி, அச்சணந்தி மகாவீரர் சமவசரணத்திற்குச் சென்றார். விஜயையும் மகன் சுகமாயிருப்பதைக் கண்டு மகிழ்ந்து, தவம் புரியத் தண்டகாரணியம் சென்றாள்.

---

௪௬. தொழிற்பெயர்
(Noun of Action)

சாதிமதபேதம் ஒழிதல், உயிர்க்கருணை காத்தல், சுத்தசன்மார்க்கத்தில் ஒன்றுதல், சமப் பார்வை, அருட் சோதி வாழ்வு—இவையே வள்ளலார் நினைவு.

இத்தொடரில் குறிப்பிட்ட வார்த்தைகள் வினையிலிருந்து வரும் பெயர்களாம் :—

வினை	பெயர்
ஒழி	ஒழிதல்
கா	காத்தல்
ஆ	ஆதல்

பார்	பார்வை
வாழ்	வாழ்வு
நினை	நினைவு

இவ்வாறு ஒரு வினையிலிருந்து வந்த பெயரே தொழிற் பெயராம். (தொழில் = வினை)

தொழிற்பெயர்கள் ஆறு வகையாகும் :

1. விகுதி பெற்றவை : செய் + தல் = செய்தல்.

2. விகுதி பெறாதவை; ஒரே நிலையானவை : கூத்து.

3. திரியாத தொழிற்பெயர் ; விகுதி பெறாமலே இயல்பாயிருந்து தொழிலுணர்த்தும் பெயர் : ஒரு குட்டுக் குட்டினான் ; ஓர் அறை விட்டான் ; பிடி கொடுத்தான். குட்டு, அறை, பிடி, ஏவல் வினைகள்; குட்டுதல், அறைதல், பிடித்தல் எனப் பொருள் ஈந்தன.

4. திரிந்த தொழிற்பெயர் :—சுடு, சூடு (சுடுதல்) ; விடு, வீடு (விடுதல்) ; பெறு, பேறு (பெறுதல்)

5. காலங்காட்டும் தொழிற்பெயர் ; காலத்தைக் காட்டுவன : ஸ்ரீ அரவிந்தர் புதுச்சேரிக்கு வந்தது நல்ல காலம்; அவரால் வருவது புதுயுகம்.

6. எதிர்மறைத் தொழிற் பெயர் ; எதிரான பொருள் உணர்த்துவது : தீமை செய்யாமை நன்று ; கொடுமைக்கு இணங்காமை வீரம். இவற்றில் ஆ எதிர்மறை விகுதி.

தொழிற்பெயர் விகுதிகளைக் கவனியுங்கள் !

119. **தல், அல், இல், ஆல், உள், அம், கை, வை,**
ஐ, மை, கு, பு, உ, தி, சி, வி, து,
ஆனை, அரவு, காடு, பாடு,
இ, மதி, அடம் - இவை தொழிற்பெயர் விகுதி.

௫௦. வினையாலணையும் பெயர் (Verbal Noun)

நேற்று **இருந்தவரை** இன்று காணோம்; இன்றிருப்பவர் நாளை எப்படியோ; என்றும் **இருப்பது** பரம் பொருளே. **நேற்று வந்தேனை** மதித்தாயில்லை; சினங் **கொண்டானுக்கு** மனத் தெளிவேது? பலன் விரும்பாது **பணிசெய்தாய்க்கு** நலன் விரும்பி வரும்.

மேலேகுறித்த சொற்களெல்லாம் வினையிலிருந்தே பிறந்தன; வினைமுற்றுகளே பெயராகி, எழுவாயைக் குறித்தன. அவை **வினையால் அணையும் பெயர்கள்** (Verbal Nouns) — பெயர்த்தன்மையான வினைச் சொற்கள். வினையாலணையும் பெயர் எட்டு வேற்றுமைகளையும் ஏற்கும்: வாழ்வான், வாழ்வாரை, வாழ்வாரால், வாழ்வாருக்கு, வாழ்வாரின், வாழ்வாருடைய, வாழ்வாரிடம், வாழ்வீர்! தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் வினை தந்த பெயர்களே; எனினும், அவற்றிடையே வேறுபாடுண்டு:

தொழிற்பெயர் (*1*) படர்க்கையிலேதான் வரும்—என் வருகை, உன் வருகை என்பவற்றிலும் வருகை படர்க்கையே. (2) தொழிலுக்கே பெயராய் வரும். (3) பெரும்பாலும் காலங் காட்டாது; மை, து விகுதி பெற்றவையே காலம் காட்டும்.

வினையாலணையும் பெயர் (*1*) மூன்றிடத்திலும் வரும் —வந்தேனை (தன்மை); வந்தாயை (முன்னிலை) வந்தானை (படர்க்கை). (2) தொழிலுடைய கருத்தாவுக்குப் பெயராய் வரும்—பேசினவன். (3) காலங் காட்டும்.

தல், எடுத்தல்; அல், பாடல்; இல், எழில் (எழுதல்); ஆல், தழால் (தழுவல்); உள், கடவுள்; அம், நோக்கம்; கை, தருகை; வை, பார்வை; மை, செல்லாமை; கு, போக்கு; பு, படிப்பு; உ, பணிவு; தி, மறதி; சி, உணர்ச்சி; வி, கல்வி; து, பாய்த்து (பாய்தல்); ஆனை, வாரானை; அரவு, தேற்றரவு (தேற்றல்); காடு, சாக்காடு; பாடு, கோட்பாடு; இ, வெகுளி; மதி, எற்றுமதி; அடம், கட்டடம்.

120. *விகுதி பெற்றும், பெறாதும், திரிந்தும்,*
இயல்பா யிருந்தும், எதிர்மறை காட்டியும்,
மை, து பெற்றே காலம் காட்டியும்,
படர்க்கை யிடத்தில், தொழிலைக் குறிக்கும்
பெயராய் வருபவை தொழிற்பெய ராமே.

கோவிந்தை

இக் கதைத் தொடரில் வரும் தொழிற்பெயர்கள் இன்ன வகையென்று குறிக்கவும்:—

கட்டியங்காரன் கொடுமையை இனிப் பொறுத்தல் முடியாது என்று கண்டு, குடிகள் புரட்சி செய்தனர்; அரசன் பசுக்களை வேடர் சிலர் கவர்ந்தனர். அரசன் முயற்சி பலிக்கவில்லை. பசுக்களை இழந்தவன் நந்தகோபன். "பசுக்களை மீட்பவனுக்கு என் மகள் கோவிந்தையைத் தருவேன்" என்று அவன் பறை சாற்றினான். யாரும் முன்வருபவரைக் காணோம். ஜீவகன் ஒருவனே பகைவரிடமிருந்து பசுக்களை மீட்டான். நந்தகோபன் கோவிந்தயை ஈந்தான்; ஜீவகன் அவளைத் தன் நண்பன் பதுமுகனுக்கு மணம் புரிவித்தான். ஜீவகன் வெள்ளிமலையில் இருந்து வந்தவளான கந்தருவ தத்தையை யாழில் வென்று மணம் புரிந்தான்.

௫௦. வினையாலணையும் பெயர்
(Verbal Noun)

நேற்று இருந்தவரை இன்று காணோம்; இன்றிருப்பவர் நாளை எப்படியோ; என்றும் இருப்பது பரம்பொருளே. நேற்று வந்தேனை மதித்தாயில்லை; சினங்கொண்டானுக்கு மனத் தெளிவேது? பலன் விரும்பாது பணிசெய்தாய்க்கு நலன் விரும்பி வரும்.

மேலேகுறித்த சொற்களெல்லாம் வினையிலிருந்தே பிறந்தன; வினைமுற்றுகளே பெயராகி, எழுவாயைக் குறித்தன. அவை வினையால் அணையும் பெயர்கள் (Verbal Nouns) — பெயர்த்தன்மையான வினைச் சொற்கள். வினையாலணையும் பெயர் எட்டு வேற்றுமைகளையும் ஏற்கும்: வாழ்வான், வாழ்வாரை, வாழ்வாரால், வாழ்வாருக்கு, வாழ்வாரின், வாழ்வாருடைய, வாழ்வாரிடம், வாழ்வீர்! தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் வினை தந்த பெயர்களே; எனினும், அவற்றிடையே வேறுபாடுண்டு:

தொழிற்பெயர் (*1*) படர்க்கையிலேதான் வரும்—என் வருகை, உன் வருகை என்பவற்றிலும் வருகை படர்க்கையே. (2) தொழிலுக்கே பெயராய் வரும். (3) பெரும்பாலும் காலங் காட்டாது; மை, து விகுதி பெற்றவையே காலம் காட்டும்.

வினையாலணையும் பெயர் (*1*) மூன்றிடத்திலும் வரும்—வந்தேனை (தன்மை); வந்தாயை (முன்னிலை) வந்தானை (படர்க்கை). (2) தொழிலுடைய கருத்தாவுக்குப் பெயராய் வரும்—பேசினவன். (3) காலங் காட்டும்.

சிறை தப்பிய ஜீவகன்

இத்தொடர்களில் வினையாலணையும் பெயர்களைக் காண்க :—

அரண்மனை யானைக்கு மதம் பிடித்தது; **வந்தவர் போனவரை** யெல்லாம் அது முட்டி மிதித்தது; அதை **அடக்குவாரில்லை**: ஒருநாள் அது குணமாலை என்னும் பெண்ணைக் கொல்லத் துரத்தியது. ஜீவகன் அதை ஓட்டியடித்துப் பெண்ணைக் காத்தான். முன்பே **காதலித்தவள்** ஜீவகனை மணந்தாள். தோற்ற யானை சினந்து பட்டினி கிடந்தது. "நமது மதயானையை **வென்றவன்** யாரடா! கொண்டா அந்தச் செட்டி மகனை!" என்று சினந்தான் கட்டியங்காரன். வீரங் காட்டக் காலமில்லை; ஜீவகன் இணங்கி வந்தான்; **வந்தவனைச்** சிறையிட்டுக் கொல்லச் சொன்னான் பாவி! மதனன் என்பவன் ஜீவகனைச் சிறையிட்டு வருத்தினான். **கொலையாளியும்** தயார்! இச்சமயம் சுதஞ்சணன் என்பவன் வந்து, ஜீவகனைச் சிறைமீட்டு, தனது சந்திரோதய நகருக்குத் தூக்கிச் சென்றான். மதனன் இன்னொருவனைக் கொன்றுகாட்டிக் கட்டியங்காரனை ஏமாற்றினான்.

121. **வினை-பெய ராகி, வினைமுத லாகி,**
மூன்றிடம், காலம், வேற்றுமை யேற்று,
வந்தது வினையா லணையும் பெயரே.

ருக. ஆகுபெயர்

"ஒரு பிடி போட்டுண்!" இதில் "பிடி" என்பது கைப்பிடி; அஃது ஒரு பிடி அரிசியைக் குறித்தது. "உண்பது நாழி; உடுப்பது நான்கு முழம்."

நாழி என்பது ஒரு சிறு படி அளவு; மனிதன் படியை உண்பதில்லை. படியில் உள்ள அரிசியையே "நாழி" குறிக்கிறது. நாலு முழத்தை மனிதன் அணிவதில்லை; நாலுமுழத் துணியையே அணிவது. இந்த மாதிரி ஒன்றன் பெயர் மற்றொன்றிற்கு ஆக்கப் படுவதே **ஆகுபெயர்** (**metonymy and synecdoche**). ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும் இந்த மாதிரிப் பல தொடர்புண்டாகும்; தொடர்பிற்கேற்ற படி இன்ன ஆகுபெயர் என்பர். மொத்தம் பதினாறு ஆகுபெயர்கள் உள்ளன. அவற்றின் பெயர், உதாரணம் விளக்கம்—மூன்றையும் காண்போம்:

1. **பொருளாகுபெயர்:** தாமரைமுகம்; தாமரைக் கொடிப் பெயர் மலருக்காகி, முகத்திற்கு உபமானமானது.

2. **இடவாகுபெயர்:** ஊர்திரண்டது; ஊரின் பெயர் ஜனங்களுக்கானது.

3. **காலவாகுபெயர்:** கோடை அளந்தான். கோடைக் காலம் அதில் விளைந்த பயிருக்கானது.

4. **சினையாகுபெயர்:** வெற்றிலை நட்டான்; இலையின் பெயர் வெற்றிலைக் கொடிக்கானது.

5. **குணவாகுபெயர்** (பண்பாகுபெயர்): வெள்ளை உடுத்தான்; வெண்மை நிறம் அக்குணத்தையுடைய வேட்டிக்கானது.

6. **தொழிலாகுபெயர்:** பொங்கல் உண்டான்; பொங்கும் தொழில் ஓர் உணவுக்கானது.

7. **எண்ணலளவை ஆகுபெயர்:** *ஐந்தை அடக்கு; மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய ஐம்பொறிகளை ஐந்து என்னும் எண் குறித்தது.*

8. **எடுத்தலளவை ஆகுபெயர்:** *பலம் ஒரு ரூ; பலம் என்னும் எடுத்தல் அளவை, அந்த அளவுள்ள சரக்கிற்கு ஆனது.*

9. **முகத்தலளவை ஆகுபெயர்:** *மூன்றுபடி எடு! (படி அரிசியைக் குறிக்கிறது)*

10. **நீட்டலளவை ஆகுபெயர்:** *பதினாறு முழம் உடுத்தாள்; 16 முழம் அந்த நீட்டமுள்ள புடவைக்கானது.*

11. **சொல்லாகுபெயர்:** *உரை விரித்தான்; உரை என்னும் சொல் அதன் பொருளுக்கானது.*

12. **தானிஆகுபெயர்:** *தானியின் பெயர் தானத்திற்காவது. ஸ்தானி = இடத்திலுள்ள பொருள். விளக்கு ஒடிந்தது; விளக்கு = தீச்சுடர்; அதன் பெயர் அது நிற்கும் ஸ்தானமான தண்டிற்கானது. கழல் நொந்தது; தயிர் இறக்கு — இவற்றில் தானம் எது, தானி எது?*

13. **கருவியாகுபெயர்:** *திருவாய்மொழி ஓது; மொழி என்னும் கருவியின் பெயர், அதனாலான நூலுக்கானது.*

14. **காரிய ஆகுபெயர்:** *அலங்காரம் படி—அலங்காரம் இலக்கணம்; காரியப்பெயர், அதை அறிவிக்கக் காரணமான நூலைக் குறித்தது.*

15. கருத்தா ஆகுபெயர்: கம்பனைப் படித்தான்; கவியின் கர்த்தாவான கம்பன் பெயர், அவன் செய்த இராமாயணத்திற்கு ஆனது.

16. உவமை ஆகுபெயர்: வந்தான் சிங்கம்! இங்கே சிங்கம் உபமானம்; மனிதன் உபமேயம். உபமானம் உபமேயத்திற்கு ஆனது.

அடியில் வருவன என்ன ஆகுபெயர்கள்?

குமுதவாய்; முல்லைச் சிரிப்பு; நாடு விழித்தெழுந்தது; உலகம் மெச்ச வாழ்; உலைவாய் மூடினாலும் ஊர்வாய் மூடாது; வசந்தம் மலர்ந்தது; கார்த்திகை பூத்தது; கார் அறுத்தான்; மார்கழி நீராடுவோம். ரோஜா நட்டான்; மருக்கொழுந்து நட்டான்; நீலம் பூத்தது; வெள்ளை வெளுத்தான். பாட்டுப் பாடு. வறுவல் சாப்பிடு. யாக்கை அழியும். செய்யுள் செய். ஒன்று சொன்னால் பத்துச் சொல்வாள். பத்தும் பொருந்தியது. இராத்தல் ஒரு ரூபா. தோலா நான்கணா. முப்பது கலம் விளைந்தது. ஆளுக்கு ஒரு மரக்கால் போடு! காதம் நடந்தான். முழம் இரண்டணா. அடியார்க்கு நல்லார் உரை செய்த நூல் எது? மொழி உணர்ந்து பேசு! அடுப்பு அணைந்தது. நெஞ்சு பதைத்தது. கம்பனைப் படி! ஷேக்ஸ்பியர் நடி! தாயுமானவரைப் பாடு! வள்ளுவரைப் பின்பற்று! யாப்பும் அணியும் அறிவது நன்று. திருவாசகம் பாடு! பாவை வந்தாள்; தோகை நடந்தாள்.

இந்த ஆகுபெயர்களில் மூன்று நுட்பங்கள் உண்டு:—

1. இருமடி ஆகுபெயர் — இரண்டு பொருளுக்காகி வருவது: வரை பிளந்தான்: வரை என்பது

மூங்கிலுக்காகி, மூங்கில் விளையும் மலைக்கானது. புளி தின்றான்: புளி என்பது புளிப்பாகிய சுவைக்காகி, அதற்குரிய பழத்திற்கானது.

2. மும்மடி ஆகுபெயர் — மூன்று விஷயங்களைக் கொண்டது: கார் அறுத்தான்; கார் மேகத்திற்காகி, அது வழங்கும் பருவத்திற்காகி, பருவத்தில் விளையும் பயிருக்கானது.

3. அடை எடுத்த ஆகுபெயர்—ஓர் அடை மொழியுடன் கூடிவருவது: திருவாசகம்; திரு அடை.

122. ஒன்றின் பெயர்மற் றொருபெய ராக்கும்
ஆக்கப் படுவதே ஆகு பெயராம்.
பொருள், இடம், காலம், சினை, குணம், தொழிலுடன்,
எனல், எடுத்தல், முகத்தல், நீட்டலளவை,
தானி, சொல், கருவி, கருத்தா, காரியம்
உவமை யுடன்பதி னாறும் அதுவே.

பெயரிலக்கணம் முற்றிற்று.

ரு௨. தெரிநிலை, குறிப்பு வினைகள்

வினைச்சொல் இன்னதென்று முன்பே அறிந்தோம்; வினை வகைகளை அறிவோம்.

1. கருத்தா, காலம், செயல், நிலம், கருவி, செயப்படு பொருள் ஆகிய ஆறையும் வினைச்சொல் விளக்கும்.

2. வினைச்சொல் இரண்டு வகைப்படும்: (1) தெரிநிலைவினை, (2) குறிப்புவினை.

காலம், கருத்தா, செயல் முதலியவற்றை வெளிப்படையாகத் தெரிவிப்பது **தெரிநிலை வினை (Explicit Verb).**

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, திருவழுந்தூரில், கம்பன் எழுத்தாணியால் இராமாயணம் **எழுதினான்.** எழுதினான் — தெரிநிலை வினை, இறந்த காலம், படர்க்கை இடம்; செயல் எழுதல்; கர்த்தா கம்பன்; கருவி, எழுத்தாணி; செயப்படுபொருள் இராமாயணம்; நிலம், திருவழுந்தூர்.

வரைந்தான், வனைந்தான், புனைந்தான், எழுதுகிறான், பேசுகிறான் என்னும் தெரிநிலை வினைகளுடன் காலம், செயல், கருத்தா, செயப்படுபொருள், நிலம் கருவி இவற்றைப் பொருத்திச் சொல்லுக!

3. செயலைக் குறிப்பாகக் காட்டுவது **குறிப்பு வினை (Symbolic Verb).** அது வினை முதலான கருத்தாவையே காட்டும்; பொருள், இடம், காலம், சினை, குணம், தொழிலடியாகப் பிறக்கும். முன் பண்டு பழைய நாளை என்பவற்றைச் சேர்த்தாலே காலங் குறிக்கும்:

பொன்னன் — பொருளடியாகப் பிறந்த குறிப்பு வினை; பொன்னை யுடையவன் என்று கருத்தாவைக் குறித்தது. முன் பொன்னன்; பழம் பொன்னன்; பண்டு பொன்னன் (இறந்தகாலம்); இன்று பொன்னன் (நிகழ்காலம்) நாளை பொன்னன் (வருங்காலம்).

தென்னாட்டான், வடநாட்டான் (இடம்); மூலத்தான் (காலம்): மாய்மாலக் கண்ணி (சினை); நல்லான் (குணம்); தச்சன் (தொழில்).

உண்டு, இல்லை, வேறு என்னும் குறிப்பு வினைகள் ஐம்பால், மூவிடங்களுக்கும் பொது; நான், நீ, அவன் — வேறு, இல்லை, உண்டு.

யார் என்பது உயர்திணை முப்பாலுக்கும் வரும்; என்ன என்பது அஃறிணை இருபாலுக்கும் பொருந்தும் — அவன் அவள் அவர் யார்? அது அவை என், என்ன? எவன்? அவன் எவன்?

123. செய்வோன், செயல், செயப்படுபொருள், காலம்,
கருவி, நிலம் இவை வினை குறிப்பனவே.

124. கருத்தா, காலம் செய்கை யாதி
தெரிய நிற்பது தெரிநிலை வினையே.

125. செய்வோ னுடனே செயலையும் குறிப்பாய்
உணர்த்தும், குறிப்பு வினை * அறு பகுப்பிலும்.

ஜீவகன் மனைவியர்

ஜீவகன் வீரன், அழகன்; அவனைக் காதலித்து மணந்தவர்கள் எட்டு அழகிகள். ஜீவகன் பல்லவநாடு வந்தான். பல்லவன்மகள் பதுமையைப் பாம்பு தீண்டியது. ஜீவகன் மந்திரித்தான்; விஷம் தீர்த்தான்; பதுமையை மணந்தான். கேமமாபுரத்தில், கேமசரி என்னும் அழகி அவனை வரித்தாள். ஏமமாபுரத்தில் தனது வில் திறம் காட்டினான். அவ்வூர் அரசன் தன் மகள் கனகமாலையை அவனுக்குத் தந்தான். மாமன் கோவிந்தன் புரட்சிவீரன்; அவன் துணையால் ஜீவகன் படைதிரட்டி, இராசமாபுரம் சேர்ந்தான். அங்கே, விமலை, சுரமஞ்சரி ஆகிய அழகிகள் அவனுக்கு மனைவியர் ஆயினர். வீரமே அழகை வென்றது.

---

௫௩. வினைப் பகுப்பு

வினை ஆறு வகைப்படும்:

1. **தன்வினை** (Direct action), கருத்தா (agent), தானே செய்யும் வினை: நான் எழுதினேன்; நீ எழுதினாய்; அவள் எழுதினாள்.

---

* ஆறு பகுப்பு பக்கம் 82.

2. **பிறவினை (Causative Verb)**—பிறரைக்கொண்டு செய்விக்கும் வினை: சடையப்ப வள்ளல், கம்பனைக் கொண்டு, ஒரு மகாகாவியம் **எழுதுவித்தார்.** தமிழர்காள், நீங்கள் நல்ல கவிகளை ஆதரித்துப் பல காவியங்களைச் **செய்விக்கவேண்டும்!** நான் அன்பர் மூலம் நூல்களை **வெளிப்படுத்தினேன்.**

தன்வினை பிறவினை யாகும்போது, **வி, பி, கு, சு, டு, து, பு, று** என்னும் விகுதிகளில் ஒன்றைப்பெறும்: செய், செய்வி; உண், உண்பி; போ, போக்கு; பாய், பாய்ச்சு; உருள், உருட்டு; எழு, எழுப்பு; துயில், துயிற்று.

சில தன்வினைகள் பிறவினை யாகும்போது;

(1) இடையிலுள்ள மெல்லினம் வல்லினமாக மாறும்: அருந்து, அருத்து; திருந்து, திருத்து; வருந்து, வருத்து.

(2) சிலவற்றிற்கு இடையே வல்லினம் வரும்: ஓடு, ஓட்டு; உருகு, உருக்கு.

3. **செயப்படுபொருள் உள்ள வினை (Transitive Verb)**—செயப்படுபொருளை உடைய வினைச்சொல்:

புகழேந்தி **நளவெண்பாவைப்** பாடினார் (நள வெண்பாவை—செயப்படுபொருள்).

4. **செயப்படுபொருள் இல்லா வினை: (Intransitive Verb)**—செயப்படுபொருள் இதில் இராது.

புகழேந்தி துணிந்தான். ஒட்டக்கூத்தன் பணிந்தான். அரசி மகிழ்ந்தாள். செருக்கு நிலைக்காது. புலமைக்குப் பழுதில்லை.

இந்தத் தொடர்கள் செயப்படுபொருள் இல்லா வினையுடையன.

5. **செய்வினை (Active Verb)**—கருத்தாவின் செயலை நேராக உணர்த்தும். இதற்குச் செயப்படு பொருளுண்டு: கூத்தன் புகழேந்தியைச் **சிறையிட்டான்.** புகழேந்தி **சிறையைப் பள்ளியாக்கினன்.** அவன் கைதிகளைப் புலவராக்கினன்; கொல்லரையும் குயவரையும் போட்டிக்குப் **பயிற்றினன்.** எல்லாரும் கூத்தன் வாயை **அடக்கினர்.** இத்தொடர்களில் செய்வினைகள் எவை? ஏன்?

6. **செயப்பாட்டு வினை (Passive Verb)** — கருத்தா செய்யுந் தொழிலைச் செயப்படுபொருள் அடைவது: **புகழேந்தி** கூத்தனல் சிறையிடப்பட்டான்; அவனல் சிறை பள்ளியாக்கப் **பெற்றது;** கைதிகள் **புலவராக்கப் பெற்றனர்.** கூத்தன் அவர்களால் **வெல்லப்பட்டான்.**

ஜீவகன் வெற்றி

இக் கதையில், மேற்சொன்ன ஆறு வகைப் பெயர்களையும் தேர்ந்து எழுதுக:

ஜீவகன் மாமன் **கோவிந்தராஜன்** ஒரு ப்ரட்சி வீரன்; அவன் மகள் இலக்கணையை அரசர் பலர் விரும்பினர். கோவிந்தன் ஒரு பன்றிப்பொறி **அமைத்தான்;** அதை **வீழ்த்தினவனுக்கே** பெண்ணைத் தருவதாகச் சொன்னன். அரசர் பலர் முயன்றனர். கட்டியங்காரனும் முயன்றான்; **தோற்றான்.** ஜீவகன் ஓர் அம்பு விட்டான்! வீழ்ந்தது பன்றி! **கோவிந்தன் ஜீவகனைச் சபைக்கு அறிமுகப்படுத்திப்**

புகழ்ந்தான்; மகளை அவனுக்கு ஈந்தான். "ஹா! ஜீவகனு! இருக்கிறானு! இவனாலா பொறி வீழ்த்தப் பட்டது! இவனே புகழப்பட்டான்! இலக்கணை இவ னாலோ வரிக்கப்பட்டாள்!" என்று கட்டியங்காரன் சீறிச் சினந்து, போர் தொடுத்தான்; ஜீவகனால் வெல்லப்பட்டான், கொல்லப்பட்டான். ஜீவகன் தன் மனைவிமாருடன் இராசமாபுரத்தை ஆண்டு வாழ்ந்தான்.

126. தன்வினை பிறவினை செய்வினை செயப்பாடு
செயப்படு பொருள் உள இல்ல இவையே
தெரிநிலை வினையின் பகுப்பென மொழிப.

127. விபி குசுடுது புறுவில் ஒன்றை
ஏற்றுத் தன்வினை பிறவினை யாகும்.

ருச. வினைப்பயன்கள்

வினைப்பயன்கள் ஆறும்: (1) முற்று வினை (2) எச்சவினை (3) ஏவல் வினை (4) வியங்கோள் வினை (5) உடன்பாட்டு வினை (6) எதிர்மறை வினை. இவற்றை இங்கே வரிசையாக ஆராய்வோம்:

128. முற்று நிறைவை, எச்சம் குறையை,
ஏவல் கட்டளையை, வியங்கோள் வாழ்த்தை,
உடம்பாடு சம்மதம், எதிர்மறை மறுப்பை
உணர்த்தும் வினைப்பயன் ஆறு கும்மே.

1. முற்றுவினை (Finite Verb) முற்றிய, முடிந்த, நிறைவான பொருளைத் தரும் வினை முற்றுவினை: கம்பன் பாடினன்; ஔவை உபதேசித்தாள்; வள்ளுவர் வாழும் வகையை விளக்கினர்.

2. எச்சம் (Participle) என்றால் குறைவு, எஞ்சியது, மிச்சம், பாக்கியுள்ளது, முடியாதது எனப் பொருள். இஃது ஒரு பெயரை அல்லது வினையைக் கொண்டு முடியும். பெயரைக் கொண்டு முடிவது பெயரெச்சம் (Adjectival Participle); வினையைக் கொண்டு முடிவது வினையெச்சம் (Adverbial Participle).

கம்பன் பாடிய (கவி) = பெயரெச்சம்.

கம்பன் பாடிச்—(சிறந்தான்) = வினையெச்சம்.

கவி, சிறந்தான் என்ற சொற்களின்றி இந்தத் தொடர்கள் முற்றுப்பெறா.

வந்து போனான், வந்த (விதி), படித்து (அறிந்தேன்), படித்த நூலினும், பார்த்த அனுபவம் (சிறந்தது).

இவை என்ன எச்சம்?

எச்சத்திலும் தெரிநிலை, குறிப்பு என இரண்டு வகையுண்டு.

தெரிநிலைப் பெயரெச்ச விகுதிகள், அ, உம்: வந்த மனிதன்; வரும் காலம்.

குறிப்புப் பெயரெச்ச விகுதி, அ: அரிய நண்பன்.

129. **தெரிநிலைப் பெயரெச்சம் அ, உம், ஆம்;**
குறிப்புப் பெயரெச்சம் அ ஒன்றே.

தெரிநிலை வினையெச்ச விகுதிகள் :—

130. **ஆ, ஊ, இ, உ, ய், ன, பு;**
இன், ஆல், கால், கு
இய, இயர், வான், பான்
பாக்கு, கடை, கண், வழி,
இடத்து; மே, மை, மல்; உம்—
தெரிநிலை வினையின் எச்ச விகுதிகள்:

உண்ணு, உண்ணா, ஓடி, நடந்து, போய், செய் யென, செய்குபு; செய்யின், செய்தால், செய்தக் கால், செய்தற்கு, உண்ணிய, உண்ணியர், செய்வான், உண்பான், உண்பாக்கு, செய்தக்கடை, செய்தக் கண், செய்தவழி, செய்தவிடத்து; உண்ணுமே, உண்ணுமை, உண்ணுமல்; காண்டலும்.

குறிப்பு வினையெச்ச விகுதிகள் :

131. அ, றி, து, ஆல், மல், கால், கடை, வழி, இடத்து குறிப்பு வினையின் எச்ச விகுதிகள்:

மெல்ல, அன்றி, அல்லது, அல்லால், அல்லாமல், அல்லாக்கால், அல்லாக்கடை, அல்லாவழி, அல்லா விடத்து.

எச்சமும் முற்றும் தெரிநிலை, குறிப்பு ஆகிய இரண்டிலும் வரும் :—

	தெரிநிலை	குறிப்பு
பெயரெச்சம் :	படித்த பையன்.	பெரிய பையன்.
வினையெச்சம் :	சென்று வந்தான்.	நெடிது நின்றான்.
வினைமுற்று :	உண்டான்.	பெரியன்.

பெயரெச்ச வாய்பாடுகள்: செய்த, செய்கின்ற, செய்கிற, செய்யும்; உண்ட, உண்கின்ற, உண்கிற, உண்ணும் சோறு; பொன்னன், கலம், வீடு, பகல்.

பெயரெச்ச எதிர்மறை வாய்பாடுகள்: செய்யா, செய்யாத; இல்லா, இல்லாத; அல்லா, அல்லாத.

வினையெச்ச வாய்பாடுகள்; 1. செய்து, செய்பு, செய்யா, செய்யூ; வான், பான், பாக்கு: நடந்து சென்றான்; உண்குபு வந்தான்; பெய்யாக் கொடுக் கும்; காணாக் களித்தான்; புலி கொல்வான் பாய்ந்

தது; தின்பான் புகுந்தான்; செய்பாக்கு வந்தான்— இவை கருத்தாவின்வினையைக் கொண்டு முடிந்தன.

செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர் ஆகிய ஐந்தும் தன் கருத்தாவுடன், பிற கருத்தாவின் வினையைக்கொண்டு முடிந்தன. ஏழை உண்டென மகிழ்ந்தான் (நான் மகிழ்ந்தேன்); ஏழை உண்ண மகிழ்வேன் (நீயும் காண்பாய்)................

3. **ஏவல்**—கட்டளைப்பொருள் தரும் முற்றுச் சொல்; முன்னிலைக்கே உரியது; **செய்** எனும் வாய்பாட்டில் வருவது: வா, போ, இரு, கேள், செய், தா, கொள். வி, பி சேர்ந்து செய்வி, நடப்பிப்பி என்று ஆகும்.

ஏவல் ஒருமை ஆய் விகுதி ஏற்று வரும்: நட, நடவாய்; கேள், கேளாய்; உண், உண்ணாய்.

ஏவல் பன்மை மின், உம், ஈர் விகுதி ஏற்கும்: உண்மின், வம்மின், நடமின்; எண்ணும், வாரும், நடவும்; உண்ணீர், வாரீர், நடவீர்.

எதிர்மறை ஏவல் ஒருமை விகுதிகள்: ஏல், அல்: எண்ணேல், எண்ணல்.

எதிர் மறை ஏவல் பன்மை விகுதிகள்: அல், மின், ஈர்: எண்ணன்மின் (எண் + அல் + மின்) எண்ணாதீர்.

4. **வியங்கோள் வினை**, வாழ்த்து, கட்டளை முதலிய பொருள்களில் வரும் முற்றுச்சொல்; ஐம்பால் மூன்றிடத்திற்கும் உரியது. இதன் ஈற்றெழுத்துக்கள்

க, ய, ர், உம்: வாழ்க, வாழிய, வாழீர், வர வேண்டும், உண்க, உண்ணிய, உண்ணீர்.

ஏவலுக்கும், வியங்கோளுக்கும் வேற்றுமை அறிக:—

ஏவல், கட்டளைப் பொருளிலே முன்னிலை ஒருமை, பன்மையில் வரும்.

வியங்கோள், வாழ்த்து முதலிய பல பொருள்களில், ஐம்பால் மூவிடங்களிலும் வரும். அதற்கு ஒருமை பன்மை என்ற பகுப்பில்லை: யான், யாம், நீ, நீர், அவன், அவள், அவர், அது அவை—வாழ்க, ஓங்குக, பொங்குக...

5. **உடன்பாட்டு வினை (Affirmative Verb)** ஆம் செய், செய்தேன் எனச் சம்மதத்தையும், தொழில் நடந்ததையும் தெரிவிக்கும். இது விதிவினை செய்வினை **எனப்படும்.**

ஔவை கூழுக்கும் **பாடி**னள்; அவளை அரசர் வர வேற்றனர்; எளியரும் ஆதரித்தனர். ஆத்தி சூடியை அனைவரும் அறிவர்.

ஐயம் இட்டுண்; சான்றோ ரினத்திரு;

இளமையிற் கல்; கேள்வி முயல்.

இவை உடன்பாட் டுணர்வுள்ள தொடர்கள்.

6. **எதிர்மறை வினை (Negative Verb)** இல்லை, செய் யாதே என மறுப்பை உணர்த்தும். இது **மறைவினை, விலக்குவினை** எனப்படும்:

மறவற்க மாசற்றார் கேண்மை.

மாதாவை ஒருநாளும் **மறக்க வேண்டாம்.**

ஔவை மொழி பொய்யாது.

விருந்தைப் புறம்வைத்து உண்ணுதே!

ஜீவகன் துறவு

இதில்வரும் வினைப்பயன்களை விளக்குக :—

ஜீவகன் எட்டு மனைவியருடனும் இல்லறம் நடத்தினன். ஒவ்வொரு மனைவிக்கும் ஒவ்வொரு மணிப் பிள்ளை பிறந்தது. தாய் விஜயை, மகன் நலத்தைக் கண்டு மகிழ்ந்து, ஆசி கூறித் தவம் புரியச் சென்ருள். தனக்குத் துணை செய்த எல்லாரையும் ஜீவகன் நன்கு மதித்தான்; அவர்கள் பெயர்களைத் தன் புதல்வருக்கு இட்டான். நாட்டில் அறிவும், தொழிலும், திருவும், அறமும் செழிக்க நாற்பத்தைந்தாண்டுகள் செங்கோல் செலுத்தினன். அவன் ஆண்ட நாடு இன்ப மயமானது.

இளவேனிற்காலம்; ஜீவகன் பூஞ்சோலையில் மனைவியருடன் உலாவினன், ஒரு பலாமரத்தில் இரண்டு குரங்குகள்; ஒன்று ஆண், ஒன்று பெண். பெண்ணின் பிணக்கைத் தீர்க்க ஆண் குரங்கு, ஒரு முதிர்ந்த பலாப் பழத்தைப் பிட்டுக் கொடுத்தது. காவற்காரன் ‘ போ குரங்கே!’ என்று விரட்டினன்; பசக்கென்று பழத்தைக் கைப்பற்றி உண்டான். கண்டான், ஜீவகன்! “ உலகச் செல்வமும் இப்படித்தானே கைக்குக் கை மாறுகிறது? செல்வமே, நீ நிலையா? வாழ்வே, நீ சதமா?” எனச் சிந்தித்தான்; அரசைத் துறந்தான்; ஞானேபதேசம் பெற்ருன்; பிறவித்துயர் தீரத் தவம் புரிந்தான். வாழ்க ஜீவகன்! வாழிய துறவு!

௫௫. வினைப்பகுதியும், விகுதியும்

(Roots and Terminations)

நன்னூலில் இரண்டு அரிய சூத்திரங்கள் உள்ளன: ஒன்று வினைப் பகுதியைக் குறிப்பது; மற்றொன்று வினை விகுதியைக் குறிப்பது. பகுதிச் சூத்திரத்தைக் கேளுங்கள் :—

> **132.** நட, வா, மடி, சீ, விடு; கூ, வே, வை;
> நொ, போ; வெள, உரிஞ், உண், பொருந், திரும், தின்,
> தேய், பார், செல், வவ், வாழ், கேள், அஃகு என்று
> எய்திய, இருபான் மூன்றும் ஈற்றவும்
> 'செய்' என் ஏவல் வினைப்பகாப் பதமே.

பகாப்பதம் என்றால் பகுதி. மேலே காட்டியவெல்லாம் தன்வினைப் பகுதிகள். இவற்றுடன் வி, பி சேர்த்தால் பிறவினை யாகும். சூத்திரத்தில் உள்ளவை கட்டளைப் பொருளுணர்த்துவன—ஏவல் ஒருமை. இவற்றுடன் விகுதி முதலியன சேர்த்து, மற்ற வினைகளை உணர்த்த வேண்டும். இது பகுதிகளின் பட்டியன்று. ஈற்றில் வரும் 24 எழுத்துக்களில், ஏ அளபெடையிலும் தன்னை உணர்த்தியுமே வரும்; மற்றச் சொற்களில் வராது; அது தவிர உள்ள 23 ஈற்றெழுத்துக்கள் ஒவ்வொன்றற்கும் ஓர் உதாரணந் தேர்ந்தெடுத்து இங்கே சொல்லுகிறார் **பவணந்தி முனிவர்.** இவற்றைப் போல அந்தந்த ஈற்றெழுத்தில் முடியும் மற்றச் சொற்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இனி, இச்சூத்திரத்திற் சொன்ன ஏவலொருமைகளை வைத்துப் பல் வகையான வினைச் சொற்கள் புனைந்து காட்டுகிறேன் :

நடந்தான்; **வா**ரான், **வ**ந்தான், **மடி**த்தான்; மடிந்தான்; **சீ**த்தான்; **விடு**வித்தான், **கூ**விஞன்; **வே**க **வை**த்

தான், வெந்தான்; வைத்தான்; வைதான்; நொந் தான்; போனான்; வெளவினான், உரிஞினான் (உராய்ந் தான்): உண்டான்; பொருநினான்; பொருந்தினான்; திருமினான், திரும்பினான்; தின்றான்; தேய்ந்தான்; பார்த்தான்; செல்வான்; வவ்வினான், வாழ்வான். கேட் பான்; அஃகினான் (சுருங்கினான்).

இம் மாதிரியே கட, பற, தா, இடி, பொடி, பிடி, தீர், சேர், கொடு, விடு, படு, விழு, கல், வெல், எல், ஆள் முதலிய எண்ணரிய வினைப் பகுதிகள் உள் ளன. அவற்றாலான வினைச்சொற்கள் மிகப் பல வாம்.

விகுதிச் சூத்திரத்தையும் பாடம் பண்ணுங்கள்!

113. (1) அன் ஆன்; (2) அள் ஆள்; (3) அர் ஆர்
ப, மார்; (4) அ, ஆ; (5) கு, டு, து, று,
என், ஏன், அல், அன்; (6) அம், ஆம்.
எம், ஏம், ஓம் (ஒடு) உம், ஊர்
க, ட, த, ற; (7) ஐ, ஆய், இ; (8) மின், இர், ஈர்,
(9) ஈயர், க, ய; (10) உம் என்பவும் பிறவும்
வினையின் விகுதி; பெயரினும் சிலவே.

இந்த முப்பத்தேழும் தெரிநிலை வினைமுற்று விகுதிகள். இவற்றைப்போல இன்னும் பல விகுதி களும் உள.

உம் ஊர் க ட த ற என்பது உகரம் ஊர்ந்த, சேர்ந்த, கும், டும், தும், றும்.

இச்சூத்திரம் பத்து விதமான விகுதிகளைக் குறிக்கிறது:

1. அன், ஆன்—ஆண்பால்: நடந்தனன், செய் தான்.

2. அள், ஆள்—பெண்பால்: வந்தனள், வந்தாள்.

3. அர், ஆர், ப, மார்—பலர்பால்: நடந்தனர், நடந்தார், நடப்ப, நடமார்.

4. அ, ஆ—பலவின்பால்: நடந்தன, நடவா.

இவை யெல்லாம் படர்க்கை.

5. கு, டு, து, று, என், ஏன், அல், அன்—ஒருமைத் தன்மை: உண்கு, உண்டு, நடந்து, சேறு, வந்தனென், வந்தேன், வருவல், வருவன்.

6. அம், ஆம், எம், ஏம், ஓம், கும், டும், தும், றும்—பன்மைத் தன்மை: நடப்பம், நடப்பாம், நடப்பெம், நடப்பேம், நடப்போம், உண்கும், உண்டும், நடந்தும், சேறும்.

7. ஐ, ஆய், இ—ஒருமை முன்னிலை: நடந்தனை, நடந்தாய், சேறி (செல்வாய்).

8. மின், இர், ஈர்—பன்மை முன்னிலை: நடமின், நடந்தனிர், நடந்தீர்.

9. ஈயர், க, ய—வியங்கோள்: நிலீயர், நடக்க, வாழிய.

10. உம்—செய்யும் என்ற முற்று: நடக்கும்.

ஆல், ஏல், காண் முதலிய விகுதிகளும் உண்டு: மருல், அழேல், சொல்லிக்காண்.

இச்சூத்திரத்தில், குறிப்பு வினைமுற்றுக்கள் இருபத்திரண்டாம்.

அன், ஆன், அள், ஆள், அர், ஆர்: பெரியன், பெரியான்; சிறியள், சிறியாள்; பெரியர், பெரியார்

அ, டு, து, று : பெரியன, பாராட்டு, பெரியது, குழையிற்று.

என், ஏன், அம், ஆம், எம், ஏம், ஓம் : சிறியென், சிறியேன், சிறியம், சிறியாம், சிறியெம், சிறியேம், சிறியோம்.

ஐ, ஆய், இ, இர், ஈர் : பெரியை, பெரியாய், வில்லி, பெரியிர், பெரியீர்.

பெயர் விகுதிகள் :

அன், ஆன், அள், ஆள், அர், ஆர், மார், து, அ, ஐ, இ—இவற்றுடன், மன், மான், கள், வை, தை, கை, பி, முன், அல், ன், ள், ர், வ், ஆகியவையும் சேரும் : அரியன், அரியான் ; நல்லள், நல்லாள் ; நல்லர், நல்லார் ; குருமார், யாது, பெரியன, **கண்**ணறை, பொன்னி ; வடமன், கோமான், கோக்கள், அவை ; எந்தை, எங்கை, எம்பி, எம்முன், தோன்றல், பிறன், பிறள், பிறர், அவ்.

இச்சூத்திர விரிவான தெரிநிலை, குறிப்புப் பெயரெச்ச விகுதிகள், தொழிற்பெயர் விகுதிகள், பண்புப் பெயர் விகுதிகள் எல்லாம் முன்பே சொல்லப் பெற்றன.

விடு, ஒழி—துணிவுப் பொருள் தரும் : **அடித்து விடுவேன், விட்டொழித்தேன்.**

கொள்—தற்செயலுணர்த்தும் : **எடுத்துக்கொண்டான்.**

படு, உண்—செயப்பாட்டு வினை : **பட்டுக்கொண்டான், கட்டுண்டான்.**

மை தன்மைப் பொருள் தரும்: பொன்மை; ஆண்மையும் பெண்மையும் சேர்ந்தே மானிடம்.

இரு, இடு, உறு—பகுதிப்பொருள் விகுதி: எழுந்திருக்கிறான், உரைத்திடுகிறான், நோயுறுகிறான்.

விக்கிரம தேவன்

அடியில் வரும் கதையிலிருந்து, தெரிநிலை, குறிப்புப் பெயர், வினை எச்சம், வினை முற்று, எதிர்மறை, உடன்பாடு, ஏவல், வியங்கோள் முதலிய வினை வகைகளை இலக்கமிட்டெழுதுக!

சோழ மன்னருள் விக்கிரம தேவன் ஒருவன். இவன் வாழ்ந்தது கி. பி. 1070—1118. இவன் பெரும்புகழ் பெற்ற அரச வள்ளலான, முதலாம் குலோத்துங்கனின் செல்வன். இவன் கி. பி. 1093-ஆம் ஆண்டு, தந்தை விரும்பியபடி வேங்கி நாட்டை ஆண்டு வந்தான். வேங்கி நாடு கோதாவரிக்கும் கிருஷ்ணா நதிக்கும் இடையில் விரிந்துகிடந்தது. அப்போது, கலிங்கத்தில் 'வீமன்'என்ற தெலுங்கு மன்னன் ஆண்டான்; அவன் படைவலி மிக்கவன். அவனைத் தமிழர் தெலுங்க வீமன் என்றனர். விக்கிரம சோழன் தனது போர்த்திறனால் தெலுங்க வீமனை வென்று வெற்றிமாலை சூடினான். இந்த வெற்றியைப் புலவர்மணி ஒட்டக்கூத்தன் விக்கிரம சோழன் உலா என்ற காவியத்தால் சிறப்பித்தான். கி. பி. 1120-ல், குலோத்துங்கன் I இறந்தான்; விக்கிரம சோழன் கங்கைகொண்ட சோழபுரத்தில் மணிமுடி சூடி, "திரிபுவன சக்கரவர்த்திகள்" என்ற பட்டத்துடன் அரசாண்டான். இவன் அன்பருக்கு அன்பன்; பகைவருக்கு எமன்; தமிழர் பெருமைக்குச் சிறுமை வந்தால் தாங்கமாட்டான்; சிறுமையை வெட்டி, முரசு

கொட்டுவான். சளுக்கிய மன்னனுனை ஆறும் விக்கிர மாதித்தனுடன் சேர்ந்து போர் தொடுத்த வேங்கிச் சிற்றரசனை இவன் வென்று வீழ்த்தினுன்.

இவனைப் "பரகேசரி" என்று தமிழர் புகழ்ந்தனர். இவன் காலத்தில் வெள்ளப்பஞ்சம் வந்தது. நாடெங்கும் கஞ்சித்தொட்டி வைத்து அரசன் ஏழைகளைக் காத்தான். இச்சோழன் சமரஸ சிவபக்தன்; தில்லையில் திருப்பணிகள் செய்தான்; குற்றுலத்தில் (மாயூரம் தாலுக்கா) சிவன் கோயில் கட்டினுன். (அந்த ஊருக்கே விக்கிரமன் குற்றுலம் எனப் பெயர் வந்தது.) திருவரங்கத்தில் இரண்டு தெருக்கள் அமைத்தான்—திருவிக்கிரமன் வீதி, அகளங்கன் திரு வீதி. களங்கமில்லாத வண்மையை மெச்சி, இவனை, அகளங்கன், தியாக சமுத்திரம் என்று புலவர் புகழ்ந்தனர். இவன் மனைவியர் நால்வர். முதல் மனைவி தெரிவையர் திலகம்; தியாக பதாகை என்று புகழ் பெற்றவள். மூன்றும் மனைவி பூதலத்து அருந்திரு எனப் புகழ்பெற்ற கற்பரசி. இவன் மகன் குலோத்துங்கன் II; ஒட்டக்கூத்தன் அவனுக்கு நிரம்பத் தமிழறிவு தந்தான். வீரம், ஒற்றுமை, தமிழுணர்ச்சி, ஆட்சித் திறமை—இவையே அக்காலத் தமிழரசின் நான்கு வைரத்தூண்கள். இத் தூண்களை நாட்டினுல், இன்றும் தமிழர் புகழ்க்கொடி வானளாவ வீசிப் பறக்கும்.

ரு௬. காலம்
(Tense)

இன்ன சமயம் செயல் நடந்தது என்று குறிப்பது காலம். காலம் முதன்மையாக மூன்று. இடை

நிலைகள், ஐம்பால் மூவிடத்திற்கும் காலம் குறிக்கும். இடைநிலைகள் விரிவாகப் பின்னே வரும். இங்கே காலங்காட்டும் இடைநிலைகளைமட்டுங் காண்க.

1. **இறந்தகாலம் (Past Tense)**—(முன் காலம்; இது முன்னே நடந்ததைக் குறிக்கும் : **த், ட், ற், இன்** ஆகிய நான்கு இடைநிலைகள் இறந்த காலத்தைக் காட்டும் : படித்தான், கண்டான், நின்றான், பாடினான், நேற்று வந்தான்.

ய இறந்தகாலம் காட்டும் : போயது. **கு, டு, று** இம்மூன்றும் இரட்டித்து இறந்தகாலம் காட்டும். புகு, புக்கான் ; நடு, நட்டான் ; பெறு, பெற்றான்.

2. **நிகழ்காலம் (Present Tense)**—தற்காலம் ; இது இப்போது நடக்கும் காலத்தைக் குறிக்கும் ; நிகழ்தல் = காரியம் நடைபெறுதல்.

இதன் இடைநிலைகள் **கிறு, கின்று, ஆநின்று** : வருகிறான், வருகின்றான், வாராநின்றான்.

ஆகிடந்து, ஆவிருந்து என்னும் இடைநிலைகளும் நிகழ்வைக் காட்டும் : உண்ணாகிடந்தான், வாளாவிருந்தான்.

3. **எதிர்காலம் (Future Tense)**—வருங்காலம் இனி நடப்பதைக் குறிக்கும்.

இதன் இடைநிலைகள் **ப், வ்** : படிப்பான், வருவான்.

க, டும், ம, மன் இவையும் எதிர்வைக் காட்டும் : செய்கேன், இனியென் செய்க, காண்டும் ; என்மர் ; என்மனார்.

134. ஐம்பால் மூன்றிடத்தும் இடைநிலைகள்
த், ட், ற் தரும் இறந்தகாலம் ;
கிறு, கின்று, ஆநின்று நிகழ்காலம் ;
ப், வ் எதிர்காலம் ; இனும் சிலவே.

இறந்தகாலத்தை இறப்பு, செலவு என்றும் நிகழ் காலத்தை நிகழ்வு, இருப்பு என்றும், வருங்காலத்தை வரவு, எதிர்வு என்றும் குறிப்பர்.

4. காலங்காட்டும் விகுதிகள் :—

(1) இறப்பும் எதிர்வும் தருவன: று, றும் : சென்று (சென்றேன்), சென்றும் (சென்றோம்); சேறு (செல்வேன்), சேறும் (செல்வோம்).

து, தும்: வந்து (வந்தேன்) ; வந்தும் (வந்தோம்) ; வருது (வருவேன்) ; வருதும் (வருவோம்).

டு, டும், கு, கும் : உண்டு (உண்டேன்), உண்டும் (உண்டோம்), உண்கு (உண்பேன்), உண்கும் (உண்போம்).

(2) எதிர்காலந் தருவன :—

மின், உம், ஈர், ஆய் : உண்மின், உண்ணும், உண்ணீர், உண்ணாய்.

க, இய, இயர் (வியங்கோள்) வாழ்க, வாழிய, வாழியர்.

இ—ஒரு மெய்யினைச் சார்ந்தே வரும்: சேறி (செல்வாய்), (இனி) வருதி.

மார் : உண்மார் (உண்பார்).

(3) ப—இறந்தகாலம் எதிர்காலம் இரண்டையும் காட்டும்: உண்ப (உண்டார், உண்பார்), என்ப (என்றார், என்பார்).

(4) உம் : உண்ணும் — நிகழ்வு, எதிர்வு (ஏவற் பன்மை).

ஆ : உண்ணு—மூன்றுகாலம்.

(5) எதிர்மறைவிகுதியைச் சேர்த்துக் காலத்தை உணர்த்தலாம் :

நல்லது செய்வேன் ; தீயது செய்யேன், செய்ய மாட்டேன். நாம் யார்க்கும் குடி அல்லோம் ; நமனை அஞ்சோம். அவன் அறஞ் செய்தான் ; பாபஞ் செய்யான். சாதுக்கள் யாருக்கும் தீமை நினையார். நீ திருந்துவாய் ; இனிப் பிழை செய்யாய், செய்ய மாட்டாய். நீங்கள் ஒன்றுறைலொழிய, விடுதலை பெற மாட்டீர்கள்.

(6) வழக்கத்தைச் சொல்வதற்கு எதிர்காலத்தை உபயோகிப்பதுண்டு.

முற்காலத் தமிழர் தேக்குக் கப்பலிற் செல்வர் ; உள்நாட்டுச் செய்பொருள்களை உலகெங்கும் கொண்டு செல்வர். சீனம், மலயா, அரபியா, கிரீஸ், ரோம் முதலிய நாட்டு வணிகர், தமிழர் சரக்குகளை வாங்குவர் ; விற்பர் ; இலாபமடைவர்.

(7) சரித்திரக்காரர், நிகழ்காலத்தைக் கொண்டு இறந்தகால நிகழ்ச்சியை வர்ணிப்பர் ; அதற்குக் **கதை நிகழ்வு (Historic present)** என்க :

இளந்திரையன்

இளவேனிற்பருவம் ; நெடுமுடிக்கிள்ளி காவிரிப் பூம்பட்டினக் கடலோரம் உலாவுகிறான் ; அழகிய மங்கை யொருத்தி அவன் மனதைக் கவர்கிறாள்.

அவள் நாகநாட்டு மன்னன் செல்வி பீலிவளை என்றறிகிறான். வளையும் கிள்ளியும் சோலையில் கூடுகின்றனர். ஒரு மாதம்......பிறகு அவள் கருவுற்று மறைகிறாள். திரும்பி வரவில்லை. அவளுக்கு ஆண்மகன் பிறக்கிறான். ஆறு வயதானதும், தாய் ஒரு கப்பல் வியாபாரிமூலம் மகனைக் காதலனிடம் அனுப்புகிறாள். வழியில் கப்பல் உடைகிறது; பையன் எங்கே? தெரியவில்லை; இதைக் கேட்ட அரசன் வருந்திக் கடல் அலையில் கண்ணீரைக் கலக்கி நிற்கிறான். ஆ, அதோ ஆதொண்டைக் கொடியாற் சுற்றப்பட்டு, ஏதோ ஒன்று வருகிறது! திரைகள் அதைத் தமது கையில் ஏந்திக் கரையில் கொண்டு சேர்க்கின்றன. வியப்பு! அதுவே மகன்! அரசன் அருமை மகனை ஆவலோடணைத்து, ஆதொண்டைக் கொடி சுற்றித் திரைகளால் கொண்டு வரப்பெற்ற இளவரசனுக்குத் **தொண்டைமான் இளந்திரையன்** எனப் பெயரிடுகிறான். இவன் அறிவும் அறமும் அன்பும் செறிந்தவன். இவனை உருத்திரங் கண்ணனார் பெரும்பாணாற்றுப் படையிற் சிறப்பிக்கிறார்.

மரியாதைச் சொல் (Terms of Honour) *1.* பன்மையில் வரும்; *2.* உம் விகுதி பெறும்; *3.* வியங்கோளாக வரும்:

அரசர் தாயுமானவரைப் பார்த்து, "அடிகளே, தாங்கள் உலகினின்று விலகி யிருங்கள்; தங்களது உள்ளத்திலிருந்து கட்டளை வரட்டும். தாங்கள் பேசுவீர்களாக! நாம் செய்தும்" என்றார்.

௫எ. விதமும், காலவிரிவும் (Moods and Tenses)

வட தென் மொழிகளில், முதன்மையான மூன்று காலங்கள் வழங்குகின்றன. ஆங்கிலம், ஃப்ரெஞ்சு, ஜெர்மன், ரஷ்யன் முதலிய ஐரோப்பிய மொழிகளில், இன்னும் சில காலங்கள் உண்டு. தமிழிலும் அவை அவசியம் வர வேண்டும். அவை தமிழில் உள்ளன; ஒரு பெயர் தந்து விளக்க வேண்டும்; அவ்வளவு தான். ஃப்ரெஞ்சு, ஆங்கில மொழிகளில் ஆறு விதங்கள், செயலைக் குறிக்கும் விதங்கள் (Moods) உண்டு.

I. குறிவிதம் (Indicative mood): இறப்பு, நிகழ்வு, எதிர்வு மூன்றும் இந்த இயல்பின. இதில் எட்டுக் காலங்கள் உண்டு:

(1) நிகழ்காலம் (Present Tense): செய்கிறேன்; நீ செய்கிறாய்; அவன் செய்கிறான்; அது செய்கிறது.

(2) நிகழ்-இறந்தகாலம் (Present Imperfect) இது சற்று முன்னே நிகழ்ந்ததைக் குறிக்கும்: இருந்து கொண்டிருந்தேன். நண்பன் வரும்போது நான் எழுதிக்கொண்டிருந்தேன்.

(3) இறந்தகாலம் (Past definite or Preterite): நண்பன் உட்கார்ந்தான்; இருவரும் பேசினோம், படித்தோம், பாடினோம், விளையாடினோம்; அவன் மகிழ்ந்தான். (I was = நான் இருந்தேன்).

(4) நீராதிறந்தகாலம், (Past Indefinite): I have done—நான் அப்படிச் செய்திருக்கிறேன். அங்கே சென்றிருக்கிறேன். நான் மனிதவியல்பை ஆழ்ந்து பார்த்திருக்கிறேன்.

(5) முன் இறந்த காலம் (Past anterior): I had been—நான் இருந்திருந்தேன். நீ இருந்திருந்தாய். அஸ்தமித்த பிறகு, என் நண்பனுடன் உலாவப் போயிருந்தேன்.

(6) இறந்தொழிந்தகாலம் (Pluperfect) : (Had already been) நீ சரக்கு வாங்க வருமுன்பே சந்தை கலைந்து போயிருந்தது. துளஸிதாஸர் பாடுமுன்பே, கம்பர் இராமாயணம் பாடியிருந்தார். ஸ்ரீ அரவிந்தர் வருமுன்பே, பாரதியார் புதுச்சேரியில் வந்திருந்தார்.

(7) எதிர்காலம் (Future Tense) : (He will be) வருவான், போவான் ; இருப்பான், சிரிப்பான்.

(8) முன் எதிர்காலம் (Past Future or Future anterior): (will have done) அவர் கச்சேரியிலிருந்து வருமுன்பே, நான் சமைத்து வைத்திருப்பேன்.

II. ஆல் விதம் (Conditional mood) விரும்பினால் செய் ; நல்லது செய்தால் நலமுண்டு. இஃது ஆல் (if) விகுதி பெற்று வருவதால், ஆல் விதம் என்க. இதில் இரண்டு காலம் உண்டு:

(1) நிகழ்வு + ஆல் = நிகழ்வால் (Present conditional) : மனவுறுதி இருந்தால், செயலுறுதி வரும்) ; வாழ விரும்பினால், வழி துலங்கும். (It would be).

(2) இறப்பு + ஆல் = இறப்பால் (Past conditional) இருந்திருந்தால், அடைந்திருப்பான் என்று வரும். (It would have been)

ஒற்றுமை மட்டும் இருந்திருந்தால், நம்மவர் முன்னேற்ற மடைந்திருப்பர். கடமையை நன்றாகச் செய்திருந்தால், கைமேல் பலன் கிடைத்திருக்கும்.

III. ஏவல் விதம் (Imperative Mood): இதை முன்பே சொன்னேம். வள்ளுவர் வா என்றால் வாசுகி வருவாள்; செய் என்றதைச் செய்வாள். (Do)

IV. வியங்கோள் விதம் (Subjunctive): இஃது ஆய, ஆக, வான், வேண்டி, ஆலும், போதிலும் என வரும்:

உன் குலம் நன்றாய் வாழ்க! அறிவு வளர்வதற்காக, வளர்வான்வேண்டி, நீ நிரம்பப் படிக்க வேண்டி யிருக்கும். எந்த நிலையிலிருந்தாலும், மனிதனுக்கு மனிதன் அடிமையில்லை. வறுமை வந்தபோதிலும் மானத்தை யிழக்க மாட்டோம்.

மேற் சொன்ன உதாரணங்கள் நிகழ் காலத்திற்கும் எதிர்காலத்துக்கும் ஆகும்: நிகழ் - எதிர் வியங்கோள் (Subjunctive present: that it may be).

(2) எச்சவியங்கோள் (Subjunctive imperfect): இதுவும் மேற்சொன்னபடியே உண்டாகும். ஆனால், இதன் வினைச்சொல் இறந்தகாலமா யிருக்கும்: வேண்யதாயிருந்தது, பேசினதற்கு மேலே கொடுத்தேன் என வரும். (that it might have been).

பாரதியாருக்குப் புதுமாதிரி உடுப்பு வேண்டிய தாயிருந்தது. தையற்காரன் பெரிய தொந்தியாளுக்குச் சேரும்படி சட்டையும், விகாரமான குல்லாவும் தைத்துவந்திருந்தான். இரண்டையும் அவர் போட்டுப் பார்த்துவிட்டு, "இந்த ஜன்மத்தில் நமக்குத் தொந்தி போடப் போவதில்லை" என்று சொல்லி ஏழைக்குக் கொடுத்தார்; தையற்காரனுக்குப் பேசினதற்குமேல் இரட்டிப்புக் கூலியும் கொடுத்தார். வந்த பணம் அவர் கையில் தங்கியிருந்ததே யில்லை.

(3) **இறந்த வியங்கோள் (Subjunctive Past)** கொண்டிருந்தேனுகை என்று வரும்: தாமரை மலர்வதற்கு முன்பே வண்டு காத்திருந்திருக்கும். வேலையை முடிக்கு முன்பே, எஜமான் கூலி தயாராக வைத்திருப்பானுகை!

(4) **இறந்தொழிந்த வியங்கோள் (Subjunctive Pluperfect)** முன் கொண்டிருந்திருப்பேனுகை, சொல்லுகிறதற்கு முன்பே கேள்விப்பட்டிருந்தேன் என்று வரும்: அவன் என்னிடம் **சொல்லுகிறதற்கு** முன்னேயே, நான் **எல்லாக் கதையும் கேள்விப்பட்டிருந்தேன்.** அப்படி யிருந்தாலும், அவன் அதை மறுபடியும் என்னிடம் சொல்லிக்கொண் டிருந்தான்.

V. எச்சவிதம் (Infinitive Mood) இருக்க, இருத்தல், இருக்கிற, இருந்திருக்க, இருந்திருந்த என வரும். **(to be, to have been).**

நிகழ் எச்சம் (Present Infinitive) கொண்டிருத்தல், கொண்டிருக்க என்று வரும் — **(to have): காணப்** போகிறேன். ஒருவரை ஒருவர் **நேசிக்கிறது** நல்லது. தீவினையை நீக்கி, நல்வினையைச் **செய்யவேண்டும்**—இவ் விதமாகவே நிகழ் **எச்சவிதம்** வரும்.

(2) **இறப்பெச்சம் (Past Infinitive)** வினையெச்சத்தில் ஆக ஏன்பதுடன், இருக்க, இருக்கிறது என்பவற்றைச் சேர்த்து உண்டாகும்: இவ்வளவு பாபம் செய்கிறதற்கு அவன் நன்ருய் அனுபவித்திருக்க வேண்டும். புத்தர் முன்னே பல பிறவிகள் எடுத்திருந்ததாக ஒப்புக்கொள்ளுகிருர். பற்றினுலேதான் துன்பம் வருவதாக அவர் உபதேசிக்கிருர். உண்மையைக் **கண்ட** பிறகே புத்தர் கயாக் காட்டிலிருந்து

நாட்டுக்கு வந்தார். அரசராகப் பிறந்தவர், துறவியாக வாழ்ந்தார்; அவர் உலகுள்ளளவும் வணங்கப்படுவார். உண்மையை அறிந்துணர்ந்து வாழ்ந்து காட்டியதாலேதான் அவரை மக்கள் பின்பற்றினார்கள்.

VI. பெயரெச்சம் (**Participle**)—இருக்கிற (**being**), இருந்த, இருந்து (**having been**) எனவரும்:

பிறக்கிற மனிதன் சாகிறது உறுதி. மனிதன் என்ன கொண்டு வந்தான்? அழுதுகொண்டு வந்தான். என்ன கொண்டு போனான்? அழுது கொண்டு போனான். உயிர் இருக்கிறபோதே சில பெரியார் தம்மை அறிந்தனர்.

இறந்த பெயரெச்சம் (**Past Participle**) போன, கண்டு, பிறகு, பிற்பாடு என்று வரும். போன காலம் திரும்பாது; இனி இறப்பவன், பிணத்தைக்கண்டு அழுகிறான். கொள்ளை போனபிறகு, கூப்பாட்டால் என்ன பயன்? பிணமானது மணம் உணருமா? செத்த நாயானது குலைக்குமா?

படி என்ற வினைச்சொல்லைக் கொண்டு, மேற்சொன்ன காலங்களை விளக்குகிறேன் கவனியுங்கள்:

I குறிவிதம் (**Indicative mood**):

1. நிகழ்காலம் (**Present**) படிக்கிறேன்.

2. நிகழ் இறப்பு (**Imperfect**) படித்துக்கொண்டிருந்தேன்.

3. இறந்த காலம் (**Past definite**) படித்தேன்.

4. நிராகிறந்த காலம் (Past indefinite) படித்திருக்கிறேன்.

5. முன்னிறந்தகாலம் (Past anterior) படித்திருந்தேன்.

6. இறந்தொழிந்தகாலம் (Pluperfect) படித்து முடித்திருந்தேன்.

7. எதிர்காலம் (Future) படிப்பேன்.

8. முன்னெதிர்காலம் (Future anterior) படித்திருந்திருப்பேன்.

II. ஆல் விதம் (Conditional Mood) :

1. நிகழ்வு ஆல் (Present conditional) : புத்தகம் கிடைத்தால் படித்துக் கொண்டிருப்பேன்.

2. இறப்பு ஆல் (Past conditional) நேரம் கிடைத்தால் படித்திருப்பேன்.

III. ஏவல் விதம் (Imperative Mood) : படி !

IV. வியங்கோள் விதம் (Subjunctive Mood) :

1. நிகழ்-எதிர் வியங்கோள் (Present and future Subjunctive) படிப்பேனாக !

2. நிகழ் வியங்கோள் (Imperfect Subjunctive) : படித்துக்கொண் டிருப்பேனாக !

3. இறந்த வியங்கோள் (Subjunctive Past) படித்தேனாக !

4. இறந்தொழிந்த வியங்கோள் (Pluperfect Subjunctive) முன் படித்திருந்திருப்பேனாக !

V. எச்சவிதம் (Infinitive Mood) :

1. நிகழ்-இறப்பெச்சம் (Present-Past Infinitive): படித்தல்.

2. இறப்பெச்சம் (Past Infinitive) படித்திருக்க.

VI. பெயரெச்ச விதம் (Participle Mood) :

1. நிகழ் பெயரெச்சம் : படிக்கிற.

2. இறந்த பெயரெச்சம் : படித்த.

135. குறி, ஆல், வியங்கோள் ஏவல் எச்சமெனும்
விதங்கள், பத் தொன்பது காலம் பெறுமே.

முக்கால விரிவு : மேற் சொன்னவை ஐரோப்பிய இலக்கணங்களில் உள்ள கால்விளக்கம். இவற்றை அறிந்திருப்பது நலம். ஆனால் நடைமுறைக்கு அடியிற் காணும் காலப் பகுப்பே போதுமானது.

1. இறப்புப்போது : செய்தேன் ; இறப்பு நிகழ்வு : செயவிருந்தேன் ; இறப்பெதிர் : செய்ய விருப்பேன் ; இறப்பிறப்பு: செய்திருந்தேன்.

2. நிகழ்போது: செய்கிறேன் ; நிகழ் நிகழ்வு: செய விருக்கிறேன் ; நிகழெதிர் : செய்வானிருந்தேன் ; நிகழிறப்பு : செய்திருக்கிறேன்.

3. எதிர் போது : செய்வேன் ; எதிர்நிகழ்வு : செய விருப்பேன் ; எதிரெதிர் : செய்வானிருப்பேன் ; எதிர் இறப்பு : செய்திருப்பேன்.

அடியில் வரும் வினைகளை மூன்றிடம் ஐந்து பால்களிலும் எல்லாக் காலங்களிலும் விளக்குக :— வா, போ, செல், நட, நில், இரு, படி, பார், காண், உண், ஓடு, ஆடு, தா, கொள், கேள், நடு.

பகுதி — செய்

	இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்	எதிர்மறை
தன்மை ஒருமை	செய்தேன்	செய்கிறேன்	செய்வேன்	செய்யேன்
தன்மைப் பன்மை	செய்தோம்	செய்கிறோம்	செய்வோம்	செய்யோம்
முன்னிலை ஒருமை	செய்தாய்	செய்கிறாய்	செய்வாய்	செய்யாய்
முன்னிலைப் பன்மை	செய்தீர்	செய்கிறீர்	செய்வீர்	செய்யீர்
படர்க்கை ஆண்பால்	செய்தான்	செய்கிறான்	செய்வான்	செய்யான்
பெண்பால்	செய்தாள்	செய்கிறாள்	செய்வாள்	செய்யாள்
பலர்பால்	செய்தார்	செய்கிறார்	செய்வார்	செய்யார்
ஒன்றன்பால்	செய்தது	செய்கிறது	செய்யும்	செய்யாது
பலவின்பால்	செய்தன	செய்கின்றன	செய்யும்	செய்யா
பெயரெச்சம்	செய்த	செய்கிற	செய்யும்	செய்யாத
வினையெச்சம்	செய்து	செய்ய	செய்தால்	செய்யாமல்
பிறவினை	செய்வித்தேன்	செய்விக்கிறேன்	செய்விப்பேன்	செய்வியேன்

ஸர் ஸி. வி. இராமன்

இதிற் காணும் விதங்களையும் காலங்களையும் வகைப்படுத்தி எழுதுக :—

"பத்திலட்சம், சுயேச்சை—இரண்டும் இருந்தால், விமானம் முதல், குண்டூசி வரையில் செய்வேன்; இந்தியாவைத் தொழில்மயம் ஆக்குவேன்" என்கிறார் ஒரு கலைமணி. அவரே ஸர். சந்திரசேகர வேங்கடராமன். அவர் திருச்சிராப்பள்ளியில் பிறந்தார். தந்தை விசாகப்பட்டினம் கல்லூரி இரசாயனப் புலவரா யிருந்தமையால், இராமனது இளமை ஆந்திரநாட்டில் கழிந்தது. அவர் 16-ஆம் ஆண்டு எஃப். ஏ. தேறி, சென்னை இராசதானிக் கல்லூரியில் படித்து, எம். ஏ. யிலும் முதல்தரமாகத் தேறினார். சிறுவயது முதலே ஸயன்ஸில் அவர் கருத்தூன்றினார். கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போதே, அவர் பல புதுமைகளைக் கண்டு, கட்டுரைகள் எழுதிப் புகழ்பெற்றார். அவர் கணக்கில் நிபுணர். சர்க்கார் பரீட்சையில் தேறி, கல்கத்தாவில் பெருங்கணக்கராகப் (Accountant General) பத்தாண்டுகள் வேலை பார்த்தார். ஆனால், அவர் உள்ளம் பௌதிகரசாயன ஆராய்ச்சியிலேயே ஆழ்ந்திருந்தது. கல்கத்தாக் கலை ஆராய்ச்சிச் சங்கத்தில், அவர் தமது இயற்கலை யாராய்ச்சியை நடத்திவந்தார். கல்கத்தா சர்வகலாசாலைத் துணைத்தலைவர் ஸர் ஆசுதோஷ் முகர்ஜி இவர் திறமையை வியந்து அழைத்தார். இராமன் உயர்ந்த சம்பளத்தைவிட்டு, சொற்பச் சம்பளத்தில், சர்வகலாசாலை பௌதிகப் புலவரானார்—கலையிலிருந்த ஆர்வமே இந்தத் தியாகத்திற்குக் காரணம்.

அன்றுமுதல், இவர் ஆராய்ச்சிகளும் கட்டுரைகளும் உலகப்புகழ் பெற்றன; பட்டம் பதக்கங்கள்

இவரைத் தேடி வந்தன. ஒலி—ஒளி ஆராய்ச்சியில் இவருக்கு நிகரில்லை. இவரது ஆராய்ச்சி "இராமன் சக்தி" என்று உலகெங்கும் புகழ் பெற்றிருக்கிறது. இலண்டன் ராயல் சங்கம் இவரை வரவேற்கிறது; சர்க்கார் ஸர் பட்டம் தருகிறது. 1930-ஆம் ஆண்டு இவருக்கு நோபெல் வெகுமதி கிடைக்கிறது. ஸயன்ஸ் புலமைக்காக நோபெல் வெகுமதிபெற்ற முதல் ஆசியநாட்டார் இவரே. தாகூருக்கு அடுத்தபடி, நமதுநாட்டின் பெருமையை விளக்கிய முதல் இந்தியரும் இவரே. உலகில் இவரைப் போற்றாத புலவரில்லை; இவரை ஏற்று உபசரிக்காத ஸயன்ஸ் கழகங்களில்லை. இவரது புகழில் பொறாமைப்பட்டுத் தீங்கு செய்தவருக்கும் குறைவில்லை.

1933-ஆம் ஆண்டு, இவர் பெங்களூரில் டாடா நிறுவிய புதுக்கலைக் கல்லூரித் தலைவரானார். இவரிடம் பயின்று எத்தனையோ மாணவர் நிபுணரானார். ஐரோப்பா, அமெரிக்காவில் பிறந்திருந்தால், நம் இராமன் எடிஸன், மார்கோனி போலப் புகழ்பெற்று அற்புதங்கள் செய்திருப்பார். தமிழர் ஆளுக்கு ஒரு ரூபாய் போட்டு, அவருக்கு ஒரு கோடி ரூபா தந்தால் எவ்வளவு காரியங்கள் நடக்கும்!

வினையிலக்கணம் முற்றிற்று.

ருஅ. இடைச்சொல்
(Participle)

உன்னை அறி; உனக்கு நீ உண்மையாயிரு! முயற்சியே வெற்றி தரும். அறிஞர் கலங்கார். அழுக்காறுடையார், அமைதியடையார்.

மேலே கண்ட தொடர்களில் குறித்தவை தனிச் சொற்களல்ல. அவை ஒரு பெயர் அல்லது வினைக்கு இடை வந்தவை: உன் + ஐ = உன்னை; அறி + ஞ் + அர் = அறிஞர் ; கலங்கு + ஆர் = கலங்கார். இவை இடைநிலைகள். இடைநிலை பெயரில்லை, வினையில்லை ; தனியே வராது ; ஆனால், அது தொடருக்கு இன்றியமையாதது. அதுசொல்லுக்குச் சொல் இணைப்பூட்டும்.

அடியில் வருவன இடைச் சொற்கள் :—

1. வேற்றுமை யுருபுகள்—அறிவை வளர்.

2. பகுதி தவிர மற்ற வினை யுருபுகள் ; அன், ஆன் முதலிய விகுதிகள் ; சந்திகள்; கரம், காரம் முதலிய எழுத்துச் சாரியைகள் ; அத்து, அம் முதலிய சொற் சாரியைகள் ; ச், ஞ் முதலிய பெயர் இடைநிலைகள் ; த், ட் முதலிய வினையிடைநிலைகள், விகாரங்கள்.

3. உவமை உருபுகள் : கிளிபோலப் பேச்சு ; குயிலொத்த குரல்.

4. சுட்டெழுத்துக்கள், வினா எழுத்துக்கள்.

5. ஏ, ஓ, உம், மற்று, கொல், தான், வாளா, சும்மா, அந்தோ, ஐயோ ; சீ, சிசி, சிச்சீ, அம்மா ; ஆத்தாடி—இவை பொருளை உணர்த்தும்.

6. அன், இன், அல்; அற்று, இற்று, அத்து, அம், ஏ, ஐ, கு, ன், ஆம் முதலிய சாரியைகள் இடைச் சொற்கள்.

7. போல, புரைய, ஒப்ப, நேர, நிகர, உறழ, மான, கடுப்ப, இயைய, ஏய்ப்ப, அன்ன, இன்ன போன்ற உவமை யுருபுகள்.

8. யா, கா, பிற, பிறக்கு, அரோ, மாதோ, போலும், இருந்து, இட்டு, ஆம், தாம், தான், ஏ, ஓ, முதலிய அசைநிலைகள்.

9. குறிப்பாற் பொருளுணர்த்தும் சொற்கள்: சோ, கோ, ஒல், கொல், கஃறென, சுஃறென, கடகட, படபட, களகள, திடுதிடென, நெறுநெறென (ஒலிக் குறிப்புகள்) ; துண்ணென, திடுக்கென, துணுக்கென, (அச்சக் குறிப்புகள்) ; பொள்ளென ; பொருக்கென, சட்டென, சடக்கென, பளிச்செ, (விரைவுக் குறிப்புகள்) ; வெளேர், கரேலென, (பண்புக்குறி) ; ஐயோ, அச்சோ, அந்தோ, ஹா (இரக்கக் குறி). அம்மா, ஆகா, ஹஹா, அடடா! (வியப்புக்குறி).

இடைச்சொல் அடியில் வரும் பொருள்களை உணர்த்தும் :—

1. தெரிநிலை—உண்டான்.
2. தெளிவு—தெளிவான வாக்கு.
3. ஐயம்—வருமோ வராதோ ?
4. முற்று—நூல் முற்றிற்று.
5. எண்—இரண்டும் இரண்டும் நான்கு.
6. சிறப்பு—கவிதையிற் பெரியவன் கம்பன்
7. எதிர்மறை—செய்யாது சொல் வராது.
8. எச்சம்—நேற்று இருந்தவரை......
9. வினா—வந்தானா ?

10. விருப்பம்—இன்பமே வேண்டும்.
11. ஒழிவு—ஒழிந்தது துன்பம்.
12. பிரிவு—விடைபெற்றுச் சென்றான்.
13. நீக்கம்—வீழ்ந்த கனி.
14. ஆக்கம்—செழித்த குடும்பம்.
15. காலம், இடம்—முன் பின்.

136. தனித்து வராமல் பெயர்வினை யிடையே
இணைந்து நிற்கும் இடைச்சொல் என்க.

137. பகுதி தவிர வினையுறுப் புக்கள்
எச்சம், குறிப்பு, எதிர்மறை, முற்று,
வேற்றுமை, உவமை, சுட்டு, வினாவுடன்
காலமுங் காட்டும் இடைநிலைப் பயனே.

138. அம்மா, ஏ, ஓ, உம், கொல், மற்று
சும்மா, வாளா, சீசீ, ச்சீ
ஐயோ, அந்தோ, தான், முன், பின், இவை
பொருளை யுணர்த்தும் இடைச்சொல் லாமே.

139. அம், ஆம், அன், இன், அல், அற்று இற்றுடன்
ஏ, ஐ, கு, ன், இவை சாரியை இடைச்சொல்.

140. போல, நிகர, புரைய, ஒப்ப,
மான, கடுப்ப, உறழ, இயைய
இன்ன, அன்ன, ஏய்ப்ப என்பன
உவமை யுணர்த்தி வருமிடைச் சொற்கள்.

141. யா, கா, மாதோ, ஏ, ஓ, தாம், தான்;
ஆம், பிற, பிறக்கு, அரோ, இட்டு, இருந்தென,
வருபவை அசைநிலை இடைச்சொல் லாமே.

142. சடசட, படபட, கடகட, திடுதிடு,
களகள, சளசள, கல், ஒல், கொல், கோ, .
கரகர, நெறுநெறு, கஃறெனும் ஒலிகளும்;
துண், துணுக்கு, திடுக்கெனும் அச்சக்குறிகளும்;
அம்மா, ஆ, ஓ, ஆகா என்னும்

வியப்புக் குறிகளும் ; வெளேர், கரேர் எனும்
பண்புக் குறிகளும் ; வாளா, சும்மா,
கொன்னே என்னும் சோம்பற் குறிகளும் ;
சீசீ, தூ தூ என்னும் இழிவும் ;
அச்சோ, ஐயோ, ஆ, உம், அந்தோ
என்னும் இரங்கற் குறிக ளுடனே,
முன்பின், இனி, தொறும், தோறும், மேலும்,
ஆதல், ஆயினும், ஆவது, தான்என
வரும்பிற சொற்களும் இடைச் சொல்லாமே.

சில இடைச்சொற்களின் பொருளைக் காண்போம் :—

I. ஏ அடியிற்காணும் பொருள்களில் வரும் :

1. பிரிநிலை (Exclusion) : ஐவரில் விசயனே வில் வீரன்.

2. வினா : அவன் தானே சொன்னான் ?

3. எண் : இயலே இசையே நாடகமே என முத்தமிழாம்.

4. அசைநிலை : (ஒரு பொருளும் தராதது) : அகம் புறம் என்னப் பொருள் இருவகைத்தே (ஏ ஈற்றசை).

5. தேற்றம் : (நிச்சயம்) : அன்பே இன்பம்.

6. இசைநிறை : (செய்யுளில் ஓசை நிரப்புவது) : ஏஏ இதென்ன மாயம் ?

7. விளி : ஏ தம்பீ !

8. உயர்வு : இவ்வளவு விஷயம் புலவருக்கே தெரியாதே !

9. வியப்பு : ஏ அப்பா, எவ்வளவு பெருமை !

10. இழிவு: ஏ பேதை, சிறுபிள்ளையா யிருக்கிருயே!

II. ஒ—

1. ஒழியிசை (Implied meaning) — சொன்னது ஒழிந்த வேறு பொருள் தருவது: இது நல்லதுக்கோ வந்தது? (கெட்டதுக்கே வந்தது என்று பொருள்). நீ விளையாடவோ பள்ளிக்கூடம் போனுய்? (இல்லை, படிக்க என்று பொருள்).

2. வினு: நாட்டியத்தில் நீ ஞாணும்பாளோ? தனமோ வீணை மீட்டினுள்?

3. உயர்வுசிறப்பு (பெருமையை மிகைபடக் காட்டுவது): ஓ ஓ பெரியர்! வள்ளுவரோ சொன்னுர்? ஆனல் உண்மையே.

4. இழிவுசிறப்பு (இழிவை மிகைபடக் காட்டுவது): இவனே திருடன்!

5. எதிர்மறை (எதிரான பொருள்): நான் சொல்வதை அவனே கேட்பான்? (கேளான்).

6. தெரிநிலை (அதுவன்று இது என்று தெரிய நிற்பது): அதோ வருவது பசுவோ? அன்று, காளைதான்.

7. கழிவு (இரக்கம்): அப்பா, உனக்கும் இப்படி வந்ததோ?

8. அசைநிலை (பொருளற்றது): பார்மினோ! கேண்மினோ!

9. பிரிப்பு (Distinction)—பல பொருளில் ஒன்றைச் சிறப்பாகப் பிரித்துச் சொல்லல்: கற்பனைக் கவிகள்

அரியவையே; வள்ளுவர் குறள்களோ அவற்றினும் அரியவை.

10. ஐயம்: கயிறோ, பாம்போ?

11. ஓசை: ஓவென்று அலறினான்.

III. என, என்று, எனும், என்ன—

1. வினையுடன்: செய்யெனச் செய்தான். தருவே னென்று சொன்னான்.

2. பெயருடன்: இராமலிங்கர் என்ற (என்று, எனும்) மகானொருவர் தமிழ்நாட்டில் அவதரித்தார்.

3. விரைவுக் குறிப்பு: திண்ணென வந்தான்; விண்ணென விட்டான்; விடுவிடென நடந்தான்.

4. ஒலிக் குறிப்பு: சபை கொல்லென நகைத்தது. ஒல்லென ஒலித்தது.

5. பண்புக் குறி—(ஒன்றின் இயல்பைக் காட்டும்): தகதகவெனும் தங்கம். சள்ளென விழுந்தான்.

6. எண்: அவனது கல்வியென்ன, செல்வமென்ன, தன்மையென்ன.........

7. உவமை: புலியெனப் பாய்ந்தான்.

IV. உம்—

1. எதிர்மறை: நடந்தாலும் நடக்கும் (நடவாமலும் இருக்கும் என்று எதிரான பொருளுந் தருகிறது).

2. சிறப்பு: விமானமும் தாண்டாத இமாலயம் (உயர்வு); நாயும் சீந்தா அழுகல் (இழிவு).

3. ஐயம்—(நிச்சயம் சொல்லாமை): பத்தாயினும் எட்டாயினும் கொடு; சோறேனும் கனியேனும் தா!

4. இறந்தது தழுவிய எச்சம்—(இதற்கு முன்பே நடந்த செய்தியைக் குறிப்பது): கந்தனும் வந்தான்; (அதற்கு முன் இன்னொருவன் வந்ததைக் குறிப்பது).

எதிரது தழுவிய எச்சம் — (இனி நடக்கும் செய்தியைக் குறிப்பது): கந்தனும் வருவான்(இனி).

5. முற்று—(நிறைவான பொருளைத் தருவது): எல்லாரும் மகிழ்ந்தனர்.

6. எண்: சேரனும், சோழனும், பாண்டியனும் தமிழ் மூவேந்தர்.

7. தெரிநிலை: ஆணுமன்று பெண்ணுமன்று (அலி எனத் தெரிவிக்கிறது).

8. ஆக்கம்: பால் தயிரும் ஆகும், நெய்யுமாகும்.

9. விரைவு: வந்ததும் சென்றான்.

10. முற்றும்மை எச்சப் பொருளிலும் (எதிர் மறையில்) வரும்: அவர் பத்தும் கொடார் (சில!கொடுப்பார்). முழுவதும் அறியேன் (சிறிது அறிவேன்).

V. எண்ணிடைச் சொல்—

செவ்வெண் ஈற்றில் எச்சவும்மை வரும். செவ்வெண்=எண் இடைச் சொல் தொக்குவரும் தொடர்-(Co-ordinate Nouns and Verbs used without conjunction participles):

1. கல்வி, செல்வம், அழகு, ஒழுக்கமும் கொண்டவரும் உண்டு.

2. அப்பரும் கிறிஸ்துவும்—இருவரும் அருட் பெரியார். அப்பர் கிறிஸ்து இருவரும் அன்புமயம்.

3. சுத்தம், சுதந்தரம், சமத்துவம் என மூன்றும் மெய்வழிகள்.

4. அன்பு, அருள், அறம், வாய்மை, தூய்மை என்ற ஐந்தும் மனிதனை உயர்த்தும்.

5. மனம், மொழி, மெய்யோடு மூன்றும் சுத்த முறுக!

6. மயிலாடவும், குயில் பாடவும் மழை முகில் கருச்சித்தது.

7. கற்றும், கேட்டும், கண்டும், நடந்தும் வாழ்வை உயர்த்து!

8. உண்ண, உடுக்க, இருக்கவென்று உழை!

9. மனிதன் தின்னவெனத் தூங்கவென வர வில்லை.

இந்தத் தொடர்களில் உள்ள எண்ணிடைச் சொற்களைக் கவனிக்கவும்.

VI., மன் ஆறு பொருள்களில் வரும்:

1. அசைநிலை: மனத்தினை ஆண்டான் மன்னோ!

2. ஒழியிசை: (முன் இருந்த இசை—சிறப்பு ஒழிவது) முன் ஆண்ட வேந்துமன்! (இப்போது ஏழையானான்).

3. ஆக்கம்: பண்டு காடு மன்! (இன்று வளநாடு)

4. மிகுதி: எந்தை எமக்கு அருளுமன்!

5. **கழிவு** : அவனின்றி யான் உய்வல் மன்னோ?

6. **நிலைபேறு** : மன்னா (நிலையற்ற) உலகத்து மன்னியது புரிமோ.

VII. **மற்று** : நான்கு பொருள்களில் வரும் :

1. **வினைமாற்று (Alternative Verbs)** : பயிர் செழிக்க வருவதும் மழை; வெள்ளத்தால் அழிக்க வருவதும் மழை.

2. **அசைநிலை** : **மற்றென்னை ஆள்க** (மற்று அசை).

3. **பிறிது** : ஒன்று சிவப்பு; மற்றொன்று பச்சை.

4. **பின்** : மற்று இவளும் உடன் சென்றாள்.

VIII. **கொல்** : மூன்று பொருளில் வரும் :—

1. **ஐயம்** **இவ்வளவிற் செல்லுங்கொல்?**

2. **அசைநிலை** : கற்றதனால் ஆய பயன் என்கொல்?

3. **வினா** : வந்தவன் நீ கொல்? எடுத்தவன் நீ கொலோ?

IX. பிற **இடைச் சொற்கள்** :

1. **ஆங்கு** : கேட்டாங்கு, ஆங்கது கேட்ட வேந்தன்.

2. **அம்ம, அம்மா** : இனி மற்றம்ம! வீர வீரனும் எழுந்தானம்மா! (அசை): அம்மா அரிது தன்னறிவு! (வியப்பு).

3. **மா** : நன்று வருகமா வென்றி வீரனே!

4. **தான்** : அவன்தான், அவனேதான் சொன்னான் (தேற்றம்).

5. வாள் : வாளா இருந்தான் ; சும்மா இருந்தான் (சோம்பல்).

6. அந்தோ: அந்தோ, ஐயோ ஏழை படும்பாடு! (இரக்கம்).

7. சீ, சீச்சீ : சீ மூதேவி! சீச்சீ தடியா! சீச்சீ மூடா! (இழிவு).

X. சில அசைச் சொற்கள் :

1. மியா—சொல்மியா.
2. அத்தை—இது கேளத்தை!
3. ஈ—சென்றீ பெரும.
4. பிற—அவனல்ல பிற.
5. அரோ—சொன்னாரரோ.
6. மாதோ—மருதம் வீற்றிருக்கும் மாதோ!
7. ஒரும்—அஞ்சுவதோருமறனே.
8. போலும்—அல்லது செய்து மகிழ்வாய் போலும்!
9. இருந்து—எழுந்திருந்தேன்.
10. இட்டு—பிளந்திட்டான்.
11. அன்று—சேர்துமன்றே.
12. ஆம்—பணியுமாமென்றும் பெருமை.
13. தாம்—அவர்தாம் அறிஞர்.
14. தான்—நீ தான் வீரன்.
15. கின்று—ஆசைப்பட்டிருக்கின்றேன்.
16. நின்று—அரந்தையராய் நின்றார் நிழலடைந்தே

கணிதமணி

அடியில் வரும் தொடர்களிலிருந்து கரு இடைச் சொற்களைத் தேர்ந்து அவை இன்ன பொருளில் வந்தன என்று எழுதுக :—

தமிழ் மேதாவிகளில் **இராமானுஜம்** ஒருவர். அவ**ரது** கணிதப் புலமை**யை** வியக்காதவரில்லை. அவர் எளிய குடும்பத்தில் பிறந்து, கும்பகோணத்தில் படித்**தார்**; எஃப். ஏ. யில் தேறவில்லை. படிப்புப் புளித்தது. அவர் மூளை கணக்கில் ஆழப்புகுந்து புதுமைகளைக் கண்டது. இராமானுஜரின் கணிதப் புலமை புகழோங்கியதும், சர்க்கார் அவரை ஆதரித்தது. அவர் மேதையை உலகிற்கு வெளிப்படுத்தியவர் கேம்ப்ரிட்ஜ் புலவர் ஹார்டியே. அவரே இவரை இலண்டனுக்கு வரவழைத்தார். இராமானுஜம் கேம்ப்ரிட்ஜ் ட்ரினிடி காலேஜில் சேர்ந்து, அரிய ஆராய்ச்சிகள் செய்தார். "நான் கண்ட கணிதப் புலவரில், இவரே சிறந்தவர்" என்று ஹார்டி மெச்சினர். 1918-ல், இராயல் சங்கம் அவரை வரவேற்றது. அவருக்கு எஃப். ஆர். எஸ். பட்டமும் கிடைத்தது. கேம்ப்ரிட்ஜில் வருஷம் 250 பவுன் சம்பளத்தில் இவர் ஆசிரியர் வேலை பார்த்தார். "நம் இராமானுஜமோ இவ்வளவு புகழ் பெற்றார்!" என்று தமிழர் பெருமை கொண்டனர்.

ஆனல், **அந்தோ!** நம் இராமானுஜம் காசநோயால் வருந்தினர். சென்னை அரசாங்கம் சர்வ கலாசாலை கணிதத் தலைவராக அவரை அழைத்தது. ஆனல்..... ஆ, அதற்குள் சாவின் அழைப்பு வந்துவிட்டது. அவர் 26—4—1920-ல், **சேத்துப்பட்டில் இறந்**

தார். அவர் சுமாரான உயரம், சிறிது பருமன், பெரிய மண்டை, விசால நெற்றி, அறிவு பொலியும் விழிகளைக் கொண்டவர்; எளிய நடை யுடையவர்; எல்லாரிடமும் அன்பு மிக்கவர்; பெற்றோரிடம் வணக்கமும் மரியாதையும் கொண்டவர். அவர் கணக்காராய்ச்சிகள் பல; அவற்றில் ஒருபாகம் கேம்ப்ரிட்ஜ் சர்வகலா சாலையிலிருந்து வெளிவந்துள்ளது.

ருகூ. உரிச்சொல்
(Attribute)

1. நாம் காணும் எல்லாச்சீவர்களும் உடல் போர்த்த உயிர்கள். உணவைத் தேடி உண்ணல், உறங்கல், ஊடல், கூடல், ஈனல், பேணல், முதிர்தல், இறத்தல்—இவை எல்லாச்சீவராசிகளுக்கும் உரிய பொதுவான எட்டுத் தொழில்களாகும். சடப் பொருள்கள் வட்டம், சதுரம், கோணம் முதலிய பல வடிவுகள் உடையன; நன்மணம், தீமணம் ஆகிய இரண்டு மணங்களுடையன; வெளுப்பு, சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம், ஊதா, செம்மஞ்சள், பழுப்பு முதலிய பல நிறங்களுடையன; இனிப்பு, கசப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, காரம் ஆகிய ஆறு சுவையுடையன; மென்மை, வன்மை, கெட்டி, இலேசு, வழுவழுப்பு, சொரசொரப்பு, வெம்மை, தண்மை ஆகிய பரிசங்கள் உடையன. எல்லாப் பொருள்களுமே பிறத்தல், மூத்தல், தேய்தல், இறத்தல், ஒலித்தல், நடுங்கல், பற்றுதல், பிரிதல், ஈதல், ஏற்றல் ஆகிய தொழிற் பண்புகளை உடையன.

புலன்களுக்கேற்றபடி குணங்கள் அமைகின்றன. மனிதன் மானதன். மற்ற உயிர்கள் புலன்களைப் பின்பற்றி, உடலுக்காகவே வாழுகின்றன. மனிதனுக்கு மனம் உள்ளது. அதைத் தாண்டி ஆன்மாவுள்ளது. உயிர் மனத்துடன் புல்லும்போது, எத்தனையோ குணங்கள் உண்டாகின்றன. அக்குணங்களை நம் பெரியார் சாத்விகம், இராஜஸம், தாமஸம் என மூன்றாக வகுத்தனர். இவற்றை அமைதி, எழுச்சி, அயர்வு என்னலாம்.

சாத்விகம் மனத்தெளிவால் வரும். அறிவு, மதிப்பொலிவு, அன்பு, அமைதி, அருள், இரக்கம், அடக்கம், இன்சொல்—இவையெல்லாம் சாத்விகமாம்.

இராஜஸம் எழுச்சியுடையது; செயலூக்கங் கொண்டது. சபதம் கூறல், வீரம், வேகம், ஆசை, ஆணவம், ஆத்திரம், காமம், போர், போட்டி, சினம், செயல், வெற்றி, துணிவு—எல்லாம் இராஜஸமாம்.

தாமஸம் மந்தம். அயர்ச்சி, உறக்கம், எழுச்சியின்மை, சோம்பல், மடமை, இருள்—இவை தாமஸ குணங்களாகும்.

143. சகத்தில் உள்ள சராசர மெல்லாம்
உரு, நிறம், சுவை, மணம், பரிச முடையன.
உடலுயி ரெல்லாம் ஊணு றக்கமுடன்
இன்ப துன்பமாம் இருவிகற் பெய்தி,
வளர்ந்து, முதிர்ந்து மறையுந் தன்மைய.
ஆறறி வுடைய மானிடன் மனத்தால்,
எய்துமுக் குணவகை எண்ணில வாமே.
அறிவு, அருள் இரக்கம், அன்புளத் தெளிவு
சாந்த மளிப்பது சாத்விக குணமாம்.
ஆசை, வீரம், ஆணவம், அதிர்ச்சி

எழுச்சி தருவது இராஜஸ குணமாம்.
மந்த உறக்கம், மடமை, சோம்பல்
ஆனே அயர்த்துவது தாமத குணமாம்.
இன்பம் துன்பம், எளிமை செழுமை,
கிளர்ச்சி, தளர்ச்சி, கீழ்மை, மேன்மை,
அச்சம், தைரியம், விருப்புடன் வெறுப்பு
மானம், வெட்கம், மறப்பு, நினைப்பு
என்னும் தன்மைகள் எண்ணில வாமே.

2. பொருள்களுக்குரிய குணங்களை விளக்குவது உரிச்சொல்லாகும்.

ஒரே குணத்தைக் குறிக்கும் பல உரிச்சொற்கள் உண்டு :—

சால, உறு, நனி, தவ, கூர், கழி என்பன 'மிகுதி' என்னும் ஒரே பொருளுடையன :

சாலச்சிறந்தது, உறுபுகழ், தவப்பல, நனி நன்று களிகூர் மனம், கழிபேருவகை.

மாற்றம், நுவற்சி, செப்பு, உரை, கரை, நொடி, இசை, கூற்று, புகறல், மொழி, கிளவி, விளம்பு, அறை, பாட்டு, பகர்ச்சி, இயம்பல்—இவை சொல் என்னும் ஒரே பொருளுடையன:

முழக்கு, இரட்டு, ஒலி, கலி, இசை, துவை, பிளிறு, இரை, இரங்கு, அழுங்கு, இயம்பு, இமிழ், அதிர், குரை, கனை, சிலை, சும்மை, கம்பலை, கௌவை, அரவம், ஆர்ப்பு—இவை ஓசையைக் குறிக்கும் பல சொற்களே.

இப்படி எத்தனையோ பெயர்கள் அகராதி நிரம்பவுண்டு.

பழைய இலக்கணங்களில் உரிச்சொல்லைப் பற்றி யிருப்பது இவ்வளவே.

---

௬௦. பெயர் உரிச்சொல்
(Adjective)

I. பெயர்ச்சொல், பண்புப்பெயர், பெயரெச்சம் ஆகியவற்றினின்று ஏராளமான உரிச்சொற்கள் ஆக்கலாம். பெயரெச்சமும், பெயரணியும், பெயருரியே. பெயர் உரிச்சொல் பெயர்ச் சொல்லுக்கு முன் வரும்.

மெய்யடியார், பொய்மனம், போலிப்பேச்சு, குளிர் காற்று, தீ நிறம், கடவுள் வாக்கு.

நன்மை : நல்ல மனிதன் ; தீமை : தீயவாடை ; வெண்மை : வெண்ணீறு ; கருமை : கருங்கடல் ; பெருமை : பெரிய வீடு.

பெற்றதாய், உற்ற நண்பன், ஓங்குயர் மாடம், படித்த பாடம்.

பெயர் உரிச்சொற்களுக்குச் சில விதிகளைக் காண்போம்.

1. சுத்தம் சுத்தமனம்—ம் ஈறு அழிந்தது.
   ஞானம் ஞானதீபம் ,,
   மாதம் மாதச்சம்பளம் ,,
   காதம் காதவழி ,,
2. பக்கம் பக்கத்து ஊர்—ஈறழிந்து, அத்து வந்தது.

குளம் குளத்தங்கரை—ஈறழிந்து அத்து, அம் வந்தன.

3. கனம் கனத்த மழை—ஈறழிந்து அத்து, அ வந்தன.

4. மா மாம்பழம்—ம் மிகுந்தது.
பசு பசுப்பால்—ப் ,,

5. புளி புளியம்பழம்—அம் சேர்ந்தது.
அறுகு அறுகம்புல்— ,,

6. காடு காட்டுப்பூ
ஆறு ஆற்றுநீர்
எருது எருத்துமாடு
} ட, ற, த இரட்டித்தன.

7. இரண்டு இரட்டைப்பிள்ளை
ஒன்று ஒற்றைக் கண்
} ண்டு, ட்டை ன்று, ற்றை, ஆயின.

8. சரி சரியான பேச்சு—ஆன சேர்ந்தது.
எளிது எளிதான வேலை— ,,

9. நேர்மை நேர்மையுள்ள ஆள்—உள்ள சேர்ந்தது.

10. புதுமை புதுயுகம்—மை நீங்குதல்.
இளமை இளநீர்— ,,

11. பழமை பழைய காலம்—மை, ய ஆதல்.

12. பெருமை பெரும்பதவி—மை யில் ஐ நீங்கி ம் நிற்றல்.

13. பெருமை பெரிய நூல்—உமை இய ஆனது.

14. தேவன் தேவ ஜீவனம்—ஈற்று ன் நீங்கல்.
மனிதன் மனித முயற்சி. ,,

15. கிழக்கு கிழக்கத்தி மனிதன்—அத்தி சேர்தல்.
வடக்கு வடக்கத்தி ஆள் ,,

16. தெற்கு தென்கடல்—ற்கு, ன் ஆனது.

17. வடக்கு வடமலை—க்கு நீங்கல்.

18. கிழக்கு கீழ்த்திசை—க்கு நீங்கி, கிழ கீழ் ஆனது.

19. மேற்கு மேல்காற்று—கு நீங்கி, ற் ல் ஆனது.

திசைப்பெயர்களில் முதல் இரண்டெழுத்துக்கள் இயல்பாகவும், முதல் நீண்டும் வந்தன. கு நீங்கியது.

20. எல்லாம் — எல்லாமதங்களும் — ம் நீங்கியது.

இப்படி எத்தனையோ வகையாகப் பெயர் உரிச்சொல் பிறக்கும்.

ஹிந்தி, ஃப்ரெஞ்சு, இலத்தீன், ஆரியம் முதலிய மொழிகளில், பெயர் உரிச்சொல்லைக்கூடப் பெயருக்கும் வினைக்கும் ஏற்றபடி மாற்ற வேண்டும். அதற்குப் பால் வேறுபாடு பார்க்க வேண்டும். தமிழில் இந்த இடரில்லை. பெயர்உரிச்சொல்லை அதற்குரிய பெயருக்குமுன் போட வேண்டியதே.

பல பெயர் உரிச்சொற்கள் வந்தால், காதுக்கு இனிமையாக அமைக்க் வேண்டும்:

சாமிநாதையர் பெருந்தமிழ்ப் புலவர். அவர் பழுத்த பழஞ் சங்கத்தமிழர். ஆனால், அவர் எளிய, இனிய தெள்ளிய தமிழே எழுதினர்.

144 **ம் ஈறழிந்தும், மிகுந்தும், த்து, அத்து, த்த**
ஆகியும், ஆன, அம், அத்தி, உள்ள
சேர்ந்தும், நடற இரட்டியும், வ், ஐ,
மை விலகியும் பெயர்உரி யாமே.

ஒப்பனை உரி (**Degrees of Comparison**) :—குணங்களில் ஒற்றுமை யுண்டு; ஏற்றத் தாழ்வுகளும் உண்டு. இவற்றைக் காட்டுவதே ஒப்பனை (**Comparison**). ஒப்பனையில் பல படிகள் உண்டு:

1. இயல்உரி 2. நிகர்உரி 3. ஒப்புரி 4. மேன்மையுரி.

1. **இயல்உரி** (**Positive**) : நல்ல மனிதன், அழகிய பெண்.

2. **நிகர்உரி** (**Equality, Likeness**) : பசுவைப்போல் நல்ல மனிதன்; பூவைப் போன்ற அழகிய பெண். பீமனுக்கு நிகரான பலவான்; என் ஒத்த வயது; சரியான ஜோடி; சரியான மாப்பிள்ளை; இவன் எவ்வளவு படிப்பாளியோ அவன் அவ்வளவு செயலாளி; நீ எம்மாத்திரம் கொடுப்பாயோ, அம்மாத்திரம் நான் கொடுப்பேன். இவன் எவ்வளவு நல்லவனோ, அவ்வளவு கெட்டவன் அவன்.

3. * **உறழுரி** (**Comparative Degree**) : ஒன்றைவிட மற்றொன்று உயர்ந்தது அல்லது தாழ்ந்தது என்று காட்டுவது உறழுரி:

இவனினும் (பார்க்க, விட, காட்டிலும்) அவன் கெட்டிக்காரன். பொன்னினும் (விட, பார்க்க, காட்டினும்) வெள்ளி மட்டமானது.

*** உறழ்தல் = ஒத்தல், ஒன்றுன் ஒன்று மிகுதல், எதிராதல்.**

4. மேன்மையுரி (Superlative Degree) : இஃது அனைத்தினும் மேலானது என்று ஒன்றைக் குறிப்பது: எல்லாரைக் காட்டிலும் மேலான அறிவாளி தன்னை அறிந்தவனே. பாண்டவர் ஐவர்; ஐவரினும் மூத்தவன் தருமன்; எல்லாரினும் வீரன் விசயன். வானம் எல்லாவற்றிற்கும் உயரமானது. மாடத்தைவிட மலை உயர்ந்தது. எல்லாவற்றினும் தாழ்ந்தது புல்லர் உறவு. சகல குணங்களினும் உயர்ந்தது, சிறந்தது, மேலானது அன்பு. எல்லாக் குணங்களிலும் இழிந்தது பொறாமை.

இந்தமாதிரி ஒப்பனை தமிழில் முன்பே வழங்கி வருகிறது. ஆங்கிலத்தில் சொல்லிறுதியில் **er, est** சேர்த்து ஒப்பனை தெரிவிப்பர்—**large, larger, largest.** தமிழில் சொல்லுக்கு முன்பு ஒப்பனை சேர்ப்பதுண்டு; கற்றல் நல்லது; அறிதல் **மிக** நல்லது, அறிந்தடங்கல் **சால** நல்லது.

இயல்உரி நல்லது; உறழுரி **மிக** நல்லது; சிறப்புரி **சால** நல்லது. **மிக, சால** இரண்டையும் சேர்த்து ஒப்பனை அளவை உணர்த்தலாம்.

இக்கதையில் வரும் பெயர் உரிச்சொற்களை, ஒப்பனை ஒழுங்கில் எழுதுக :—

தமிழ் மணிகள்

மீனாட்சிசுந்தரம்பிள்ளை, தியாகராஜசெட்டியார், சாமிநாதையர், வேதாசலனார்—இவர்கள் உமாமகேசுரர், ஞானியார் உமாமகேசனார் இவர்கள் சிறந்த தமிழ் மணிகள். இவர்களுக்கு ஒப்பாரும் மிக்காரும் இலர். மீனாட்சிசுந்தரனார் சிறந்த புலவர்; பாடஞ்

சொல்வதில் மிகச்சிறந்தவர்; கவி புனைவதில் சாலச்சிறந்தவர். தியாகராஜசெட்டியார் பேச்சில் புலி; போதிப்பதில் மிகப்புகழ் பெற்றவர். வேதாசலனார் ஆழ்ந்த ஆராய்ச்சியாளர்; மிகவும் இனிய பேச்சாளர். அவர் குரலே பாடுவதுபோலிருக்கும். தனித் தமிழ் முயற்சியில் இவரே தலை சிறந்தவர், சாலவுழைத்தவர். ஞானியார் தூய சைவர்; தமிழும் சைவமும் வாழ்வே ஓயாமல் பெருந்தொண்டு செய்து சாலப் புகழ் பெற்றவர். உமாமகேசனார் எவ்வளவு படிப்பாளியோ அவ்வளவு செயலாளி; தமிழர் உரிமைக்காகப் பாடுபட்டவர், சாமிநாதையர் சங்கத் தமிழுக்காக அரும்பாடு பட்டவர். ஊர்ஊராகச் சென்று, பழைய ஏடுகளைத் தேடி, நன்றாக ஆராய்ந்து, எழுதி அச்சிட்டுத் தமிழருக்குத் தந்தவர் இவரே. சொந்தப்பிள்ளையைவிட இவருக்குத் தமிழ் நூல்களில் அன்பதிகம். இறுதி மட்டும் தமிழ்ப் பணியே உயிர்ப்பணியாகச் செய்தவருள் மிகச் சிறந்தவர் சாமிநாதையர். இவர் ஒப்பற்ற புலவர் மட்டுமன்று. உண்மையான தெய்வபக்தர்; நேர்மையான கனவான்; வஞ்சமற்ற மனத்தர்; எளிய நடையாளர்; இனிய பேச்சாளர்; அனைத்திலும் பெரிய ஆராய்ச்சியாளர்.

145. உயர்வுதாழ் வுரைக்கும் ஒப்பனை யுரியே ;
இயல், நிகர், உறழ், மேன்மையென நான்கே
உள்ள பெயர்உரி இயலுரி யாமே,
நிகர்வுரி அதைப்போல் இதுவெனக் காட்டும்
உறழுரி ஒன்றினொன் றுயர்வுதாழ் வுணர்த்தும்
மேன்மை அனைத்தினும் மேலெனக் குறிக்கும்.

௬௯க. எண்ணுரிச் சொற்கள்
(Numeral adjectives)

1. உலகெங்கும் தற்காலம் அரபிய இலக்கமே வழங்குகிறது: 1, 2, 3, 4... அஃது எளிதாகவே யிருக்கிறது. தமிழில் எழுத்துக்களையே எண்களாகக் குறித்தனர். தமிழர்கள் கணிதக் கலையில் இன்றும் மிகச் சிறந்து விளங்குகிறார்கள். நமது எண்சுவடி, கணித நூல்களில் முதன்மையானது. சாதாரணமாக மனிதன் அறிய வேண்டிய கணக்குகள் அதில் தெளிவாயுள்ளன. பின்னக் கணக்குகளும் (Fractions) சதுரக் கணக்குகளும் தமிழிலக்கங்களால் வெகு எளிதாகப் போடலாம். எண்களைப்பற்றி ஆராய்வோம்:

2. எண்க்ளில் நான்கு வகையுண்டு: 1. மூல எண் (Cordinals) 2. வரிசையெண் (Ordinals) 3. எண்ணுரிச் சொல் (Cordinal Adjective) 4. பின்னங்கள் (Fractions). வரிசை யெண்களும், எண்ணுரிச் சொற்களே. தமிழ் இலக்கங்கள் இக்காலம் வழக்கற்று வருகின்றன. தமிழர் அவற்றை மறுபடி வழங்க வேண்டும். ஹிந்தி-வங்காளிகள் தமது தாய்மொழியிலேயே எண் குறிப்பர். தமிழரும் இயன்றமட்டும் அவ்வாறு செய்வது நலம்.

3. எண்கள் சொற்களுடன் சேரும்போது இவ்வாறு மாறும்:—

ஒன்று, ஒ, ஒரு, ஓர்; இரண்டு இ, இரு, ஈர்; மூன்று மு, மூ; நான்கு நா, நால், நாலு; ஐந்து

ஐ, ஐம்; ஆறு அறு; ஏழு எழு, எழ்; எட்டு, எண்; ஒன்பது, ஒன்பான்; பத்து, பதின் என வரும்.

ஒன்றைத் தவிர மற்ற எண்களெல்லாம் அப்படியே எண் உரியாக வழங்கும். எண்கள் எய்தும் மாறுதல்கள் சிலவற்றைக் காண்க :—

ஒன்று + ஆயிரம் = ஓராயிரம்
,, நாள் = ஒரு நாள்
,, வீடு = ஒரு வீடு
,, ஒன்று = ஒவ்வொன்று

இரண்டு + ஆயிரம் = ஈராயிரம், இரண்டாயிரம்
,, நூறு = இருநூறு
,, வழி = இருவழி
,, இரண்டு = இவ்விரண்டு

மூன்று + ஆயிரம் = மூவாயிரம்
,, உலகு = மூவுலகு
,, வேந்தர் = மூவேந்தர்
,, அடி = மூவடி
,, நூறு = முந்நூறு
,, வடிவம் = முவ்வடிவம்
,, பால் = முப்பால்
,, யானை = முவ்யானை
,, தீ = முத்தீ
,, மூன்று = மும்மூன்று

நான்கு + ஆயிரம் = நாலாயிரம்
,, நூறு = நானூறு
,, வகை = நால்வகை
,, காலி = நாற்காலி

நான்கு + கவி = நாற்கவி, நாலுகவி
,, பொருள் = நாற்பொருள்
,, மணி = நான்மணி
,, நாழி = நானாழி
,, வழி = நாலுவழி
,, நான்கு = நந்நான்கு

ஐந்து + மூன்று = ஐம்மூன்று
,, திணை = ஐந்திணை
,, பால் = ஐம்பால்

ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம்
,, நூறு = ஐந்நூறு
,, தொழில் = ஐந்தொழில்
,, வகை = ஐவகை
,, ஐந்து = ஐயைந்து, ஐவைந்து

ஆறு + நூறு = அறுநூறு
,, ஆயிரம் = ஆறாயிரம்
,, முகம் = ஆறுமுகம்
,, ஆறு = அவ்வாறு

ஏழு + ஆயிரம் = ஏழாயிரம்
,, நூறு = எழுநூறு
,, பரி = எழ்பரி
,, ஏழு = எவ்வேழு

எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம்
,, வகை = எண்வகை
,, நாழி = எண்ணாழி
,, தொகை = எட்டுத்தொகை
,, எட்டு = எவ்வெட்டு

ஒன்பது × பத்து = தொண்ணூறு
,, நூறு = தொள்ளாயிரம்
,, ஆயிரம் = ஒன்பதாயிரம்
,, பதினாயிரம் = தொண்ணூறாயிரம்
,, இலட்சம் = ஒன்பதி லட்சம்
பத்து + ஒன்று = பதினொன்று, பன்னொன்று
,, இரண்டு = பன்னிரண்டு
,, மூன்று = பதின்மூன்று, பன்மூன்று
,, நான்கு = பதினான்கு, பன்னான்கு
,, பத்து = பப்பத்து
ஒருபஃது + ஒன்று = ஒருபத்தொன்று
இருபஃது + மூன்று = இருபத்துமூன்று

4. மூல எண்ணுடன் ஆம், ஆவது சேர்த்தால் **வரிசை எண்** வரும். மூல எண் ஒன்று மட்டும் முதலாம் என்று வரும்; ஒன்றாம் வகுப்பு என்றும் வழங்கும்: முதலாம், இரண்டாம், மூன்றாம், பத்தாம், இருபதாம் வயது, நூறாம் ஆண்டு; மூன்றாவது, நாலாவது.

5. இந்தத் தமிழ் இலக்கங்களைப் படிக்கவும்:—

௧, ௨, ௩, ௪, ௫, ௬, ௭, ௮, ௯, ௰ (௧0), ௧௧, ௧௨, ௧௩, ௧௪, ௧௫, ௧௬, ௧௭, ௧௮, ௧௯, ௨௰, ௫0, ௱ (௧00), ௨௱, ௩௱, ௱௫௬ (156), ௲, ௲௧, ௲௪௰ (1040), ௮௲ (8000), ௭௰௲ (70,000), ௯௰௲ (90,000), ௱௲ (௧,00,000 இலட்சம்); ௮௱௲ (8,00,000), ௰௱௲ (பத்து இலட்சம்,) ௯௰௱௲ (90 இலட்சம்), ௱௱௲ (கோடி, 100 இலட்சம்).

தமிழ் இலக்கங்கள் ௧ (ஒன்று), ௰ (பத்து), ௱ (நூறு), ௲ (ஆயிரம்), ௰௲ (பதினாயிரம்), ௱௲ (இலட்சம்) ௰௱௲ (பத்து இலட்சம்), ௱௱௲ (கோடி)—

௰௱௱௲, ௱௱௱௲, ௲௱௱௲, ௰௲௱௱௲, ௱௲௱௱௲, ௱௱௲௰௱௲ (கோடி கோடி) என்று செல்லும்.

தமிழ் இலக்கங்களைத் தற்போது வழக்கமாயுள்ள ஆங்கில முறையில் எழுதுவது எளிது, சுருக்கம். இம் முறையே ஸ்ரீ வ. வே. சு. ஐயரும் கையாண்டதாகும் :—

5,83,168 = ௫,௮௩,௧௬௮

39,50,36,215 = ௩௯,௫௦,௩௬,௨௧௫

6. பகுப்பெண்கள் (**Distributives**) எண்களை இரட்டித்துச் சொல்வதால் உண்டாகும். ஆளுக்கு ஒவ்வொன்று, இவ்விரண்டு (இரண்டிரண்டு) மும்மூன்று, நந்நான்கு, ஐந்தைந்து (ஐவைந்து), அவ்வாறு, ஏழேழு (எவ்வேழு), எட்டெட்டு (எவ்வெட்டு), ஒன்பதொன்பது, பப்பத்து (பவ்வத்து, பத்துப் பத்து) கொடு!

1. இக்காலம் உரோமன் எண்களும் வழங்குகின்றன. அவற்றையும் தெரிந்துகொள்வது நலம்.

1	**I**	*30*	**XXX**
2	**II**	*40*	**XL**
3	**III**	*50*	**L**
4	**IV**	*60*	**LX**
5	**V**	*70*	**LXX**
6	**VI**	*90*	**XC**
7	**VII**	*100*	**C**
8	**VIII**	*400*	**CD**
9	**IX**	*500*	**D**
10	**X**	*600*	**DC**
11	**XI**	*800*	**DCCC**
19	**XIX**	*1000*	**M**

பின்னங்கள் : தமிழில் பின்னக்கணக்கு வெகு நுட்பமானது. இம்மி விடாமல் கணக்குப் பார்க்கலாம். பின்னங்களின் பெயரும் குறியும் மட்டும் தருகிறேன். வாய்ப்பாட்டுப் புத்தகத்தில் மற்ற விவரங்கள் காண்க :

	க	1	ஒன்று
	ஊ	$\frac{3}{4}$	முக்கால்
	உ	$\frac{1}{2}$	அரை
	வ	$\frac{1}{4}$	கால்
	ஸ	$\frac{1}{5}$	நாலுமா
	ஹு	$\frac{1}{8}$	அரைக்கால்
	ஃ	$\frac{1}{10}$	இருமா
	ஙு	$\frac{3}{16}$	மும்மாகாணி
	பஉ	$\frac{1}{16}$	மாகாணி, வீசம்
	ங	$\frac{3}{20}$	மும்மா
	ப	$\frac{1}{20}$	ஒருமா
	சுபு	$\frac{1}{40}$	அரைமா
	சஷு	$\frac{3}{80}$	முக்காணி
	உ	$\frac{1}{80}$	காணி
	ஙெ	$\frac{1}{160}$	அரைக்காணி
	வஷு	$\frac{1}{320}$	முந்திரி
கீழ்	ஊ	$\frac{3}{12,80}$	கீழ்முக்கால்
கீ	உ	$\frac{1}{640}$	கீழரை
கீ	வ	$\frac{1}{1,280}$	கீழ் கால்
கீ	ஸ	$\frac{1}{1,600}$	கீழ் நாலுமா
கீ	ஙு	$\frac{3}{5,120}$	கீழ் மூன்றுவீசம்

கீ	ஙி	$\frac{3}{6,400}$	கீழ் மும்மா
கீ	ஹு	$\frac{1}{2,560}$	கீழ் அரைக்கால்
கீ	உ	$\frac{1}{3,200}$	கீழ் இருமா
கீ	பற	$\frac{1}{5,120}$	கீழ் வீசம்
கீ	ப	$\frac{1}{6,400}$	கீழொருமா
கீ	சஂ	$\frac{3}{25,600}$	கீழ் முக்காணி
கீ	சய	$\frac{1}{12,800}$	கீழரைமா
கீ	ஓ	$\frac{1}{25,600}$	கீழ்க்காணி
கீ	ஸ	$\frac{1}{5,12,000}$	கீழ் அரைக்காணி
கீ	ஹஞ	$\frac{1}{1,02,400}$	கீழ் முந்திரி
	இம்மி	$\frac{1}{10.75,200}$	
	அதிசாரம்	$\frac{1}{18,38,400}$	

இந்த இம்மிக் கணக்கு மிக நுட்பமானது. தமிழ் நாட்டுத் தனவணிகர் இக்கணக்கில் இன்றும் முதன்மை பெற்றிருக்கிறார்கள்.

இந்த வெண்பாவின் பொருளென்ன? ஊகித்துச் சொல்லுங்கள் :—

முக்காலுக் கேகாமுன், முன்னரையில் வீழாமுன்,
அக்காலரைக் கால்கண் டஞ்சாமுன்—விக்கி
இருமாமுன், மாகாணிக் கேகாமுன், கச்சி
ஒருமாவின் கீழரையின் றோது.
(மாகாணி=சுடுகாடு)

சில எண் விகிதங்கள் தருகிறேன், படித்துத் தமிழ் இலக்கத்தில் எழுதுங்கள் :—

நமது நாடு

இந்தியா நமது தாய்நாடு; அது கீழ்—மேல் சுமார் 2000 மைல், தென்—வடல் 2000 மைல் நீளமுள்ளது. அதன் பரப்பு சுமார் 20,00,000 சதுர மைல். இந்தியாவில் ஒரு ஜில்லாவின் பரப்பு 4,000 சதுரமைல். நமது நாட்டு ஜனத்தொகை சுமார் 40 கோடி; உலக ஜனத்தொகையில் ஐந்தில் ஒருபங்கு. பிரிட்டிஷ் தீவைவிட நமது நாடு 40 மடங்கு பெரியது. இந்தியா 90% விவசாய நாடு; அதில் 520 லட்சம் ஏக்கராக்கள் சாகுபடியாகின்றன—280 கால்வாய்களால்; 120 லட்சம் ஏக்கராக்கள் கிணறுகளால், 60 லட்சம் ஏக்கராக்கள் குளங்களால். நமது நாட்டில் 1,800 லட்சம் மாடுகள் இருக்கின்றன; 870 லட்சம் ஆடுகள் இருக்கின்றன. உலகத்திலேயே 5,400 லட்சம் கால்நடைகள்தான் உள்ளன. அவற்றில் சுமார் $\frac{1}{3}$ இந்தியாவில் உள்ளன. நம் நாட்டில் பல கோடி பசுக்கள் உள்ளன. ஆனல், போதிய தீவனமில்லாமல் இவை நலிகின்றன. அதேமாதிரி நம் குடியானவர்களும் பஞ்சத்தால் வாடுகின்றனர். மிஞ்சிப்போனல் அவர்களுக்கு வருஷம் ரூ. 200 கிடைக்கும்; அதில் ரூ. 30 நிலவரி, 50 கடன் வட்டிக்கு, மீதி 120 ரூபாயில் மாடுகளும் குடும்பமும் பிழைக்கவேண்டும். கோடிக்கணக்கான ஏக்கராக்கள் நமது நாட்டில் தரிசு கிடக்கின்றன. அவற்றையெல்லாம் பாட்டாளிகளுக்குப் பிரித்துத் தரவேண்டும். ஆளுக்கு நான்கு ஏக்கரா, நான்கு மாடுகள் வீதம் தந்து, புதிய விவசாய முறைகளையும், தொழில் முறைகளையும் கற்பித்தால், நமது வறுமை சிறிது ஒழிய வழியுண்டு.

கூஉ. வினையுரிச்சொல்
(Adverb)

1. வினையுரிச்சொல் வினையின் குணத்தை விளக்கும்: இஃது ஒரு வினை, பெயர் உரிச்சொல், வினையுரிச்சொல்—ஆகியவற்றைத் தழுவிப் பொருளை நிறைவாக்கும்; ஆய், ஆக என்னும் ஈறுகளைப் பெறும். வினையெச்சம் வினையுரிச்சொல்லே போலும்.

2. வினையுரிச்சொற்கள் இன்னவிதமாகச் செயல் நடந்தது எனக் குறிக்கும்: மெல்ல வந்தான்; விரைந்து சென்ருன்; மிகவேகமாகப் பாய்ந்தான். ஞானி போலப் பேசினன்; பலமாய் அடித்தான். மரியாதையாய் நட!

3. சில வினையுரிச்சொற்கள் வரிசைக் கிரமத்தைக் காட்டும்: முன்னே நின்ருன்; பின்னே சென்ருன்; அடுத்து வந்தான்; தொடர்ந்து முயன்ருன்.

4. சில இடத்தைக் குறிக்கும்: எங்கே போனய்? அங்கே சென்றேன்; இங்கே வா! இப்புறம் நகர்! மேலே செல்! கிழே இறங்கினன். அகத்தே புகுந்தான்; புறத்தே திரிந்தான்.

5. சில காலம் குறிக்கும்: இன்று வருவேன்; நாளைத் தருவேன்; நேற்று வந்தேன். அப்போது சொன்னேன். அடிக்கடி நைக்காதே! எப்போது வருவீர்? எப்பொழுதும் காத்திருக்கிறேன். ஒரு போதும் பொய் சொல்லாதே! நெடுநாள் முயன்றேன்.

6. சில அளவைக் குறிக்கும்: அவ்வளவும் தின்ருன்; கொஞ்சமாய்த் தந்தான். மிகுதியாய்ப் பேசிஞன். அதிகமாய் உழைத்தான்.

இப்படியே வினைகளை அணைந்துவரும் வினையுரிச் சொற்களைக் கண்டுகொள்க.

146. பெயர்க்கணி யான பெயருரி போலே
வினைக்கணி யான வினையுரி பலவாம்.

அடியில் வரும் தொடர்களில் வினையுரிச் சொற்களைத் தேர்ந்தெழுதுக:

முருகன் குடும்பம்

முருகன் எளிய வாழ்வு வாழ்ந்தான்; அவனது குடும்பம் மிகப்பெரிது; உழைத்தே பிழைப்பது: முருகன் பாட்டி இராட்டினம் சுற்றுகிருள்; பாட்டன் தினம் நான்கு முழம் சிரமப்பட்டு நெய்கிருன்; முருகன் தந்தை விறகு வெட்டி விற்றுவருவான்; தாய் வீடுகளில் அரிசி தீட்டித் தவிடு, குறுணை கூடை நிரம்பக் கொண்டு வருவாள்; முருகன் மனைவி அடுப்பு மூட்டிச் சமைப்பாள். அவள் கணவனுக்குரிய கடமைகளை, நன்ருக நிறைவேற்றிஞள். அவன் வயலில் உழுது பாடுபட்டு உழைத்தான். அவன் மக்கள் சிறு சிறு ஊழியஞ் செய்து, ஆளுக்கு ஓரணு இரண்டணு கொண்டுவந்து கொடுத்தார்கள். முருகன் அண்ணன் கண்டித் தோட்டத்தில் வேலை செய்கிருன்; தம்பி மலயாவில் கூலிவேலை செய்கிருன். முருகன் அக்காளை நல்ல இடத்தில் கட்டிக் கொடுத்திருக்கிறது. மாப்பிள்ளை கணக்கு வேலை பார்க்கிருன். மாமஞர், மாமியார், அத்தை, சிற்றப்பன், பெரியப்பன், சின்

ஞாயி, பெரியாயி, மைத்துனன், மருமகன், அத்தான், மச்சான், தங்கச்சி, கொழுந்தனார், சகலன் (மனைவி தங்கை கணவன்), அண்ணி, கொழுந்தி, நாத்தி, ஓரகத்தி, அம்மான் எல்லாரும் அந்தத் தெரு நிரம்ப இருக்கின்றனர். எல்லாரும் ஒற்றுமையாக வாழ்கின்றனர். சேர்ந்து வாழ்வார் திருவுடன் வாழ்வார்.

சொல்லிலக்கணம் முற்றிற்று.

III. சொற்றொடர் இலக்கணம்
(Syntax)

சுரு. தொடர் வகை

1. தொடர்களையும், எழுவாய் பயனிலை செயப்படு பொருள் ஆகிய தொடர் உறுப்புக்களையும் முன்பே ஆராய்ந்தோம். இப்போது தொடரின் வகையும், தொகைவகையும், வழுவமைதியும் மரபும், சொற் புணர்ச்சியும், தொடரின் பயனும் ஆராய்வோம் :

147. **தொடர், தொகை, மரபுடன் புணர்ச்சி, கட்டுரை**
தொட ரிலக்கணம் துலக்குவ தாமே.

கட்டுக்கோப்புடன் தொடர்களை யமைப்பதும் மொழிவதுமே இலக்கணத்தின் பயன்.

2. தமிழ்த் தொடர்களில் பெரும்பாலும் முதலில் எழுவாய், அதைச் சார்ந்த சொற்கள் ; பிறகு செயப்படு பொருள், அதன் விரிவு ; பிறகு பயனிலை விரிவு ; முடிவில் பயனிலை வரும்.

(i) நல்லன்பர், (ii) பொதுநலப் பணிகளைத் (iii) தம்மால் இயன்றமட்டும் போற்றுவர்.

3. பெயர் வினைகளை அடுத்து (அடைந்து), அவற்றின் பொருளைப் பெருக்கி விளக்கும் மொழிகள் அடைமொழிகளாம் (**Adjuncts or Compliments**). மேற் சொன்ன தொடரில்,

(i) நல்லன்பர் : நல்ல+அன்பர். அன்பர் எழுவாய்; அதற்கு அடைமொழி நல்ல. (ii) பணிகளை செயப்படு பொருள்; அதற்கு அடைமொழி, பொது நல (மான) (iii) போற்றுவர் பயனிலை; அதற்கு அடைமொழி தம்மால் இயன்றமட்டும்.

4. தொடர்கள் மூன்று வகைப்படும் : I தனித் தொடர். II தொடர் தொடர். III கலப்புத் தொடர்.

148. தனித்தொடர், தொடர்தொடர், கலப்புத் தொடரெனத்
தொடர்கள் மூன்று தொகுதியா கும்மே.

I தனித்தொடர் (Simple Sentence) : இஃது ஒரு எழுவாய், ஒரு செயப்படுபொருள், ஒரு பயனிலையைக் கொண்ட தொடர். இதில் பெயர், வினை, செயப்படு பொருளை அடுத்து அடைமொழிகளும் வரலாம்.

149. எழுவாய், பயனிலை, செயப்படு பொருளுடன்
தனித்தொடர் அடையும் சார்ந்து வருமே:

வீரமாமுனிவர் தேம்பாவணியைப் பாடினார். இதில் எழுவாய் பயனிலை செயப்படுபொருள் எவை ?

(க) கல்விமிக்க (உ) உமறுப்புலவர் (ச) சீறுப்புராணம் என்னும் (ங) காவியத்தை (ரு) நயமுறச் (ரு) செய்தார்.

இத்தொடரில் (உ) எழுவாய் (க) அதன் அடை; (ங) செயப்படுபொருள் (ச) அதன் அடை ; (ரு) பயனிலை (ரு) அதன் அடை.

அடியில் வரும் தனித் தொடர்களைப் பகுத்தெழுதுக : (தொடர்ப்பகுப்பு=Analysis). வீரமாமுனிவர் என்னும் கிறித்தவப் பெரியார் தமிழை நன்றாகக் கற்றார். அவரே சதுர அகராதி செய்தார்.

II தொடர் தொடர் (Compound Sentence) தனித் தொடர்கள் இரண்டும் பலவும் தொடர்ந்து வருவது தொடர் தொடராகும். இதில் முதல் தொடரின் எழுவாய் மற்றத் தொடர்களுக்கும் ஆகும்; அல்லது, அதன் சுட்டுப்பெயர் (Pronoun) வரும்; அல்லது எச்சவினைகள் பல வந்து ஒரு பயனிலையால் முடியும்.

150. பலதனித் தொடர்கள் எழுவாய், சுட்டுடன்
தொடர்ந்து வருவது தொடர் தொடராமே:

(i) அரசர் அண்ணாமலை செட்டியார், செட்டி நாட்டிற் பிறந்தார்; தன் முயற்சியால் பெருஞ் செல்வரானார்; சிதம்பரத்தில் ஒரு பெரிய சர்வகலாசாலை நாட்டினார்; காலத்திற் கேற்ற தானதருமங்களைச் செய்தார்; தமிழ் இசை இயக்கத்தை வெற்றிபெற நடத்தினார்; அவர் புகழ் நாடெங்கும் பரவி யுள்ளது.

(ii) ஸர் அண்ணாமலை செட்டியார் எந்தக் காரியத்தை மேற்கொண்டாலும், ஆழ்ந்து சிந்தித்து, தக்கவரிடம் ஆலோசித்து, அதற்கேற்ற பொருளைச் சேமித்து, தாமே தொடங்கி, ஊக்கி, முன்னின்று நிறைவேற்றுவார்.

முதல் தொடரில், அண்ணாமலை செட்டியார் என்னும் எழுவாயே, எல்லாத் தொடர்தொடர்களுக்கும் ஆனது; அவர் சுட்டுப்பெயர். இரண்டாந் தொடரில் சிந்தித்து, ஆலோசித்து, சேமித்து, தொடங்கி, ஊக்கி, முன்னின்று ஆகிய எல்லாம் எச்ச வினைகள்; நிறைவேற்றுவார் என்பது அவை முடியும் முற்றுவினை.

III கலப்புத்தொடர் (Complex Sentence) தலைத் தொடருடன் (Principal Sentence) ஒரு சார்புத்

தொடரும் (Subordinate Sentence) கூடி வருவது. சார்புத் தொடர் தலைத்தொடரைத் தழுவி என்று என உம் என்னும் சொற்களால் இணைந்திருக்கும்.

151\. தலைத்தொட ருடனே சார்புத் தொடரும்
என்று, என, உம் என்றே யிணைந்து,
கலந்து வருவது கலப்புத் தொடராம்:

ஆறுமுகநாவலர் தமிழையும் சைவசமயத்தையும் காக்கக் கருதி, "தமிழர்களே, தாய்மொழியைப் போற்றுங்கள்; நாடோறும் தேவார திருவாசகங்களை ஓதுங்கள்; பெரியபுராணம் படியுங்கள், திருக்கோயில் புகுங்கள்!" என்று உபதேசித்தார்.

இக்கலப்புத் தொடரில், ஆறுமுகநாவலர் எழுவாய்; உபதேசித்தார் பயனிலை; மற்றவை அதைச் சார்ந்த தொடர்கள்; கோட்புக்குள்ளிருப்பது " " **தற்சொல்** (Direct Speech).

(i) ஸ்ரீ ஆறுமுகநாவலர், தமிழர் உய்யவேண்டின், (iv) இலக்கண இலக்கியங்களைக் கற்கவேண்டுமென்றும், (v) எங்கும் தமிழ் முழக்கம் செய்யவேண்டுமென்றும் தம் (ii) நாட்டினரைத் (iii) தூண்டினார்.

(i) எழுவாய். (ii) செயப்படுபொருள். (iii) பயனிலை; (iv) (v) பயனிலைச் சார்புகள்.

இதில் (iv) (v) ஆறுமுகநாவலர் தூண்டினார் என்று பிறர் சொல்வது; ஆதலால் இதனைப் **பிறசொல்** (Indirect Speech) என்பர். இதில் கோட்பிராது.

152\. தானே சொல்வது தற்சொல் லாகும்,
பிறர்சொல் வதுவே பிறசொல் லாகும்.

உரைநடை: உலகில் பல மொழிகள் உள்ளன; எத்தனையோ அரிய இலக்கியங்கள் உள்ளன. அவையெல்லாம் தொடர்களின் கூட்டமே. தொடர்களை அழுத்

தந் திருத்தமாகப் பேசவேண்டும் ; எழுதவேண்டும். உரக்க நினைப்பதே பேச்சு ; பேசுமுன் சிந்திக்க வேண்டும் ; எந்தப் பொருளைப்பற்றிப் பேசப்போகி ேறோம் ; அதன் தன்மையென்ன, பயனென்ன, அப் பயனை அடைய நாம் செய்யவேண்டிய தென்ன ? அப்பயனைப் பெருவிட்டால் என்ன தாழ்வு ? அப் பயனைப் பெற்றவர் யார் ? அப்பொருள்பற்றி அறிஞர் கள் என்ன சொல்லுகிருர்கள், இலக்கியங்கள் என்ன சொல்லுகின்றன.....? என ஆராயவேண்டும். பிறகு இத்தலைப்புகளை விளக்கும் குறிப்புகள் எடுக்க வேண் டும். அக் குறிப்புகளைக்கொண்டு தனியாக ஒருமுறை பேசிப்பார்க்க வேண்டும். நிலைக்கண்ணுடி முன் நின்று, உணர்ச்சிக் கேற்றபடி பாவனைகாட்டிப் பேசவேண்டும். நவரசபாவனை "நாடகக்கலை" என் னும் நூலில் விளக்கப் பெற்றுள்ளது, காண்க. பிறகு குறித்த விஷயத்தை உணர்ந்தவாறே எழுதிப் பழகவேண்டும். கருத்துக்களைப் பத்திபத்தியாக (Paragraph) வைத்தெழுத வேண்டும். இப்படி மன வுணர்ச்சியை மாசற்ற தொடர்களால் எழுதி விளக் குவதே கட்டுரை, கருத்துரை, மதிப்புரை, சிறுகதை, பெருங்கதை ஆகும். உள்ளுணர்ந்த கருத்துக்களை உரைப்பது உரைநடை, வசனம் ; இசைபெற, அணி பெற, இனிய செய்யுளாக இயற்றுவது செய் யுள் ; கவிப்பது கவிதை. எதைச் சொன்னலும் எழுதினலும் முன்சொன்னபடி முறையாகச் சிந் தித்து, மனத்திற்குள் சொல்லிப் பார்த்துப் பிறகு பேச, எழுதவேண்டும். கம்ப ராமாயணத்திலிருந்து ஒரு காட்சியை எழுதுகிறேன். அதில் உரைநடை யிலக்கணம் காண்க :

வீரன் கடமை

ஆசைவலைப் படாமல், தலைவன் ஆணையை நிறைவேற்றுதல் வீரன் கடமை. அங்கதன் எவ்வாறு இராமன் இட்ட ஆணையை நிறைவேற்றினன் என்பதை இக்கட்டுரையில் காணலாம்:

இராமசேனை இலங்கைக்கு வந்துவிட்டது; இதோ இராவணக் கும்பல் வேரோடழியப் போகிறது; இந்த அழிவிலிருந்து தப்ப இராவணனுக்குக் கருணை வள்ளலான இராமன், மற்றொரு சந்தர்ப்பம் அளித்தான்: அங்கதனை அழைத்தான்;

"அங்கதா, செல்; காமத்தால் கண்கெட்ட எதிரியிடம் இவ்வாறு சொல்: 'மரியாதையாகச் சீதையைத் தா! இன்றேல் உனது தலை சிதறும்; நீ செய்தது வீரமில்லை; அறமில்லை; அதர்மம்! அழிவைத் தேடிக்கொள்ளாதே!' "

"ஆணையை நிறைவேற்றுகிறேன்" என்று வீரச்சிங்கமான அங்கதன் அம்புபோலப் பறந்து சென்று இராவணன்முன் நின்றான்.

இராவணன்: நீ யார்?

அங்கதன்: ஆதிநாயகன், வேதநாயகன், சீதைநாயகன் ஆன இராமனுக்குத் தூதன் யான். முன்னே உன்னைத் தன் வாலிற் கட்டியடித்த வீர வாலியின் மைந்தனே நான், அங்கதன்.

இராவணன்: ஆ, அப்படியா! உந்தை என் நண்பனல்லவனோ? உன் தந்தையைக் கொன்ற இராமனுக்கா தூதனாய்! அட பேதையே! என்னுடன் இரு; சீதை என் மனைவி; நீ என் மகன். அந்த

மனிதன் இன்றோ நாளையோ இறந்துபோவான்; பிறகு உன் அரசை உனக்கே தந்து பட்டாபிஷேகம் செய்வேன்......

அங்கதன் : ஹஹஹ! நீ எனக்கா பட்டங்கட்டுவாய்! உன்னிடமா நான் அரசைப் பெறவேண்டும்? நாயிடமா சிங்கம் அரசு பெறுவது?...உன் இலங்கை இதோ அழியப் போகிறதே!

வாய்தரத் தக்க சொல்லி
என்னையுன் வசஞ்செய் வாயேல்,
ஆய்தரத் தக்க தன்றே
தூது வந்(து) அரச தாள்கை ;
நீதரக் கொள்வேன் யானே,
இதற்கினி நிகர்வே றெண்ணின்,
நாய்தரக் கொள்ளும் சீயம்
நல்லர சென்று நக்கான் !

பிறகு அங்கதன் தான் வந்த காரியத்தைத் தைரியமாகச் சொல்லி, "இராவணா, தேவியை விடு! இன்றேல் ஆவியை விடுவாய்!" என்றான். இராவணன் அவனைத் தின்றுவிடுவது போலச் சினந்தான்; அவனைப்பற்றிக் கடித்துண்ண அரக்கரை ஏவினான். அங்கதன் அனைவரையும் எற்றி யெறிந்து, இராமனிடம் சென்று, "அவன் தலையோடுதான் ஆசை போகும்" என்றான்.

153. எடுத்த பொருளை எண்ணிக் குறித்துத்
தன்மையும் பயனும் புலவர் கருத்தும்
தேர்ந்து தெளிவாய்ச் செப்பிப் பார்த்துப்
பத்தி வகுத்துப் பழுதறக் கட்டுரை
எழுதுவர் எழுதும் இயல்பறிந் தோரே.

* ௬௪. தொகை நிலைகள்
(Elliptical Expressions)

1. "தொகை" என்றால் தொக்கு (மறைந்து) நிற்றல். சொற்கள் சேரும்போது, உருபுகள் தொக்கு நிற்றல் தொகைநிலையாம். அவை ஆறு வகைப்படும் :—

(க) வேற்றுமைத் தொகை
(உ) வினைத்தொகை
(ங) பண்புத்தொகை
(ச) உவமைத் தொகை
(ரு) உம்மைத்தொகை
(சா) அன்மொழித் தொகை.

க. **வேற்றுமைத் தொகை:** இரண்டு முதல் ஏழு வரையில் உள்ள வேற்றுமை யுருபுகள் தொக்கு நிற்பது. வேற்றுமைக் கேற்றபடி தொகையின் பெயரும் அமையும் : **வேட்டி வாங்கினான்**—இஃது இரண்டாம் வேற்றுமைத் தொகை. வேற்றுமையுருபு தொகாமல் வெளிப்படையாக நின்றால் தொகாநிலை அல்லது வேற்றுமைவிரி ஆகும் : **வேட்டியை வாங்கினான்.** ஆறுவகையான வேற்றுமைத் தொகையும் விரியும் அடியிற் காண்க :—

---
* இதுமுதல் உதாரணப்பாடங்களும் விதிகளுடன் இணைந்துள்ளன.

	வேற்றுமைத் தொகை	உருபு	வேற்றுமை விரி
இரண்டாம்	வயல் உழுதான்	ஐ	வயலை உழுதான்
மூன்றும்	தலை வணங்கினான்	ஆல்	தலையால் வணங்கினான்
நான்காம்	இராமன் தம்பி	கு	இராமனுக்குத் தம்பி
ஐந்தாம்	நகர் நீங்கினான்	இன்	நகரின் நீங்கினான்
ஆறும்	சிங்கன் வாள்	அது	சிங்கனது வாள்
ஏழாம்	வீடு புகுந்தான்	கண்	வீட்டின்கண் புகுந்தான்

இத் தொடரில் தொக்கிநிற்கும் வேற்றுமை யுருபுகளை விரித்தெழுதுக:

தனவணிகர் ஊர் நீங்கிக் கப்பலேறித் தொலை நாடு சென்று, தொழில் நடத்திப் பொருள் செழித்துத் தானதருமம் செய்கின்றனர்.

உ. வினைத்தொகை, காலம் கரந்த பெயரெச்சம். இதில் விகுதியும், இடைநிலையும் மறைந்து, வினைப் பகுதி மட்டும் நிற்கும்; இது பெயர்ச் சொல்லைத் தழுவி வரும்; முக்காலத்திற்கும் பொதுவாகும்.

காட்டு :—சுடு சரம் என்பது முன்னே சுட்ட, இப்போது சுடுகின்ற, இனிச் சுடப்போகிற சரம் என விரியும்.

எறிவேல், கொல்யானை, வீழ்புனல், விளைவயல், வெடிகுண்டு— இந்த வினைத்தொகைகளையும் விரித்துக் கூறுக!

ங. பண்புத் தொகை—ஆகிய என்னும் பண்பு (குணத்தைக் காட்டும்) உருபு மறைந்து நிற்பது.

(i) வண்ணம், (ii) வடிவு, (iii) சுவை, (iv) அளவு ஆகிய எல்லாப் பண்புகளையும் இஃது உணர்த்தும் : (1) செந்தாமரை, வெண்டாமரை ; (2) வட்டவுலகம், சதுர நிலம் (3) இன் சொல் (4) இருவினை, முக்குணம். இவை என்ன பண்பைக் குறிக்கின்றன? ஆகிய என்ற பண்புருபை வைத்து விளக்குக.

காட்டு : வெண்டாமரை — வெண்மையாகிய தாமரை-வண்ணப் பண்பு.

ஒரு பொருளுக்கே இரண்டு பெயர் வருவது இருபெயர் ஒட்டுப் பண்புத்தொகையாம் : சாரைப் பாம்பு, ஆட்டுக் கடா, வேல மரம்.

செம்பொன் அம்பலம் என்பது பன்மொழித் தொடர்.

ச. உவமைத் தொகை—போல, போன்ற முதலிய உவமையுருபுகள் மறைந்து வருவது : மதிமுகம் (மதி போன்ற முகம்). மலர்க்கண், கிளிமொழி, துடியிடை, கார்குழல், வேய்த்தோள், பவளவாய், முத்துநகை, அன்ன நடை—இவற்றையும் உவமையுருபுவைத்து விளக்குக !

ரு. உம்மைத்தொகை—உம்உருபு கரந்துவரும் அளவைப் பெயர் : இரண்டரை (இரண்டும் அரையும்)— எண்ணல் உம்மை ; எட்டரைப் பலம்—எடுத்தல் உம்மை ; இரண்டரை ஆழாக்கு — முகத்தல் உம்மை ; நூற்றைம்பது மைல்—நீட்டல் உம்மை. இவற்றை உம் சேர்த்துச் சொல்லுக !

சேர சோழ பாண்டியர்—பன்மொழித்தொடர்.

உம்மைத் தொகை ர், கள் என்னும் பலர்பால் விகுதிகளைப் பெறும்: கபில பரணர் (கபிலரும் பரணரும்).

சீதா ராமர்; தேவ தேவியர்; தாய்தந்தையர்; அண்ணன் றம்பிகள்—இவற்றை விரித்துக் கூறுக!

அஃறிணையிலும் இவ்வாறு வரும்—இராப்பகல்.

௬. அன்மொழித் தொகை—மேற்சொன்ன ஐந்து தொகைளின் புறத்தே பிறப்பது; வேறு மொழிகள் தொக்கு வருவது; வேறு பொருள் தருவது:

(i) பூங்குழல் வந்தாள்: பூவையுடைய குழல்—இரண்டாம் வேற்றுமைத் தொகைப்புறத்தே பிறந்த அன்மொழித் தொகை. இது பூங்குழலையுடைய பெண் என்று இன்னொரு பொருளைத் தருகிறது.

(ii) தாழ்குழல் நடந்தாள்: தாழ்ந்தகுழல்—வினைத்தொகைப்புறத்தே பிறந்த அன்மொழித் தொகை. தாழ்ந்த குழலுடைய பெண் என்பது பொருள்.

(iii) தேன்மொழி பேசினாள்: தேனைப்போன்ற மொழியுடையாளாகிய பெண். உவமைத் தொகைப் புறத்தே பிறந்த அன்மொழித் தொகை.

(iv) ஆண்டகை பொருதான்: ஆண்மையாகிய குணம், பண்பு நிறைந்த வீரன். பண்புத் தொகைப் புறத்தே பிறந்த அன்மொழித் தொகை.

(v) உயிர்மெய் எழுதுக: உயிரும் மெய்யும் கூடிய உயிர்மெய் யெழுத்து. உம்மைத் தொகைப் புறத்தே பிறந்த அன்மொழித் தொகை.

குயில்மொழி, ஆயிழை, கனிமொழி, வாள்விழி, பெருந்தகை, கருங்குழல் — இவை அன்மொழித் தொகை ஆகும்போது எதன் புறத்தே பிறந்தவை யாம்? விளக்குக!

2. மேற் சொன்ன தொகைகள் நான்கிடங் களிற் பொருள் சிறக்கும் :

(i) முன்மொழியில் : வேற்கண் (முன்னுலிருக்கும் வேல் கண்ணின் பொருளைச் சிறப்பிக்கிறது).

(ii) பின்மொழியில் : சுடு தீ (தீ என்றுலே சுடுவது விளங்கும்).

(iii) புறமொழியில் : பூங்குழல் (இம் மொழிக்குப் புறத்தேயுள்ள மலர்க்கூந்தலுடைய பெண்ணைக் குறித்தது.)

(iv) எல்லா மொழிகளிலும் : இராப் பகல் (இரவும் பகலும் என்று எல்லா மொழிகளிலும் இந்த உம்மைத்தொகை பொருள் சிறந்தது).

3. தொகைநிலைத் தொடருக்கு இடையே வல்லொற்று வந்தால் இடத்தொகை, மெல்லினம் வந்தால் பெயர்த் தொகையாகும் : வடுகக் கண்ணன் (வடுக நாட்டிற் பிறந்த கண்ணன்)—இடத்தொகை. வடுகங் கண்ணன் (வடுகன் மகனை கண்ணன்)— பெயர்த் தொகை.

154. **தொகைநிலை தொகாநிலை எனநிலை யிரண்டாம்.**

155. **உருபு தொக்கி வருவது தொகையாம்.**

156. **வேற்றுமை, வினை, பண் புவமை யும்மை**
அன்மொழி யெனத்தொகை ஆறு கும்மே.

157. **இரண்டு முதலேழ் வேற்றுமை மட்டும்**
தொக்கு வருவது வேற்றுமைத் தொகையாம்.

158. ஏவற் பகுதி யுடேன காலம்
கரந்தபெய ரெச்சம் வினைத்தொகை யாமே.

159. ஆகிய வென்னும் பண்புரு நோக்கு
நிறஞ்சுவை யளவுரு விளக்குமத் தொகையும்,
ஒருபெய ருக்கே யிருபெயர் வருவதாம்
இருபெய ரொட்டும் பண்புத் தொகையாம்.

160. உவமை யுருக்கரந் துறுவதத் தொகையே.

161. உம்மையற் றளவை யுரைக்குமத் தொகையே.

162. இன்ெனாரு பொருள்தரும் அன்மொழித் தொகையே.

சூரு. தொகாநிலைத் தொடர்கள் (Non-elliptical Phrases)

உருபுகள் மறையாமல், தொகாமல் தொடர்ந்து வருவது தொகாநிலைத் தொடராகும். அஃது ஒன்பது வகைப்படும் :

1. வினைமுற்றுத் தொடர் — வந்தான் வீரன்; பெரியன் மன்னன்.

2. பெயரெச்சத் தொடர்—வந்த வீரன், பெரிய மன்னன்.

3. வினையெச்சத் தொடர்—வந்து சென்றான்.

4. எழுவாய்த் தொடர்—வீரன் வந்தான் :

5. விளித் தொடர்—கண்ணா வா !

6. வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்—இரப்போர்க்கு ஈந்தான்.

7. இடைத் தொடர்—மற்று ஒன்று.

8. உரித் தொடர்—நனி பேதை.

9. அடுக்குத் தொடர்—பாம்பு, பாம்பு !

இராசராசன்

எழுந்தான் இராசராசன்; "தென்னாட்டை வென்ற வீரர்காள், மறுபடியும் போர்வந் தழைக்கிறது; முரசு கொட்டுங்கள்; கப்பல்களை ஓட்டுங்கள்! கடாரம் செல்வோம்; கடல் கடந்து நமது புலிக் கொடியை நாட்டுவோம்; கடாரம் நமதாகுமுன் மற்றொன்று நினையோம்; வாருங்கள்!" என்றான். "நனி நன்று! புலிக் கொடி வாழ்க! போற்றி போற்றி! அரசர்க்கரசன் வாழ்க வாழ்க!" என்றனர் வீரர். இதற்குள் கப்பல் "தயார், தயார்!" என்று மீகான் சங்கூதினான்.

இதில் வரும் தொகாநிலைத் தொடர்களை வகைப் படுத்தி யெழுதுக!

163. உருபுகள் வெளிப்பட வருவது தொகாநிலை
வினைமுற் றுடனே, பெயர்வினை யெச்சம்
எழுவாய், விளியே, யிடையுரி, யடுக்குடன்
தொகாநிலைத் தொடர்கள் ஒன்பதா கும்மே.

---

௩௩. மரபு (Idioms)

தமிழ் மரபுச் சொற்களை இங்கே ஆராய்வோம்:

1. தென்னம்பிள்ளை யென்கிறோம்; மாங்கன்று என்கிறோம்; மாற்றிச் சொன்னால் நன்றாயில்லை; தொன்று தொட்டு வழக்கத்தில் வந்துவிட்டது; இதற்கே 'மரபு' என்று பெயர்.

164. சான்றோர் வழக்கமே சாற்றல் மரபாம்.

யானைக்குட்டி; பசுங்கன்று; யானைப்பாகன்; ஆட்டிடையன்; வாழைக்கொல்லை, தென்னந் தோப்பு, பூந்தோட்டம்; அணிற் பிள்ளை, காக்காய்க் குஞ்சு.

2. தொடர்களில் சொல்லுக்குப் பொருத்தமான வினையை வழங்க வேண்டும். பொதுச் சொல்லுக்குப் பொதுவினையும், சிறப்புச் சொல்லுக்குச் சிறப்பு வினையும் வழங்கவேண்டும்.

பொதுப் பெயர்கள்: (i) (உடை, பூண், முடி, சட்டை, குல்லாய்) அணி அணிந்தான், தாங்கினான் அல்லது தரித்தான் என்னல் வேண்டும். ஆடை உடுத்தான்; நகை பூண்டான்; முடி சூடினான்; சட்டை போட்டான்; குல்லாய் வைத்தான் எனப் பொருளுக்குத் தக்கபடி வினை யமையவேண்டும்.

(ii) அடிசில் (உண்பது, தின்பது, பருகுவது, நக்குவது) அயின்றான், மிசைந்தான். சோறும், நீரும், சருகும் மிசைந்தான்; அயின்றான். சோறுண்டான்; நீர் பருகினான்; சருகு மென்றான்.

(iii) இயம் (கொட்டி, ஊதி, மீட்டி, முழக்கும் வாத்தியப்பொது) இயம்பினான். வீணை மீட்டினான்; குழல் ஊதினான்; மத்தளம் அடித்தான்; யாழும், குழலும், மத்தளமும் முழங்கின.

(iv) படை (எறிந்து, விடுத்து, வெட்டி, குத்தும் படைக்கலப் பொது) வழங்கினான், தொட்டான். வேல் எறிந்தான், அம்பு விட்டான், வாளால் வெட்டினான்; ஈட்டியாற் குத்தினான்; குண்டு போட்டான்.

165. பொதுச் சொல்லுக்குப் பொதுவினை வழங்குக.
சிறப்புச் சொல்லுக்கு வழங்குக சிறப்பே.

3. ஒரே சொல்லுக்குப் பல பொருளுண்டு; இடத்திற்குத் தக்கபடி பொருள் கொள்ள வேண்டும:

(i) கலை: கலை கற்ருன் (கல்வி); இசைக் கலை (நுண்கலை); கலைக் கொம்பு (ஆண் மான்); கலை யணிந் தாள் (சீலை); கலைவளர்மதி (சந்திரன் கலை); இடகலை, பிங்கலை (நாடி).

(ii) மா: மாவாழ் மார்பன் (திரு); கரிமாதேர்ப் படை (குதிரை); மாப் பூத்தது (மாமரம்); மாப் பணி காரம் (உண்ணும் மா).

பொருள் தெளிவாக விளங்க, மாமரம், மாங் காய், பாய்மா, மாமகள், கலைமான், கலைமகள், அரி உமா என வழங்குவதுண்டு.

4. ஒரே பெயரைப் பல சொற்கள் சிறப்பிக் கும். ஒரே பொருளை அதே பொருளுடைய பல சொற்கள் மிகைப்படுத்திச் சொல்வதுண்டு; இதற்கு மீமிசை எனப்பெயர்: மீ, மிசை—மேல். நாகிளங் கன்று (நாகு=இளமை); மாபெரும் புலவன்; பெரும்பேராசான்; நீளுயர் நெடுமுடியிமயம்.

166. மிகைப் படுத்திச் சொல்வது மீமிசை.

5. சுத்த மடையன், புத்தி யில்லாதவன்! அவன் அறிவாளி; புத்தியில் ஆதவன். என் தலைவிதி வசம்! என் தலைவி திவசம். இப்படிப் பதம் பிரித் தால் பொருள் வேருகும் சொற்களுமுண்டு.

167. குறிப்பிற் கேற்ற பொருளைக் கொள்க.

6. இவ்வளவு என்று அளவறியும் பொருள் களும் உலகில் இல்லாத, அறியாத, பெயர்களும் பெயர் அல்லது வினை கொண்டு முடியும்போது உம் சேர்ப்பதுண்டு: முத்தமிழும் கற்றவர்; மூவேந்தரும் வந்தார் (இவை அறிபொருள்); குதிரைக் கொம்பும்

ஆகாசப் பூவும் என்றுமில்லை (இவை இல்லாத, அறியாத பொருள்).

இரண்டு கண்களும் மங்கல்; அறம்பொருளின்பம் வீடு நான்கும் நலந்தரும்—இவற்றில் உம் சேர்ந்ததேன்?

இருதலைக் கொள்ளி, ஐந்தலை நாகம் என்று உம் சேராதும் வருவதுண்டு.

168. அளவறி, அறியாப் பொருள்கள்உம் பெறுமே.

7. செயப்படு பொருளை எழுவாய் போலச் சொல்லுவதுண்டு:

இந்நூல் அன்பு நிலயத்தார் வெளியிட்டது. இப் பெரிய புராணம் நாவலர் பதிப்பித்தது. இப் படம் இரவிவர்மா எழுதியது. சிவஞானபோதம் மெய்கண்டார் அருளியது. இவற்றுடன் ஐயுருபு வைத்துச் சொல்லுக!

169. செயப்படு பொருள்எழு வாய்போல் வருமே.

8. **அடுக்குத் தொடர்:** விரைவு, மகிழ்ச்சி, அச்சம், சினம், துன்பம், அசை நிலை, இசை நிறை—இவற்றை உணர்த்த ஒரு சொல்லே அடுக்கடுக்காகத் தொடர்ந்து வரும்; அதற்கு **அடுக்குத் தொடர்** என்பர்: போ போ போ விரைவாய்! (விரைவு); வா வா வா கண்ணு! வாழ்க வாழ்க! பொலிக பொலிக! (கிளர்ச்சி, மகிழ்ச்சி); ஐயையோ கள்ளன் கள்ளன்! பாம்பு, பாம்பு! (அச்சம்); ஹா, பிடி, பிடி, அடி, அடி (சினம்); ஹூம், இனிப் பிழையேன், பிழையேன்! (துன்பம்); அன்றே அன்றே! (அசை நிலை);

பாடுகோ, பாடுகோ, பாடுகோ பரமனை! (இசை நிறை).

170. கிளர்சொல் லடுக்கே அடுக்குத் தொடராம்.

9. **இரட்டைக் கிளவி** (கிளவி=சொல்)—இரட்டையாகச் சேர்ந்தே பொருள் தருவது: குளுகுளு வென்று தென்றல் வருகிறது. களகள வென்று இரத்தம் வடிந்தது; சளசள வென்று பேசாதே! படபடக்காதே! துடிதுடிக்காதே! வீட்டைப் பளபள வென்று வைத்துக் கொள்.

அடுக்குத் தொடரில் ஒரே சொல் இரண்டு மூன்று தடவை வரும்; தனியாகவும் பொருள் தரும். இரட்டைச் சொல் இரண்டே தடவை வரும்; தனித்துப் பொருளாகாது.

171. இரட்டையாய் வரும்சொல் இரட்டைக் கிளவி.

10. **அடைமொழியின் மரபைக் காக்க வேண்டும்:** அடை=விசேஷணம். அடைகொள்ளும் மொழிக்கு, அடைகொளி, விசேஷ்யம் என்பர். அடைமொழி இருவகைத்து:

(i) **இயற்கையடை:** இலைமரம் (இலையின்றி மரமில்லை; மரம் என்றாலே இயற்கையாக இலையும் உள்ளது).

உப்பளம், நாண்மலர், தோய் தயிர்; பொற்கோட்டிமயம்; செஞ்ஞாயிறு, அலைகடல், வெடிகுண்டு—இவற்றை விளக்குக.

(ii) **இனமுள்ள அடை:** நெய்க்குடம் இது. இதற்கு இனமாகப் பாற்குடம், மோர்க்குடம் முதலியன உண்டு.

பாற் கிண்ணம், தோட்டக் கனி, கார்த்திகை விளக்கு, பூந்தோட்டம், செந்தாமரை—இவற்றை இனம் விரித்துக் கூறுக !

சில மொழிகள், இனமில்லாத வேறு பொருளைத் தரும் : கோழி கூவிற்று=பொழுது விடிந்தது. நேசத் துருப்புகள் வெற்றிக் கொடி நாட்டின= போர் நின்றது, நம் படைகள் வென்றன.

அடைமொழிகள் பலவகையாக வரும் : செங்கால் அன்னம், தீக்கண் மறவர், வேற்கை முருகன் (அடையும் உறுப்பும் சேர்ந்து வந்தன).

இளமென்பாவை; திருமணப்பந்தர்—(முதலை அடுத்து இரண்டு அடைகள் வந்தன.)

வெற்றி வேற்கை, கருநெடுங் கண்ணாய் ! மலர் நகைச் செவ்வாயாய் !—இவற்றில் முதல் எது, அடை எது, உறுப்பெது ?

திரு வுயர் தடந்திண் வரைப்புய வீரன்—இதில் வரும் அடைகளை விளக்குக!

172. இயல்பும் இனமும் வேறுமாம் அடைமொழி ;
முதலுக் கேற்ற படிவழங் கும்மே.

11. பொருள்களில் சில இயற்கை (அவிகாரம்); சில செயற்கை (விகாரம்). இயற்கைப் பொருள்களுடன் அவற்றின் இயல்பும் சேர்த்துச் சொல்லுவர் : வெந்தீ—தீ வெய்து ; தண்ணீர்—நீர் தண்ணிது ; கருங்காக்கை — காக்கை கரிது.

உண்மை உள்ளது ; பொய் இல்லது—இச் சொற்களில் இயல்பைக் குறிப்பதெவை ?

செயற்கைப் பொருள்களில், இன்ன காரணத்தால் இன்னது இப்படி யானது என்று, காரணம் முதலிலும், ஆக்கம் (ஆனது) பின்னும் வரும்: உரம் போட்டு நீர்ப் பாய்ச்சியதால், பயிர் செழித்தது. நிலம் நல்லது, பயிர் நல்லது; நல்ல வீணை, நல்ல நாதம்—இவற்றில் காரணமும் ஆக்கமும் குறிப்பாக வந்தன.

173. இயற்கையு மியல்பும் இணைந்து வழங்கும்
காரண மாக்கம் காணும் செயற்கையில்.

12. ஒன்று 'இல்லை' என்பதற்குப் பதிலாக, இன்னொன்று 'உண்டு' என்பது மரபு:

செட்டியாரே பயறுள்ளதா? உழுந்தும் துவரையும் உள்ளன. வெல்ல முள்ளதா? நயமான சர்க்கரை யுள்ளது.

அரிசி யிருக்கிறதா? ரூபாவுக்கு நான்குபடி. (இஃது அரிசி உள்ளது, இன்ன விலை என்பதைக் குறித்தது).

174. இல்லை யெனுமல் இருப்பதைச் சொல்வர்.

13. ஒரு குறிப்பினால் சில பொருட் சிறப்பை உணர்த்தலாம்: தங்கக் கிண்ணத்தில் பால் குடிக்கிறவன்; வைரக் கடுக்கன் பேர்வழி; அட்டணைக்கால் போட்டுச் சாப்பிடுகிறவன் (பணக்காரன்).

வாய்க்கும் கைக்கும் சரியாயிருக்கும் (வரவுக்கும் செலவுக்கும் சரி; ஒன்றும் மிஞ்சாது).

14. அஃறிணையை உயர்திணைபோல் வைத்துப் பேசுவதுண்டு: பூவே, புன்னகையை யாரிடம் கற்றாய்? அகத்தை முகமே சொல்லுகிறதே! இந்தப்

பாதை மதுரைக்குப் போகிறது; தன்வினை தன்னைச் சுடும்; மனச்சாட்சியே 'இன்னது செய்யாதே' —இவற்றில் அஃறிணைப் பொருள்கள் கேட்பது போலும், சொல்வது போலும், போவது போலும், செய்வது போலும் காண்கின்றன.

15. உவமை, உருவகங்களில் திணை மாறி வரும்: மெய்கண்டார் என்னும் செங்கதிர்முன் பொய் யிருள் மறைந்தது. (மெய்கண்டார் உயர்திணை; செங் கதிர் அஃறிணை). முஹம்மது ஸல்லத்திற்கு ஆலியும், உமாரும் இரு கைகள். (உயர்திணை முதல், அஃறிணை உறுப்புப் பெயரான கைகளுடன் மயங்கிற்று).

ஏசுநாதர் நிலம் போலப் பொறுமையாளர். கல்வி மிக்க அறிஞர் போலக் கனிக் கிளை பணிந்தது— இவற்றில் மயங்கிய திணைகளை விளக்குக!

இதே மாதிரி பால் மயக்கமும் உண்டு—காளி போன்ற வீரன்; திருமகள் போன்ற அழகன்; கலை மகள் போன்ற அறிஞன் (ஆண்பால் பெண்பாலு டன் மயங்கியது).

175. பாலுந் திணையும் உவமையில் மயங்கும்.

௬௭. வழு வமைதி
(Sanctioned Deviations)

வழு என்றால் குற்றம். இலக்கணமாகப் பேசுவது வழாநிலை. இலக்கணந் தப்பிப் பிழைபடப்பேசுவது வழுநிலை. ஆனால், காரணத்தை யொட்டிச் சில வழுக்களைப் பெரியோர் ஒப்புகின்றனர். அவை வழுவமைதி எனப்படும் (வழு+அமைதி — பெரியோர் ஒப்ப அமைந்த வழு) :

நாளை வருவேன் (வழாநிலை); நாளை வந்தேன் (வழுநிலை); இதோ வந்துவிட்டேன் (விரைவு கருதிச் சொல்லும் வழுவமைதி).

இத்தொடர்களில் உள்ள வழுக்களைத் திருத்துக :

முருகன் வந்தது (திணை வழு); வள்ளி தினை காத்தான் (பால் வழு); நான் பார்த்தான் (இடவழு); நேற்று வருவேன் (கால வழு); பஞ்சபாண்டவர் எண்மரா, பதின்மரா? (வினா வழு); பஞ்ச பாண்டவர் கட்டில் காலைப் போல மூவர் (விடை வழு); மாட்டுக் குட்டியும் ஆட்டுக் கன்றும் என்ன விலை? (மரபு வழு).

வழுவமைதியிற் பலவகை யுண்டு :

I. திணை வழு வமைதி : உயர்திணை அஃறிணையாகவும், அஃறிணை உயர்திணையாகவும் மாறி வருவது. இஃது ஐந்து பொருளில் வரும் :

(i) மகிழ்வு : காவேரியம்மன் பொங்கி வருகிறாள். (பசுவைப் பார்த்து) இலக்குமி வந்தாள்! வா, அம்மா!

(ii) உயர்வு : கிளியாரே பேசும்! நாலடியார், திருக்கோவையார் (அஃறிணை உயர்திணையானது). அடிகள் வந்தார்கள் (ஒருமை பன்மையானது).

(iii) சிறப்பு : என் செல்வம் இந்தக் குழந்தை; என் இன்பம் இந்தப் பாவை (உயர்திணை அஃறிணை யானது).

(iv) சினம் : அட கழுதை, புத்தி யெங்கே? அட, வள் வள் என்று விழாதே, நாய்! (உயர்திணை அஃறிணையானது).

(v) இழிப்பு : அடியார் ஆண்டவன் உடைமை (உயர்திணை அஃறிணைப் பொருளானது).

இதே மாதிரி எல்லா வழு வமைதிகளுக்கும் பொருளறிக!

II. பால் வழு வமைதி : பால்கள் மயங்கி வருவது.

(i) வா, என் மகனே, தங்கமே, கண்ணே, மணியே! (ஆண்பால் ஒன்றன்பா லானது). வா என் மகனே, என் கண்ணம்மா! (ஆண் பெண் பாலானது).

(ii) அன்னையாய் அருள் புரி அப்பன், ஆண்டவன் (ஆண்பால் பெண்பாலானது).

ஆண்மை யில்லாத அறுதலி; மரியாதை கெட்ட மாடு; என் கண்ணு சமர்த்து—இவற்றில் பால்கள் எப்படி மயங்கின?

திணை, பால் வழுவமைதி : தொடர்களில் உயர் திணை, அஃறிணை; ஆண் பெண் ஒன்றன் பால்கள் கலந்து வந்தால் எந்த வினைகொண்டு முடிவது என்ற ஐயம் உண்டாகும்; அப்போது, சிறப்பு, இழிவு

மிகுதி என்னும் காரணங் கொண்டு வினையமைக்க வேண்டும் :

தில்லியிலிருந்து சிவாஜியும் குதிரையும் சேமமாக வந்தார்கள் (உயர்வால் உயர் வினை).

தானும் மனைவியும் சேர்ந்து வந்தான் (சிறப்பால் ஆண் முடிபு).

மூர்க்கனும், முதலையும் கொண்டது விடா (இழிவால் அஃறிணை முடிபு).

போரில் ஆண்களும், பெண்களும், சிறுவரும், விலங்குகளும் இறந்தார்கள் (மிகுதி பற்றி உயர்திணை முடிபு).

சோவியத் - ஜெர்மன் போரில், மக்களும், ஆடு மாடுகளும், விமானங்களும், புகைவண்டிகளும், டாங்குகளும் ஏராளமாக அழிந்தன. (மிகுதிபற்றி அஃறிணை முடிபு).

III. எண் வழுவமைதி : ஒருமைக்குப் பன்மை, பன்மைக்கு ஒருமை மாறி வருவது—

இருளெல்லாம் மறைந்தது; தரையெல்லாம் சிலிர்த்தது; உடலெல்லாம் வியர்த்தது; காற்றெல்லாம் மணத்தது (ஒன்றன்பாலுடன் எல்லாம் என்னும் பன்மை வந்தது). எட்டுத் திக்கும் எதிரொலித்தது; இரண்டு கண்ணும் சிவந்தது (பலவின்பாலுக்கு ஒருமைவினை வந்தது).

IV. இடவழு வமைதி : பாரத மைந்தன் (நான்) பிறருக்கு அடிமையாவானா? (தன்மைக்குப் படர்க்கை வந்தது).

தந்தை (தந்தையே உமது) சொற்படி நடப்பேன் (முன்னிலைக்குப் படர்க்கை வந்தது). துரியோதனனா வணங்குவான்? (துரியோதனனாகிய நானா); நீயோ கேட்பவன்?

V. கால வழுவமைதி: (i) முக்காலப் பொருளை நிகழ்காலத்தில் கூறுவதுண்டு: தெய்வம் இருக்கிறது; அன்பரைக் கடவுள் காக்கிறார்.

(ii) முக்காலப் பொருளை எதிர்காலத்திற் சொல்வதுண்டு; அறம் வெல்லும்; உண்மை நிலைக்கும்; பொய் அழியும்: வானம் பொழியும்; நிலம் விளையும்.

(iii) விரைவு, மிகுதி, தெளிவு, இயல்பு ஆகிய காரணங்களால், காலம் மாறி வருதலுண்டு: தம்பீ, விரைவாக வா! இதோ வந்துவிட்டேன், அண்ணா! (விரைவால் எதிர்காலத்திற்கு நிகழ்காலம் வந்தது).

பிறமாதரைத் தொட்டாயோ கெட்டாய்! சூதாடினாயோ ஒழிந்தாய்! கட்குடித்தாயோ செத்தாய்! (இச்செயலுள்ளோர் மிகுதியும் கெடுவதைக் காட்ட எதிர்காலத்திற்கு இறந்தகாலம் வந்தது).

நல்லது செய்தால் நல்ல பெயர் வருகிறது; கெட்டது செய்தால், கெட்ட பெயர் வருகிறது. (தெளிவான உறுதியால், எதிர்காலத்திற்கு நிகழ் காலம் வந்தது).

எங்கள் காலத்தில், ஆசிரியருக்கு அடங்கி நடப்போம்; பாடங்களைக் கருத்துடன் படிப்போம். (இயல்பு, (வழக்கம்) ஒட்டி இறந்தகாலத்திற்கு எதிர் காலம் வந்தது).

VI. **வினாக்கள்:** சரியாக அமைய வேண்டும். அவை ஆறுவகையாகும்:

(i) **அறிவினா** (அறிந்தே கேட்டல்): மகனே, பெரியபுராணம் யார் பாடியது?

(ii) **அறியா வினா** (அறியாததைக் கேட்டல்): தந்தையே, இறைவனை அறிவதெப்படி?

(iii) **ஐய வினா** (சந்தேகம் கேட்டல்): அதோ வருவது ஆளா, ஆவா?

(iv) **கொள் வினா** (ஒரு பொருளை வாங்கிக்கொள்ள வினவுதல்): சீனி இருக்கிறதா? வீசை விலையென்ன?

(v) **கொடை வினா:** (இல்லாததை, கொடுக்கும் பொருட்டு, கேட்பது)—உனக்குப் புத்தகம் இல்லையோ? நல்ல துணிமணி யில்லையோ? (இதோ நான் தருகிறேன், கவலைப்படாதே! என்று பொருள்).

(vi) **ஏவல் வினா:** தம்பீ, படித்தாயா? (இன்றேல் உடனே படி! என்பது பொருள்).

VII. **விடைகள்:** எண்வகையாகும்:—

(i) **சுட்டு விடை** (குறித்துக் காட்டும்): ஊருக்கு வழி யெது? இது வழி.

(ii) **மறை விடை** (எதிர்மறுக்கும்): இனிப் பொய் சொல்வாயா? சொல்ல மாட்டேன்.

(iii) **நேர் விடை** (உடன்பாடுரைக்கும்): நாட்டுக்கு உயிர் தருவாயா? தருவேன்.

(iv) ஏவல் விடை (எதிராக ஏவும்): ஒரு பாட்டுப் பாடுவாயா? நீ முதலிற் பாடு!

(v) எதிர்வினு விடை (எதிர்க்கேள்வி கேட்கும்): ஷேக்ஸ்பியர் படித்திருக்கிருயா? நீ கம்பன் படித் திருக்கிருயா?

(vi) உற்றது சொல் விடை (நேர்ந்ததைச் சொல்லு வது): தம்பீ, என் ஒருமாதிரி யிருக்கிருய்? இரவில் உறக்கமில்லே; தலே வலிக்கிறது.

(vii) உறுவது சொல் விடை (இனி நேர்வதைச் சொல்லும்): மலே யேறுவாயா? கால் வலிக்குமே.

(viii) இன மொழி விடை (வினைவிற்கு இனமான ஒன்றைச் சொல்லல்): மோர் தருவாயா? நீர் தருகி றேன்; பானகந் தருகிறேன்; பால் தருகிறேன்.

VIII. இனம்—கினம்: நாம் அடிக்கடி இப் படிப் பேசுகிருேம்:—அவனுக்குப் பணங்கிணம் உண்டா? ஏதாவது பாத்திரம் கீத்திரம் கொண்டு வா! கிணம், கீத்திரம்—இவற்றிற்குப் பொருளில்லே; இவை அகராதியில் இல்லே. என்ருலும் இவை, முதலியவை, வகையரு, ஏதாவது என்பன அதற்கு இனமானது என்பவற்றைக் குறிக்கின்றன. "ஏதா வது நாற்காலி கீற்காலி கொண்டுவா!" என் ருல் நாற்காலி யில்லாவிட்டால் ஒரு முக்காலி, பலகை ஏதாவது ஒன்றை உட்காரக் கொண்டுவா என்று பொருள். சம்பளம் கிம்பளம், நகை கிகை, ஆள் கீள், வேட்டி கீட்டி என்பனவெல்லாம் முதன்மையான பொருள் அல்லது அதன் இனமானது என்பதைக்

குறிக்கும். இவற்றை இனம்—கினச் சொற்கள் என்போம்.

176. புலவர் ஒப்பிய வழூவழு வமைதியாம்;
திணை, பால் எண், இடம், காலம் வினு விடை
இனங்கின மெனவழு வமைதிஎண் வகைத்தாம்;
மகிழ்வுயர் விழிவு சினஞ்சிறப் பென்னும்
பொருளில் அமைந்து வரும்வழு வமைதி.

கூஅ. வழக்கு

சொற்களை நாம் பலவிதமாக வழங்குவது வழக்கம்; அதற்கு வழக்கு (வழக்கம்) என்று பெயர். வழக்கு இரண்டு வகைப்படும்:

(I) இயல்பு வழக்கு என்பது இயல்பாக உரிய சொல்லால் ஒரு பொருளைக் குறிப்பது: தண்ணீர், வாசல்.

(II) தகுதி வழக்கு (Conventional term) இயல்பான சொல்லைவிட்டு அதற்குத்தக்க வேறு சொல்லால் நயமாக வழங்குவது: தாலி பெருகியது; நல்லபாம்பு.

இயல்பு வழக்கு மூன்று வகைப்படும்:—

(i) இலக்கண முடையது: இலக்கண விதிகளுக்குப் பொருந்திய திருத்தமான சொல்: விளக்கு, நெய், சுடர், தீ, ஒளி.

(ii) இலக்கணப் போலி: இது தொன்றுதொட்டுப் பெரியோர் வழங்கியது; இலக்கணமுடையது போலிருக்கும்; ஆனல் இலக்கண விதிப்படியிராது.

இலக்கணம்	இலக்கணப் போலி
கோ + இல் = கோவில்	கோயில்
இல் + முன் = இல்முன்	முன்றில்
இல் + வாய் = இல்வாய்	வாயில்

(iii) **மரூஉ மொழி** (Corrupt word): இலக்கணம் சிதைந்து, சொல் உருத்திரிந்து வழங்குவது. பேச்சு வழக்கில் நாம் ஏராளமான மரூஉக்களைக் கையாளு கின்றோம்.

நாழியாச்சு (ஆனது); ஓடிப்போச்சு (போனது) நீஞ்சினன் (நீந்தினன்); ஊரெல்லாந் திரிஞ்சான் (திரிந்தான்); அருமந்தப் பிள்ளை (அருமருந்தன்ன பிள்ளை); சமச்சு வச்சிருக்கேன் (சமைத்து வைத்தி ருக்கிறேன்); நன்னருக்கு (நன்று யிருக்கிறது); இருந்துட்டுப் போ (இருந்துவிட்டுப் போ); வரணும் (வரவேண்டும்); பேர் (பெயர்).

தகுதி வழக்கு மூன்று வகைப்படும் :—

(i) **இடக்கரடக்கல்** (Epheumism): ஆபாசமான இடக்கான, வெளிப்படையாகச் சொல்லப் பிடிக்கா தவற்றை அடக்கமாக மறைத்துச் சொல்லல். இடக்கர் = இடக்கு = வெளிப்படையாகச் சொல்லத் தகாதது; அடக்கு = மறைவாகச் சொல்லல். இதை மறைவுச் சொல் என்னலாம்: கால் கழுவுதல்—மலங் கழுவுதல். வாய்பூசல்—வாய்கழுவல்.

(ii) **மங்கல மொழி**: நலமல்லாததை, அமங்கல மானதை மங்கலமாகச் சொல்லல்: சிவபதம் சேர்ந் தான் (இறந்தான்). துஞ்சிய (இறந்த) பெருவழுதி. நன்காடு (சுடுகாடு). நல்ல (விஷப்) பாம்பு.

(iii) குழூஉக் குறி: ஒரு குழுவினர் (குழு=கூட்டம்) பிறர் அறியாது, தமக்கே விளங்கும்படி (சங்கேதமாக) ஒரு பொருளின் பெயரை வழங்குவது. பறி (பொன்—தட்டார் சொல்வது); சொல் விளம்பி (கள்—வேடர் சொல்வது); பணிவெள்ளை (எட்டு ரூபா); குணவெள்ளை (மூன்று ரூபா—வணிகர் சொல்வது).

இவை யெல்லாம் உலக வழக்கு (Common usage), உலகுடன் பழகும்போது நாம் பொதுவாகப் பேசும் முறை.

செய்யுள் வழக்கு (Poetic usage) ஒன்றுண்டு; அது கவிகளுக்குச் சிறப்பான முறை. செய்யுள் என்பது என்ன? உயிரும் உடலும்போல ஆழ்ந்த பொருளுக்கேற்றபடி அழகான செஞ்சொல், இலக்கணமான உறுப்புக்கள் (சீர், தளை, அணி, சந்தம் முதலியன) அமைய, அறிவும் கலையும், அருளும் ஆற்றலும் கொண்ட புலவர்கள் இயற்றியதே செய்யுள். அதன் சொல்லின்பமும் பொருளின்பமும் சாதாரணப் பேச்சினும் உயர்ந்து உள்ளத்தை அள்ளும் கலைச்சுவையைப் பெற்றிருக்கும். தாமரையை மரை என்றும், சொன்னான் என்பதை இயம்பினான், இசைத்தான் என்றும், பெண் என்பதை அணியிழை என்றுங் கூறுவதுமட்டும் செய்யுள் வழக்கன்று. செய்யுள் வழக்கென்பது கவிதைப் பேச்சு (Poet's language). உதாரணம் காட்டுகிறேன்:

உலக வழக்கு	செய்யுள் வழக்கு
பெண் நடந்தாள்	அன்னம் தவழ்ந்தாள்
கல்வி முற்றினான்	கல்விக்கடல் கடந்தான்
தடதடவென்று பேசினான்	சொன்மாரி பொழிந்தான்

இப்படியே செய்யுட் பேச்சு அணியழகுறப் பொலியும்.

177. இயல்புந் தகுதியும் எனவழக் கிரண்டாம்,
இலக்கண முடையதும் இலக்கணப் போலியும்
மரூஉவும் இயல்பு வழக்கென மொழிப,
இடக்கர டக்கல் மங்கலங் குழூஉக்குறி
தகுதி வழக்கெனச் சாற்றினர் புலவர்,
இவையெலாம் உலக வழக்கென் றறிக ;
கவிஞர் செஞ்சொல் செய்யுள் வழக்காம்.

சுகூ. பொருள் கோள் (Prose Order)

செய்யுளில் சொற்கள் உரைநடைபோற் பொருள்தரும் வகையில் வரிசையாகவும் இருக்கும்; வரிசை மாறியும் வரும். சொற்களை ஒழுங்காக வைத்துப் பொருள் கொள்வது பொருள் கோள் எனப்படும். பொருள்கோள் எட்டு வகைப்படும் :

1. ஆற்றொழுக்கு : சொற்கள் முன்பின் பிறழாமல் ஆற்று நீரொழுக்கம் போலச் செல்வது :—

சோர்வு விடுத்துச் சுயேச்சை யடைந்துலகில்,
வீரனாய் வாழ விரும்பு.

2. மொழி மாற்று : பயனிலைச் சொற்கள் மாறி வருவது ; எழுவாய்க் கேற்ற பயனிலையை வைத்துப் பொருள் கொள்ள வேண்டும் :

சுரை ஆழ அம்மி மிதப்ப — அம்மிஆழ சுரை மிதப்ப எனப் பொருள் கொள்ள வேண்டும்.

3. **நிரல்நிறை:** தொடர் அல்லது செய்யுளின் பெயர்வினைகளை நிரல்பட வைத்து, இதற்கு இது பயனிலை யென்றறிந்து பொருள் தெரிவது:

உண்பதும் உயிர்ப்பதும் தண்மழை காற்றால்,

என்பதில் உண்பதும் தண்மழையால் (அது வளர்க்கும் பயிரால்); உயிர்ப்பதும் காற்றால் என்று பொருள் கொள்ள வேண்டும்.

4. **பூட்டுவில்:** வில்லின் இரண்டு முனையிலும் நாண் பூட்டியே அம்பு விடுவதுபோல், செய்யுளின் முதன் மொழியும் இறுதி மொழியும் பொருந்திப் பொருள் தருவது:

போற்றுவோ மன்பீர் புவிவாழ ஞானநடம்
ஆற்றும் பரமன் அடி.

அடி எழுவாய்; போற்றுவோம் பயனிலை; இரண்டையும் வில்நாண்போலப் பூட்டினால் பொருள் எளிதாகும்.

5. **தாப்பிசை** (மத்திம தீபம்): ஊஞ்சற் கயிறு நடுவிலிருந்து இருபுறமும் ஆடுகிறதுபோல, நடுவேயுள்ள சொல், முதலிலும் கடையிலும் சென்று பொருள் தருதல். (தாப்பு=தாம்பு, கயிறு).

துன்பத்தை முற்றும் துடைப்பது நல்லன்பே
இன்பத்தை யாக்கு மினிது.

நடுவிலிருக்கும் அன்பு இருபுறமும் சென்று பொருளைத் தருகிறது; அன்பே துன்பத்தை முற்றும் துடைப்பது; அன்பே இனிது இன்பத்தை ஆக்கும்.

6. **அளைமறிபாப்பு** (பாப்பு=பாம்பு, அளை=புற்று): பாம்பு புற்றுக்குள்ளே தலைவிட்டுச் சென்று, உடனே

தலை மேலே வரும்படி திரும்பும்; அதுபோல், பாட்டின் இறுதியிலிருந்து சொற்களைத் தலைகீழாக எடுத்துச்சேர்த்துப் பொருள்கொள்வது அளைமறி பாப்பு (புற்றுப் பாம்பு).

காண்பார் கண்ணாரக் கடவுளை யெப்போதும்
பூண்பார் புனிதத் தவம்.

புனிதத் தவம் பூண்பார், எப்போதும் கடவுளைக் கண்ணாரக் காண்பார்.

7. கொண்டு கூட்டு : பல அடிகளில் உள்ள சொற்களை முன்பின்னாகப் பொருந்தக் கூட்டிவைத்துப் பொருள் செய்தல். (ஓரடியில் உள்ள சொற்களை மாற்றுவது மொழிமாற்று).

8 கண்ணுக்கு மெய்யாகக் காணுமே; 9 காரியங்கள்
5 விண்ணுல கின்பமும், 10 வெல்லுமே—1 மண்ணுலகிற்
2 பொய்யொழிந்து, நல்ல பொருளறிந்து, 4 நின்றார்க்கு
3 மெய்வழி: 7 வந்து 6 மேன்மேல்.

இந்த நான்கடிகளில் எத்தனை மொழிகளை எங்கெங்கே கொண்டுகூட்ட வேண்டி யிருக்கிறது, பாருங்கள்! (1) மண்ணுலகில் (2) பொய்யொழிந்து, நல்ல பொருள் அறிந்து (3) மெய்வழி (4) நின்றார்க்கு (5) விண்ணுல கின்பமும் (6) மேன்மேல் (7) வந்து (8) கண்ணுக்கு மெய்யாகக் காணுமே; (9) (எடுத்த) காரியங்கள் (10) வெல்லுமே.

8. அடிமறிமாற்று : அடிகளை முன் பின்னாக மாற்றி வைத்துப் பொருள் செய்தல். பொருள் மாட்சி மாறாமலும், எற்புழியும் அடிகளைக் கூட்ட வேண்டும்.

1 அற்றதலை போக அருததலை நான்கினையும்
2 பற்றித் திருகிப் பறியேனோ—வற்றும்
3 மரமனையா னுக்கிந்த மானை வகுத்திட்ட
4 பிரமனையான் காணப் பெறின்.

இதில் 3, 4, 1, 2 என்று அடிகளை மாற்றி வைத்துப் பொருள் கொள்ள வேண்டும்.

178. வரிசையாய்ச் சொற்களை வைத்துச் செய்யுளின்
பொருளைக் கொள்வது பொருள் கோளாகும் ;
ஆற்றொழுக் கம், மொழி மாற்று, நிரல்நிறை,
பூட்டுவில், தாப்பிசை, அளைமறி, கொண்டுகூட்டு
அடிமறி மாற்றெனப் பொருள்கோள் எட்டாம்.

---

௭௦. புணர்ச்சி
(Combination of Words)

1. எள் நெய் என்பது காதுக்கு இனிமையாயில்லை. எண்ணெய் என்றால் இனிமையா யிருக்கிறது. எள்+நெய்=எண்ணெய். இவ்வாறு சொல்லுடன் சொல் கூடிக் குழைவதே புணர்ச்சி, சந்தி எனப்படும். ஆங்கிலத்தில் சொற்கள் தனித்தனியாக உள்ளன ; புணர்ச்சி விதிகள் இல்லை ; பேசும்போது பழக்கத்தால் சொற்கள் கூடிக் குழைகின்றன ; அரிதாகச் சில உயிரொலிகள் புணரும். ஐரோப்பிய மொழிகளெல்லாம் இவ்வாறே. இந்திய மொழிகளில் புணர்ச்சி விதிகள் அதிகம் ; அதிலும் தமிழில் மிகுதி.

இக்காலத்தில் செந்தமிழ்ப் புலவர்கூடச் செய்யுட்களைச் சந்தி பிரித்தே எழுதுகின்றனர். "கடக் படக் கறபுற" என்றில்லாமல் பேச்சும் நடையும்

சலசல வென்று தாராளமாக ஓட வேண்டும். அதற் கேற்றபடியே இங்கே புணர்ச்சி விதிகளைக் காண் போம் :

179. சொல்லுஞ் சொல்லும் புல்லுதல் புணர்ச்சி.

புணர்ச்சிவகை

2. புணர்ச்சிக்கு இரண்டு மொழிகள் வேண் டும் : முந்தியமொழி **நிலைமொழி**; பிந்தியமொழி **வரு மொழி.** நிலைமொழி முதலில் இருப்பது ; அதனுடன் வந்து சேருவது வருமொழி. நிலைமொழியின் ஈற் றெழுத்தும், வருமொழியின் முதலெழுத்தும் ஒன்று சேர்வதே புணர்ச்சி.

வாழை + பழம் = வாழைப்பழம்.

வாழை நிலைமொழி ; பழம் வருமொழி. நிலை மொழி ஈறு ழை, வருமொழி முதல் ப இரண்டும் சேரும்போது ப் தோன்றி வாழைப்பழம் என்றானது.

ஈறு இருவகைப்படும் : (i) **இயல்பீறு**—இயல்பா யிருப்பது : நான்.

(ii) **விதியீறு**—புணர்ச்சி விகாரத்தால் வந்தது : நால் + முகன் = நான்முகன்.

3. **உடம்படு மெய் :** தலை + அணை = தலையணை. இரண்டு சொற்களையும் உடம்படுத்த, இசைக்க ய் வந்தது.

இப்படி இணைக்கும் மெய்க்கு **உடம்படுமெய் (Combining Consonant)** என்று பெயர் ; ய், வ் இரண் டும் **உடம்படுமெய்கள்.**

தீ+எரி=தீயெரி; சே+அடி=சேவடி; திரு+ஆரூர்=திருவாரூர்.

4. நிலைமொழி யீற்றில் உயிரெழுத்திருந்தாலும் உயிர்மெய் யிருந்தாலும் அச்சொல் **உயிரீறுடையது**; மெய்யெழுத்திருந்தால் **மெய்யீறுடையது**. வருமொழி முதலில் உயிரெழுத்திருந்தால் **உயிர்முதல்**; மெய் யெழுத்திருந்தால் **மெய்ம்முதல்**.

கிளி என்பதில் ளி=ள்+இ; ஆதலால் இஃது இகர வுயிரீறு.

முல்லை, கல்வி, வயிறு, மாடு—இவை என்ன உயிரீறு?

பண், பரமன், கம்பம், கால்—மெய்யீறுகள்.

அருள், ஈகை, உண்மை—இவை **உயிர்முதல்**.

நாடு, வீடு, பொருள்—இவை **மெய்முதல்**.

(நாடு—ந்+ஆ+ட்+உ, மெய்யாகிய **ந்** முதலில் நிற்பதால் மெய் முதல்).

5. சொற்களின் ஈறும் முதலும் நான்கு வகை யாகக் கூடும்:

(i) உயிரீறும் உயிர் முதலும்: மணி+அழகு= மணியழகு.

(ii) உயிரீறும், மெய்முதலும்: தீ+சுடர்=தீச் சுடர்.

(iii) மெய்யீறும், மெய்முதலும்: பொன்+நாடு பொன்னாடு.

(iv) மெய்யீறும், உயிர்முதலும்: பரமன் + அருள் = பரமனருள்.

வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி

6. **புணர்ச்சிவகை:** புணர்ச்சி வகைகள் இரண்டாம்:

I. **வேற்றுமைப் புணர்ச்சி (Case-Combination)**—2 - 7 வரையிலுள்ள வேற்றுமை யுருபுகள் வெளிப்படையாகத் தோன்றி அல்லது மறைவா யிருந்து புணர்வதும் வேற்றுமை யுருபு மறைவா யிருப்பது (தொக்கிநிற்பது)ம் வேற்றுமைத் தொகை என்று முன்பே அறிந்தோம்:

தயிர் + பானை = தயிர்ப்பானை (வேற்றுமைத் தொகை). இது தயிரையுடைய பானை என விரியும்: 6-ம் வேற்றுமை.

சோற்றை + உண்டான் = சோற்றை யுண்டான் (இரண்டாம் வேற்றுமை யுருபு வெளிப்பட நிற்கிறது).

கண்பார்த்தான், கூலிவேலை, மலைக்கோயில், நாட்டன்பு, பாலைக் குடித்தான், வாளால் வெட்டினான், எனக்குத் தந்தான், ஊரில் வசித்தான்—இவ்வேற்றுமைப் புணர்ச்சிகளைத் தொகைவிரி காட்டி விளக்குக!

(i) வேற்றுமைப் புணர்ச்சியில், உருபு மறைந்தாவது, விரிந்தாவது வருமொழிப் பொருளைத் தழுவி நிற்பது **வேற்றுமை தழுவுதொடர்** எனப்படும்: கனியுண்டான் - கனியை யுண்டான்.

(ii) வேற்றுமை உருபு விரிந்தபோது, நிலைமொழி, வருமொழியுடன் பொருள் பொருந்தத் தழுவாதது வேற்றுமை தழாத்தொடர் எனப்படும்: நீர்க்குடம்=நீரை யுடைய குடம். நீர் உடைய என்பதைத் தழுவியது; குடம் என்பதைப் பொருளால் தழுவவில்லை.

(iii) இவ்வாறு வேற்றுமை யுருபும் அதன்பயனும் (பொருளும்) தொக்கு வருவது உருபும் பயனும் உடன் தொக்கதொகை எனப்படும். இஃது ஆறும் வேற்றுமை யில் வராது. மலை+அருவி=மலை யருவி; மலையினின்று வரும் அருவி. மலைக்கும் அருவிக்கும் இடையே வரும் என்ற சொல் வந்தே பொருளை, பயனைக் காட்டு கிறது. இதில் ஐந்தாம் வேற்றுமை யுருபுடன், வரும் என்ற பயனும் மறைந்து தொக்கு நிற்பதால் உருபும் பயனும் உடன் தொக்க தொகையானது.

நீர்ப்பானை, பொன் வளை, அன்பு நிலயம், தரும சத்திரம், மலை யூற்று, காட்டு மல்லிகை என் பவற்றில் தொக்கி நிற்கும் உருபையும், பயனையும் விளக்குக!

II. அல்வழிப் புணர்ச்சி (Non-case Combination): சொற்கள் வேற்றுமை அல்லாத வழியில் புணர்வது அல்வழிப் புணர்ச்சியாம். இதில் முதல் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் சேரும். ஏன்? அவற்றிற் குத் தனியுருபில்லை: கருங்கடல், மலர்முகம், பெரிய மனிதன்.

அல்வழிப் புணர்ச்சி இரண்டுவகைப்படும்:

(i) தொகைநிலைத் தொடர் (Elliptical phrases): ஐந்து தொகைகளைக் கொண்டது:

வினைத்தொகை : வளர் பருவம் (வளர்கின்ற பருவம்).
பண்புத்தொகை : பசும் பயிர் (பசுமையான பயிர்).
உவமைத் தொகை : பவளவாய் (பவளம் போன்ற வாய்).
உம்மைத் தொகை : இராப் பகல் (இரவும் பகலும்).
அன்மொழித் தொகை : கிளிமொழி பேசினாள் (கிளி போன்ற மொழி யுடையவள்).

(ii) தொகாநிலைத் தொடர்கள் கூறு-ம் பாடத்தில் விளக்கப்பட்டன.

180. நிலைமொழி யீறும் வருமொழி முதலும்
உயிருயிர், உயிர்மெய், மெய்மெய், மெய்யுயிர்
என நால் வகையாய்ப் புணர்வ தாமே.
விரிந்தும் தொக்கும் வேற்றுமை யுருபுடன்
புணர்வது வேற்றுமைப் புணர்ச்சி யாமே.
உருபிலாப் புணர்ச்சி அல்வழி யாமே.

எக. புணர்ச்சி யினம்

புணர்ச்சி இரண்டினமாகும் :

(I) இயல்பு புணர்ச்சி (Natural Combination) :— நிலைமொழியும் வருமொழியும் எவ்வித விகாரமும் இல்லாது புணர்தல். இதில் **உடம்படுமெய் மட்டும்** தோன்றுவதுண்டு :

மலர் + நகை = மலர் நகை.

கடவுள் + இயல் = கடவுளியல்.

அணி + அழகு = அணியழகு.

பா + அடி = பாவடி.

(II) விகாரப் புணர்ச்சி—நிலைமொழியீற்றுடன் வருமொழிமுதல் புணரும்போது விகாரம், (வேறுபாடு, மாறுதல்) தோன்றல் :

பால்+குடம்=பாற்குடம் (ல், ற் ஆனது).

விகாரம் மூன்று வகையாகும் :—

(i) **தோன்றல் :** புதிதாக ஓர் எழுத்து அல்லது அசை தோன்றுதல் : மா+பழம்=மாம் பழம் (ம் தோன்றியது ; புளி+பழம் புளியம் பழம் (அம் சாரியை தோன்றியது).

(ii) **திரிதல் :** ஓர் எழுத்து இன்னொரெழுத்தாகத் திரிதல், மாறுதல் : மண்+நிலம்=மண்ணிலம் (வருமொழி முதல் திரிந்தது).

பொன்+காப்பு=பொற் காப்பு (நிலை மொழி முதலிலுள்ள ன், ற் ஆனது).

பொன்+தாமரை=பொற்றாமரை (நிலை மொழியீறும், (ன்—ற்) வருமொழி முதலும் (தா - றா) திரிந்தன.

(iii) **கெடுதல் :** நிலைமொழி ஈறு கெடுதல் : அறம்+வினை=அறவினை (ம் கெட்டது).

ஒரே மொழியில் மூன்று விகாரங்களும் வரலாம் : பனை+காய்=பனங்காய். னையில் ஐ கெட்டு ன ஆனது ; அம் சாரியை தோன்றியது ; அதன் ம் ங் ஆகத் திரிந்தது.

காடு+மனிதன்=காட்டு மனிதன் என்று இரட்டித்தலும் உண்டு.

செய்யுள் விகாரம் : பாட்டில் வரும் ஆறு விகாரங்களாவன :

(1) வலித்தல் (மெல்லினம் வல்லினமாவது) : மூந்தை-முத்தை ; இன்றை-இற்றை.

(2) மெலித்தல் (வலி மெலியாவது) : புத்தி-புந்தி.

(3) நீட்டல் (குறில் நெடிலாவது) : நிழல்-நீழல்.

(4) குறுக்கல் (நெடில் குறிலாவது) : தீயேன்-தியேன்

(5) விரித்தல் (சொல் விரிவாதல்) : விளையுமே-விளையும்மே.

(6) தொகுத்தல் (உள்ள எழுத்தை நீக்கல்) : வாருகவென - வருகென.

புணர்ச்சி விகாரம் உலக வழக்கு, செய்யுள் வழக்கு இரண்டிலும் வரும்; தனி மொழியில் வராது; நிலை+வரு மொழிப் புணர்ச்சியிலேதான் வரும். செய்யுள் விகாரம் செய்யுளிலேதான் வரும்.

181. **இயல்பா யிருப்பதே யியல்புப் புணர்ச்சி**
தோன்றல் திரிதல் கெடுதல் முதலாம்
விகாரப் படுவது விகாரப் புணர்ச்சியாம்.

எஉ. புணரும் எழுத்துக்கள்

உஉ, உங-ஆம் பாடங்களை மறுபடியும் படியுங்கள் ! அவற்றில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள், மொழியிறுதியில்வரும் எழுத்துக்கள் விளங்கும். நிலைமொழி யிறுதியில் வரும் எழுத்துக்கள், வருமொழி முதலில் வரும் எழுத்துக்கள் ஆகிய இரண்

டிற்குமே புணர்ச்சிச் செயல். இருபுறமும் உயி ரெழுத்துக்களெல்லாம் வரும். ஆதலால் உயிர்ப் புணர்ச்சி முதலில் தெரிய வேண்டும்.

இருபுறமும் வரும் மெய் யெழுத்துக்களைக் குறிக்கிறேன் :

	வலி	மெலி	இடை
நிலை இறுதி	குற்றியலுகரம்	ஞணநமன	யரலவழள
வரு முதல்	கசதப	ஞமந	வய

இந்த எழுத்துக்கள் தம்முன், உயிர்முன் வரும் போது எப்படிக் கூடுகின்றன என்றறிய வேண்டும் : இயல்புபுணர்ச்சியே மிகுதி ; அடுத்தவை தோன்றல், திரிதல் கெடுதல் விகாரங்கள். படிப்படியாகப் பகுதி பகுதியாகப் புணர்ச்சி விதிகளைச் சொல்லுகிறேன் ; ஆங்காங்கே காட்டுகளையும், பயிற்சிப் பாடங்களையும் தருகிறேன். விதிகளைப் பார்த்துக் கலங்காதீர்கள் ! ஒவ்வொன்றையும் படித்து உடனே பேச்சில் அமைத் துப் பார்த்தால் எளிதாகும்.

எந. உயிர்முன் உயிர்

1. இ, ஈ, ஐ முன் உயிரெழுத்து வந்தால், யகர உடம்படுமெய் தோன்றும் :

கனி (இ) + இதழ் = கனியிதழ்; தீ (ஈ) + எழில் = தீ யெழில்; கலை (ஐ) + அழகு = கலையழகு.

மொழியினிமை, ஞானத்தியெழில், நடையழகு, மலையனைய மாண்பு - இவை பெரியார் இலக்கணமாம்.

இத் தொடர்களில் உள்ள உடம்படு மெய்யைப் பிரித்து விளக்குக !

182. இஈ ஐ முன் உயிர்வரின் யவ்வரும்.

2. அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஏழு உயிரெழுத்துக்களின்முன் வரும் உயிரெழுத்துக்களுக்கு வ தோன்றும் :—

அ : பல + ஆறு = பலவாறு; ஆ : நிலா + அழகு = நிலா வழகு ; உ : நடு + ஏடு = நடு வேடு ; ஊ : பூ + இதழ் = பூவிதழ் ; ஒ : நொ + அழகு = நொவ்வழகு ; ஓ : கோ + இல் = கோவில் ; ஔ : கௌ + இழிவு = கௌவிழிவு. (கௌ = தீங்கு, மனஸ்தாபம்).

மனவமைதி, திருவருளுறுதி, பூவினம் போன்ற புன்னகை வாழ்வு, நோவாத, நோவுறுத்தாத அறவொழுக்கம், அளவில்லாத உயிர்த் தொகுதிக்கு அன்பு செய்தல் - இவையே ஒவ்வொருவருக்கும் பொதுவறமாகும்.

இத் தொடர்களில் வரும் வகர வுடம்படு மெய்யைப் பிரித்து விளக்குக !

183. அஆ, உஊ, ஒஓ, ஔமுன்
வகரமே யுடம்படு மெய்யென வருமே.

3. ஏ முன் ய, வ ஆகிய இரண்டு உடம்படு மெய்யும் வரும்.

அவனே + அழகன் = அவனே யழகன் (ஏ-இடைச்சொல்).

சே + அடி = சேவடி, சேயடி. (ஏ—பண்புப் பெயர்)

தே + அடியார் = தேவடியார். (தே—பெயர்ச் சொல்)

184. **ஏமுன் வயவுடம் படுமெய் யாகும்.**

4. (i) வினு வெழுத்தாகிய எ, சுட்டெழுத்துக் களாகிய அ, இ, உ—இவற்றின் முன் உயிரெழுத்தும், யகரமும் வந்தால் வ தோன்றும்; (ii) பிற வெழுத்துக் கள் (வலி, மெலி, இடை) வந்தால், வந்த மெய் தோன் றும்; (iii) பாட்டில் சுட்டெழுத்து நீண்டால் ய தோன்றும்.

(i) எ + உயிர் = எவ்வுயிர்? (வினு)

அ + யாழ் = அவ்யாழ்	அ, இ, உ (சுட்டு.)
இ + உடை = இவ்வுடை	
உ + ஆடு = உவ்வாடு	

(ii) எ + மனிதன் = எம்மனிதன்?	பிறவெழுத் துக்கள் வந்தன.
அ + தொழில் = அத்தொழில்	
இ + வீடு = இவ்வீடு	
உ + பக்கம் = உப்பக்கம்	
அ + ஙனம் = அங்ஙனம்	
அ + காடு = அக்காடு	

(iii) ஆ + இடை = ஆயிடை (அகரம் நீண்டது)

185. **எ வினு, சுட்டுமுன் உயிர்வழின் வரும் வ,**
பிறவரின் வந்ததாம்;
நீள்சுட் டின்முன் உயிர்வரின் வரும் ய.

எவ்வுயிரும் உன்னுயிரென மதி; எம்மனிதனையும் நீயே எனக் கருது! இவ்வுடல் நிலையில்லை என்று வெறுக்காதே! உடல் உயிர்வீடு; இவ்வீட்டைச் சுத்தமாக வைத்திரு!

இத் தொடர்களிற் குறித்தவை புணர்ந்த வகையை விளக்குக!

5. அந்த, இந்த, எந்த, அப்படி, இப்படி, எப்படி என்பவற்றின் முன் வல்லெழுத்து மிகும்.

அந்தக் குதிரை, இந்தச் சகடை, எந்தத்திசை, அப்படிப் பார்; இப்படிச் செல்; எப்படிப் பிழைப் பாய்?

186. அந்த, அப்படி, இந்த, இப்படி
எந்த, எப்படி—இவைமுன் வலிமிகும்.

"இப்படிச் செய், அப்படிப் போகாதே! இவ் வழிச் செல், அந்தப் பக்கம் போகாதே! எந்தப்படி நான் சொல்லுகிறேனோ அந்தப்படியே செய்!" என்று மனச் சாட்சி சொல்லுகிறது.

இஃது என்ன தொடர்? இதிலுள்ள வல்லெழுத் துக்கள் புணர்ந்த வகையைக் கவனிக்கவும்.

6. குற்றியலுகரங்கள் எவை? கு சு டு து பு று. அவற்றின் முன் உயிர் வந்தால், (i) கு வில் உ கெடும்; (ii) மீதியுள்ள மெய்யெழுத்துடன் வரு மொழிமுதல் உயிர் சேர்ந்துவிடும்:

மாடு + ஓட்டி = மாடோட்டி; அஃது + ஆம் = அஃதாம்; வண்டு + ஆர் சோலை = வண்டார் சோலை;

வரகு + அரிசி = வரகரிசி ; சுக்கு + உண்டான் = சுக்குண்டான் ; சார்பு + எழுத்து = சார்பெழுத்து.

187. குற்றுயிர் முன்னே உயிர்வரின் உ கெடும்.

நல்ல காற்றுறிஞ்சிப் பழகினல் மார்பகலும் ; சிக்கோழியும் ; வண்டார் வனமலர் போல வாழ்வு பொலியும்.

இவற்றிற் குறித்த சொற்களைப் பிரித்துக் காட்டுக !

குற்றியலுகரத்தின்முன் ய வந்தால் உ, இயரும் ; முற்றியலுகரத்தின் முன்னும் அப்படியே : வரகு + யாது = வரகியாது. கதவு + யாது = கதவியாது.

7. குற்றியலுகரத்தின் முன் வல்லினம் வந்தால் மிகுவதுண்டு : எட்டுத் தொகை ; பத்துப்பாட்டு :

8. உயிர்முன் கச தப வந்தால் இரட்டிக்கும் : திருக் குறள் ; அறிவுச் சுடர் ; தெய்வத் தமிழ் ; காலைப் பாட்டு.

9. மரப் பெயர் முன்னே, வருமொழி முதலிலுள்ள மெய்யெழுத்துக்கு இனமான எழுத்துத் தோன்றும் : விள + காய் = விளங்காய் (க வின் இனமெலி ங்).

மா + பழம் = மாம்பழம் : ம் ஏன் வந்தது ?

எச. சில சொற் புணர்ச்சி

சில சொற் புணர்ச்சிகளை வரிசையாகக் குறிக்கிறேன் ; கவனிக்கவும்.

நிலை மொழி	வரு மொழி	புணர் வகை	
வாழிய	மன்ன	அ + ம	வாழிய மன்ன!
சாவ	குத்தினான்	அ + கு	சாவக் குத்தினான்
பல	பல	அ + ப	பலபல, பலப்பல, பற்பல
சில	சில	அ + சி	சிலசில, சிலச்சில, சிற்சில
பல	கலை	அ + க	பலகலை, பல்கலை
சில	நாள்	அ + ந	சிலநாள், சின்னாள்
பல	ஆயம்	அ + ஆ	பல்லாயம், பலவாயம்
ஆ	கொடிது	ஆ + கொ	ஆ கொடிது
கேண்மியா	தேவா	யா + தே	கேண்மியா தேவா
உண்ணா	விரதம்	ஆ + வி	உண்ணா விரதம்
மா	சிறிது	ஆ + சி	மாசிறிது, மாச்சிறிது
நிலா	அணங்கு	ஆ + அ	நிலாவணங்கு
நிலா	உண்டி	ஆ + உ	நிலாவுண்டி, நிலவுண்டி
கனா	காட்சி	ஆ + கா	கனாக்காட்சி
அன்றி	சொன்னான்	இ + சொ	அன்றிச் சொன்னான்
அன்று	போகி	உ + போ	அன்று போகி
நாழி	உரி	ழி + உ	நாடுரி (*ழி கெட்டு ட தோன்றல்*)
உரி	உப்பு	இ + உ	உரியவுப்பு
உரி	மிளகு	இ + மி	உரிய மிளகு
புளி	கறி	இ + க	புளிங் கறி
புளி	சோறு	இ + சோ	புளிஞ் சோறு
புளி	தயிர்	இ + த	புளிந் தயிர்
புலி	பெரிது	இ + பெ	புலி பெரிது
யானை	குதிரை	ஐ + கு	யானை குதிரை
இடி	சுவர்	இ + சு	இடி சுவர்
உரை	கல்	ஐ + க	உரை கல்

நிலை மொழி	வரு மொழி	புணர் வகை	
மார்கழி	திங்கள்	இ + தி	மார்கழித் திங்கள்
ஆடி	பெருக்கு	இ + பெ	ஆடிப் பெருக்கு
பனை	கை	ஐ + கை	பனைக் கை
கடி	கமலம்	இ + க	கடிகமலம், கடிக்கமலம்
தினை	சிறிது	ஐ + சி	தினை சிறிது, தினைச்சிறிது
மீ	கண்	ஈ + க	மீ கண்
மீ	கூற்று	ஈ + கூ	மீக் கூற்று
மீ	தோல்	ஈ + தோ	மீந்தோல்
ஏழு	தலை	உ + த	ஏழு தலை
இரு	புறம்	உ + பு	இருபுறம்
இது	குறிது	உ + கு	இது குறிது
அது	அன்று	உ + அ	அதான்று, அதுவன்று, அதன்று
ஆறு	தலை	உ + த	ஆறுதலை
வந்து	தந்தான்	உ + த	வந்து தந்தான்
வரகு	கதிர்	உ + க	வரகுக் கதிர்
ஆடு	கால்	டு + க	ஆட்டுக்கால் (டு இரட்டும்)
சோறு	கடை	று + க	சோற்றுக் கடை
முரடு	மனிதன்	டு + ம	முரட்டு மனிதன்
வெருகு	கண்	கு + க	வெருகுக் கண்
எருது	மாடு	து + ம	எருத்து மாடு
களிறு	யானை	று + யா	களிற்றி யானை
காடு	அரண்	டு + அ	காட்டரண்
காடு	காத்தான்	டு + கா	காடு காத்தான்
மருந்து	பை	து + பை	மருத்துப்பை
குரங்கு	மனம்	கு + ம	குரக்கு மனம்

நிலை மொழி	வரு மொழி	புணர் வகை	
இரும்பு	வண்டி	பு + வ	இருப்பு வண்டி
கன்று	ஆ	று + ஆ	கற்ரு
நஞ்சு	பகை	சு + ப	நச்சுப் பகை
இரும்பு	மனம்	பு + ம	இருப்பு மனம்
வண்டு	கால்	டு + கா	வண்டுக்கால்
சங்கு	இனம்	கு + இ	சங்கினம்
பாம்பு	தோல்	பு + தோ	பாம்புத் தோல்
அன்பு	தளை	பு + த	அன்புத் தளை
பண்டு	காலம்	டு + கா	பண்டைக்காலம்
இன்று	நாள்	று + நா	இற்றைநாள்
முந்து	வளம்	து + வ	முந்தை வளம்
அன்று	அழகு	று + அ	அற்றையழகு
நேற்று	பொழுது	று + பொ	நேற்றைப்பொழுது
வடக்கு	கிழக்கு	க்கு கெடுதல்	வடகிழக்கு
தெற்கு	மேற்கு }	கு கெட்டு	தென்மேற்கு
மேற்கு	காற்று }	ற் ன் ஆதல்	மேல்காற்று
மேற்கு	ஊர்	கு கெட்டு	
		ற் ல் ஆதல்	மேலூர்
தெங்கு	காய்	கு கெட்டது	
		தெ நீண்டது	தேங்காய்
பூ	கொடி	பூ + கொ	பூங்கொடி
பூ	தோட்டம்	பூ + தோ	பூந்தோட்டம்
அவனே	கண்டான்	ஏ + க	அவனே கண்டான்
தாழை	பூ	ழை + பூ	தாழம்பூ
எலுமிச்சை	பழம்	ஐ போய்	
		அம் வரல்	எலுமிச்சம் பழம்
ஆவிரை	வேர்	ஷை	ஆவிரம் வேர்

நிலை மொழி	வரு மொழி	புணர் வகை	
முல்லை	தொடை	ய், அம் வரல்	முல்லையந்தொடை
பனை	கொடி	ஐ + கோ	பனைக்கொடி
பனை	காய்	ஐ + கா	பனங்காய்
பனை	திரள்	ஐ + தி	பனந்திரள்
பனை	அட்டு	ஐ + அ	பனாட்டு
அருமை	விலை		அருவிலை
பெருமை	ஆர்		பெரியார்
அருமை	உயிர்		ஆருயிர்
பசுமை	தாள்		பைந்தாள்
வெறுமை	இலை		வெற்றிலை
செம்மை	நீர்		செந்நீர்
பெருமை	புகழ்		பெரும்புகழ்

இப் புணர்ச்சிகளைப் பிரித்தும், தொகுத்தும் தொடர்களில் அமைத்தும், இன்ன புணர்ச்சியென இனமறிந்தும் பயில்க!

௭௫. இயல்புபுணர்ச்சி

அடியில் வருபவை எவ்வித மாற்றமு மின்றி இயல்பாக உள்ளபடியே புணரும் :

(1) ஞ, ந, ம, ய, வ—இவை எல்லா ஈற்றெழுத்துக்களின் பின்னும் இயல்பாய்ப் புணரும் :

(அல்) இளஞாயிறு ; பனைநீண்டது ; பொன் மெலிது ; விலை யாது ; எஃகு வலிது.

(வே) வலிஞமலி; பூநீட்சி; மண்மாட்சி; கல் யானை; வாள்வலிது.

188. ஞநமய வக்கள் இயல்பாய்ப் புணரும்
எல்லா ஈற்றெழுத் துடனு மென்க.

(2) நிலைமொழி யீற்றுமெய், வருமொழி முதலி லுள்ள உயிருடன் கூடி உயிர்மெய்யாகும்:

தோல்+அழகு=தோலழகு; வாள்+இனம்= வாளினம்.

189. ஈற்றுமெய் வருமுயிர் கூடி யுயிர்மெயாம்.

இவற்றின்முன் வரும் கசதபக்கள் இயல்பாகும்:

(3) உயர்திணைப் பெயர்—இராமன் கண், கை, சங்கு.

பொதுப்பெயர்—தாய் தந்தை.
எழுவாய்த்தொடர்—கண்ணன் பிறந்தான்.
விளித்தொடர்—தம்பீ போ, செய்!

(4) உம்மைத் தொகை—சேர சோழ பாண்டியர்.

(5) ஆ, எ, ஓ, யா ஆகிய விஞக்களின் முன்—அவனு செய்தான்? இவனே தந்தான்? இவளோ கண்ணகி? நீயா சொன்னுய்?

(6) எ, ஓ ஆகிய இடைச்சொல்லின் முன்—கம்பனே பாடினன்; இவஞே சிரித்தான்.

(7) மெல்லினக் குற்றியலுகரத்திற்குப் பின்—(அல்வழியில்) பாம்பு கொடிது; குரங்கு பாய்ந்தது.

(8) இடை, நெடில், உயிர், ஆய்தக்குற்றிய லுகரங்களுக்குப்பின்—இருவழியிலும்:

(அல்) போழ்து போனது; நாடு பெரிது; தாரு தந்தான்; எஃகு பெரிது.

(வே) சால்பு பெரிது; நாடு சேர்ந்தான்; வரகு கதிர்; எஃகு கடுமை.

(9) தனிக்குறிலைச் சேர்ந்த ண், ன், ல், ள் முன் (அல்வழியில்)—கண் பெரிது; பொன் சிறிது; கல் குறிது; முள் கொடிது.

(10) பெயரெச்சத்தின் முன்—எழுந்த பரிதி; நடந்த குதிரை; வென்ற செழியன்; செழித்த தீவு.

(11) வினைமுற்றின்முன்—நடந்தன படைகள்; வாரா தீயன.

(12) வினைத்தொகையில்—நிறை செல்வம், ஓடு புனல்.

(13) இரண்டாம் வேற்றுமைத் தொகையில்—கலை கற்றான்; விலை சொன்னான்; மலர் கொய்தாள்.

(14) ஒடு ஓடு என்னும் மூன்றாம் வேற்றுமை யுருபின் முன்—என்னொடு, என்னோடு பேசினான், சொன்னான்.

(15) அது என்னும் ஆறாம் வேற்றுமை யுருபின் முன்—எனது, உனது, அவனது பார்வை.

(16) விகார எண்ணுப் பெயரின் பின்—ஒரு சாண்; இரு கண்; அறுசக்கரம், எழு கடல்.

(17) படி (இடைச்சொல்) வினையுடன் வரும் போது—வரும்படி சொன்னான்; வணங்கும்படி செய் தான்.

(18) தனை, அளவு என்னும் பண்புகளின் முன்—அத்தனை, இத்தனை, எத்தனை பணம், படை, செல்வம் ; அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு பேச்சு, செய்கை, பண்பு.

(19) சிறு என்னும் பண்படியின் முன்—சிறு படை, பையன், கலம், தடாகம்.

(20) பல, சில முன்—சில சொல் ; பல தொழில், பல பொருள்.

(21) செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தின் முன்—செய்யியவந்தான் ; உண்ணிய சென்றான்.

(22) அம்ம என்னும் இடைச்சொல்முன்—அம்ம கொற்றா !

(23) யாழமுன் (அல்வழியில்) — தாய்தந்தை ; பேர் சிறிது ; ஊழ் பெரிது.

சில இயல்பு புணர்ச்சிச் சொற்களைக் கவனியுங்கள் : எயின்குடி, மீன் செவி, தேன்மொழி, எகின்குடி, எகினக்குடி, மின்னொளி, மின்சாரம், தன்பகை, தற்பகை, எண்குணம், வேர்பெரிது, யாழினிது, வாள்வலி, ஆடல்பாடல், கோள்வலிது, இல்பொருள், ஆன்கன்று, வண்டின் கால், மழகளிறு.

190. உயர்திணை, பொதுப்பெயர், எழுவாய் விளித்தொடர்,
நெடிலுயி ராய்தம், இடையுடன் அல்வழி—
மெல்லினக் குற்றிய லுகரம் ; செய்யிய
எனும்வினை யெச்சம் ; பெயரெச் சமுடன் ;
வினைமுற்று இரண்டாம் வேற்றுமைத் தொகை
உம்மை வினைத் தொகை, ஒடு ஓடு அது வெனும்
உருபுகள் ; ஏ, ஓ, படி, அம்ம வெனும்
இடைச்சொல் ; அளவு, சில, பல, சிறு, தனை ;
அல்வழி யரழமுன் கசதப வியல்பாம்.

எசு. விகாரப்புணர்ச்சி

I. அடியில் வரும் சொற்களில், வல்லினம் (கசதப) மிகும் :

1. இரண்டாம் வேற்றுமை விரிவில் : அண்ணலைப் பணிந்தான்.

2. இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனும் உடன்தொக்க தொகையில் : தயிர்ப் பானை.

3. நிலைமொழியிற் றுயிர்முன் : பாக்குப் பை ; பண்டைத் தமிழர்.

4. தனிநெடில் முன் : தீப்பிடித்தது ; தீப்பொறி.

5. குறில் - நெடில் இணைந்த மொழிமுன் : கனாக் கண்டான்.

6. ய, ர, ழ முன் வேற்றுமையில் : தாய்ப்பால் ; தேர்க்கால் ; தாழ்க்கோல்.

7. இ, ஐ ஈறுமுன் : ஆடித்திங்கள்; மலைக்காட்சி.

8. அ, ஆ, இ, ய் எனும் தெரிநிலை வினையெச்சங்களின் முன் : உண்ணச் சென்றான் ; உண்ணாச் சென்றான் ; தேடிக் கண்டான் ; போய்ச் சொன்னான்.

9. அரு, பெரு, கரு, வெறு, குறு, நெடு எனும் பண்படிகள்முன் கசதபக்களின் இனம் மிகும் : அரும் பொருள் ; பெரும்பேச்சு ; கரும்பாம்பு ; வெறுஞ் சோறு ; குறுந்தொகை ; நெடுங் கணக்கு.

191. இரண்டாம் வேற்றுமை விரிவில் ; உருபும்
பயனுமுடன் தொக்க தொகையில் ; குறில்-நெடில்
இணைமொழி ; வேற்றுமை யரழ ; இ ஐ ;
அ, ஆ, இ, ய் ; அரு, பெரு கரு, வெறு, குறு
நெடுமுன் வருமெழுத் தினமிக லாமே.

II. இரட்டுவன :

(1) டு, று ஈற்று நெடில், உயிர்க் குற்றுகரங்கள் வேற்றுமையிலும், பண்புத் தொகையிலும் :

மாடு + பால் = மாட்டுப்பால்

ஆறு + பாலம் = ஆற்றுப் பாலம்

தகடு + பொன் = தகட்டுப்பொன்

கயிறு + கட்டில் = கயிற்றுக்கட்டில்

மூடு + பூச்சி = மூட்டுப் பூச்சி குருடு + கண் = குருட்டுக்கண் வறடு + ஆடு = வறட்டாடு.	பண்புத் தொகை

மாடு என்பதுடன் மந்தை, வயிறு, இடையன் என்பவற்றையும், ஆறு என்பதுடன் வளம், மணல், இயல் என்பவற்றையும் புணர்த்தி யெழுதுக !

(2) ஆறும் வேற்றுமைத் தொகையில் குற்றுகரம் : மாடு + சந்தை = மாட்டுச் சந்தை.

உயிர்க் குற்றியலுகரம் பண்புத் தொகையில் : எருது + மாடு = எருத்து மாடு.

(3) தனிக்குறிலிணைந்த மெய் உயிர்வரின் இரட்டும் : கல் + அட்டிகை = கல்லட்டிகை.

வில் + ஆளி = வில்லாளி.

*** 192.** ***டறு வீற்று நெடில், உயிர்க்குற் றுகரம்***
வேற்றுமைப் புணர்விலும் பண்புத் தொகையிலும்;
ஆறும்வேற்றுமைத் தொகையில் குற்றுகரம்,
பண்புத் தொகையில் உயிர்க் குற்றுகரம்,
உயிர்வரத் தனிக்குறி லடுத்தமெய் யிரட்டும்.

---

* முன்னே எழுதிய சூத்திரங்களில் இம்மட்டுமே கிடைத்தன.

எஎ. சாரியைப் புணர்ச்சி

சாரியைகளைப்பற்றி முன்பே அறிந்துள்ளோம்.

சாரியைகொண்டு புணரும் சொற்களை வரிசை யாகக் குறிக்கிறேன்; பிறைக் கோட்டுள் இருப்பது சாரியை:

(1) ஈம்+கடன்=ஈமக்கடன்; கம்+குடம்=கம் மக்குடம் (அ. சா)

ஈ+கடிது=ஈமுக்கடிது; உரும்+வலிது=உரு முவலிது (உ. சா.)

உருமுவன்மை, கம்முநீட்சி என்பவற்றுள் சாரியை எது?

(2) வல்+கடிது, நன்று, வலிது, புலி=வல்லுக் கடிது, வல்லுநன்று, வல்லுவலிது, வல்லுப்புலி (உ. சா). (வல்லப் பலகை, வல்லநாய், வல்லப்புலி என்றும் வரும்).

திரும்+பெரிது=திருமுப்பெரிது.

துள்+மாட்சி=துள்ளுமாட்சி.

தின்+வலிது=தின்னுவலிது.

உண்+கண்ணு=உண்ணுகண்ணு.

புள்+நன்று=புள்ளுநன்று.

தெவ்+நன்று=தெவ்வுநன்று.

இல்+பொருள்=இல்லைபொருள் (ஐ), இல்லாப் பொருள் (ஆ).

(3) இ, உ, ல, ஐ ஈற்று மரப்பெயர்கள் அம்முச் சாரியை பெறும்.

புளி + காய் = புளியங்காய்.

புன்கங்காய், ஆலங்காய், வேலங்காய், மாதுளங் கனி, எலுமிச்சம்பழம்—இவற்றையும் பகுத்து அம் முச்சாரியை காட்டுக!

(4) எல்லா + ஐ = எல்லாவற்றை (அஃறிணை) (அற்றுச்சாரியை.)

எல்லாரை (உயர்திணை).

எல்லாரும் + ஐ = எல்லார் தம்மையும் (சாரியை யில்லை)

(5) தன் + அ + கு = தனக்கு (அ).

(6) ஆ, மா, கோ—இம் மூன்றும் வேற்றுமை யுருபுடன் புணரும்போது னகரச் சாரியை பெறும்.

ஆ + ஐ = ஆனை, ஆவை; மா + ஐ = மானை, மாவை;

கோ + ஐ = கோனை, கோவை.

ஆவுக்கு, ஆவினுக்கு, ஆமானை, ஆமாவை, ஆமானுக்கு, ஆமாவினுக்கு—இவற்றைப் பிரித்துக் காட்டுக!

(7) ஒருபது + ஐ = ஒருபஃதை, ஒருபானை (உ, இன்).

ஒன்பது + ஐ = ஒன்பதை, ஒன்பஃதை, ஒன்பானை.

(8) அவ் + ஐ = அவற்றை (அற்று).

இவற்றை, உவற்றை—பிரித்துச் சொல்லுக!

(9) அஃது + ஐ = அஃதை, அதனை (ஆய்தம் கெட்டு அன்சாரியை வந்தது).

இதனை, உதனை, இஃதை, இருபஃதை—பிரித்துச் சொல்லுக !

(10) மரம்+ஐ=மரத்தை (அம்கெட்டு அத்து வந்தது).

எஅ. சில திரிதல் விகாரங்கள்

இவை திரியும் : வ், ம், ண், ள், ல், ன்.

(1) அவ், இவ் என்னும் சுட்டுப் பெயர்களின் முன்,

(i) வல்லினம் வந்தால் ஆய்தமாகும் : அவ்+கடிய=அஃகடிய.

(ii) மெல்லினம் வந்தால் மெல்லினமாகும் : இவ்+ஞான்று=இஞ்ஞான்று.

(iii) இடையினம் வந்தால் இயல்பாகும் : அவ்+யாவை=அவ்யாவை.

(2) தெவ் முன்னே (i) ம வந்தால் வ், மகரமாகும்.

தெவ்+மன்னர்=தெம்மன்னர் ; தெவ்+முனை=தெம்முனை.

(ii) யகரந்தவிர மற்ற மெய்கள் வந்தால் உகரச் சாரியை பெறும் : தெவ்+நன்று=தெவ்வு நன்று.

தெவ்வு நன்மை, தெவ்வுக் கடுமை, தெவ்வு வலிது—இவற்றில் வு வந்ததேன் ?

(3) ம் ஈற்றுச் சொற்கள், நாற்கணமும் புணரும்போதும், (i) அழிந்து உயிரீறுபோலப் புணரும் : வட்டம்+ஆழி=வட்டவாழி ; மரம்+அடி=மரவடி : வட்டம்+கல்=வட்டக்கல் ; மரம்+கிளை=மரக்கிளை ;

வட்டம்+நேமி=வட்டநேமி; வட்டம் + வளை= வட்ட வளை.

(ii) இனமாகத் திரியும்: மரம்+சிறிது=மரஞ் சிறிது(ஞ்—சி இனம்); மரம் பெரிது, என்பதில் ம்பெ இனம்; ஆதலால், வேறு திரிபில்லை.

(iii) வேற்றுமைப் புணர்ச்சியில் ம் போய் வல்லினம் உறழும்; அல்வழியில் உயிரெழுத்து வந்தால் ம் இயல்பாகும்:

குளம்+கரை=குளக்கரை; மரம்+கிளை=மரக் கிளை (வேற்); குளம்+அழகிது=குளமழகிது; மரம்+வலிது மரம் வலிது (அல்).

(4) எம், நம், நும், உம், தம்—இவற்றின் ம் வருமொழி முதலில் வரும் ஞ, ந வாகத் திரியும்.

எம்+ஞாண்=எஞ்ஞாண்; நஞ்ஞாண், நுஞ் ஞாண், உஞ்ஞாண்; தஞ்ஞாண். எம்+நூல்=எந்நூல்; நந்நூல், நுந்நூல், உந்நூல்=தந்நூல்.

(5) அகம் என்னும் பெயர்முன் கை, செவி என்ற சினைப் பெயர்கள் இவ்வாறு புணரும்: அகம்+கை=அங்கை; அகம்+செவி=அஞ்செவி; அகங்கை, அகஞ்செவி எனவும் வரும்.

(6) தமிழ், தாழ் இரண்டும் வருமொழியுடன் அகரச்சாரியை பெற்றுப் புணரும்:

தமிழ்+பிள்ளை=தமிழப் பிள்ளை; தமிழ்+கூத்து =தமிழக் கூத்து. தாழ்+கோல்=தாழக்கோல்.

(7) ஒரே குற்றெழுத்துடன் வரும் ண், ன் வல்லினத்தின் முன் ட், ற் ஆகத் திரியும்:

மண்+குடம்=மட்குடம்; மட்சாடி. பொன்+குடம்=பொற்குடம்; பொற்சாடி.

(8) ன், ல் முன் த,நக்கள், ற,னக்களாக மாறும்; ண, ள முன், ட ண வாக மாறும்:

பொன்+தீது=பொன்றீது.
பொன்+நன்று=பொன்னன்று.
கல்+தீது=கற்றீது; கல்+நன்று=கன்னன்று.
மண்+தீது மண்டீது; மண்+நன்று=மண்ணன்று.
முள்+தீது=முட்டீது; முள்+நன்று=முண்ணன்று.

(9) ஈற்று ம், க, ச, த முன் அவற்றின் இனவெழுத்தான ங், ஞ், ந் ஆகத் திரியும்.

மனம்+கலந்தது=மனங்கலந்தது; மனம்+சுழன்றது=மனஞ்சுழன்றது; மனம்+திரிந்தது=மனந்திரிந்தது.

(10) வேற்றுமையில், ல், ள் வல்லினத்தின்முன் ற், ட் ஆகும்: கல்+கம்பம்=கற்கம்பம்; முள்+பூண்டு=முட்பூண்டு.

கற்பானை, முட்செடி — இவற்றைப் பிரித்தெழுதுக!

(11) மெல்லினம் வந்தால் ல் ள், ன் ண் ஆகும்: கல்+மாடம்=கன் மாடம்; எள்+நெய்=எண்ணெய்.

(12) ஒரே குறிலுடன் வரும் ல்முன் வரும் த ஆய்தமாகும்: பல்+தொடை=பஃறொடை; பல்+துளி=பஃறுளி.

(13) ஈற்று ண் முன் ந, ண ஆகும்: பெண் + நலம் = பெண்ணலம் (வே) ; பெண் + நல்லாள் = பெண்ணல்லாள்.

எகூ. கெடுதல் விகாரம்

1. மகரம் கெடும் இடங்கள் :

முன்னேமெல்லினம் வந்தால்: மரம் + நீளம் = மரநீளம்.

2. 2, 7-ம் வேற்றுமைத் தொகையில் உயிரும், இடையினமும் முன்வந்தால், ம கெடாது: மரம் + வளர்த்தான் = மரம்வளர்த்தான்; கலம் + அளந்தான் = கலமளந்தான். ந வந்தால் ம் கெடும்: மனம் + நலம் = மனநலம்.

3. உயிரை முதலிற்கொண்ட சொல்லின்முன், குற்றியலுகரம் கெடும்: நாடு + ஆண்டான் = நாடாண்டான்.

அவ்வாறே முற்றியலுகரமும் கெடுவதுண்டு.

இது + ஐ = இதை ; கதவு + ஐ = கதவை.

4. அல்வழியில், முன்னே த வந்தால், ல், ள் கெடும்: நாள் + தோறும் = நாடோறும்; கால் + தாழ்ந்தது = காழ்ந்தது ; கடல் + தாவல் = கடறுவல் ; கோல்தீது = கோறீது.

எண்பெயர்ப் புணர்ச்சி எண்ணுரிச் சொற்களைப் பற்றிய பகுதியிற் சொல்லப் பெற்றது.

தமிழ் இலக்கணத்தில் உள்ள புணர்ச்சிகளை யெல்லாம் ஒருவாறறிந்தோம். எல்லாவற்றையும்

தெரிந்து வைப்பது நலம். இக்காலத்தில், புணர்ச்சி விதிகள் எப்படி வழங்குகின்றன என்பதை "முன்னேற்றம்" என்னும் சொற்பொழிவிற் காண்க :

அ௦. முன்னேற்றம்

அன்பு மணிகாள்,

இன்று நமது சமுதாய முன்னேற்றத்தைப்பற்றி உங்களுக்குச் சில சொற்களைப் பேசுகிறேன். உலகம் திருக்கோவில்; நாம் ஒவ்வொருவரும் அதன் அன்புத் தொண்டர். கோயிற் பணிபோல, நமக்குரிய அருட் பணிகளைக் கருத்தூன்றிச் செய்ய வேண்டும்; நம்மைச் சூழ்ந்த மாந்தரை நம்போல் மதிக்க வேண்டும். ஆற்றுநீர் சலசலத்துப் பாய்ந்து பயிர்களை வளர்ப்பது போலவே, நமது வாழ்க்கையும் மனங்கலந்து, இனங் கலந்து, பிறர்க்குதவி செய்து மகிழ வேண்டும். மிளிர்வ தெல்லாம் பொன்னன்று; வெளுத்ததெல்லாம் பாலன்று; உயிர்ப்பதெல்லாம் வாழ்வன்று. தனக்கும், பிறர்க்கும் பயன்பட வாழ்வதே வாழ்க்கை. வெறும் மட்குடத்தாலாவதென்ன? அது பாற்குடமானல், தயிர்க்குடமானல் பயனுண்டு. மனிதன் தன்னுள் அருளறிவையும் பொருளறிவையும் நிரப்ப வேண்டும்; அறிவதறிந்த பின், அறிவொளி பரப்ப வேண்டும். வெண்ணாட்டார் கற்றறிவையும் வளர்த்துத் தொழிலாற்றலையும் வளர்த்து, மனத்துணிவுடன், உலகைக் கைப்பற்றிக் காலத்தை ஆளுகின்றனர். நாடோறும் அவர்கள் காட்டும் கலைத்திறமையை நாம் கண்ணாரக் காண்கிறோம். நாமும் உலகில் ஒரு வல்லர

சாகத் தலைநிமிர்ந்து, நடக்க வேண்டும். அதற்கு முதலில் நமது மனித சக்தியை மிகுதியாக வளர்க்க வேண்டும்.

காலத்திற் கேற்ற கல்விப் பயிற்சி பெறவேண்டும்; எல்லையற்ற தொழில்வளம் பெருக்கவேண்டும். இரும்பு, கரி, எண்ணெய், மின்சாரம் ஆகிய இயற்கைப் பொருட்களைக் கைப்பற்றி, நாமும் புதுப் புதுப் பொறிகளைச் செய்ய வேண்டும். குறைந்த நேரத்தில் வாழ்வின் உணவுடைத் தேவைகளை நிறைவாக்கி, மீதி நேரத்தை அறிவு வளர்ச்சி, இயற்கலையாராய்ச்சி, உள்வளர்ச்சி, உலகப்பொதுநலம்—இவற்றிற் செலவிட வேண்டும்.

இப்போது மனிதன் மண் - பொன்னாசையாற் பற்றப்பட்டுக் கொடிய போட்டி பொறாமைப் போர், இரத்த வெறி யாட்டம்—இவற்றிலேயே காலம் போக்குகிறான்: பறவைக்கப்பலிற் சென்றாலும் சரி; பெரிய நீராவிக் கப்பல்களால் கடலை வென்றாலும் சரி; நாசகாரிகளாலும் பீரங்கிகளாலும் மண்ணிலத்தைத் தனக்கேயுரிமை கொண்டாலும் சரி; அவன் சுயநல வெறியில், இரத்தப்புயலில், பசித்தபுலி, நரி, சிங்கம் போலவே இன்னும் பண்படாது நடக்கிறான். இவ்வாறின்றி, மனிதன் மனிதனுடன் மனிதனாகப் பழகி, அன்பும் அருளுங் கொண்டு வாழ்வதே முன்னேற்றமாகும். அதற்கு முதன்முதல் வேண்டுவது ஒற்றுமை - உள்ளொற்றுமை. இக் கால மனிதன் சாதி சமய சாத்திரகோத்திர நாடு நிற வேறுபாடுகளாற் பிரிவுபட்டிருக்கிறான். இவ் வஞ்சப் பிரிவினை யொழிக! ஒவ்வொருவருள்ளும் ஒரு பொதுப் பொருள் உண்டு;

அதையே சூத்ரான்மா என்கிறோம். 'நான் அது; உலகுயிரெல்லாம் அது' என்னும் உணர்வினால் உள்ளொன்றும்; உள்ளொன்றினால், உலகொன்றும். சாதிமத வேறுபாடேயில்லாமல் மாந்தரெல்லாருங் கூடி, நாடோறும் காலை மாலை அமைதியான இடத்திலமர்ந்து, பார்வையை உள்ளே திருப்பி, உள்ளத்தில் உள்ள சூத்தான்மப் பொருளைத் தியானித்து, "நான் எதுவோ அதுவே அனைத்தும், அனைவரும்" என்றுணர்ந்துவந்தால் ஒற்றுமை வளரும். அவரவர் மனச் சாட்சியே வாழ்வின் சுக்கானை நேர் வழியில் திருப்பி, "இது நல்வழி" என்று காட்டி நடத்தும். தூய வுள்ளம், தூய நினைவு, தூய மெய்யுரை, தூய பொதுநலம் தூய, சன்மார்க்க வொழுக்கம்—இவையே முன்னேற்ற வழிகளாம். மனிதனிடம் அளவற்ற திறமைகள் பொதிந்து கிடக்கின்றன. அவற்றைக் கண்டு விளக்கித் தானும் நிறைவுற்று, உலகும் நிறைவுற வாழ்வதே முன்னேற்றம். உள்ளேயிருக்கும் திறமைகளை முன்னே கொணர்ந்து, தனக்கும் பிறர்க்கும் பயனாக்கி, ஏற்றம் பெறுவதுதான் முன்னேற்றம். நாமெல்லாரும் சரிநிகர்சமானராகி இத்தகைய முன்னேற்றம் பெறுவோமாக!

---

௧௧. கடிதம் எழுதுதல்
(Letter - writing)

அன்பு மணிகாள், எழுத்து, சொல், சொற்றொடர் இலக்கணம் வேண்டு மட்டும் அறிந்தோம்; அவற்றை விளக்கும் இலக்கியப் பாடங்களும் கற்றோம். அப் பாடங்களில் கட்டுரை, கதை, சொல்

லாடல், வரலாறு முதலிய பல சொற்கோவைகளைக் கண்டோம். இப்போது கடிதம் எழுதும் முறையை யறிவோம். இனிய தமிழ் இலக்கணம்—இரண்டாம் பாகம் கலை விருந்தாக வரும். அதில் பொருள், யாப்பு, அணி முதலியவற்றின் இலக்கணம் அடங்கும்.

உலக வாழ்வு பேச்சாலும் எழுத்தாலும் நடக்கிறது. இக்காலம் இடமும், காலமும் பொருட்டல்ல. வீட்டிலிருந்து உலகச் செய்திகளை யெல்லாம் அறியலாம். தந்தி, தொலைப் பேசி (Telephone), ஒலிபரப்பி—இவற்றால் நேருக்கு நேர் பேசுவது போலச் செய்தியறிவிக்கிறோம். எனினும், ஒருவர் உள்ளத்தை உரியவர்களுக்கு விரிவாக அறிவிப்பதில் கடிதம் சிறந்தது. கடிதம் ஒரு கலை. ஒருவர் உள்ளத்தையும் வாழ்வையும் கடிதத்தில் அறியலாம்.

கடிதங்களிற் பலவகையுண்டு (1) தன் கடிதங்கள் (Private letters)—காதலர், நண்பர், உறவினர் எழுதிக் கொள்வன.

(2) அலுவற் கடிதங்கள்: வாணிபம், கச்சேரி நடைமுறை, சுற்றறிக்கைகள், கட்டளைகள் முதலியவை.

(3) விண்ணப்பக் கடிதங்கள்: வேலைக்கு மனுப் போடல், குறைகளை முறையிடல், திருத்தங்கள் காட்டல் முதலியன.

(4) பொதுக் கடிதங்கள்: அறிவாளர் உலகிற்குப் பொதுவாகத் தமதுள்ளத்தை விளக்குங் கடிதங்கள். இவை நின்று நிலவி மனிதருக்கு வழிகாட்டு

வன. காட்டு: விவேகானந்தர், தாகூர், வள்ளலார் கடிதங்கள்.

கடிதத்திற்கு ஐந்துறுப்புக்கள் உண்டு:

(1) கடிதத்தின்மேல் வலது மூலையில் ஊர், தேதி; மேல் இடது மூலையில் எழுதுவோர் பெயர் விலாசம் அச்சிடலாம்.

(2) விளி: எவருக்கு எழுதுகிறோமோ அவர் உறவுக்கும், நிலைக்குந் தக்கபடி அவரை விளித்தல்.

இன்னின்னாரை இவ்விவ் வகையில் விளிக்க வேண்டும் என்பதை யறிக!

ஆள்	விளி
சிறியர்	அன்புள்ள நடராஜன், தம்பி, அன்ப, கண்மணி.
பெரியார்	பெரியீர், பெருந்தகையீர்.
உறவினர்	அன்புத் தந்தாய், தாயே, அண்ணல், அக்கா, மாமா.
நண்பர்	அன்புள்ள நண்ப, என்னருமை முருகா.
பிறர்	அன்புள்ள ஐயா, அன்புடையீர்.
அதிகாரிகள்	திரு......கல்வியதிகாரி, மதுரை......, மாண்புள்ள ஐய.
பொது	திருவாளர், திருமதி......க்கு அன்பு......

(3) உள்ளுறை: இதுவே கடிதத்தின் உடல்; எழுதவேண்டியதைச் சிந்தித்து, கோவையாக, நேரில் பேசுவது போலச் சுருக்க விளக்கமாக, தெளிவாக எழுதவேண்டும்.

(4) கையொப்பம் : ...அன்பும் பணிவுமுள்ள, தங்க ளன்புள்ள, அல்லது இங்ஙனம் என்றெழுதிக் கீழே கையொப்பம் வைக்க வேண்டும்.

(5) முகவரி (விலாசம்) : கடிதத்தை உறையிட்டு, கார்டாயிருந்தால் பின்புறம் வலப் பாதியில் முகவரி யெழுதவேண்டும். உறைமேல் இடது கீழ்ப்புறம் எழுதுவோர் விலாசமும், வலப்புறம் கடிதம் பெறு வோர் விலாசமும் இருக்கவேண்டும்.

திரு...பெயர், அலுவல், வீட்டெண், தெரு, ஊர், கோட்டம் (ஜில்லா) இவற்றை ஒன்றன்கீழ் ஒன்று யெழுத வேண்டும். பிறகு கடித நிறைக் கேற்ற தபால் தலை ஒட்டிப் போடவேண்டும்.

இங்கே சில மாதிரிக்கடிதங்களைத் தருகிறேன் :

அஉ. மாதிரிக் கடிதங்கள்

க. தந்தை மகனுக்கு எழுதுவது

சு. நடராஜர்
அன்பு மாளிகை.

காரைக்குடி
கரு—தை—சித்திரபானு.

அன்புள்ள முருகா,

இறைவனருளால் உனக்கு எல்லா நலமும் ஓங்குக! உன்னையே நினைத்துக் கொண்டிருக்கிறோம்; தாய் உன்மேல் உயிர் வைத்திருக்கிறாள். நீ படித்து முன் னேறி நமது மனை பொலிவுற வேண்டும்.

மகனே, இவ்வாண்டு நீ வெகுமதியுடன் தேறி பி. எஸ் ஸி. வகுப்பிற் சேர்ந்தது

பற்றி மகிழ்வு. உனக்கு நூல்கள் வாங்கவும், சம்பளங் கட்டவும் ரூபா எண்பது இத்துடன் அனுப்பியிருக்கிறேன். தாயார் கைக்காப்பை விற்று இப்பணம் வந்தது; எவ்வளவு இடர்ப்பட்டாவது உன்னை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற உறுதி பூண்டுள்ளோம். அதற்கேற்றபடி நீ படிப்பில் கருத்தூன்றி, அறிவோங்கி, வளம் பெருகி எங்களுக்கு ஆறுதலளிக்க வேண்டும். மகனே, இக்காலம் எங்கும் கிளர்ச்சியாயிருக்கிறது. மாணவன் கடமை கல்வியில் கருத்தூன்றலே. நீ கல்விக் கருத்துடனிரு; உடலையுறுதியாக்கு; காலை மாலை சிறிது நேரம் உடற்பயிற்சி செய்; சிறிது நேரம் கடவுளை வழிபடு; அருட்பாடல்களை ஓது! இக்காலம் வேண்டும் ஆங்கிலம், ஸயன்ஸ், கணக்கு முதலிய பாடங்களிற் கருத்தூன்று! பாடபுத்தகங்கள் தவிர வேறு நன்னூல்களையும் படி! இவற்றுடன் நமது தாய்மொழியாகிய தமிழை உயிர் போலப் போற்று! தமிழே தமிழர் தாரகம். திரு. சுடர்மணிப் புலவரிடம் நீ வழக்கம் போலத் தமிழ் பயின்றுவா!

மகனே உனது நலத்திற்கும் அறிவேற்றத்திற்கும் எப்போதும் இறைவனை இறைஞ்சுகிறேன்.

உனதன்புள்ள தந்தை,
சு. நடராஜன்.

திருவளர் செல்வன்,
ந. முருகன், B. S.c.
மாணவன், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகரம்.

உ. மகன் தந்தைக்கு

ந. முருகன்
மாணவன், பல்கலைக்கழகம்

அண்ணாமலைநகரம்
உ௦—தை—சித்திரபானு

அன்புள்ள தந்தையே,

வணக்கம்; தாயாருக்கு எனது அன்பையும் வணக்கத்தையும் செலுத்துகிறேன். தங்கள் கடிதத்தைப் படித்து மகிழ்ந்தேன்; தாங்கள் அனுப்பிய எண்பது ரூபாவும் பெற்றுக்கொண்டேன்; தவணைச் சம்பளம் கட்டினேன்; நூல்களும் வாங்கிக்கொண்டேன்; மிச்சம் பத்து ரூபாய் உணவு விடுதிக்குச் செலுத்தியுள்ளேன்.

என் அருமைத் தந்தையே, என்னை முன்னுக்குக் கொண்டுவரச் சென்ற பன்னிரண்டாண்டுகளாகத் தாங்களும் அம்மாளும் படும்பாட்டை நினைத்தால் எனது உள்ளம் இரக்கத்தால் கரைகிறது; நமது நாடு ஏழை நாடு; நாம் வறுமையுடன் வீரப்போர் புரிந்து, காலத்திற்கேற்ற கல்வி பெற முயல்கிறோம். தாங்கள் அனுப்பிய பணத்தைத் தொடும் போதே தங்கள் தியாகமும் அன்பும் எனது நெஞ்சைத் தொட்டன. நன்றாகப் படிக்கவேண்டும்; B. S.c. யில் முதன்மை பெற்று, ஆராய்ச்சிப் புலமை நடாத்தி, நாடும் வீடும் செழிக்க வாழ வேண்டும் என்ற உறுதிகொண்டு முயல்கிறேன். தங்கள் ஆசியும், இறைவனருளும் என் முயற்சிக்கு வெற்றி தரட்டும்.

தந்தையே, நாடெங்கும் மாணவர் கிளர்ச்சியாயிருக்கிறது. எந்த ஆரவாரத்திலும் என் மூச்சை வீணாக்க நான் விரும்பவில்லை. இளமை கல்விக் கினிது. என் முழுக்கருத்தையும் கல்விப் பயிற்சியிலேயே ஊன்றி வருகிறேன். ஆசிரியர்கள் என் மேல் மிகவும் பிரியமாயிருக்கிறார்கள். சுடர் மணிப் புலவரிடம் இப்போது கம்ப ராமாயணம் சுந்தரகாண்டம் படித்து வருகிறேன். கம்பன் கவி ஷேக்ஸ்பியர்போல் இனிமையா யிருக்கிறது. தமிழை நான் உயிர் போலவே போற்றுகிறேன். மாணவர் தமிழ்ச் சங்கத்திற்கு நானே அமைச்சன். வாரக்கூட்டங்களில் சிறந்த தமிழ்ப் பேச்சு நடக்கிறது. சென்றவாரம் கல்லூரித் தலைவர் தலைமையில் "தமிழ்க்கலை விளக்கம்" என்பதுபற்றிப் பேசினேன். அத்துடன் நான் தமிழில் பூதபௌதிக நூல்கள் எழுதத் தொடங்கி யிருக்கிறேன்.

பௌதிகப் பாடங்களில் எனக்கு நல்ல பெயர். மின்சார ஆராய்ச்சி எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அத்துறையில் மேன் மேலும் வளர்ச்சிபெற்று, யானும் ஓர் எடிஸன், இராமன் போன்று ஒரு புதுமை கண்டு, உலகிற் குதவப்போகிறேன். நெசவும், உழவும் மனித சமுதாயத்திற்கு என்றும் இன்றியமையாதன. இவற்றை எளிதாக்கிச் சிறந்த பயனளிக்கும் புதிய பொறிகளை நான் கண்டுபிடிக்கப் போகிறேன். நம்

நாட்டின் வறுமைப் பிணி என் கண்ணைக் கலக்குகிறது. ஒரு குடும்பம் உழைத்துண்ணவுதவும் சில பொறிகளைச் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். பௌதிக நூலுடன் நான் பொறிநுணுக்கமும் அறிந்து வருகிறேன். எனக்கு யந்திரப் புலவரொருவர் நட்புக் கிடைத்திருக்கிறது. நமது நாடு முன்னேற வேண்டுமானால் ஒற்றுமை, கல்வி, தொழில் மூன்றும் வேண்டும். கல்வி — தொழிலறிவு நமக்கு எவ்வளவோ வேண்டும். மனிதத் திறமைக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு அறிவையும், ஆற்றலையும் வளர்த்து, நமது வீடும் நாடும் வாழவே என் வாழ்வைப் பயனாக்க விரும்புகிறேன். என் அன்னைக்கு அன்பு ; எந்தைக்கு நன்றி, அன்பு.

தங்கள் வணக்கமுள்ள மகன்,

ந. முருகன்.

உயர்திருவாளர்

சு. நடராஜனார்

அன்புமாளிகை.

காரைக்குடி S. I. R.

ங. தாய் மகளுக்கு எழுதும் கடிதம்

கோவிலூர்

க—மாசி—சித்திரபானு

அன்புள்ள பூங்கோதைக்கு,

மங்கலமாகுக ! நலம் ; நலமே வேண்டுகிறேன். நீ இரண்டாவது இண்டர்மீடி

யேட் வகுப்பில் சேர்ந்து படிப்பதுபற்றி மகிழ்வு. ஆனால், உனக்கு விரைவில் திருமணம் புரியவேண்டுமென்று உறவினர் நெருக்குகின்றனர்; வரும் பங்குனியுடன் உனக்குப் பதினேழு வயது நிறைகிறதாம்; சாரதாச் சட்டமில்லாமற் போனால் இதற்குள் நான் பேரனொருவனை எடுத்திருப்பேனும்! உன் பாட்டி எப்படியாவது பங்குனியில் உன்னை மணையிலமர்த்திப் பார்க்க வேண்டுமென்கிறாள். உன் தந்தை அங்குமிங்கும் அலைந்து மாப்பிள்ளை தேடுகிறார். ஒரு 'ஜாதகம் நன்றாகப் பொருத்தி யிருக்கிறது; பிள்ளை வீட்டுக்காரர், கையில் இரண்டாயிரம், பாத்திரம் பண்டம் அணி மணி வகையில் இரண்டாயிரம் கேட்கிறார்கள். நமக்குள்ள நிலத்தை அடகு வைத்து, சிறிது பணம் வட்டிக்கு வாங்கி, எப்படியாவது உன்னை நல்ல இடத்தில் கொடுப்பதென்று நாங்கள் தீர்மானித் திருக்கிறோம். குறித்த வாலிபன் பி.ஏ. தேறி யிருக்கிறான்; அழகா யிருக்கிறான். சிறிது பசையுண்டு. பெயர் அனந்தராமன். உன்னைப் பார்த்திருப்பதாகச் சொல்லுகிறான். உனது சம்மதத்தை உடனே தெரிவிக்கவேண்டும். அத்துடன் நீ இந்த மாதத்துடன் படிப்பை நிறுத்திவிட்டு வீட்டுக் காரியம் கற்றுக் கொள்ளவேண்டும். உன்னை அழைத்து வர

அப்பா வருவார். இந்தச் சுப சமாசாரத் திற்கு உனது மகிழ்வான பதிலை எதிர்பார்க் கும்

உனதன்புள்ள தாய்
மங்கையர்க்கரசி.

திருமதி
பூங்கோதையம்மாள்
எண் 16, பெண்கள் உணவுச்சாலை
பெண்கல்லூரி
சென்னை.

௪. மகள் தாய்க்கு

பெண் கல்லூரி சென்னை
௪—மாசி—சித்திரபானு

என்னருமைத் தாயே,

வணக்கம். நான் கருத்துடன் படித்து வருகிறேன். எனக்கு உபகாரச் சம்பள மும் கிடைத்திருக்கிறது. உணவுச்சாலையில் உணவு பரிமாறும் வேலை செய்து, இலா மாகச் சாப்பிடுகிறேன். ஆதலால் என்னைப் பற்றிய பொறுப்பெதுவும் உங்களுக்கில்லை. தங்கள் கடிதம் கண்டு திடுக்கிட்டேன். திரு மணப்பேச்சு இப்போது எதற்கு? அஃது என் காதில் விழக்கூடாது. நான் பி. ஏ. வரையில் படித்த பிறகு, எல். டி. படித்துப் பெண் கல்விக்காகவே தொண்டு செய்யத் தீர்மானித்து விட்டேன். என் கருத்தெல் லாம் கல்வியிலுள்ளது. ஒரு கணவன்மேல் வைக்கும் அன்பைக் கல்வியில் வைத்துள்

ளேன். நமது நாட்டின் துயர்களுக்கெல் லாம் மடமைதான் காரணம். கல்விக் கதி ரின்றி மடமை நீங்காது; கல்விதான் நமது கண். வெள்ளைக்காரர் உலகை ஆளுவது கல் விப் புலமையாலும், அதனால் வந்த தொழில் வளத்தினாலுமே. நமது நாட்டில் எழுத் தறிந்தவர் நூற்றுக்குப் பதின்மரே. அதி லும் பெண்ணுலகம் கல்விக் கதிரே புகாத அடுப்பங்கரைப் புகையில் வாடுகிறது.

தாயே, நம்மினத்தின் நிலைமையை நினைத்தால் கல்லும் கரையும். படிப்பில்லை; கைவீசி, தலை நிமிர்ந்து, காற்றாட நடக்கக் கூட உரிமையில்லை. ஆயுள் முழுதும் அடிமைச் சிறையில் வாடுகின்றனர் நம் நாட்டுப் பெண்கள். நல்ல வேளையாகக் குழந்தை மணம் ஒழிந்தது. இனி வரசுல் கம், விதவைத் துயர், அடிமைச் சங்கிலி— இவை ஒழிய வேண்டும். வெள்ளைக்காரப் பெண்கள் அவர்களுக்குரிய கல்வியை நிறை வாகக் கற்று, விரும்பிய கணவருடன் சரி நிகர் சமானராக வீட்டிற்கும் நாட்டிற் கும் பயன்பட வாழ்கின்றனர். சமுதாய முன்னேற்றத்திற்குரிய எல்லாப் பணிகளி லும் ஆண்களுடன் பங்குகொண் டுழைக் கின்றனர். இங்கே சென்ற வாரம் மிஸ் மடில்டா என்ற பெண்மணி வந்து பிரசங் கம் செய்தாள். அவள் கேம்ப்ரிட்ஜிலும், பாரிஸிலும் கல்வி கற்றவள். ரேடியம் கண்டுபிடித்த புகழ்பெற்ற மாதாம்

கூரியின் மாணவி; பௌதிக நூலில் இணையற்றவள். அவள் தன்னந்தனியாக உலகைச் சுற்றி வந்து தன் அநுபவங்களை நூலாக எழுதியிருக்கிறாள். அங்கங்கே ஆங்கிலம், ஃபிரெஞ்சு சொல்லிக் கொடுத்தும், உபாத்தினியாக உழைத்தும் பணம் சேர்த்துக் கொண்டே அவள் உலகைச் சுற்றிப் பார்த்தாள். இந்த மாதிரி உரிமையுடன் அறிவை வளர்க்கவும், பயனுக்கவும் நம் பெண்களும் முன்வரவேண்டும். அறிவுச் சாலை ஆண் பெண்களுக்குப் பொது. அதைப் பெண்கள் அடையவேண்டும்.

தாயே, தாங்கள் குறித்த வாலிபனை நான் அறிவேன். அவன் கையில் அகப்பட்டால் எனது வாழ்வு பாழாகும்; என் கொள்கை மொட்டில் கிள்ளியதுபோல் வாடிப் போம். மேலும், வரதட்சிணை கேட்கும் பேடிகளை நான் கனவிலும் கருதேன். சமுதாய வாழ்வில் ஆண்களுக்குள்ள உரிமை பெண்களுக்கும் வேண்டும். சொத்துரிமை, காதல்மணவுரிமை, மறுமணவுரிமை, கல்வியுரிமை—இவை வேண்டும். அன்பு கூர்ந்து எனக்கு விடுதலை தாருங்கள். உங்களுக்கு எச்செலவுமில்லாமல், என் உழைப்பினுல் படித்து எல். டி. தேறி, ஒரு பெண்பள்ளிக்கூடம் வைத்து என் முயற்சியால் நூறு பெண்களுக்காவது கண்ணைத் திறந்தபிறகே நான் இல்லறத்தை மேற்கொள்வேன். அப்போது பெற்ருேருக்

குரிய கடமையைச் செய்வேன். மற்ற தெல்லாம் பிற்காலம் தக்கபடி நடக்கும். மிகவுயர்ந்த கருத்துடன் இதை எழுது கிறேன். தாயே, தங்கள் அன்பை மறவாத

மகள்,

பூங்கோதை.

திருமதி

மங்கையர்க்கரசியம்மாள்,

கோவிலூர்.

ரு. விண்ணப்பக் கடிதம்

பெங்களூர் உ—பங்குனி—சித்திரபானு

புதுக்கலையாராய்ச்சிக் கழகத்தலைவர்

விஞ்ஞானமணி திருமலை அவர்களுக்கு

திருச்சிராப்பள்ளி

பிஷப்ஹெபெர் கல்லூரி மாணவன்

பழனியாண்டி எழுதிய விண்ணப்பம்

புலவர் பெருமானே,

வணக்கம். நான் இவ்வூர் ஹெபேர் கல்லூரியில் பி. எஸ் ஸி. படித்துப் பரீட்சை கொடுத்திருக்கிறேன்; தேறிவிடுவேன். என் வயது இருபது. எனக்கு பௌதிக இரசாயன ஆராய்ச்சியில் விருப்பம் மிகுதி. அத்துறையில் ஆழ்ந்து கற்று, நமது நாட்டிற்குப் பயனுள்ள ஒரு புதுமையை ஆராய்ந்துதவ என் உள்ளம் துடிக்கிறது. நான் கற்றதைத் தமிழுலகிற்குத் தமிழில் அளிக்க என் மனம் அவாவுறுகிறது. விஞ்ஞானப் புலமையில் உலகப் புகழ்பெற்ற . தங்கள் மாணவனாயிருந்து அறிவை வளர்க்க நான் விரும்புகிறேன். என்னைத் தாங்கள் ஏற்றுக்

கொள்ளும்படியாகப் பணிவுடன் வேண்டு கிறேன். தங்கள் கழகம் தரும் அறிவைக் கருத்துடன் பயில்வேன்.

ஆனால் நான் ஏழை; இதுகாறும் உத விச் சம்பளத்தில் படித்தவன். தாங்கள் இட்ட வேலையைச் செய்துகொண்டே கல்வி பயில விரும்புகிறேன். தந்த வேலையை மகிழ்வுடன் செய்வேன். இத்துடன் என் னைப்பற்றி இக் கல்லூரித் தலைவர் அளித்த நன்னடைக் குறிப்பையும் அனுப்பியுள் ளேன்.

இங்ஙனம்,
தங்கள் பணிவுள்ள மாணவன்,
பழனியாண்டி.

௰. அலுவல் விண்ணப்பம்

திருவையாறு
குடந்தை கும்பகோணம் — க—பங்குனி—சித்திரபானு

கல்லூரித் தலைவருக்கு
திருவையாறு தமிழ்ச் சங்க ஆசிரியர்
வித்வான் சரவணன் M.O.L.
வணக்கமுடன் எழுதிக்கொண்ட விண்ணப்பம்

மாண்பு மிக்க ஐயா, வணக்கம்

தங்கள் கல்லூரிக்குத் தமிழ்ப் புலவர் தேவை யென்பதைச் செய்தித் தாளிற் கண்டு இவ் விண்ணப்பத்தை அனுப்பு கிறேன். நான் மதுரைத் தமிழ்ச் சங்கத் தில் பயின்று வித்துவான் பட்டம் பெற்ற துடன், அரசாங்கத்தார் அளித்த M. O. L.

பட்டமும் பெற்றுள்ளேன். சென்ற பத்தாண்டுகளாக இத்திருவையாற்றில், அரசர் கல்லூரியில் தமிழாசிரியரா யிருந்து வருகிறேன்.

மாணவருக்கு இன்னும் அதிகமாகத் தொண்டு செய்யலாம் என்ற கருத்துடன் தங்கள் கல்லூரியில் ஊழியஞ் செய்ய விரும்புகிறேன். வழக்கம்போலத் தரும் சம்பளத்தை ஏற்றுக்கொள்வேன். தங்கள் மனம் மகிழும்படி எனது வேலையைக் கருத்தூன்றிப் பார்ப்பேன். புலவர் மணிகளான தியாகராச செட்டியார், மகாமகோபாத்தியாய சாமிநாதையர் போன்ற பெரியார்கள் தமிழ்ப் பணி புரிந்த கல்லூரியில் எளியேனும் தமிழ்த் தொண்டு செய்யப் பெரிதும் அவாவுகிறேன்.

எனது விண்ணப்பத்தைத் தாங்கள் ஏற்று, வேலை தந்தால் மிகவும் நன்றி யுள்ளவனாவேன்.

இங்ஙனம்
தங்கள் பணிவுள்ள
சரவணன்

எ. தமிழுலகிற்குக் கடிதம்

புதுச்சேரி
பங்குனி சித்திரபானு

ஆசிரியர்,

'தமிழுலகம்'

சென்னை.

அன்புள்ள ஐயா,

தங்கள் இதழும் அன்புக் கடிதமும் வந்து சேர்ந்தன; நன்றி. தங்களைப் போலவே, இதழாசிரியர்கள் தமிழையும், தமிழறிஞரையும் போற்றினல், நமது தாய் மொழி விரைவாக முன்னேறும். தாங்கள் **இனிய தமிழ் இலக்கணத்திற்கு** அளித்த மதிப்புரை என்னை மிகவும் ஊக்கியது. என் நண்பர் தங்கள் புலமை நிரம்பிய மதிப்புரையை மிகவும் போற்றினர். மதிப்புரை ஒரு கலை; ஒரு நூலை ஆழ்ந்தறிந்து மதிப்பிட்டுரைப்பது தக்க புலவராலேதான் முடியும்.

நிற்க, தங்கள் வேண்டுகோளை மகிழ்வுடன் நிறைவேற்றுவேன். இனிய தமிழ் இலக்கணம் இரண்டாம் பகுதி "கலை விருந்து" என்ற பெயர் தாங்கி வரும். அதைத் தங்கள் விருப்பப்படியே தமிழுலகத்தில் வெளியிட அனுப்புகிறேன். முதல் கட்டுரை இத்துடன் வருகிறது. கலா விமார்சனத்துடன் நம்மவர் கலை நுணுக்கமும் கற்கவேண்டும். கலை விருந்து முழுதும்